திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமஹா ஸ்ரீ

# வாகீசமுனிவர்

அருளிச்செய்த

# ஞானாமிர்தம்

## மூலமும் உரையும்.

இவை

திருவாவடுதுறையாதீன வித்துவானும்

தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகரும்

ஆகிய

ஸ்ரீமாந்-ரா. சுப்பிரமணியக் கவிராயரால்

பரிசோதிக்கப்பெற்றன.

மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பிரசுரம்—

மதுரை:

தமிழ்ச்சங்க முத்திராசாலைப்

பதிப்பு.

# இப்புத்தகத்திலடங்கியவை.

க. முகவுரை.

உ. ஞானுமிர்தப் பிரதிகளின் விவரம்.

௩. ஞானுமிர்த நூலாசிரியர் வரலாறு.

௪. விஷயசூசிகை.

௫. தொகையகராதி.

௬. ஞானுமிர்தத் திருவகவல் வகை முதற்குறிப்பு.

௭. திருவகவற் கருத்து.

௮. ஞானுமிர்த மூலமும் உரையும்.

௯. திருவகவன் முதற்குறிப் பகராதி.

௧0. அரும்பதவகராதி.

௧௧. இலக்கணக்குறிப்பு.

௧௨. பிழை திருத்தம்.

உ

கணபதி துணை.

# முகவுரை

*அமிழ்தினு மினியநற் றமிழ்மொழி நிலத்தி*
*னமையுநூ லுணர்ந்த வறிவுடை யீரே!*

ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்தநாயனார் சந்தானத்தில் வந்த ஸ்ரீபரமானந்த முனிவரருள்பெற்ற வாகீசமுனிவ ரியற்றியருளிய ஞானாமிர்தமாகிய இந்நூல் மூன்றடிச் சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத் தைந்தையுடையது. வீடு காதலிக்கு நல்லறிவுடையோர்க்குச் சிவாகமங்களுட் கூறப்படுவனவாகிய சரியை, கிரியை, யோகம், ஞானமென்னு நான்கு பாதங்க ளுள்ளே, ஞானபாதத்திற் கூறிய பதி பசு பாசங்களினியல்பை நியாயவாயிலாகத் தெளிவாக வுணர்த்தி, வீடெய்து முபாயங் கூறுவது. சொல்வளம் பொருள்வளங் களாற் கற்போர் நெஞ்சங் காமுறச் செய்வது. ஒவ்வொரு விஷயத்தை விளக்கிக் கூறும்வழி, ஏனைய சாத்திரங்களைப்பார்க்கினும் பலவுவமைகளை யெடுத்துக்காட்டி விளக்கிக் கற்போர்க்குக் கழிபே ருவகையைத் தருவது. ஸ்ரீ கைலாயபரம்பரை யாகிய திருவாவடுதுறை ஆதீனத்து மாதவச்சிவஞானயோகிகளே, சன்மார்க்கர் யாவர்க்கு முபகாரமாகத் திருவாய் மலர்ந்தருளிய சிவஞானபோதவுரை முதலிய வற்றில் இதனை யுதாரணமாக ஆங்காங் கெடுத்துரைத் தருளினாராயின், இதனரு மை பெருமையைக் கற்றுயர்ந்தோ ரெவரும் புகழ்ந்து பாராட்டத்தக்கதென்பதை யானியம்பவும் வேண்டுமோ?

இந்நூ லுரையாசிரியர் பெயரிடங்காலம் முதலியன விளங்கவில்லை.

இந்நூலின் மூலத்தினடிகள் வரையறையின்றி மிக்குங் குறைந்தும் பிறழ்ந் துஞ் சில பிரதிகளி லெழுதப்பட்டிருந்தன. சிலபிரதிகளில் உரையிலே சொற்கள் கூட்டியுங் குறைத்து மெழுதப்பட்டிருந்தன. சிலபிரதிகளில், சிலசொற்களுக்குப் பொருளெழுதாது விட்டுஞ் சில சொற்களுக்கு மாறுபடப் பொருளெழுதியு மிருந் தன. சிலபிரதிகளிற் பதம்விடாப் பொழிப்பாக வெழுதப் பட்டிருந்தன. சில பிரதிகளிற் பயன்முடிவுக்குத் தக்கவாறு அடிகளை யொன்றாகவும் பலவாகவு மெடுத்துக்காட்டி யுரையெழுதப்பட்டிருந்தன. சிலபிரதிகளிற் சிற்சிலவிடங் களில் வடமொழிகள் கலந்தெழுதப்பட்டிருந்தன. சிலபிரதிகளின் மூலத்திற் கூறிய பதங்கட்குத் தாற்பரியமாகவே யுரையெழுதப்பட்டிருந்தன. பெரும் பாலும் பலபிரதிகளிலும் ஏகாரம், ஓகாரம், மற்று முதலிய இடைச்சொற்களுக்கே

இலக்கணமெழுதப்பட்டிருந்தன. அக்கால வழக்கம்போலச் சிலபிரதிகளிற் சில சொற்கள் எளியநடையிலெழுதப்பட்டிருந்தன.

இவ்வாறு நூலினு முரையினும் பலவித வேறுபாடுகளைக் கண்டறிந்த தமிழ் வித்துவான்களெல்லாம் பரிசோதித்து அச்சிடுவது பெரும்பிரயாசையென்றே விடுத்தனர்போலும். என்னிடத்தில் தமிழ்வித்துவான்களிலொருவர் "ஞானாமிர்தத்தைப் பரிசோதித்து அச்சிடுவதற்கு முடியாத வேலையாயிருக்கின்றது" என்றார்; மற்றொருவர் "ஞானாமிர்தத்தைப் பிசைந்து பிசைந்து பார்த்தேன் ஒன்றுஞ் சரிப்படவில்லை" என்றார். இவ்வாறு பலருங் கூறியிருக்கின்றனர். ஆதலாற் பரிசோதித்து அச்சிடுவது பெரும்பிரயாசையான வேலையென்று யான் கூறல் வேண்டுமோ? இது நிற்க.

இந்நாள்வரையும் வெளிவாராத இவ் வரும்பெருஞ் சிறப்புவாய்ந்த நூலை இத் தமிழுலகத்திலே அறிவுடையோர்க் குபகாரமாகும்வண்ணங் கருதி, அருங்கலை விநோதனென் றறையும் விவேகியும்—இலனென்று தெவர்க்கு மீயுந் தியாகியும்—முன்றமிழ் வளர்த்த முறைப்பாண் டியன்போன்—மதுரையில் விளங்கும் வளர் தமிழ்ச் சங்கத்—ததிபதி யாகியு மணிபொருண் மலிந்த—பாலவ னத்தநற் பதி மன்னாகியும் ஆகியிருக்கின்ற இராமநாதபுரம் ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித் தேவரவர்கள் அச்சிட்டுபகரிக்க வேண்டுமெனத் திருவாக்களித்தார்கள்.

இந்நூலின் பெருமையும் என்னறிவின் சிறுமையு மேருவு மணுவும்போல வாயினும், அவர்களது அமிர்தவாக்கை மறுத்தற்கஞ்சி, இச்சங்கத்திற்கு அரிதிற் கிடைத்த பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து, எழுதினோரானுற்ற வழுக்களை மாற்றி, இயன்றமட்டுஞ்சீர்செய்து அச்சிடத்தொடங்கினேன். இஃது, நன்னுவலர்க்கு நகைதரு மாயினு-மென்னு லியல்பிழை யினைத்தவிர்ப் பாரே எனச் சிந்தித்து, இந்நூல் அச்சிடற்கு வேண்டும் அருள் புரிந்து இனிது நிறைவேற்றிய எம் மிறைவனை ஆலவாயுறையும் அருட் பெருங் கடலை எனறும் இறைஞ்சுகின்றேன்.

இங்ஙனம்,

ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

## மதுரைத்தமிழ்ச்சங்கத்திற்குக் கிடைத்த

# ஞானாமிர்தப் பிரதிகளின் விவரம்.

### மூலமும் உரையுமுள்ளவை.

திருவாவடுதுறையாதீனத்துப்பிரதி ... ... ... க.
இஃது அவ்வாதீனத்துப் பொன்னோதுவாமூர்த்தியாற் கிடைத்தது.

தருமபுர ஆதீனத்துப் பிரதி .. ... ... ... க.
இஃது அவ்வாதீனத்துச் சண்முகத்தம்பிரானவர்களாற் கிடைத்தது.

திருப்பரங்குன்றம் வெள்ளியங்கிரி மடத்துப் பிரதி ... ... க.

யாழ்ப்பாணத்துச் செந்திநாத ஐயரவர்கள் பிரதி ... ... உ.

சேது சமஸ்தான வித்துவான் இராகவ ஐயங்காரவர்கள் பிரதி ... க.

திருநெல்வேலிப் பால்வண்ண முதலியாரவர்கள் பிரதி ... க.

ஆக உரைப் பிரதி எ.

### மூலப்பிரதிகள்.

சூரியனார் கோவில் ஆதீனத்துப்பிரதி ... ... ... க.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகங் குமாரசாமிப பிள்ளையவர்கள் பிரதி (இது-சஅ திருவகவன் மாத்திரமுள்ளது) ... ... க.

இராமநாதபுரம் பழனியாண்டி உபாத்தியாயர் பிரதி ... ... க.

சென்னையில் வசித்திருந்த மாவண்டூர்த் தியாகேச முதலியார் அவர்கள் பிரதி ... ... ... ... ... க.

ஆக மூலப்பிரதி ச.

# ஞானாமிர்த நூலாசிரியர் வரலாறு.

ஸ்ரீ கைலாயபரம்பரைத் தருமபுர வாதீனத்தி லெழுந்தருளிய ஸ்ரீலஸ்ரீ பிரதம ஞானசம்பந்த தேசிகசுவாமிகள் காலத்திலிருந்த வெள்ளியம்பல தம்பிரானவர்கள் முத்திநிச்சயம் என்னு மோர்நூலிற்குச் செய்த உரையிற் கூறியவாறு வரைகின்றேன்.

## திருமந்திரம்.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடி
னந்திக ணால்வர் சிவயோக மாமுனி
மன்றுதொழுத பதஞ்சலி வியாக்கிர
ரென்றிவ ரென்னோ டெண்மரு மாமே.

இவருள், நந்திகள் நால்வராவார் சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்பவராம். திருமூலதேவருக்குச் சதாசிவமுனிகளென் றும் பெயருண்டு.

## இவர்கள் சந்தானம் விரிந்தவாறு.

ஆதியிற் சனகராற் சம்பு சந்தானமும், மலையமான் சந்தானமும் என இரண்டாய்ப் பின் பலவாயின.

சனற்குமாரரால் விஞ்ஞானதேவர் சந்தானமும், மெய்கண்டதேவர் சந்தானமும் என இரண்டாய்ப் பின் பலவாயின.

சனந்தனராற் சிவமண்ணியதேவர் சந்தானமும், பரமதேவர் சந்தானமும், சிவானந்தபோதர் சந்தானமும் என மூன்றாய்ப் பின் பலவாயின.

சனாதனராற் பிரமதேவர் சந்தானமும், சிங்கநாததேவர் சந்தானமும் னெ இரண்டாய்ப் பின் பலவாயின.

சிவயோக மாமுனிவரால் வாமதேவர் சந்தானமொன்றாய்ப் பின் பலவாயின.

பதஞ்சலி முனிவரால் நிறைந்த நாயனார் சந்தான மொன்றாய்ப் பின் பலவாயின; இச்சந்தானத்தில் வந்த வாகீசமுனிவரால் ஞானாமிர்த நூல் செய்யப்பட்டது.

வியாக்கிரபாதமுனிவராற் சத்தியோஜாததேவர் சந்தானமொன்றாய்ப் பின் பலவாயின.

திருமூலதேவராற் பிரமதேவர், இந்திரதேவர், விஷ்ணுதேவர், உருத்திர தேவர், கந்துருமகாவிருடிகள், காலாக்கினியுருத்திரர், கஞ்சனூர் மலையமான் என எழுவகைச் சந்தானமாய்ப் பின் பலவாயின.

இன்னும் விரிக்கிற் பெருகும். இவர்கள் யாவரு ஞானசித்தாந்த குரவர்கள். இவர்கள் வரலாற்றின் விரிவைச் சந்தான வரலாற்றாலுஞ் சந்தான வகவலாலுங் கண்டுணர்க.

இவ்வாகீசமுனிவர் தம்முடைய ஆசிரியராகிய பரமானந்தமுனிவனைத் துதித்த வோர் செய்யுள் இஃது.—

இருணெறி மாற்றித்தன் ருணிமூ லின்ப மெனக்களித்தோ
னருண்மொழித் தேவனற் கோடலம் பாகை யதிபனெங்கோன்
றிருநெறி காவலன் சைவசிகாமணி சில்சமய
மருணெறி மாற்ற வரும்பர மானந்த மாமுனியே.

இவ்வளவும் வெள்ளியம்பல தம்பிரானவர்கள் வரைந்தது.

இதனாலே நிறைந்தநாயனார் சந்தானத்தில் வந்த வாகீசமுனிவருடைய ஆசாரியராகிய பரமானந்தமுனிவரிருந்த திருநகரங் கோடலம்பாகை யென்பது காண்க; ஞானாமிர்தத்திருவகவல் இருபத்தொன்றிற் கூறியதனாலுங் காண்க. இக்கோடலம்பாகை யென்பது வேதாரணிய மென்னுஞ் சிவதலத்திற்குச் சமீபத்திலுள்ள தென்றும், அத்திருப்பதியிலே திருமடமுள்ளதென்றுங் கூறுவர்.

இத்திருமடத்தில் வசித்திருந்து ஸ்ரீ பரமானந்தமுனிவரநுக்கிரக வுபதேசம் பெற்ற வாகீசமுனிவர் ஞானாமிர்தநூல் செய்ததன்றி, இன்னும் பலநூலியற்றி யருளினரென்றுங் கூறுவர்.

வாகீசமுனிவர் வரலாறு வரைந்த வெள்ளியம்பல தம்பிரானவர்கள் காலம் தருமையாதீனத்துப் பிரதம ஞானசம்பந்த தேசிகசுவாமிகள் காலமாதலால் இற்றைக்கு முன் நானூறு வருடமாயிற்று. இதற்கு முன் ஞானாமிர்தநூலுடையார் காலம் இவ்வளவினதென்று விளங்கவில்லை. இவ்வளவே வரலாறு தெரியவந்தது.

# விஷயசூசிகை.

[எண்கள் செய்யுளைக் குறிக்கின்றன. *இவ்வடையாளமிட்டவை பாயிரச்செய்யுள்.]

அக்கினி கையிழுத்தல் - ௬௬.

அளவிலண்டம் உண்டென்பது - *௪.

ஆட்டின் கழுத்தி னதர் - *௫.

ஆன்மாவுக்கு மாயாமலத்தாலே தேகமும் கன்மமலத்தாலே சுகதுக்கமும் ஆணவமலத்தாலே தற்சொரூப மறியாமன மறைக்கப்பட்டுப் புசித்தலும் உண்டாமென்பது - ௪௪.

இந்திரசித்துமுனிவர், இறந்த ஓரரசன் தேகத்திற் பிரவேசித்து அவ்வரசன் மனைவிய ராயிரவரைப் புணர்தல் - ௬௬.

இந்திரசித்துமுனிவர், யாளிதத்தமுனிவர், வரருசிமுனிவர், என்னுமூவரும் வினையை வெல்லக்கருதித் தவங்களைப் பூணல் - ௬௬.

இந்திரன் குயிலாய்ப் பறத்தல் - ௬௬.

இருவினை மூன்றிடத்துப் புசிக்க வேண்டுமென்பது - உ௭.

உண்டியைந்து - ௭.

உப்பளத்திற்பட்ட மரக்கொம்பு வடிவு வேறுபடாதேயுப்பாயிருக்கும் - ௬௭.

உலண்டு கூடுகட்டி அதற்குள்ளே அகப்பட்டிறத்தல் - ௧௧.

ஊமன் கண்ட கனா - ௬௦.

ஊமைக்குடத்தில் நீர் நிறைதல் - ௪௭.

கடலேழு - *௪.

கண்ணாடிப்பாவை நிழற்பாவைகளுக்கு ஓர் செயலில்லை யென்பது - ௬.

கலங்கிய நீர் தேற்றின் வித்தாற் றேற்றினபின்பு மறித்துக் கலங்கினுந் தேற்றுமற் றெளியும் - ௪௫.

காந்தக்கல் இருப்புத்தாழை யிழுக்குமென்பது - ௫௫.

காமவிரதம் புசித்தோரறியுமதல்லது அவராலு மின்னபடியிருந்ததென்று சொல்லவொண்ணாது - கூ0.

காமாதி யறுபகை - *கூ.

குந்திதேவி துருவாசமுனிவரருளிய மந்திரத்தாலே கன்னனைப் பெற்றுப் பேழையில் வைத்து நதியில் விடுதல் - கூஉ.

கேவலாவத்தை - க.

சகலாவத்தை - க.

சதாசிவர், மகேசுரதேவர், லயசிவன் இம்மூவர் வரலாறு - ருஅ.

சத்திநிபாதம் - க.

சந்திரன் முக மிழத்தல் - கூகூ.

சந்திராதித்தர் கூடியதுமான்று சமுத்திரமாரவாரஞ் செய்யும் - ருகூ.

சனமேசயன் யாகம் வளர்த்த ஆசாரியனாகிய முனிவனைச் செய்த அறியாமையாற் குருத்துரோக முண்டாதல் - கூகூ.

சாக்கிர முதலிய ஐந்தவத்தை - கூ.

சிந்தாமணி கற்பகம் அசேதனமாயிருந்தும் வேண்டினார் வேண்டின பொருள்களை யுதவும் - ருகூ.

சிருட்டி முதலிய முத்தொழில் - *க.

சுத்தாவத்தை - க.

சுவையாறு - எ.

சூக்கும சரீரம் - அ.

சூரியன் சந்நிதியிற் சூரிய காந்தக்கல் அக்கினியைக் கக்குதல் - சஎ.

சூரியன் பல்லிழத்தல் - கூகூ.

செம்பிலே யிரதஞ் சேர்ந்தாற் பொன்னும் - சரு, கூஅ.

செம்புக்குக் களிம்பும் பளிங்குக்குச் சுத்தமும் உண்டான காலம் முற் பிற் பாடில்லை யென்பது - உ.

செயத்திரதன் பிதாவாகிய விருத்தக்ஷத்திரன் 'என் மகன்றலையைத் தரையில் விழச்செய்தவன்றலை சின்னமாகவேண்டு'மென்று சமந்த பஞ்சக மடுவின்கண்

நின்று தவஞ் செய்ய, அருச்சுனன் செயத்திரதன்றலையை அப்புச்சரத்தாலே கொய்து அவ்விருத்தக்ஷத்திரன் கையிலிட அவன் கண்டு அருவருத்துப் பூமியி லிட்டுத் தன்றலையிழத்தல் - ௲.

ஞான முதலிய சதுர்ப்பாதம் - *எ.

தக்கன் சிரமிழந்து ஆட்டின் சிரமெடுத்தல் - ௲.

தக்கன் வேள்வி செய்தல் - ௲.

திரவிய முண்டாகைக்கு உரிய தொழில் ஆறென்பது - கசு.

துரியோதனன் வீமனை நஞ்சு கலந்த சோற்றை உண்ணச் செய்து பாதா ளத்திலே தள்ளுதல் - ௲உ.

தூலசரீரம் - ௨.

நகுட னென்னு மரச னிந்திரனாகிச் சததமுனிவர்களைச் செய்த அவமதிப் பாற் பெரும் பாம்பாகிப் பூமியில் விழுதல் - ௲.

பசு மூவகை யென்பது - க.

பரமானந்த முனிவருக்கு அருண்மொழித்தேவ ரென்னும் பெயருண்டென் பது - ௨க.

பாம்பு கண்ணாற் காணுந் தூரங் கேட்கவற்றான செவியுடையது - ௲எ.

பாரிசேடம் - ரு.

புசித்த வுணவு மூன்று கூறாகிச் சாரமான இருகூறு சரீரத்திலிருந்து வர்த் திக்க ஒருகூறு மலமாகக் கழியுமென்பது - ௰.

பேயேயாயினுங்கூடிப் பிரிந்தாற் றுன்பத்தைக் கொடுக்கும் - சசு.

மந்தரமலை முதலியவற்றாலே தேவரு மசுரருங் கடல் கடைதல் - *அ.

மந்திரத்தால் விடமடங்கும் - சரு.

மனவாக்குக்காய கன்மங்கள் - கஎ.

மேற்கோள் முதலிய ஐவகை யுறுப்புக்கள் - ச.

யாளிதத்தமுனிவர் ஒரு சண்டாளப் பெண்ணைப் புணர்ந்து கபிலர் முதலா கிய ஏழுபிள்ளைகளைப் பெறுதல் - ௲.

யானை யாழிற்கு வயமாதல் - *ச.

யானை விளாம்பழத்தைப் புசித்தால் அதனில் உள்ளொரு பற்று மற்றிருக்கும் - சக. (உரையில் யானையெனக் கூறினுரேனும் யானை யென்பது விளவின் கனிக்குண்டாவதோர் நோய் என்க; சீவகசிந்தாமணி நாமகளிலம்பகத்தில் "தூம்புடை நெடுங்கை வேழந் துற்றிய வெள்ளி லேபோல்" என்னுங் கவியுரையில் "வேழம் என்பது வெள்ளிலுக்கு வருவதோர் நோய்" என்றதனுற் காண்க. நூல்களில் யானைக்குரிய விசேடணங்களையும் சேர்த்துக் கூறுதல் மரபாதலுங்காண்க.)

வரருசிமுனிவர் தனக்கிளையாளைக் கூடிச் சுராபானஞ் செய்தல் - ௬௬.

வாணி மூக்கிழத்தல் - ௬௬.

வாளைமீன் பார்க்கக் குஞ்சு வளர்தல் - சஎ.

விட்டுணு பேயாய்த் தாவுதல் - ௬௬.

விநாயகருக்கு ஒருமருப்பு இருமதம் - *௨.

வீமன் பாதாளத்தில் அமுதம்புசித்து நாககன்னியை விவாகஞ்செய்துவருதல் - ௬௨.

விஷயசூசிகை முற்றிற்று.

---

௳

# ௳. தொகையகராதி.

[எண்கள் செய்யுளைக் குறிக்கின்றன; *இவ்வடையாளமிட்டவை பாயிரச்செய்யுள்.]

| | | | |
|---|---|---|---|
| அறுசுவை | எ. | ஐவகையுணடி | எ. |
| அறுதொழில் | ௰ரு. | சடத்துவூா | சுஅ. |
| அறுபகை | *ரு. | நாற்கதி | ௰அ. |
| ஆறுதாரம் | அ. | முக்குணம் | அ. |
| இருமதம் | *௨. | முக்குற்றம் | அ. |
| இருவகைத்தோற்றம் | ௨கூ. | முத்தி (இவற்றின் விவரம் அம் ஆவதுபக்கத்திற்காண்க) | ௬௬. |
| இருவினை | ௬. | முப்பத்தாறுதத்துவம் | சஅ. |
| ஏழ்கடல் | *க. | முப்பொறி | அ. |
| ஐங்கோசம் | அ. | மும்மண்டிலம் | அ. |
| ஐந்தலையரவு | *சு. | மும்மலம் | அ. |
| ஐந்தாசயம் | அ. | மூவகைத்துக்கம் | ௰அ. |
| ஐம்புலம் | *ச. | மூவகைப்பசு | க. |
| ஐவகைநிறம் | அ. | | |

---

# ஞானாமிர்தத் திருவகவல் வகை முதற்குறிப்பு.

வெண்டிரை திங்கள் விரிகதி ரருளுரை
மந்தரங் கண்ணுத லேழும் பாயிரம்,
பிறழா காரணங் கலைமுத லுழிதரல்
காரியம் பொன்னினுந் தமனிய மேழுஞ்
*சம்மிய ஞான மாகச் சாற்றுவர்,
மாதவங் கால்கொடுத் திந்திய மூன்றுஞ்
†சம்மிய தெரிசன மெனச்சாற் றினரே,
யானே யாருயிர் கலைநவி லாதி
தந்து வெருவரும் பொய்ப்பொறி யிசைத்த
வாதி யொன்பதும் பாச பந்த,
மிருந்துய ரிலங்கு மிரண்டுந்‡தே காந்தரங்,
கரும மைம்புலம் பாச மநாதி,
நெஞ்சுதே னழுக்கா றொருவன் பனுவ
றொல்லை யயிலரி யையு ணஞ்சினி
யறப்பயன் பழவினை மறைமுறை யரும்பவிழ்
கறையணல் பூக்கமழ் கரைகாண் வாகை
நஞ்சு நஞ்சே யெற்பீ றறிவு
பதிபசு பாச மிறுதி யாக
விருபத் திரண்டும் பாசச் சேதம்,
திருவின் வாழிய படியடி யின்ன
பூபூ பதியள வெல்லா விந்து
வேணி யிறைசிவ னடையா நாரங்
கலைநில மேவின் யாணர் சகள
மந்தமி லெங்கை யிரும்பிர கழிபெரு
மென்ற விருபதும் பதியுண்மை யுணர்த்த,
லுள்ளம் பசுபதி யாறு மூன்று
மொள்ளியர் பாச மோசன முணர்த்தலே.

இது சென்னையில் வசித்திருந்த மாவண்டூர்த் தியாகேசமுதலியார் ஞானாமிர்த மூலத்துடன் வரைந்திருந்தது.

---

* சம்மியஞானம் - நன்ஞானம்.

† சம்மியதெரிசனம் - நற்காட்சி.

‡ தேகாந்தரம் - ஆன்மா ஓர் தேகத்தை விடுத்து மற்றோர் தேகத்தை யெடுத்தல்
[illegible]

# திருவகவற் கருத்து.

## பாயிரம்.

௧. கடவுள் வாழ்த்து.

௨. விநாயகர் துதி.

௩. வாணி துதி.

௪. ஆசிரியர் துதி.

௫. அவையடக்கம்.

௬. நூற்பெயர்.

௭. சிவபிரான் அருளிச்செய்த திவ்வியாகமங்கள் சதுர்ப்பாதமாயிருக்கும் இவையிற்றைச் சொல்ல அறிக என்றது.

## நூல்.

௧. பரமசிவன் ஆகமத்திலருளிச்செய்த சதுர்ப்பாதங்களில் ஞானபாதமாவது பசுபாசபதி என்ற மூன்றையும் ஆராய்ந்தறிதலாமென்றுகூறி, இவையிற்றிற் பசுவினது கேவல சகல சுத்தாவத்தை யிலக்கணங்கூறியது.

௨. சுத்தாவத்தையிற் பசு மலக்ஷயம் வந்து நின்மலத்தைப்பெறுமென்றலாற் பதி நின்மலனாதற்கும் பசு மலனாதற்கும் காரணம் வினவ இவர்கட்கு நின்மலமும் மலமும அநாதி சாதகமெனக் கூறியது.

௩. மலபந்தமுடைய ஆன்மா மாயா வுதரத்தினனாதற்கும் யாண்டும்போக்கு வரவுடையனாதற்கும் காரணமென்னெனக் காரணங்கூறியது.

௪. பசு உளனென்கைக்குப் பிரமாணம் என்னென அந்நுவய வெதிரேகி யநுமானத்தாற் பசு வுண்மை கூறியது.

௫. பிரபஞ்சங் காரியமாதலிற் பாரிசேடத்தால் ஆன்மாவின் பொருட்டெனப் பசுவுண்மை பின்னுங்கூறியது.

௬. பின்னரும் அக்கினி சம்பந்தமாகிய அநுமானத்தாற் சேதன சேதனங் கூறியது.

௭. இன்னுங்கேளென்று தேராதி வாகனங்கள்போலத் தேகத்தைப்பிரவர்த்திப்பான் ஒரு தேகியுளனெனக் கூறியது.

௩எ. ஞானவான்கள் எல்லாப்போகங்களுடனே கூடியிருந்தாராயினும் ஞான விசேடத்தாலே அந்தரங்க வேறுபாடுடையரென்றும் அவையிற்றிற் பற்றிலரென்றுங் கூறியது.

௩அ. ஆதித்தனும் அக்கினியும் நல்லவையிற்றையுந் தீயவையிற்றையும் புசித்துங் குற்றமில்லாதவாறுபோல ஞானவான்கள் செயலறுதியுணர்ந்தபடியாலே பந்தவேதுவாய பதார்த்தங்களுடனே கூடிநிற்பினும் அவர் அவற்றை ஞானவனலாலே தகித்துப் பிரகாசிப்பர் என்று கூறியது.

௩கூ. அஞ்ஞானத்தாற்கூடின மமதை பந்தகாரணமென்றும் ஞானத்தால் மமதையொழிதல் மோக்ஷகாரணமென்றும் பாவநா விசேடங் கூறியது.

௪0. இப்படியாகிய பாவகத்தையுடைய ஞானசித்தர்க்குத் தேகபாரந் தாங்குதற்கரியதாயிருக்குமென்று கூறியது.

௪௧. தேகபாரத்தைக் கழித்து முத்தியைக்கூடுநாள் எந்நாளென்னும் ஞானசித்தர்க்குப் பூர்வ வாசனையாலுள்ள அநுபவமல்லது வினையிற்பற்றிலரென்று கூறியது.

௪௨. மேற்கூறிய பக்குவர்க்கும் அபக்குவர்க்குஞ் செய்யு முபதேசத்தால் வரும்பலன் கூறியது.

௪௩. மாயாமலபந்தக்ஷயங் கூறியது.

௪௪. ஆணவமலபந்தக்ஷயங் கூறியது.

௪௫. பாசம் நித்தியமும் வியாபகமுமாயிருப்பினும் ஞானவான்களை வாதியாதென்று கூறியது.

௪௬. பாசச்சேதங் கேட்டுத் தனக்குப் பற்றுயுள்ளதேதென்று சீடன் விண்ணப்பஞ்செய்ய ஆசாரியன் நமக்குப் புகலிடமாயுள்ளது அகண்டபரிபூரணமாய் நிறைந்த சந்திரசேகரனாகிய கர்த்தாவினுடைய திருவடித்தாமரைகளல்லது வேறுண்டோ வென்று அருளிச்செய்தமை கூறியது.

௪எ. மதிசேர் செஞ்சடை யொருவன் பாத மடைய ஆசைவைத்த சீடனுக்கு ஆசாரியன் கடாக்ஷித்தமை கூறியது.

௪அ. இனிசேர்தீஞ்சொல்லாக வருளிச்செய்த பதியிலக்கணங்கூறியது.

௪கூ. காட்சி முதலிய அளவையு மளவறச் சேட்படவகன்ற பரமசிவன் வியாபகங்கூறியது.

௫0. பதியை யறியுமுபாயம் அருளிச்செய்யவேண்டுமென்று விண்ணப்பஞ் செய்தசீடனுக்குக்கேவலாந்துவயவநுமானப்பிரமாணத்தாற் பதியுண்மைகூறியது.

௫௧. அந்நுவயவெதிரேகி யநுமானத்தாற் பதியுண்மை கூறியது.

௫௨. கேவலவெதிரேகியநுமானத்தாற் பதியுண்மை கூறியது.

௫௩. அநுமானப்பிரமாணத்தாற் பூபூதராதியென்னும் பாட்டுமுதற் பிரபஞ்சசிருட்டிகொண்டு பதியுண்மைகூற இவன்சிருட்டிக்கிறபடி யெங்ஙனேயென்று வினவ அவன் நிட்களனாயிருந்தே சங்கற்பத்தாலே சிருட்டிப்பான் என்று கூறியது.

௫௪. நிட்களனாயிருந்தே அனைத்தையுஞ்செய்கிற கர்த்தாச் சர்வான்மாக்களுக்கும் பிரத்தியக்ஷமாகாமனின்ற காரணமென்னென்று வினவ ஞானநாட்டமுடையோர்க்கன்றிக் காணவொண்ணாதென்று காரியங்கொண்டு காரணமுணர்ந்து பதியுண்மை கூறியது.

௫௫. கரணரகிதனுமாய் அமூர்த்தனுமாயிருக்கிற பரமசிவனைக் கர்த்தாவென்று சொல்லுதல் முறைமையல்லவென்று வினவ அமூர்த்தனாயிருந்தே பிரபஞ்சத்தைச் சத்திகளாலே செய்வனென்று கூறியது.

௫௬. பஞ்சகிருத்தியச்செயலால் விகாரங்கூடுமென்று வினவப் பரமசிவன் அவிகாரியாயிருந்தே ஏகசத்தியாலே பிரபஞ்சகாரியஞ் செய்வனென்று கூறியது.

௫௭. பரமசிவன் செயல்களனைத்திற்குங் காரணமாகித் தான் அவிகாரியாயிருப்பானென்று கூறியது.

௫௮. உரையுணர்வொடுங்கின ருணர்வின் விரையுறு கடியின் விரவிய பரமசிவனுக்கு நிட்களமுஞ் சகளமுஞ் சகளநிட்களமும் பொருந்தாமை வினவ இவையிற்றுக்கு இவன் இன்றியமையானாயிருப்பனெனக் கூறி அசுத்தாத்துவாவுக்குக் கர்த்தா அனந்த தேவரேயெனக் கூறியது.

௫௯. தூயவாகனாகினும் அனந்த தேவர்க்குப் படைப்புக்கூடாதென்று வினவ இவர் சகளீகரித்தே அசுத்தாத்துவாக்களைப் பரமசிவன் சத்தியாலே செய்வரென்று கூறியது.

௬0. பசுவுக்கமலன்சத்தி யொசியா துற்றவுண்மையானு மற்றவன் மந்திர வலியினானும் அந்தமினிட்களமறிந்தவனுக்குச் சிவபோகம் இன்னபடியிருக்குமென்று சொல்லவொண்ணாமைக்குக் காரணமென்னென்று வினவ அவ்வநுபவம் அநுபவித்தறியுமதல்லது வாசாரகிதமெனக் கூறியது.

௬௧. உள்ளுநருணர்வதுணர்வின்பாலாய் வசனிக்கவொண்ணாதவநுபவமாயிருக்கிற நிட்களம் பாவிக்கப்படாததாயிருந்ததென்னென்று வினவ அரூபியாதலிற் சட்சுவாதி கரணங்களுக்குத் தெரிசனமில்லாமையாற் கரண வறிவொழிய அரூபி

யாயிருக்கிற வான்ம வறிவாலே் தரிசிப்பார்க்குத் திருவருளாலநியமாகப் பாவிக்கப்படுவதென்று கூறியது.

௬௨. மேற் பசுவுக்கமலன்சத்தி யொசியாதுற்றவுண்மையால் அறிவுண்டாகில் அச்சத்தி வியாபியாயிருக்க எல்லார்க்கு நல்லறிவில்லை யாதற்குக் காரணமென்னென்று வினவக் கன்மசமத்துவ சத்திநிபாதத்தாலல்லது ஞானமுண்டாகாதென்று கூறியது.

௬௩. அமோகன் சத்தியின் அவனையுணர்த்தலாய ஞானத்தான் முத்தியும் அஞ்ஞானத்தாற் பெத்தமுமாமென்றருளினுய் முரணுபிருப்பனவிரண்டு ஓரிடத்து நிற்றற்குதாரணமென்னென்றுவினவக் காட்டமுமக்கினியும்போல இரண்டுங் கூட நிற்கினுந் தீக்கையாகிய வுபாயத்தாலல்லது ஞானப்பிரகாசமில்லையென்றுகூறியது.

௬௪. இந்தனமும் எரியும்போல ஞானமுமின்மையும் ஓரிடத்திலே நிற்குமென வுணர்த்தினுய் அவ்வுணர்வு பிரதானத்திற் செனிதமான மனதாலே மேலுள்ள தத்துவங்களிலுஞ் செல்லுமோவென்று வினவக் காட்டத்திலக்கினி பிரகாசித்தாற்போலப் பரமாயுள்ள தத்துவங்களிலுஞ் செல்லுமென்று கூறியது.

௬௫. புறக்கருமஞ் செய்வோரி லந்தரங்கர் சிறந்தாற்போலச் சதுர்ப்பாதங்களில் ஞானபாதஞ் சிறந்ததென்று கூறியது.

௬௬. பதியுண்மை கேட்டறிந்து அப்பதியுண்மை புணர்ந்த ஞானியரியல்பு கேட்க உப்புவினை பழனத்துற்றவை போலவும் உவர்க்கடலுற்ற நன்னீர் போலவும் புழு வேட்டுவனுதல் போலவும் அத்துவிதமான பதித்துவம் பெறுவரெனக் கூறியது.

௬௭. தேவதேவனைச் சேர்ந்தவரவனையாவகையல்லதுளதோ என்றருளினுய் ஆனமை எவ்வண்ணமென்று வினவப் பசுத்துவம் போகையும் பதித்துவமாகையும் ஒரு காலத்திலேயாமெனக் கூறியது.

௬௮. அழிந்தாய்த் தன்று ஆயழிந்ததுமன்று மொழிந்தவை யிரண்டும் ஓரமையத்தே யென்றருளினுய் அஃதெவ்வண்ணமெனத் தருமாதருமம் போலப் பசுத்துவம் போகையும் பதித்துவமாகையும் உடைத்தாதலால் அத்துவாவாற் பிரயோசனம் ஆன்மாவுக்கே யெனக் கூறியது.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# ஞானாமிர்த மூலமும் உரையும்.

## ஞானபாதம்.

காப்பு.

வெண்பா.

* முக்கட் டிருகவுட்டு நால்வாய்த் துரகத[illegible]ச்
செக்கர்த் தடித்திடித்த செஞ்சடைத்துப்—பக்கத்துப்
பூதத் தருநடத்துப் பொற்பிற்றென் னுள்ளத்து
நாதத்து நின்ற நலம்.

காமிகாதி சைவாகமங்களுள் ஞானபாதத்துப் பதிபசுபாசவுண்மை அறிவுறுத்துவான் போந்த ஆசிரியர் ஆன்றோராசாரம் பாதுகாத்தற்பொருட்டும் மாணாக்கர்க்கறிவுறுத்தற்பொருட்டும் இடையூறு நீக்குதற்குரிய விநாயகக்கடவுளை வாழ்த்துவாராயினர்.

(இதன்பொருள்)—எனதுள்ளத்துள்ளும் நாததத்துவத்துள்ளும் ஒப்பநின்ற நன்மையாகியபொருள் மூன்றுகண்ணையுடைத்து, இரண்டுகவுளையுடைத்து, நான்றவாயினையுடைத்து, நாகாபரணத்தையுடைத்து, விலகிவில்லுமிழ்தலாற் சிவந்தமின்னையுந்தோற்கும் படிசெய்த சிவந்தசடையினையுடைத்து, பக்கத்துப்பூதத்தையுடைத்து, அரியநடனத்தின்பொலிவையுடைத்து என்றவாறு. பூதத்தின் அரியநடனத்தைப் பக்கத்திற்பொருந்தும் பொலிவையுடைத்தெனினுமாம்.

## பாயிரம்.

கடவுள்வாழ்த்து.

ஆசிரியப்பா.

வெண்டிரைக் கருங்கட லேழும் விண்டொட
வீங்கிய சென்னிச் சிமயமு மோங்கிய
வேழிரும் பொழிலு மெண்ணீங் குயிரு

* இத்திரு வெண்பாவுக்கு உரை ஒரு பிரதியின் மாத்திரமிருந்தது.

மளவி லண்டமு-முளையின்றி விளைத்தம்
மலரோன் றாதையை வகுத்துந் தளரா
முன்னோ ரில்லா முன்னோன், பின்னு
மிளமையு மஃதா வியைந்தோன், வளமலி
தோற்ற மீறென் றில்லோன், *கூற்றுக்
கிளியே முற்ற வொளிமா டிருநகை
†யருளி னங்குழை பரப்பி யிருடீர்
கருணை மானனை யுயிர்ஞிமி றருந்த
மலர்ந்த மாதர் மரகத வல்லி
யந்தி வானத் தணிநிறங் கவர்ந்து
சிந்தை செல்லாச் செழுங்கிரி யொருபால்
வளங்கொளப் படர்ந்த வண்ணம் போல
வறவோ ளமர்ந்த பாகன், றுறவோர்க்
கெல்லை யாகிய தொல்லோன், றனது
பாமாண் சேவடி பரவ
‡நாமாண் புளதா நலங்கொளச் சிறந்தே.

§§விரும்பித் தொழுவார் வினைதீர்க்கு முக்கட்
கரும்பிற் பிறந்த களிறு.

(இ-ள்) வெண்டிரை—முன்னோன் எ-து வெள்ளிய திரையையுடையனவாகிய பெரிய § சமுத்திரமேழையும் சுவர்க்கத்தைக்கிட்டவோங்கிய உச்சியையுடைய மகாமேருவையும் அந்த மேருவைச்சூழ்ந்த || அட்டகுலபருவதங்களையும் உயர்ந்தெழப்பட்ட பெரிய ¶இருநூற்றிருபத்துநான்குபுவனங்களையும் எண்ணிறந்த ஆன்மதேகங்களையும் அளவில்லாத அண்டங்களையும் அரூபமானமாயையிலே சிருட்டிகாலத்திலே தோற்றுவித்தும் *(திதிகாலத்திலே திதிப்பித்தும் சங்காரகாலத்தில் இம்மாயையிலொடுங்குவித்தும்) அந்தப்

---

*கூற்றுக் கிளியேமுற்ற திருநகையொளிமாள் அறவோள் எனக்கூட்டுக; திருநகைக்கு என நான்காவதுவிரிக்க.

†அருளினங்குழைபரப்பி உயிர்ஞிமிறருந்த இருடீர்கருணைமானனை மலர்ந்தமாதர் மரகதவல்லி யெனக்கூட்டுக.

‡ நா என்றது ஆகுபெயராய் வாக்கையுணர்த்தி நின்றது.

§§ இக்குறள் உரையாசிரியர் கூறியதுதி.

§ சமுத்திரமேழாவன;—உப்பு, பால், தயிர், நெய், கருப்பஞ்சாறு, தேன், நீர் என்பனவாம். கந்தபுராணம் அண்டகோசப்படலம் உ0-ஆவது கவியிலறிக.

|| அட்டகுல பருவதங்களாவன ;—மாலியவான், கந்தமாதனம், நிசதம், எமகூடம், இமம், நீலம், சுவேதம், சிருங்கம் என்பனவாம். ஷை. ஷை. ௲௪-ஆவது கவியிலறிக.

¶ இருநூற்றிருபத்துநான்கு புவனங்களாவன;—அநாசிருத புவன முதலாயுள்ளன. அவ்வு ஆகமத்திலறிக..

* னெம்பற்றித் திதியுஞ்சங்காரமுமுடன்விரித்துரைத்தார்.

பிரமாவுக்குத் தாதையாகிய விட்டுணுவைத் தோற்றுவித்தும் தனக்கோராசையின்றியே நிற்கும் தன்னிற்பழையோரில்லாத பழையோன்,

பின்னும்—இளையன்தோன் எ-து பின்னும் இளமையும் அத்தன்மைத்தாகப்பொருந்தினோன்,

வளமலி--இல்லோன் எ-து வளப்பமுடைத்தாகிய செனனமரணமில்லாதோன்,

கூற்று—பாகன் எ-து கிருபையென்னும் அழகியதளிரைப்பரப்பிப் பக்குவான்மாக்களாகிய வண்டுகள் பரமானந்தத் தேனைப் புசிக்கும்படிக் கீடாகக் குற்றமற்ற கருணையாகிய மகத்தாகிய அரும்பை மலர்ந்த காதலிக்கப்பட்ட ஒருமரகதக் கொடி செக்கர் வானத்திலழகிய நிறத்தைக் கவர்ந்துகொண்டெனத் தாலுமளவிடுதற்கரிய அழகிய பருவத்தினொருபக்கத்திலே அலங்காரமுடைத்தாகப் படர்ந்தவாறுபோல வசனத்துக்கு இனியென்னுமிசையாசைப் படவும் திருநகைக்கு மற்றைய வொளிகெடவும் உண்டாகிய காருணியமே தனக்குச் சொரூபமாகவுடைய உமாதேவியுடன் கூடினபாகன்,

துறவோர்க்கு—தொல்லோன் எ-து பற்றற்றோர்க்குத் தன்றன்மையைக் கொடுக்கு முன்னோன்,

தனது—சிறந்தே எ-து பாக்களுக்கு அழகைக் கொடுக்குந்தன்னுடைய சிவந்த சீர்பாதங்களை வாழ்த்த அழகுகொள்ளமிக்கு என்னுடைய வாக்கானது மாட்சிமையுடைத்தாம் எ-று. அ—பண்டறிசுட்டு. (௧)

## விநாயகர் துதி.

திங்கட் கொழுந்தி னன்ன வொண்கே
ழொருமருப் *பிருமதக் கடவு ளெண்கழி
யாண்டுபல நிரம்பினு மிளமையொடு கெழீஇ
ஞான மாமதந் தருககி யானை
வினையுகச் சிறு நனைகவுள் வேழத்
தடியிணை யொடிவின்று பழிச்ச
†முடிவி லாதெவன் முன்னிய நெறித்தே.

(இ-ள்) திங்கள்—நெறித்தே எ-து இளம்பிறையையொத்த அழகையும் ஒளியையுமுடையதோர் கொம்பையுடையனும் பிரமசாரியானபடியால் இந்திரியமொழிந்த இரண்டு மதத்தையுடைய கர்த்தாவாய எண்ணிறந்தவயது பலவுண்டாயினும் இளமையோடுகூடி ஞானமாகிய மகத்தான மதத்தாலே கர்வித்து ஆன்மாக்கள் அளவிறந்த கன்மங்கள் ஒழியும்படி சீறும் மதத்தாலே நனைந்த கதுப்பையுடைய யானைமுகத்து விநாயகன் உபயபாதங்களை ஒழியாதே தோத்திரம்பண்ண அபேக்ஷையான போகமோக்கங்களிற் சித்தியாதது யாது எ-று. (௨)

---

* இருமதம் என்பதற்கிவ்வாறன்றி யானையுறுப்புக் கழுத்திற்குமேலன்றி யின்மையாலிரண்டு மதம் என்பாருமுளர்.

† முடிவிலாதது எனற்பாலது முடிவிலாது என விகாரமாயிற்று.

## ஞானாமிர்தம்

### வாணிதுதி.

விரிகதிர் *மதியிற் கதிர் †விரி பொருட்டுத்
தாதகு கடுத்த போதகு வெண்மடற்
புழற்காற் ‡சரோருகத் தளிக்குல மொலிப்ப
விழைவுற வெகுண்டோர் விழைய விழையென
வருட்கதிர் பரப்பி மருட்டுய ரகற்றி
வண்ண மாத்தவி சேறிப் பண்வரக்
கின்ன ராதிக டம்முறை தொடங்கப்
பொழுதொடு விப்பிரர் தொழுதனர் நுவல
விமையா மங்கைய ரமையாது பழிச்சத்
தீதற விருந்த வாதி நாயகி
கலைமகள் கழலிணை கருத
நிலைமை நீடுத றிலைமையோ வன்றே.

(இ-ள்) விரிகதிர்—அன்றே எ-து மிக்க ஒளியையுடைத்தாகிய பூரணசந்திரனியல்பையும் இடமுடைத்தாகிய பொருட்டையும் தாதோடு சேர்ந்த மேம்பாட்டையுடைய வெண்மடலையும் நாளமுண்டான தாளையும் உடைத்தாகிய வெண்டாமரைப்பூவில் அழகையும் பெருமையையும் உடைத்தாகிய பீடத்தின்மீதே ஏறி வண்டுவர்க்கமெல்லாஞ் சத்திக்கச் சருவசங்க நிவிர்த்தி வந்தோர் சினேகிக்க ஆபரணமாகக் கிருபையாகிய பிரகாசத்தை விரித்துத் தன்னை ஆசரித்தோருடைய அஞ்ஞானத்தால் வருந்துக்கங்களை நீக்கிக் கின்னரர் கிம்புருடர் முதலானோர் தத்தமுறையிலே பண்படத்தொடங்கித் தோத்திரம் பண்ணக் காலங்கடோறும் வேதியர் தொழுது துதிக்கத் தெய்வமகளிர்கள் அளவின்றியே போற்றக் குற்றமற எழுந்தருளியிருந்த ஆதிநாயகியான வாகீசுவரி உபயபாதங்களை நினைத்துத் தியானம்பண்ண மோக்ஷம் பெறுதல் ஒரு பொருளோ அன்று எ-று. (க)

### ஆசிரியர் துதி.

அருளு மறிவு மிருடீர் பொறையும்
வாய்மையுந் தவமுந் தான மாட்சியு
மன்னுயிர்க் கின்பந் தன்மீக் கூர்தலு
மொழுக்கமும் விழுப்பமு மழுக்கா றின்மையுங்
கண்காண் முதலிய பொறியும் பண்பார்
பூணுந் துகிலும் பாண்விரி பிணையலும்

---

* மதியிற் கதிர் என்பதற்குப் பூரணசந்திரனியல்பையும் என்றும் † விரிபொருட்டு என்பதற்கு இடமுடைத்தாகிய பொருட்டையும் என்றும் பொருள் கொள்க.

‡ சரோருகத்து வண்ணமாத்தவிசேறி இருந்த எனக்கூட்டுக.

## மூலமும் உரையும்.

புண்ணியம் படைத்து [illegible] மன்மிகை வந்த
[illegible] தன்ன [illegible] ற்றலெங் குரிசில்
குணப்பொற் குன்றம், வணக்க வரா
வைம்புல வேழத்தின் வெங்தொழில் வீயக
கருணை வீணை காமுறத் தழீஇச்
சாந்தக் கூர்முள் ளேந்தின னுறீஇத்
தன்வழிக் கொண்ட சைவ சிகாமணி,
பரமா னந்தத் திருமா முனிவன்,
வளமலி சேவடி வழுத்தி
* யுளமலி யுவகை யுற்றனம் பெரிதே.

(இ-ள்) அருளும்—குரிசில் எ-து சருவ பிராணிகளுடைய இதாகிதங்களும் தனக்கு வந்தாலொத்திருக்கும் கிருபையும் கல்வியினாலாய பொருணீதிகளை யறியுஞானமும் சகித்தற்கரிய வெகுளியுந் துன்பமும் வந்தவிடத்துக் குற்றமற்ற பொறையுடைமையும் பிறர்க்குத் தீங்கறச்சொல்லு மெய்வசனமும் இராகத் துவேஷத்தினாலே பிராணிகளுக்கு வருத்தஞ் செய்யாமையான தவமும் பக்குவான்மாக்களுக்கு உபகரிக்கு ஞானக்கொடையும் நித்தியமான ஆன்மாக்களுக்குப் போக மோக்ஷங்கள் தன்னினுமிக வுண்டாகவேண்டு மென்னுந் திருவுளமும் சமயாசாரம் வாத்தித்தலும் சீரமையுடைமையும் மனச்சழக்கில்லாமையும் ஆகிய தசகுணங்களையும் கண்முதலிய † புத்தியிந்திரியங்களும் கான் முதலிய ‡ கன்மேந்திரியங்களும் மகட்பண்பென்னுஞ் சீவகாருணியத்தினாலுண்டான பாசவைராக்கியமும் குருபத்தியும் ஞானசமாதியுமே ஆபரணமும ஆடையும் வண்டுகளாலே தொனியுடைத்தாகிய மாலையும் புண்ணியமானது இவையிற்றை அவயவமு மலங்காரமுமாகக்கொண்டு §பூதமான திருமேனிபோன்ற நிலைமையையுடையஎங்கர்த்தா,

குணப்பொற்குன்றம் எ-து பெருமையாலும் சுத்தியாலும் பிறழாநிலைமையாலும் குணத்துக்கு மகாமேருவினை யொப்போன்,

வணக்க—சிகாமணி எ-து அந்தக்கரணங்களென்னும் பாகரால் வணக்குதற்கரிதாகிய பஞ்சேந்திரியங்களாகிய § யானையின் வெவ்விய தொழிலான ஆசையொழியக் கருணையாகிய வீணையை விருப்பொடுவீக்கி மேற்கொண்டு சாந்தமென்னுங்கூரிய தோட்டியைக் கைக் கொண்டுறுத்தித் தன்வசமாக்கிக்கொண்ட சைவத்துக்குச சிகாமணியாயினோன்,

பர—முனிவன் எ-து பரமானந்தமாகிய செல்வத்தினையுடைய மகா முனிவன்,

---

* உளம்-ஆனமா; சிவஞானபோதம் முதலதிகாரணம் "கட்டுமுறுப்பும்" என்னுந்திருவெண்பாவிலறிக; ஈண்டு ஆகு பெயராய ஆன்ம சிற்சத்தியை யுணாத்தியது.

† புத்தியிந்திரியங்கள்—செவி, துவக்கு, கண், நா, நாசி என்பன.

‡ கன்மேந்திரியங்கள்—வாக்கு, பாதம, பாணி, பாயு, உபத்தம் என்பன.

§ பூதம்—பூமியையடைந்தது.

§ யானையாழிற்கு வயமாதலைக் கலித்தொகை பாலைக்கலியில் "காழ்வரைநில்லாக் கடுங்களிற்றொருத்தல் யாழ்வரைத்தங்கி யாங்கு" எனக்கூறுமாற்றாலறிக. இன்னும் சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் உருசு ஆவது கவியிலும், மணிமேகலை உதயகுமரன் அம்பலம்புக்க காதையில் ககூ-ககஎ ஆவது அடிகளிலும், தணிகைப்புராணம் நகரப்படலம் கஉ௬ ஆவது கவியிலுங் காண்க.

வளமலி—பெரிதே எ-து அழகுண்டாய சீர்பாதங்களைத் தோத்திரம்பண்ணி || ஆன்மசிற்சத்தியின்கண்ணே விளங்குஞ் சிவாநந்தாநுபவத்தால் வருஞ் சந்தோஷத்தை மிகவும் பெற்றேம் எ-று.

மனச்சழக்காவது பிறர் செல்வ முதலியவற்றைக்கண்டு பொறாமை. (௯)

## அவையடக்கம்.

உரைசால் பகுதிப் புரையோர் போலத்
தமிழ்த்துறை நிரம்பாத தன்மை யேனை
யறத்தின் விருப்புச் சிறப்பொடு நுந்தப
* பாப்புனை பான்மை நோக்கினன், வலித்துழி,
யெழுதாக் கேள்வியுங் கேள்வி பழிவா
ழேனோர் கேள்வியுங் கேள்வி, மாண
வருபடை தாங்கிய கிளர்தா ரகலத்
தெறிவே லிளைஞர் போலப் பொறிவாழ்
புலப்பகை † தாங்கிப் பிறப்பற வெறியு
மறப்போர் வாழ்க்கையும் வாழ்க்கை திறப்பட
விடமையும் பயவா தமமையு முதவாது
செச்சைக் கண்டத் தொத்துன போல
வாழ்வோர் வாழ்க்கையும வாழ்க்கை, தாவா
வொருமைத் தன்றே யாயினுஞ், சான்றோர்க
கெம்முடைப புனசொற் றம்முடைச் சிறப்பே
யதனு
லவரினு மளியமற் றியாமே, கவரா
வேனோ ரளிகருந் தானீ றின்றே,
யவரே
தமபா டெய்த றம்பா லோர்க்கே
யெமபா டெய்த விருமையு முடைத்தே,
யிவ்விரு பகுதியு மெழுததுச் சொலயாப
பவ்வயி னடைத்தே பொருட்பா டின்றே.

---

|| உளமலியுவகை என்பதற்கிவ்வாறனறிப் புதிபூரணமாய மகிழ்ச்சி எனவுமுரை கூறிய பிரதியுமுண்டு.

¶ மனச்சழக்கெனினும் மனக்கோட்டமெனினும் ஒக்கும்.

* பா என்பது ஈண்டு நூலை யுணர்த்தியது.

† தாங்கி என்பதற்குத் தாங்கி எனவே உரைகூறினோனும் அதற்குத் தடுத்து எனப் பொருள்கொள்க; புறநானூறு ௬௨ ஆவது செய்யுளுரையிற் காண்க.

(இ-ள்) உரை—நோக்கினன் எ-து தமிழியல்பு நிரம்பவறியாத வென்னை ‡ ஞான பாதத்தின்மேற் பிரிய மிகவுஞ் செலுத்தலாலே மிகுந்த வசனமாகிய $ பதினெட்டுப்பா டையு மிகவுணர்ந்த பெரியோரைப்போல ஒரு சாத்திரம் பண்ணுமுறைமையைப் பார்த் தேன்,

வலித்துழி எ-து பார்த்தவாறே திகைத்தவிடத்து,

எழுதா—கேள்வி எ-து வேதவாக்கியமும் ஒரு சத்தம் பழியுண்டாகவாழும் பாவ காரிகள் வசனமும் ஒரு சத்தம் ஆதலாலும்,

மாண—வாழ்க்கை எ-து அழகுண்டாக வருகிற படையைத் தாங்கிய வண்டு கிளரப் படாநின்ற மாலையையுடைத்தாகிய மார்பையுடைய சத்துரு பக்கத்தாரை யெறியும் வேலை யுடைய வீரபுருடரைப்போலச் சோத்திரந் துவக்குச் சட்சுச சிகுவை யாக்கிராணம் என்று சொல்லப்பட்ட இந்திரியங்களிலே வாழுஞ் சத்தாதிபுலனாகிய பகைகளைத்தாங்கி உற்பீசம் அண்டசம் சராயுசம் சுவேதசம் என்னும் நான்கு வர்க்கத்துப் பிறப்பையும் அற வெறியும் ஞானவான்கள் திருவுலாச்செய்தருளுதலும்வாழ்க்கை நன்மையுண்டாக இம்மை யினுந் தமக்கும் பிறர்க்கும் பிரயோசனமின்றியே மறுமையினுஞ் சுவர்க்க மோக்ஷங்களுக் கிடனின்றியே ஆட்டின் கழுத்திற் § றொங்குகின்ற அதர்போல உயிர்வாழ்வோர் வாழ்க்கை யும்வாழ்க்கை ஆதலானும்,

தாவா—ஆயினும் எ-து கேடுபடாது (ஒருபடித்தல்லாத நன்மை தீமையாயிருந்த பொருள்களிரண்டும் பிரபஞ்சத்தில்) ஒக்க வியாபித்திருக்கும் (ஆதலால் பெரியோர் அரு ளிய நூல்களே சாத்திரமாகயானும் புல்லிய சொற்களால் இந்தசசாத்திரம் பண்ண விசைந் தேன்) அஙஙமாயினும்,

‖ சான்றோர்க்கு—யாமே எ-து ஞானவான்களுக்கு எம்முடைய புல்லிய சொல்லுந் தாமருளிச்செய்த நூலுக்குச சிறப்பைக் கொடுக்கு மாதலால் யாம் அவரிடத்தும் அநுக் கிரகம் பெறுதலுடையோம்,

கவரா—இன்றே எ-து எம்மில் வேறில்லாத அஞ்ஞானிகளிடத்தும் யாம் தமக்கின மாதலால் அநுக்கிரகம் பெறுதற்கும் முடிவில்லையே,

அவரோ—உடைத்தே எ-து இந்த நல்லோருந் தீயோரும் பெருமை பெறுவது தமக் கினமானரிடத்து நாம் இரண்டு திறத்தாரிடத்தும் அநுக்கிரகம் பெறுதலுடையோம்,

இவ்விரு—இன்றே எ-து இப்படிச்சொல்லப்பட்ட நன்று தீது என்னும் இரண்டு வேறு பாடும் இந்நூலிலுள்ள எழுத்துஞ் சொல்லும் யாப்பும் அலஙகாரமுமாகிய நான்கு வருக் கத்துக்குமாம் இந்நூற்பொருள் பரமசிவனருளிச்செய்த திவ்வியாகமத்தின் பொருளாத லாற் பொருளினிடத்தொரு குற்றமுமில்லை எ-று.

அன்று, ஏ, மற்று—அசை. (௫)

---

‡ அறம்—ஈண்டு ஞானமென்றார்; அப்பர்சுவாமிகள் அருளிய திருநாரையூர்த் தேவா ரம் "ஆலதன்கீழற நால்வர்க்கருள்செய்தானை" என்பதனானுங்காண்க.

$ பதினெட்டுப்பாடை—நன்னூல், பெயரியல் "செந்தமிழ்நிலம்" என்னுஞ் சூத்திரத் திற்குரைத்த காண்டிகை யுரையிற் "சிங்களஞ் சோனகம்" என்னுஞ் செய்யுளிலறிக.

§ தொங்குகின்ற அதள்போல என்றும் பிரதிபேதமுண்டு; தொத்துதல்-தொங்குதல்; "கறையணல்" என்னுந்திருவகவலுரையிற் காண்க.

‖ சிறுமையொன்றுளதாயினன்றே பெருமையின் சிறப்பு விளங்குமென்பதுபற்றிச் சான்றோர்க்கெம்முடைப்புன்சொற் றம்முடைச் சிறப்பே என்றுரைொன்க.

## ஞானாமிர்தம்

### நூற்பெயர்.

மந்தர மத்தென நிறுவி நாணென
வைந்தலை யரவு சுற்றி நஞ்சொடு
பணாமணி பிதுங்கப் பற்றி யவுணரோ
டமரரு மியக்க லாற்று நாள்செல,
முகுந்தன் றனது முழுவலி யெறுழ்த்தோள்
வருந்த வாங்க வாய்விட் டலறி
நுரைத்தலை விரித்துத் திரைப்பெருங் கையெடுத்
தின்றுங் கூப்பிட வன்றுவந் தெழுந்த
துவரி யமிழ்த மென்ப, தமிழ்வளர்
குமுதச் செவ்வாய்க் கோமள வல்லி
யிமைய வல்லி யெழில்பெற விளங்கிய
நுதல்விழி நாட்டத் தொருதனிக் கடவு
ளருளின் கொம்பரோ டமரரு முனிவரும்
வெருளின் பிறவி வேர்தணி விமலவென்
றுணா தரற்றத் தானினி தருளிய
வாகம மத்தி, னருளின் கோலத்
தாசிரி யமலன் பாத பங்கயப்
போதொளி யிலகப் புனைந்து மாதவ
னருளுப தேச வரும்பெற ணேன்ஞாண்
மதிமாத் தடக்கை கனமெனப் பூட்டி
முறுக வாங்க, மறுகுபு கலுழ்ந்து
வல்வினைத் திண்கை மேலெடுத் தொய்யென
வறு[illegible]கைப் பித்தை சிறுபுறத் தலையப்
பிறவிப் பேரிட ரலமந் தோலமிட்
* டிரியல் போக வரும்புல மடிய
† வச்சா னுழி யெற்பட வெழுதலின்
ஞானா மிருத மென்ப
வானாச் செவ்வி மாநூற் பெயரே.

---

* இரியல்போக என்பதனையொருசொல்லாக்கி நீங்க என்றும், அரும்புலம் என்பதற்குக் கெடுத்தற்கரிய இந்திரியங்கள் என்றும் பொருள் கூறினமை காண்க.

† அஞ்ஞானமும் ஞானமுங் கூடவுண்டாயிருத்தல் பற்றி அஞ்ஞானத்தில் ஞானந் தோற்றியதென்றார்; பின் எந்தை ஞானம் என்னு முதற்குறிப்புடைய அகவலிற் காண்க.

(இ-ள்.) மந்தரம்—செல எ-து மந்தரபருவதத்தை மத்தாக நாட்டி ஐந்தலைமாநாக த்தை நாணுகப்பூட்டி நஞ்சோடுகூடப் படத்திலுண்டாகிய மாணிக்கம் பிதுங்கப் பற்றிக் கொண்டு அசுரர்களுந் தேவர்களுங் கூடிப்பேர்க்கப்புக்கவிடத்துப் பேராமையாலே நெடுங் காலஞ் செல்ல,

முகுந்தன்—என்ப எ-து முழுவலியையுடைய விட்டுணு தன்னுடைய வலியதோ ளானது வருந்தும்படி கடைதலாலே வாய்விட்டுக் கதறி நுரையென்னுந் தலையை விரித் துத் திரையென்னும் பெரிய கையையெடுத்து அன்று கலங்கின வதிர்ச்சி யின்று மாருதே கூப்பிட அந்த நாளிலே கடலிலே வந்தெழுந்தது அமிர்தமென்று சொல்லுவார்கள்,

தமிழ்—மத்தின் எ-து (இனி ஞானமிர்தம் வந்தபடி) தமிழுக்குப் பெருமைகொடு க்கிற குமுதம் போன்ற செய்ய வாயையுடையாளாய *கோமளக் கொடிபோன்றிருக்கப் படாநின்ற இமயபர்வதத்தில் அவதரித்த உமாதேவியுடனே அழகுண்டாக விளங்கிய நெற்றியிலே விழித்த திருநயனத்தையுடையனும் ஏகமாய்த் தனக்குவமையில்லாத கர்த்தா வான பரமாசாரியனே அருளே சொரூபமாகவுடைய உமாதேவியும் தேவர்களும் இருடிக ளுங்கூடிப் பயப்படத்தக்க பிறவியை வேரோடே கெடுக்கவேண்டும் நின்மலனே யென்று அமையாதபடி தோத்திரம்பண்ணுதலாலே அவன் இனிதாக அருளிச்செய்த திவ்வியாக மத்தை மத்தாகநாட்டி,

அருளின்—வாங்க எ-து அருளே திருமேனியாகவுடைய ஆசாரியனுகிய நின்மலன் சீர்பாதமாகிய தாமரைப்பூவைச் சிவஞானவொளியுண்டாகச் சூடிக்கொண்டு இம்மகா தவசி பிரசாதித்த உபதேசமென்னும் பெறுதற்கரிய வலிய நாணே மதியென்னு மகத்தான பெரியகையாலே விரையப்பூட்டி முறுகக் கடைதலாலே,

மறுகுபு—பெயரோ எ-து கலங்கித் துக்கப்பட்டு வலிய புண்ணிய பாவமாகிய திண் ணியவிரண்டு கையையு மேலேயெடுத்து விரையக் †காமாதி பகையாறுமாகியமயிர் சிறிய முதுகிலேயலையப் பிறவியென்னும் பெரியதுக்கமானது சுழன்று கூப்பிட்டு நீங்கக்கெடுத் தற்கரிய இந்திரியங்கள் சேட்டையற என்னிடத்துண்டாகிய அஞ்ஞானமென்னுஞ் சமுத் திரத்திலே நின்றும் ஒளியுண்டாக ஞானந்தோற்றியதனுலே சொல்லப்பட்ட நூலாகலின் அமையாதவழகினையுடைய மகத்தாகிய இந்தச்சாத்திரத்துக்கு ஞானமிர்தமெனப்பெயரா யிற்று எ-று.

மறுகுபு என்பது செய்பு என்னும் வினையெச்சம். (௬)

கண்ணுத லண்ணல் விண்ணவர் பணியக்
காள மாண்ட வாளவி ரங்களத்
தெரிமரு ளீர்ஞ்சடை மதிமுகி ழணிந்த
வும்ப ரீச ரும்பன், வெம்புறு
பிறவிப் பேரிடர்க் கறையுறு பகுவா

* கோமளம்—ஈண்டு இளமை யென்க.

† காமாதி பகை ஆறுவன ;—காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்ச ரியம் என்பனவாம்.

*யுரகத் தாரெயி றுறவிழ்ந் தறவ*
*வஞ்சின மிளியமென வுமரரு முனிவரும்,*
*வெஞ்சினப் பிறவி நஞ்சுக வளித்த*
*வருமறை யெவையுந், திருமிகு ஞான*
*மிலங்கொளி யோக நலங்கிளர் கிரியை*
*சரியை யென்ற விரிதரு பாதங்*
*கறையறு மறைமுறை நெறியி*
*னறைய மற்றரோ வறிகதி லமர்ந்தே.*

இது, சிவபிரான் அருளிச்செய்த திவ்வியாகமங்கள் சதுர்ப்பாதமாயிருக்கும்; இவையிற்றைச் சொல்ல அறிக என்றது.

(இ-ள்.) *கண்ணுதல்—உம்பன் எ-து நெற்றியிலே விழித்த திருநயனத்தையுடைய தலைவனாய் வானவர் வந்து தண்டம் பண்ணுதலினாலே நஞ்சைத்தரித்த ஒளிவிளங்கப்படாநின்ற திருக்கழுத்தையுடையனாய் அக்கினியின் சிவப்பையுமங்கச்செய்கிற சிவப்பையும் நீர்மையையுமுடைய திருச்சடாபாரத்திலே இளம்பிறையைச் சாத்தியருளிய தேவர்களுக்கு மேலாகிய பிரமவிட்டுணுக்களுக்குங் கர்த்தாவான பரமசிவன்,*

*வெம்புறு—முனிவரும் எ-து தவிக்கின்ற பிறவியென்னு மகாதுக்கமாகிய நஞ்சுண்டான பெரிய வாயையுடைய சர்ப்பத்தின் கூரிய தந்தமுருவக் கடித்தலாலே அப்பிறவி மயக்கத்திலே வீழ்ந்து தருமவானே பயப்படா நின்றோம் நின்னாலே யநுக்கிரகிக்கப்பட்ட நாங்களென்று தேவர்களுமிருடிகளும் விண்ணப்பஞ் செய்தலாலே,*

*வெஞ்சின—எவையும் எ-து இந்த வெவ்விய சினத்தையுடைய பிறவியென்னுஞ் சர்ப்பத்தின் நஞ்சுகெட அருளிச்செய்த அரியனவர்கிய மூலசிவாகமங்களினும் உபாகமங்கள் பலவற்றினும் சொல்லப்படுவென,*

*திருமிகு—அமர்ந்தே எ-து செல்வமிகுந்த ஞானபாதமும் ‡மேதாதியுன்மனாந்த தெரிசனமாகிய பேரொளியையுடைய யோகபாதமும் நன்மைகிளர்ந்த கிரியாபாதமுஞ் சரியாபாதமும் என்று சொல்லப்படாநின்ற விரிந்த நான்கு பாதங்களும் ஆதலால் •இவையிற்றைக்குற்றமற்ற உபதேசத்தின் முறைமையே நெறியாகச் சொல்லப் புத்திபண்ணியறிவாயாக* எ-று.

*மற்று, அரோ, தில்—அசை.* (எ)

பாயிர முற்றிற்று.

---

* *இலங்கொளியோகம் என்பதற்குப் பேரொளியையுடைத்தாகிய யோகம் எனவுரைகூறிய பிரதியுமுண்டு.*

‡ *மேதாதியுன்மனாந்தமாவன ;—மேதா, ஆர்க்கீச, விஷ, விந்து, அர்த்தசந்திர, நிரோதி, நாத, நாதாந்த, சத்தி, வியாபினி, வியோமரூபி, அநந்தை, அநாதை, அநாசிருதை, சமனை, உந்மனை எனப்பதினாறும். இவற்றைத் தெரிசிக்கும் யோகத்தைச் சோடசகலாப்பிராசத யோகம் என்பர். இவற்றின் விபரத்தைப் பௌஷ்கராகமத்திற் காண்க.*

# நூல்.

## ஞானபாதம்.

*பிறழா நிலைமைப் பெரும்பெயர் ஞானக்*
*கறையறு பாத முறையுறக் கழறிற்*
*பசுபா சத்தொடு பதியாய் பெற்றி,*
*மதியோர் பசுமூ வகையென மதிப்பர்,*
*பன்னிற் கேவலன் சகல னின்னியற்*
*சுத்தன், கேவலற் சொற்றிடி, னித்தன்*
*மெய்த்தகு குணமிலி வியாபி மொய்த்து*
*மலநனி புணர மறைவோ னிலனெச்*
*செய்தியு மறியோன் மையி லமூர்த்தன்*
*வலியில னசேதன னொளியிலி யிறையலன்,*
*மாயா வுதர மரீஇத் தேயாப்*
*போக நினைந்த சகலற் கெய்திய*
*முரண்மிகு கூற்றை முரித்த வரன*
*தருங்கலை யமர விரிந்திருஞ் சேதன*
*மடையா விச்சை யடையத் தடையில்*
*விடயப் பகுதி விரவிப் புடையே*
*பொங்கி யராகம் புணரத் தங்கா*
*தாசை யெங்கணு மாசற நிமிர*
*வெற் * பிர தான மொற்கமில் குணத்தொடு*
*புத்தி முதலிய தொத்தினி துறழப்*
*பிணித்தலிற் பிணிப்பினன் பசு,மற் றினைத்த*
*நியதி முன்ன ரியலிரு வினையிற்*
*பிறழா துறழப் பின்னர்க் குறையாக்*
*காலங் காலத் தளவைப் பாலிற்*
*காட்டத், தொழிலொடு போகத் தாட்டுண்*
*டிரியாத் தத்துவ கலையினி லிவ்வணம்*
*பரியாப் பந்தம் பந்தித் தொருவழி*

* பிரதானம் என்றது ஈண்டுப் பிரகிருதிமாயையினை; இது சுத்தமாயையின் மூல பரிணாமமாய்த் தோன்றியதென்பர் சிவஞானசித்தியாருரையில்.

யறிவு சிறிதமர்ந் தாக மாய
*பிரியா மோகினிப் பெரும்போ கத்தைத்
தானென வெண்ணி யானு முன்வினைப்
பயன்பல மாந்தி வியந்துறை காலை,
வல்வினை யெல்லை செல்லாக் காலத்
தொல்லென வொப்ப, வுயர்பெருஞ் சிவனது
†சத்தி நிபாதந் தழைப்ப மெய்த்தகு
குருபரம் பரன தருளின் செவ்வி
வம்பறு ‡சம்பிர தாயத் தஞ்சுட
ருற்ற காலைச், சொற்றொடர் பற்றுத்
தேயா தியாவு மாயறி வகன்ற
||வாயாச் சிவன தணிகிளர் சீர்த்தி
நின்மலத் தியையும் பின்மலத் தியையா,
னந்தமில் பந்தமற் றிவணஞ்
சிந்துதல் சிந்த றெரியுங் காலே.

**இது, பரமசிவன் ஆகமத்திலருளிச்செய்த சதுர்ப்பாதங்களில் ஞானபாதமாவது பசு பாசபதி என்ற மூன்றையும் ஆராய்ந்தறிதலாமென்று கூறி, இவையிற்றிற் பசுவினது கேவல சகல சுத்தாவத்தையிலக்கணங்கூறியது.**

(இ-ள்) *பிறழா—பெற்றி எ-து ஞானமென்னும் பெரியபெயரையுடைத்தாய ஒரு படித்தான குற்றமற்ற பாதத்தின்முறைமையை யறியச்சொல்லில் அது பசுவும் பாசமும் பதியுமென்று மூன்றையும் ஆராயுமுறைமையுடைத்து,*

*மதியோர்—மதிப்பர் எ-து அறிவுடையோர் பசு மூன்றவத்தையை யுடையதென்று சொல்லுவர்,*

*பன்னில்—சுத்தன் எ-து அவையிற்றைச்சொல்லிற் கேவலனென்றும் சகலனென்றும் இனிய வியல்பையுடைய சுத்தனென்றுமாம்,*

*கேவலச் சொற்றிடின் எ-து இவையிற்றிற் கேவலாவத்தையுடையனாய் நிற்குமுறை சொல்லின்,*

*நித்தன்—இறையலன் எ-து அநித்தியப்படான் உடம்புடன் கூடிய § முக்குணமில் லாதோன் சருவவியாபியாயிருப்போன் ஆணவமலமிகவுஞ் செறிந்திருத்தலாலே தற்*

---

* *பிரியாமோகினி ஆகமாய பெரும்போகத்தை எனக்கூட்டுக.*

† *சத்திநிபாதம் - அருள்பதிதல்.*

‡ *சம்பிரதாயம் - ஈண்டுத்தீக்கை என்க.*

|| *ஆயா அறிவகன்ற சிவன் எனக்கூட்டுக.*

*§ குணமிலி என்பதற் கிவ்வாறன்றிப் புத்திகுணமெட்டினையும் வினைப்போக்கிய காண்டக்கருவிகளையுமில்லாதோன் என வுரைகூறிய பிரதியுமுண்டு. புத்தியின்குண மெட்டாவன—தர்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் என்பனவாம்; பௌஷ்காரமத்திற் காண்க.*

சொரூபமறியாதிருப்போன் தனக்கொரு செயலில்லாதோன் அறிவில்லாதோன் குற்ற மற்ற வரூபியாயிருப்போன் போகத்தில் வலியில்லாதோன் (ஆசிரியர்) அசேதனமென்னுமையாலே அசேதனம்போன் றிச்சைமுன்னில்லாதிருப்போன் பிரகாசமுடையனல்லன் ஒன்றுக்குங் கர்த்தாவுமல்லன்,

மாயா—பசு எ - து (இனிச் சகலாவத்தையுடையனாய் நிற்குமுறைமை கூறின்) மாயா காரியமான தேகத்திலே கெழுமி அளவிறந்த போகத்தைத் துய்க்க நினைந்த சகலனைச் சகலாவத்தையெய்துமாறு கூடின வலிமிக்கிருக்கப்படாநின்ற கூற்றின் வலியையழித்த *பரமசிவனாலே அரிய கலாதத்துவஞ் சிறிது ஞானமுண்டாம்படி ஆணவத்தை நீக்க மகத்தான சைதந்நியம் விரிந்து பெறுதற்கரிய வித்தியாதத்துவத்தை அடைதலாலே தடுக்கவொண்ணுதபடி †விடயங்களெங்கினும் விரவிப் பக்கமேமிக்கு இராகதத்துவங் கூடித் தடையில்லாத ஆசை எவ்விடத்துங் குற்றமறநிமிர ஒளியுடைத்தாகிய பிரகிருதியினின்றும் பிறந்த ஒடுக்கமில்லாத குணதத்துவத்தோடு ‡புத்திதத்துவ முதற் பிருதுவியந்தமான தத்துவ வர்க்கம் இனிதாகக்கூடிப் பந்தித்தலாலே பந்திப் புடையனாகிய பசுவானவன்,

மற்று—காட்ட எ - து பரமசிவன் இணைத்த நியதிதத்துவம் முற்பவத்திற் செய்து பக்குவப்பட்ட புண்ணியபாவங்களால் வரும் போகங்களைத் தப்பாதே நியமித்துக்கொடுக்கப் பின்பே முடிவில்லாத காலதத்துவம் புசிக்கக்கடவனவாய காலவெல்லைகளை முறைமையிலே கொடுக்க,

தொழில்—காலை எ - து முயற்சியுடனே போகவிச்சையிலே அலைப்புண்டு நீங்காத தத்துவாங்கிசத்திலே இவ்வண்ணமே கெடாதபந்தம் பந்தித்து ஒருவழித்தான காணவறிவு சிறிதுகூடி வியாபியாயிருக்கிற மாயையினுடைய காரியமாகிய பெரியபோகம் புசித்தற்கு ஏதுவாகவந்த தேகத்தைத் தானென்று புத்திபண்ணி அளவில்லாத பூர்வகன்மபலங்களைப் புசித்துப் பிரியப்பட்டு இங்ஙனம் வாழுங்காலத்து, (இனிச் சுத்தாவத்தையுடையனாய் நிற்குமுறைமை கூறின்)

வல்வினை—ஒப்ப எ - து எண்ணிறந்த காலத்திலே மலபரிபாகப்பட்டு விரையவலிய கன்மம் சமத்துவமாக,

உயர்—காலை எ - து மிகப்பெரிய பரமசிவனுடைய சத்திநிபாதமுண்டாய்த் திருக்கைலாய பரம்பரையாக வந்த திருமேனிச் சட்டையோடே கூடியிருக்கிற ஞானாசாரிய

---

* அதுவுறுபிற்குக் கருவிப்பொருள் கூறினாரென்க; "ஒன்று மூன்று" என்னுமிலக்கணக்கொத்துச் சூத்திரத்திற் காண்க.

† விடயம் ஐந்தாவன :—சத்தபரிசரூபரசகந்தங்கள்.

‡ புத்திமுதற் பிருதுவியந்தமான தத்துவவர்க்கம்—அந்தக்கரணம் நான்கு, ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, தன்மாத்திரை ஐந்து, பூதம் ஐந்து ஆக இருபத்துநான்கென்பர். அந்தக்கரணங்களிலொன்றாகிய சித்தத்தை மனத்தின் பின்னதாய் அதன் கணடங்குமெனக்கொண்டு அதனை நீக்கிப் புத்திக்குக்காரணமாகிய குணதத்துவத்தைச் சேர்த்து இருபத்துநான்கென்பர் சிவஞானசித்தியாருரையில். இவை போக்கிய தத்துவமென்றுபெயர்.

னென்னு மேலாகிய பரமசிவனுடைய கிருபைக்குப் பக்குவமாய் அநாதியாய்க்கிட்டுதற்கரிய *ஞானவதியான தீக்கையென்னும் அழகியவொளி பிரகாசமாகுங்காலத்திலே,

சொற்றொடர்—இயையான் எ - து இன்னபடியிருப்பனென்று சொல்லுதற்கரியனாய் அழிவின்றியே † சிவதத்துவாதி பிருதுவியந்தமாய தத்துவங்களை அணுப்புதைக்கவுமிடமின்றி வியாபித்து ஒன்றையுஞ்சுட்டியறியாத சர்வஞ்ஞன பரமசிவனது அழகுண்டான கீர்த்தியையுடைய நின்மலசிவானந்தத் தியைவான் பின்னை ஆணவமலத்திற் கூடான்,

அந்தம்—தெரியுங்காலே எ - து அளவில்லாத பாசச்சேதம் பண்ணுமியல்பு எப்படியென்று விசாரிக்குமிடத்து இப்படிச் சிந்துதலாம் எ - று.

மற்று – வினைமாற்று. மற்று - அசை. ‡(க)

காரணங் கழறல் வேண்டுவ் லாரண
மறியோ னமல னுதற் கத்த
பொறிதீர் புற்கலன் விழுமலம் புணர்தற்,
கற்றே சொற்ற தநாதி, மற்றவர்க்
கெற்றெனி, லாதி யியையிற் குற்றமில்
காரணங் கழறுவ, லம்ம, சிருணந்
திகழொளிப் பளிங்கு போலப் புகழு
மிறைபுற் கலனுக் கென்றனன் குறைவின்
றறைகழ லருளொலி பரந்த
பொறைவளர் சார லறவ னேனே.$

இது, சுத்தாவத்தையிற் பசு மலக்ஷயம் வந்து நின்மலத்தைப்பெறுமென்றலாற் பதி நின்மல னுதற்கும் பசு மலனுதற்கும் காரணம் வினவ இவர்கட்கு நின்மலமும் மலமும் அநாதி சாதகமெனக் கூறியது.

---

* ஞானவதிதீக்கை—குண்டம் மண்டலம் அக்கினி நெய் சுருக்கு சுருவமுதலியனவெல்லாம் மனத்தாற் கற்பித்துக்கொண்டு விதிப்படி அகத்தே ஆகுதிமுதலிய கிரியைசெய்து மாணாக்கனது பாசத்தைக் கெடுத்தலாம்.

† சிவதத்துவாதி பிருதுவியந்தம் என்பன, நாதமுதற் பிருதுவியீறாகவுள்ள முப்பத்தாறு தத்துவங்களாம்.

‡ இத்திருவகவலின் ருற்பரியம் சிவஞானசித்தியாரில் "அறிவிலனமூர்த்தன்" "உருவினைக்கொண்டு" "இருவினைச்செயல்கள்" என்னு முதற்குறிப்புடைய மூத்திருச்செய்யுளிற் காண்க.

$ "சர்வானுக்கிரகராகிய சிவனார் எங்ஙனம் இயற்கையில் மலமிலரோ, அங்ஙனமே ஆன்மாக்கள் இயற்கையில் மல முளராய் அணுக்கள் எனப்படுவார்." என வாயுசங்கிதையிலும், "படிகத்துக்குத் தூய்மையும் செம்புக்குக் களிம்பும் எய்துதற்குக் காரணம் எங்ஙனம் இன்றோ, அங்ஙனஞ்சிவனும் ஆன்மாவும் முறையே மலமுத்தரும் மலபந்தருமாதற்குக் காரணம் இன்று; அநாதியே சுத்தரும் அசுத்தருமாம்." எனக் கிரணாகமத்திலுங் கூறப்பட்டிருக்கின்றன.

(இ-ள்) காரணம்—புணர்தற்கு எ-து என் கர்த்தாவே வேதாகம சாத்திரங்களாலறி தற்கரிய பரமசிவன் நின்மலனாதற்கும் ஞானச்செல்வமில்லாத ஆன்மா வருத்தஞ்செய்யு மல பந்தனாதற்கும் காரணம் அருளிச்செய்ய வேண்டுவேன், (என்று சீடன் விண்ணப்பஞ் செய்ய)

அற்றே—அநாதி எ-து நீ அங்ஙனமாகக் கேட்கிறபொருளதுதான் சொல்லில் அநாதி காண்,

மற்று—எனில் எ-து அவர்கள் அநாதியாக இப்படி யிருக்கவேண்டுவா னென்னெ னில்,

ஆதி—கழறுவல் எ-து இவர்களுக்கு நின்மலமும் மலமும் ஒரு நாளிலே கூடிற்றெனில் கூடினமைக்குக் குற்றமற்ற காரணஞ் சொல்லலாம்,

அம்ம எ-து அஃதிருந்தபடி கேளாய்,

சீருணம்—அறவனேனே எ-து செம்புக்குக் காளிதமும் விளங்கு மொளியுடைத்தா கிய பளிங்குக்குச் சுத்தமும் முற்பிற்பாடில்லாதவாறுபோலப் புகழ்தற்கரிய பரமசிவனுக் கும் ஆன்மாவுக்கும் நின்மலமும் மலமும் அநாதியென்றருளிச்செய்தனன் ஒன்றோடொன் றுபொருந்தாத மிருகங்கள் விரோதமின்றிப் போறையினோடு பொருந்திவாழுந் திருக்கை லாய மென்னுந் திருமலைச்சாரலில் குறைவற ஆடியருள்கின்ற திருச்சிலம்பினோசை கேட்டார் பிழைக்குந் தன்மையை யுடைய பரமாசாரியன் எ-று.

ஏ - சாரியை. மற்று - வினைமாற்று. (உ)

கலைமுத லாய நிலைமலி தத்துவத்
தலைவில் கட்டிய வனுறலென் பின்னர்
மாயா வுதர மரீஇபோ னெங்கணும்
வியா னுதலென் வினவின், மற்றிஃ
தாய்வின் வாரா வளவைத் தேயெனின்,
வீடுறப் பின்னர் விரவிய பந்தங்
கூடா தோடிற் குலவிய போகந்
துய்த்தல் செல்லான் செல்லா னாக
வெய்த்த லின்று மிருவினை யாக
வபவர்க் கமுமற் றடையா, னுடையுறு
கறைகடி தகற்றப் பிறகறை பிடித்த
பெற்றியி னிவனுக் குற்ற வான்பிணி,
மற்றது மறி, கலை முதலாச் சொற்றரும்
படிகடை யாயவற் றொடியா துலாவலி
னுணங்கிய வாக *ஞகி யிணங்கிரி

---

* ஆகி என்பது வினையெச்சமன்று பெயரென்க.

*மாயையின் வயினிவ னென்ற*
*தாயாச் சீர்த்தி யருந்தவ வறியே.*

**இது, மலபந்தமுடைய ஆன்மா மாயா வுதரத்தினுதற்தும் யாண்டும் போக்குவரவுடை யனுதற்தும் காரணமென்னெனக் காரணங்கூறியது.**

(இ-ள்) *கலை—வினவின் எ-து முன்பே ஆணவமலத்தாலே பந்திக்கப்பட்டவிவ பின்பு நித்தியத்தை மருவியிருக்கின்ற கலாதத்துவமுதலாகவுள்ள தத்துவங்களில் அளவி லாத பந்திப்புறவேண்டுவானேன் என்றும் பின் மாயாகாரியமான தேகத்திலே வர்த்திக்கி விவன் எவ்விடத்தும் போக்குவரவுடையனுதல் எவ்வண்ணமென்றும் விசாரிக்கில்,*

*மற்று—எனின் எ-து இப்பொருள்கள் என்னுடைய ஆராய்ச்சியாற் றெரியுமளவ யிருந்ததில்லை என்கிறுயாகில்,*

*வீடு—அடையான் எ-து முத்திபெறுவான்காரணமாகப் பின்பு கலைமுதலாகவுள்ள தத்துவங்களாலாகிய உடம்பெடுக்கவேண்டிற்று உடம்பெடாவிடில் கொண்டாடப்பட்ட கன்மம் புசித்தற்கு வழியில்லை அந்தவழியில்லாமையாலே (கன்ம சமத்துவமும் மலபரி பாகமும் பிறந்து சிவப்பிரகாசத்தாலே) கன்ம நாசமாகாது ஆதலாலே முத்தியையும் இவ னடைதற்கு உபாயமில்லை,*

*உடை—பிணி எ-து புடைவையிலே யேறினமாசு கடிதாகப்போக்க வேறும் உவர்ப் பிடித்ததன்மைத்துப் பின்பிவனுக்குக்கூடிய வலிய சரீர பந்தம்,*

*மற்றது மறி எ-து மற்றப்பொருளையுங் கேட்பாயாக,*

*கலை—அறியே எ-து கலாதத்துவ முதலாகச் சொல்லப்பட்ட பிருதுவிதத்துவமந்த மாகவுள்ள தத்துவாங்கிசத்தாலே கூடின தேகத்திலொழியாதே போகம் புசித்துலாவுத லால் இதை நுண்ணிதாகிய சரீரமெடுத்தானென்றும் உவமையில்லாத மாயையினிடத்த னென்றும் சொன்னது இத்தனையே என்று அளவில்லாத கீர்த்தியுடைய அரிய தவத்தை யுடையானே அறிவாயாக எ-று.*

*மற்று-வினைமாற்று.* (௫)

*உழித[illegible]லியைந்த பழித* ராகத்*
*தழியா வறிவன் கழியா, னுழியாச்*
*சேதன மன்மையிற், கடம்போ, லாகலி,*
*னெய்யா தியற்றிய னெவனவன் பொய்யாப்*
*புற்கல னென்ப, வொற்கமில் சேதன*
*மறிவு வறித சேதன மென்ன*
*நெறியறி புலவ †ரறிவறி வகையே.*

---

* *தரு+ஆகம்=தராகம் என முற்றுகரங் கெட்டுப் புணர்ந்தது.*

† *அறிவு—ஈண்டு ஆன்மா; பின் "ஈறறிவுக்கு" என்னுமுதற் குறிப்புடைய திருவகவ லிற் காண்க.*

இது பசு உண்மைக்குப் பிரமாணம் என்னை அந்நுவய வெதிரேக [illegible] தாற் பசு உண்மை கூறியது.

(இ-ள்) உழிதரல்—கழியான் எ-து போக்குவர வுடைத்தாயிருக்கப்படா [illegible] பழிக்கப்பட்ட தேகத்திலே நித்தியமாயிருக்கின்ற ஒரான்மா உளன் இது * பிரதிஞ்ஞை

ஒழியா—அன்மையில் எ-து அதற்கு எதுவென்னெனில் தேகங்கெடாத சைதந்நிய மல்லாமையால் இது †எது,

கடம்போல் எ-து என்போலவென்னில் கடத்தைப்போல இது திட்டாந்தம்,

ஆகலின் எ-து ஆதலாற் கடமுமொருவன் கொடுபோகிற்போம் அல்லாவிடில் இருக்கும் அதுபோலத் தேகமும் தானே போக்குவரவு பண்ணமாட்டாதாதலான் இது ‡உபநயம்,

எய்யா—எனப எ-து ஒழியாதே இத்தேகத்தைப் போக்குவரவு பண்ணுகிறான் யாவனொருவன் அவனழிவில்லாத தேகியென்றுகொள்க இது § நிகமனம் இவ்வைந்தும் § அந்நுவய வெதிரேகி யநுமானம்,

ஒற்கம்—வகையே எ-து ஒதுக்கமில்லாத சைதந்நியமாவது அறிவென்றும் இந்த அறிவில்லாதது அசேதனமென்றும் முத்திககு வழியறியு ஞானவான்கள் ஆன்மரூபதெரிசனம் பண்ணுமியல்பு எ-று. (௪)

காரியங் காசினி யாதி, யேரிய
லீசன் கத்தா விவற்கிது போக
மாதல் செல்லா, தகன்றுயர் கருமந
தானோ நுகர்தல் செலலா, தானு
தென்னே செய்த தென்னி, னன்னோ
கொன்னே செய்யான் றன்னே ரிலலோன்,
¶பாரி சேட மதனிற் பானுக,
கேரியல் பரன்பசு வென்றறி யினிதே.

இது, பிரபஞ்சங் காரியமாதலிற் பாரிசேடத்தால் ஆன்மாவின் பொருட்டெனப் பசுவுண்மை பின்னுங்கூறியது.

---

* பிரதிஞ்ஞை - மேற்கோள்.

† எது - காரணம்.

‡ உபநயம் - திட்டாந்தத்தைச சார்த்திக்கூறுவது.

§ நிகமனம் - முடிநதது முடித்தல்.

§ அந்நுவயம் - உடம்பாடு வெதிரேகம் - மறை. அநுமானம் - அநுமிதிக்குக்காரணம்; அநுமிதி - ஆராயசசியாற்றோன்று ஞானம். இவற்றின் விவரமெல்லாந் தருக்கசங்கிரக வுரையினும் அளவை விளக்கத்தினுங்காண்க.

¶ பாரிசேடத்தை ஒழிபளவை என்பர்.

(இ-ள்) காயம்—ஆதி எ-து பருவுடல் முதலாக நாதமீறாகத் தோற்றிய பிரபஞ்சஞ் செயலாயினதனை,

எரியல்—செல்லாது எ-து அழகிய வியல்பையுடைய பரமசிவன் கர்த்தாவாதலால் இவனுக்கு இதுபோகமாகப் பொருந்தமாட்டாது,

அகனறு—செல்லாது எ-து விரிந்துயர்ந்த காரியமாயிருக்கிற தத்துவங்கள் சடமாதலின் தானே தனக்குப் போகமாகமாட்டாது,

ஆனது—என்னின் எ-து அமையாது இந்தத் தத்துவங்களைச் செய்யவேண்டுவானேன் என்பாயாகில்,

அன்றோ—இல்லோன் எ-து ஐயோ இந்த நெடும் பிழையை என்றும் விருதாவிலே செய்யான் தனக்கு உவமையில்லாத பரமசிவன்,

பாரிசேடம்—பானுக்கு எ-து மூவரிருந்த விடத்திலே ஒரு பொருளைச் சிலர் இது யார் பொருளென்ன வினவின் நாங்களிருவரு மறியோம் என்று சொன்னால் ஒழிந்தவன் அறிந்தானென் தன்மையாகிய பாரிசேட அநுமானத்தால் இச்செயல்கள் பசுபாசபதி யென்ற மூன்றில்வைத்துப்பதிக்குஞ் சடமாகிய பிரபஞ்சத்திற்குமியையாமையாற் பானுகிய ஆன்மாவுக்காகவேண்டும்,

எரியல்—இனிதே எ-து இவ்விடத்தி லழகியவியல்பையுடைய பானென்றது ஆன்மாவை யென்று இனிதாக வறிவாயாக எ-று. (ரு)

பொன்னினு மணியினுங் குயிற்றி மின்னுரு
மங்கத மகுடங் கடிப்பிணை யென்ற
பாரமென் றறியா தாரமென் றணியு
மம்பர் மாந்தரின் மயங்கா தம்ம
பூட்சிய தலைநீ கேட்டி, யோட்ட
தவனற் றநத *குவைநெற் கொண்ட
முல்லை முகையன மெல்லென் மூர
லங்கை தாங்கா தாற்றுபு மிசைவுழி,
யங்கத் தியாவு மழியா திங்குயிர்
விட்ட தென்று சட்டகம் புகழாக்
கட்டி லேற்றிக் கைதொழூஉப் பரவி
† யிட்டிடை மகளி ரெருக்கச் சட்டென
வழல்வாய்ப் பல்பிண மருந்தி மத்து
முருட்டணைப் பாயற் குரூஉப்புகை மிளிரப்

* குவைநெற்கொண்ட மோட்டதவனற்றந்த முல்லைமுகையன மெல்லென்மூரல் எனக்கூட்டுக.

† இட்டிடைமகளிர் கைதொழூஉப் பரவியெருக்க எனக்கூட்டுக.

பாவகற் றழீஇக் கொன்னே வேளம்
இந்தனத் தியற்கை யாக்கை யென்றினி
விழித்தனை காண்ஃ தொழிப்பரும் பெரும்பொறை
யெரிவிருந் தாய வீங்கு நீண்ட
வரிதரு கண்ணியர் மதனனென் றுங்கும்
வேற்றுமை யுளதேற் சாற்றுக, மாற்றிரி
யாடிப் பாவைபோ டலர்நிழற் பாவை
கைகான் மெய்பிறி தவையும மைப்பயத்
தூக்கிற் றாங்கி மேக்குயர் புயர்தல்
பொறியொடு சிவண லென்ன
வறிவொடு செறியு நெறிவரு முடலே.

**இது, பின்னரும் அக்கினி சம்பந்தமாகிய அநுமானத்தாற்சேதன சேதனங் கூறியது.**

(இ-ள்) பொன்னினும்—கேட்டி எ-து பொன்னினாலும் நவரத்தினங்களினாலுஞ் செய்யப்பட்டு மின்னைக்கெடுக்கும் ஒளியையுடைய வாகுவலய முதலாகவுள்ள கையணிகலமும் முடி முதலாகவுள்ள தலையணிகலமும் மகரக்குழை முதலாகவுள்ள காதணிகலமும் இத்தன்மைத்தாகிய அணிகலங்களைச சுமையென்று புத்திபண்ணாதே ஆரமென்றணிந்து மயக்கமுறும் உலகரைப்போலப் பித்தேறாதே நிச்சயமாக உடம்புநீயல்லையானபடி கேட்பாயாக,

மோட்ட—மிசைவுழி எ-து திராட்சியாகிய நெல்லினுண்டாகிய மிக்க நெருப்பாலாக்கப்பட்ட முல்லைமொட்டுப்போன்ற மெல்லிய சோறும் அழகிய கைக்குப் பொறாதே ஆற்றியுண்ணும் பக்குவத்திலே,

அங்கத்து—விழித்தனைகாண் எ-து அவயவங்களில் ஒன்றுங் குறைவின்றியிருக்கவே இப்பொழுது உயிர் போயிற்றென்று சவத்தைப் புகழ்ச்சியில்லாத பாடையிலேயிட்டு நுண்ணிய இடையையுடைய மாதர் கையாலே தொழுது துதித்து மார்பிலுந் தலையிலும் மோத அதனை விரையக்கொண்டுபோய் நெருப்பை வாயாகக்கொண்டு பல்பிணங்களைப் புசிக்கிற சுடலையிலே முருட்டு விறகுகளை அணையுஞ் சயனமுமாக வடுக்கி (அதிற் கிடத்த) ஒளியையும் புகையையுமுடைய அவ்வக்கினியுடனே பரிசித்துக்கொண்டு விகற்பமறவேகும் விறகின்றன்மை இந்தச் சரீரமென்று இனி ஞானதிட்டியை விழித்துப்பாராய்,

இஃது—சாற்றுக எ-து இந்த ஒழித்தற்கரிய சரீரமாகிய பெருஞ்சுமையை அக்கினிக்கு விருந்தாகிய இப்பொழுதும் காதளவுநீண்ட செவ்வரி கருவரிபரந்த கண்ணையுடைய மாதர்களெல்லாம் காமதேவனென்ற அப்பொழுதும் வேறுபாடுண்டாயிற் சொல்லுக,

மாற்றிரி—உடலே எ-து உவமையில்லாத கண்ணாடியிற் றோன்றும் பாவையுடனே (ஆதித்தகிரண முதலாயுள்ள ஒளியிற்றோன்றும்) விரிந்த நிழற் * பாவை கைகளையுங் கால்

* பாவைதனக்கோர் செயலின்றென்பது விளங்கக்கூறினாரெனக; இவ்வாறு குறுந்தொகை (அ) "கையுங்காலுந் தூக்கத்தூங்கு மாடிப்பாவைபோல" எனக்கூறுமாறு காண்க. பாவை - பிரதிவிம்பம்.

[illegible]யுஞ் சரீரத்தின் மறுமுறைகள அவயவங்களையும் வெத்தெனமெத்தெனக் கீழே தாக்கித் தூக்கலும் மேலே யெழுந்தியுயர்தலும் போலவும் கயிற்றுப் பொறியில் இயக்குவான் செயலிலே* இயந்திரம் வருமாறுபோலவும் ஆன்மாவாகிய அறிவன் செயலாயிருக்கும் கன்மம் புசித்தற்கு நெறியாகிய சரீரமும் எ-று. (௬)

தமனியந் தரளந் தானை யானை
மருமம் பாணி வதன நோக்கம
பதமுத றமவென விசைத்தோ ரயமற
வொருபுடை யன்மை நோக்கி யொருபுடை
தாமென மயங்கி யேமுற் றோர், மற்
றறுசுவை யமைந்த வைவகை யுண்டி
மூவகை முற்றி யதனி னிருவகை
தாவா துறப்பிற் றங்க மேவா
விழித்தகு மலமா வொழித்தன ரொன்றன்
நிம்மல நீமற் றம்மல நீயே
லாக மாதி, மற் றன்று போக,
வறிவோர்க் கறிவ வங்கிய மென்ப
தறிவோ யறிதி, யங்கம் பிறிது, மற்
றிருகா லாழிக் கொளுமிடை வீணை
தண்டென் றாரின் விண்டு வன்ன
மருமத் தட்டின் மயிர்த்தோற் கிடுகிற்
சேகரக் கூவிரத் திகிரி யூர்வோன்
கொய்யுளை கொடிஞ்சி குஞ்சர
மையுக வூருநர் செய்தியின் மதியே.

இது, இன்னுங்கேளென்று தேராதி வாகனங்கள் போலத் தேகத்தைப் பிரவர்த்திப்பான் ஒரு தேகியுளனெனக் கூறியது.

(இ-ள்) தமனியம்—ஏமுற்றோர் எ-து பொன்னும் முத்தும் படையும் யானையும் முதலாகவுள்ள நானாவிதபதார்த்தங்களும் மார்புங் கையும் முகமுங் கண்ணுங்காலு முதலாகவுள்ளனவும் ஆகிய இரண்டுவர்க்கமுந தம்முடையவென்று சொல்லினோர் ஐயமறப் பொன் முதலாகவுள்ள ஒரு பக்கத்தைத் தம்முடையனவென்று பார்த்தும் மார்புமுதலாகவுள்ள ஒரு பக்கத்தைத் தாமென்றும் மயஙகிப் பித்தேறினோர்,

மற்று—ஆதி எ-து கைத்தல் கார்த்தல் புளித்தல் உவர்த்தல் துவர்த்தல் தித்தித்தல் என்று சொல்லப்பட்ட அறுவகை யிரதமும் அமைந்த கடித்துப்பருகி விழுங்கி நக்கிச் சுவைத்துக்கொள்வதாய ஐவகை யுணவாகப் புசித்தலிலை மூன்றுகூறுமி இவையிற்றிற் சாகமான இருகூறும் ஒழியாதே சரீரத்திலிருந்து வர்த்திக்க ஒருகூறும் நோக்கவொண்ணுதலாய்ப்

---

* இயந்திரம் என்பது இசை யெச்சம்.

பழிக்கத்தக்க மலமாகக் கழித்தோர் ஆதலால் இந்தக்கழித்தமலம் நீயல்லாமையறிந்தாயே, இந்த ஒரு கூறாயமலம் நீயாகில் இருகூறாகிய சரீரமலமும் நிச்சயமாக நீயாகிறாய்,

மற்றன்றுபோக எ-து அல்லக்காண்போகடு,

அறிவோர்க்கு—அறிதி எ-து அறியக்கடவோர்க்கு அறியப்படும்பொருள்கள் அந்நிய மென்னுமிது புத்திமானே நீயறிவை கண்டாயே,

அங்கம் பிறிது எ-து ஆதலால் நீ யறியப்பட்ட தேகமும் அந்நியமாம்,

மற்றிருகால்—மதியே எ-து மற்றுஞ் சரீரமிருக்கும்படி இரண்டு காலாகியவுருளை யையும் பழுவெலும்பு இடையே செறிந்த வீணைதண்டென்னும் அச்சுமரத்தையும் மலை போன்ற மார்பென்னுந் தட்டையும் மயிரையுடைத்தாகிய தோலென்னுங் கொடியையும் சிர மென்னுந் தலையலங்காரத்தையும் உடைத்தாயிருக்கின்ற சரீரமென்னுந் தேரையூர்வோனா கிய ஆன்மாவானவன் குதிரை தேர் யானை யென்று சொல்லப்பட்டனவற்றைக் குற்றமறச் செலுத்துவோர் தன்மையனென்று மதித்துக்கொள்வாயாக எ-று.

மற்று-வினைமாற்று. மற்று-அசை. பழுவெலும்பு-விலாவெலும்பு கொடு-தேரின்மாச் சுற்று. கூவிரம்-தலையலங்காரம். (எ)

மாதவ நுனித்த கோதறு குணத்தர்
மெய்யுணர் பக்க நாடிற், பொய்தப
விருவகைப் படிவ, மாவ, பொருவில்
அருக்க தூலமு, மவற்றது தொடர்பா,
மிருவகைப் * பஞ்ச விஞ்சதி தெரியி
† னுண்ணிலை ‡ புறநிலை, யெண்ணுந் தருபவோ
டின்னுங் கேண்மதி பன்னுவ, மன்னிய
மூவகைக் குற்ற முக்குண மும்மல
மூவகை மண்டில முப்பொறி தாவா
வைவகை நிறனோ டைவகைக் $ கோசமு
மைந் § தா சயமு மாறு தாரமு
மைந்தரு மகளிரு மலியும் வாதமுஞ்
சீலமு நோன்பு ஞானமும் பிறவுங்
காண்டகு திறத்த தெய்ய வீண்டிய
வறியா, நீயே யறிவன், செறியிதழ்க்
கந்தங் கொண்டது களைந்ததை கடுப்ப

---

* பஞ்சவிஞ்சதி - இருபத்தைந்து.

† உண்ணிலை - என்றது சூக்குமசரீரத்தை.

‡ புறநிலை - என்றது தூலசரீரத்தை.

$ கோசம் - உறை.

§ ஆசயம் - உறைவிடம்.

> [illegible] செய்யு முறைகழித் தொளிபெர
> லறிவொடு வினையிற் பிறவாக் கொரீஇ
> நின்றதை யுணர, நின்றொடு
> மன்ற கண்டனை மறையது துணிவே.

இது, பின்னருந் தூலசூக்குமமான தேகத்தை யசேதனமென்றுரைத்துப் பசு தரிசனங் கூறியது.

(இ-ள்) மாதவம்—நாடில் எ-து குற்றமற்ற மகத்தான சரியை கிரியா யோக மூன்றின் வழியாலே சூக்கின்ற குற்றமற்ற ஞானகுணத்தையுடையோர் சரீரமிருக்கும்படி யாராய்ந்த முறைமையை விசாரிக்கில்,

பொய்—படிவம் எ-து உண்மையாக இரண்டுவகைப்பட்டிருக்குந் தேகம்,

ஆவ எ-து அவையாவன,

பொருவில்—தூலமும் எ-து உவமையில்லாத சூக்கும சரீரமும் தூலசரீரமும்,

அவற்றது தொடர்பாம் எ-து இந்த இருவகைத் தேகத்தின் தொடர்ச்சியாயிருக்கும்,

இருவகை—புறநிலை எ-து ஆராயுங்கால் உண்ணிலை யொருவகை இருபத்தைந்தாவன பஞ்சமாபூதமாகிய பிருதிவி யப்புத் தேயு வாயு வாகாசம் ஐந்து * தன்மாத்திரையான சத்தாதிவிடயம் ஐந்து கன்மேந்திரியமான வாக்காதி ஐந்து ஞானேந்திரியமான சோத்திராதி ஐந்து மனமாதி அந்தக்கரண நான்கு இவற்றைக்கொண்டு ஆன்மா முயறற்கிடமாய போது † புருடன் எனப் பெயர்பெறுந் தத்துவம் ஒன்று புறநிலை யொருவகை இருபத்தைந்தாவன மகாபூதம் ஐந்தின் காரியமான பிருதுவியின்கூறு மயிராதி ஐந்து அப்புவின் கூறு ஓநீராதி ஐந்து தேயுவின்கூறு பசியாதி ஐந்து வாயுவின்கூறு ஓடலாதி ஐந்து ஆகாயத்தின்கூறு காமாதி ஐந்து,

எண்ணு—பன்னுவம் எ-து என்றெண்ணப்பட்ட இவையிற்றோடே யின்னமுஞ்சொல்லுவங் கேட்பாயாக,

மன்னிய—அறியா எ-து தேகத்திலே நிலைபெற்ற காமம் வெகுளி மயக்கம் சாத்துவித ராசத தாமதம் ஆணவம் மாயை கான்மியம் சூரிய சோமாக்கினி மண்டிலம் மனோ வாக்குக் காயம் கெடாத கருமை நீலஞ் சிவப்பு வெண்மை பொன்மை என்னும் ஐ வண்ணமும் இவற்றோடே சொல்லப்பட்ட ‡ அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானமயம் ஆனந்தமயமென்னும் ஐந்து கோசமும் ¶ ஆமாசயம் § பக்குவாசயம் மலாசயம் மூத்

---

* தன்மாத்திரை முதலியவற்றின் வகைகளும், மகாபூதமைந்தின் காரியங்களும் திருவாலவாய்க் கட்டளை முதலியவற்றிற் காண்க.

† புருடதததுவம - போகத்துன்முகமாகிய வுயிரே புருடதத்துவமென நிற்பதன்றி வேறில்லை என்றார் சிவஞானசித்தியாருரையில்.

‡ அன்னமயகோச முதலாய ஐவகைக் கோசத்தின் விவரத்தைச் சிவஞானசித்தியார் "முருவானந்தம்" என்னுஞ் செய்யுளுரையிற் காண்க.

¶ ஆமாசயம் - இரைக்குடர்.

§ பக்குவாசயம் - அன்னம் பக்குவப்படுமிடம்.

நீராசயம் கருப்பாசயம் என்னும் நீர்ச்சயமும் * மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்ஞையென்னும் ஆறாதாரமும் ஆண் பெண் அலி யென்று சொல்லப் பட்ட வேறுபாடுகளும் † தசவாயுக்களும் நன்மார்க்கமும் தவசும் கிரியா யோகங்களையுறு யுங் காணவறிவும் மற்றுங்காணப்பட்ட வேறுபாடாகக் கூடினவெல்லாம் அசேதனங்கள்,

நீயேஅறிவன் எ-து இவற்றை யறிகிறநீயே சைதந்நியன்,

செறி—யுணா எ-து செறிந்த இதழை யுடைத்தாகிய பூவிற் கந்தத்தைக் கொண்டு பூவைக் கைவிட்டதொப்ப அநரிய பதார்த்தங்களை யறிவிக்கும் விளக்குப்போல முன்னெண்ணப்பட்ட அசேதன பதார்த்தஙகளெல்லாம் அறிநது முறைமையிலே கழித்து இச்சா ஞானக் கிரியாரூபி யென்னுமிஃதொழிய மற்றுள்ள கிரியை வகைகளை யொழித்து எஞ்சி நின்றதனை யறிய,

நின்றனை—துணிவே எ-து திவ்வியாகமத்தின் முடிவிலே நிச்சயமாக நின்னையறியு முறைமை யறிந்தாயாவை எ-று.

மதி, தெய்ய, ஒடு—அசைகள், எனநத என்னும் பெயரெச்சவீறு தொக்கது. (அ)

‡ கால்கொடுத் திருகை ரூட்டி வாழிய
வெங்கிற் றண்டென் விடங்கத் தின்னியற்
பழுக்கழி நிரைத்துச் சிரைக்கயி றசைத்து
மயிர்த்தோல் வேய்ந்து சுவர்த்தசை நிறீஇ
யைம்புலச் சாளரந் $ தரும்பெறன் மாடத்
தும்பர் மணிக்குடச் சென்னிப் பொங்கிய
கூந்தற் பதாகை நான்குநிலை தழீஇய
வாங்கினி தமர்திற னறையி, ஞன்ற
§ சாக்கிரஞ் சுவனஞ் சுழுத்தி துரியம
பிருகுடி நாப்பண் ணொருபெருங் கநதர
மருமத் தாதி வலஞ்சுழி யுந்தி
யொருநான் கஙகுலி யும்பர், வரன்முறை

* மூலாதாரம் - குதத்தானம், சுவாதிட்டானம் - குய்யத்தானம், மணிபூரகம் - நாபித்தானம், அநாகதம் - இதயத்தானம், விசுத்தி - அடிநாத்தானம், ஆஞ்ஞை - இலாடத்தானம்.

† தசவாயு - வருகின்ற திருவகவலிற்காண்க.

‡ "கால்கொடுத்திருகையேற்றி" என்னுந் திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிய திருமறைக்காட்டுப் பதிகத்தாலும், "என்பிஞற்கழி நிரைத்து" என்னுந திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய திருவாரூர்ப்பதிகத்தானும் இவ்வுண்மை யுணர்க.

$ அருமை நோக்கி அரும் பெறன்மாட மென்றார்.

§ சாக்கிரமுதலாதப் பரிசனமிறுதியாகக் கூறியவை நிரனிறையாமாறு நோக்க.

செவிமெய் கண்வாய் மூக்கெனப் பெயரிய
வாயின் மிலேச்சர் சாரணர் தூதர்
சூத மாகதர் புரோகித ரென்ற
மேதகு புத்தீந் தியமுந், தீதறு
வாக்கொடு பதங்கை பாயு வுபத்தமென்
னிவுளி மறவரும் யானை வீரருந்
திகிரி தூண்டிய தருக ணாளரும
வன்கண் மள்ளருந் தந்திரத் தலைவரு
மென்கரு மேந்தியத் திறனு, மெஞ்சிய
வோசை கூட்ட முருவ மிரதங்
கந்த முரைநடை கொடைபோக் கின்பமென்
விடயப பல்பரி சனமு, மிடையாப
பிராண வபான வுதான வியான
சமான நாக கூர்ம கிருகர
தேவ தத்த தனஞ்சய னென்ற
விரைந் துறுதிச சுற்றமு, நீதி
சிந்தித் தாய்ந்து துணிந்து செயப்படு
மந்தக் கரண வமைச்சருந், தந்த
முறையுளி வழாது துறைதோ றீண்டிச
சாது ரங்கத்து நீதி யாகிப்
பேரத் தாணி சீர்பெறத் துன்னி
வீசுவ வீசி விரும்புவ விரும்பி
மாசில் காட்சி *மன்ன, னீங்கிப்
பல்பரி வாரமும் விள்ளாச சுற்றமுந்
தந்திரம் புணர்ந்த மந்திர மாக்களும
பலர்புக லறியா வளைபுகு மரங்கி
னினைந்தாய்ந்து துணிந்துசெயன் மணந்தினி துணர்ந்து
நனவெனக் கனவி னன்னடை வழாஅ
துரைத்தனன், சுவனத் தகத்தினி திறந்து
மந்திரத் தலைவனும் வன்கடும் பதிபனு
† மந்திர பூமி மருங்கு போகிச்
சிந்தை மாத்திரங் கனவலி னனவிற்
றந்துறை சுழுத்தி யின்றே, மந்திரத்

---

* மன்னன் துன்னி விரும்புவவிரும்பி வீசுவவீசி எனக்கூட்டுக.

† மந்திரபூமி - ஆலோசனைக்குரிய தானமாகிய இதயமென்க.

தலைவற் றணைந்து விலைவரம் பில்லாச்
சிங்கஞ் சுமந்த வைம்பே ரமளிப்
பள்ளி மண்டபத் தானுந் தனாது
திகிரி யுருண்ட பெருவனப் பேய்ப்ப
வுறுதிச் சுற்றத் தெறிவளி யெடுப்ப
வேற்ற மிழிவு சீற்ற மாற்ற
விழிச்சல் பழிச்ச லின்பத் துன்ப
மொழித்தனன் றுரியத், தழித்தினி ததீதத்
தொருவகை யெங்கணு * மாகி, யிருளிரி
சுடர்த்தொழிற் சாக்கிரத் தாங்க † ணான்கி
னிடைத்தகை தெரிதனிற் றெரியு மாறே.

**இது, பஞ்சாவத்தை சாதகத்தாற் பசு தரிசனங் கூறியது.**

(இ-ள்) கால்—அறையின் எ-து இரண்டுகாலைநாட்டி இரண்டுகையைவைத்து முதுகிலே வாழப்பட்ட வீணாதண்டென்னு முகட்டிலே இனிய இயல்பாகிய பழுவெலும்புகளென்னும் கழியைச் சுவராக நிறைத்து நரம்பென்னுங் கயிற்றினாலே கட்டப்பட்டு இந்தக் கழிச்சுவரிலே மாங்கிசமென்னு மண்ணாலேமேவி மயிரையுடைத்தாகிய தோலாலே மேயப்பட்டு இந்திரியம் ஐந்தாகிய சாளரங்களையுடைய இந்தப் பெறுதற்கரிய மாடத்தின்மேலே பூரணமணிக்குடமாகிய தலையையும் மிக்கிருக்கப்படாநின்ற கூந்தற்கொடியையும் ‡ நான்கு நிலையையும் பொருந்திய அவ்விடத்து இனிதாக இந்தத் தேகத்துக்கரசனாகிய ஆன்மாவர்த்திக்கு முறைமையைச் சொல்லின்,

ஆன்ற—உம்பர் எ-து புருவமத்தியிலே நின்றபோது விசாலமுடைத்தாகிய சாக்கிராவத்தையென்றும் ஒப்பில்லாத பெரிய கழுத்தடியிலே நின்றபோது சொப்பனாவத்தையென்றும் நெஞ்சடியிலே நின்றபோது சுழுத்தியவத்தையென்றும் வலமாகச் சுழித்திருக்கின்ற நாபித்தானத்துக்கு மேலேநாலங்குலம் கீழே நாலங்குலம் ஆக எட்டங்குலத்து நின்றபோது துரியாவத்தையென்றும் சொல்லப்படும்,

வரன்முறை—புத்தீந்தியமும் எ-து சாக்கிராவத்தை தொடங்கிவரு முறைமையாவது செவியிலேநின்று போகங்கொள்ளும் வாயின்மிலேச்சராகிய அநாரியமெய்காப்பாரும் மெய்யிலேநின்று போகங்கொள்ளுஞ் சாரணராகிய § ஒற்றருங் கண்ணிலேநின்று போகங்

---

* ஆகி - என்பது வினையெச்சமன்று பெயர்.

† நான்கினிடைத்தகை இருளிரி சுடர்த்தொழிற் சாக்கிரத்தாங்கண் தெரிதனிற்றெரியுமாறே எனக்கூட்டுக.

‡ நான்குநிலை—சாக்கிரமுதலாய நான்கவத்தைக்குமுரிய நான்கிடமென்க; துரியாதீதத்திலே கருவிகள் கூடாமைபற்றி அவத்தைப்படுதற்குரிய நான்கிடங்கூறினாரென்க.

§ ஒற்றர்—பகைவர், நட்பினர், அயலோர் என்னுமூவரிடத்து நிகழ்ந்தன அறிந்துகூறுவோர்.

கொள்ளுஞ் * தூதுபோவாரும் வாயிலேநின்று போகங்கொள்ளும் சூத மாகதராகிய † வத் ல்லப்பட்ட மேப்
தாளரும் மூக்கிலேநின்று போகங்கொள்ளும் ‡ புரோகிதருமென்று செ.
பாடு தமக்கிருக்கப்படாநின்ற ஞானேந்திரிய வர்க்கமும்,

தீதறு—திறனும் எ-து குற்றமற்ற வாக்கிலேநின்று போகங்கொள்ளு ங் குதிரை
சேவகரும் காலிலேநின்று போகங்கொள்ளும் யானைமேல் யுத்தவீரரும் கையி லே நின்.
போகங்கொள்ளுந் தேர்செலுத்தும் பயமிலராகிய தேர்மேல் யுத்தவீரரும் பாயுவி லேநின்
போகங்கொள்ளும் வன்கண்ணரான காலாட்களும் உபத்தத்திலேநின்று போக ங்கொ
ளுஞ் சேனாதிபதியரும் என்று சொல்லப்பட்ட கன்மேந்திரிய வர்க்கமும், ரச

எஞ்சிய—பரிசனமும் எ-து இவ்விந்திரியங்களுடனே கூடிய சத்த பரிச ரூப ர்
தம் வசன கமன தான விசர்க்கானந்தம் என்று சொல்லப்பட்ட விடையமாகிய பல
ரத்தாரும்,

இடையா—சுற்றமும் எ-து இதயத்தில் இந்திரநீலநிறத்தையுடைய இடை பிங்
சுழுமுனையிற் போக்குவரவுசெய்யுங் கெடாத பிராணவாயுவும் குதத்தில் இந்திரகோப நி
தையுடைத்தாகி மலசலங்களைப் பிரிக்கும் அபானவாயுவும் நாபித்தானத்திலே மின்
னியின் நிறத்தையுடைத்தாகி அக்கரங்களைப் பிரிக்கும் உதானவாயுவும் உடன்முழுவ
வியாபித்துநின்று பானிறத்தையுடைத்தாகித் தேகத்தைச் சுழித்தன்முதலிய தொ
ழில்களைச் செய்யும் வியானவாயுவும் கண்டத்திற் காயாமலர் நிறத்தையுடைத்தாகி அன்ன
த்தை நாடிதோறுஞ் செலுத்துஞ் சமானவாயுவும் இளஞாயிற்றின் நிறத்தையுடைத்த
நகைமுதலிய தொழில்களைப் புறம்பே செய்விக்கு நாகவாயுவும் குருந்தமலர் நிறத்தையு
த்தாகிக் கண்ணையிமைப்பிக்குங் கூர்மவாயுவும் மஞ்சணிறத்தையுடைத்தாகித் தும்ப
யுண்டெண்ணுவிக்குங் கிருகரவாயுவும் பளிங்கு நிறத்தையுடைத்தாகிக் கொட்டாவியை
செய்விக்குந் தேவதத்தவாயுவும் நீலாஞ்சன நிறத்தையுடைத்தாகித் தேகத்தை வீங்கடி
டிக்கச் செய்யுந் தனஞ்சயவாயுவும் என்று சொல்லப்பட்ட தசவாயுக்களாகிய உறுதிச்சு
ழும், (உறுதிச்சுற்றமாவார் §"அடுத்தநட்பாளரு மந்த ணாளரு மடைத்தொழி லாளரு ப
த்துவக் கலைஞரு நிமித்த காரரு நீணில வேந்தர்க் குரைத்த வைம்பே ருறுதிச் சுற்றம்
என்பதனாலறிக)

நீதி—அமைச்சரும் எ-து முறைமையிலே ஒன்றைச் சித்தஞ்சிந்தித்துப் புத்திவிச
ரித்து ஆங்காரந் துணிந்து மனம் அத்தைச்செய்வித்து வருகிற அந்தக்கரண நான்காகி
மந்திரிகளும்,

---

* தூதர்—சந்தி, விக்கிரகங்கட்கு வேற்றுவேந்தரிடைச்செல்வோர்.

† எத்தாளர்—புகழ்வோர்; சூதர் நின்றேத்துவோரென்றும், மாகதர் இருந்தேத்துவோ ரென்றும் பத்துப்பாட்டு, மணிமேகலை யுரையிற்கூறினமைகாண்க.

‡ புரோகிதர்—எந்தக்கருமங்களுக்கு முன்னேவைத்துக் கொள்ளப்படுபவர்.

§ "அடுத்தநட்பாளரும்" இது பிங்கலநிகண்டு ஐந்தாவது ஆடவர்வகையிலறிக; மடைத்தொழிலாளரென்பதற்குப் படைத்தொழிலோர் என்றுரைத்தார் சூடாமணிநிகண்டில்.

*தந்தம்—மன்னன் எ-து* தந்த முறைமைகளிலே நழுவாதே துறைதோறுங்கூடிச் சதுரங்கத்து அசேதனமான கருவிகளைச் சேதனமாகக் கூறினாற்போலப் பெரிய * அத்தாணி மண்டபயாகிய (அந்தப்புருவமத்தியிலே) சிறப்பாகக் குற்றமற்ற காட்சியையுடைய ஆன்மாவாகிய மன்னவன் பொருந்தி ஞானேந்திரியங்களால் அறிவனவற்றை அறிந்து கன்மேந்திரியங்களாலே செய்வனவற்றைச்செய்து இது சகலம், (இனிக்கீழாலவத்தைச் சாக்கிரம் வருமாறு அந்தத்தானத்திற்றானே பூதங்களைந்தும் கலாதிகளாறும் சிவதத்துவமைந்தும் ஆகப் பதினாறு நிறுத்தி ஞானேந்திரியமைந்தும் கன்மேந்திரியமைந்தும் தன்மாத்திரைகளைந்தும் வசனாதிகளைந்தும் வாயுக்கள் பத்தும் அந்தக்கரண நான்கும் † உள்ளமொன்றும் ஆக முப்பத்தைந்து கருவிகளுடனே நிற்பது கேவலசாக்கிரம்)

*நீங்கி—உரைத்தனன் எ-து* இந்தச் சாக்கிராவத்தையிலே (இந்திரியம்பத்தையு) நீங்கித் தன்மாத்திரைகள் வசனாதிகளாகிய பரிவாரங்கள் பத்தும் நீங்காத வாயுக்கள் பத்தாகிய சுற்றத்தாரும் விடயத்திற் கூடும் அந்தக்கரண சதுட்டயங்களாகிய மந்திரிகளும் மற்றைத் தத்துவங்களாகிய பலரும் புகுவதன்றி இங்ஙனஞ்சொன்ன ‡ இருபத்து நான்கு தத்துவங்களாகிய இவர்களே புகப்பட்ட கண்டத்தானமாகிய வாங்கிலே சித்தஞ்சிந்தித்துப் புத்தியாராய்ந்து ஆங்காரந் துணிந்து மன மத்தைச்செய்வித்து இத்தனையுங்கூடி இனிதாக அறிந்து நனவென்று மயங்கிச் சொப்பனவத்தையிற் கண்டவாறு இந்தச் சாக்கிராவத்தையில் ஒன்றுந்தப்பாமற் சொன்னான்,

*சுவனத்து—இன்றே எ-து* சொப்பனத்தானத்தில் இருபத்திரண்டு கருவிகளை நிறுத்தித் தான் இனிதாக நீங்கி மந்திரத்தலைவனாகிய சித்தமும் உறுதிச் சுற்றத்தனாகிய பிராணவாயுவும் சுழுத்தியவத்தைத்தானமாகிய இதயத்திடத்திலே புகுந்து சிந்தித்தலுடைய சித்தமாத்திரமாய் மயங்குதலாலே சுழுத்தியவத்தையிற்கண்டபடி சாக்கிராவத்தையிற் சொல்லுந்தன்மையில்லை,

*மந்திரம்—துரியத்து எ-து* சுழுத்தியவத்தையிலே மந்திரத்தலைவனாகிய சித்தத்தை வச்ராழித்துப் பெறும்விலையளவிடுதற்கரிதாய சிங்காசனத்து § "மயிர்ச்சேணம் பஞ்சுமெத்தை வண்படாந் தூவி பயிர்ப்பின்மயிற் பீலிமீப்பாய்" என்றுசொல்லும் பஞ்சசயனமாகிய படுக்கையிலே பள்ளிமண்டபத்தே பள்ளிகொள்ளுகிற காலத்தும் அரசனுடைய சக்கரஞ் சென்ற பெரியஅழகுபோல உறுதிச்சுற்றமான தசவாயுக்களில் விளங்குகின்ற பிராணவாயு வியங்க உயர்ச்சியுடையேனென்றும் தாழ்வுபட்டேனென்றும் கோபமுடையேனென்றும் பொறையுடையேனென்றும் என்னை வைதார் வாழ்த்தினர் என்றும் சுகதுக்கமுடையேனென்றும் அறியுமிவையொழிந்து நாபித்தானத்திலே துரியாவத்தையிலேநின்றான்,

---

* அத்தாணி—அரசிருக்கைமண்டபம்.

† உள்ளம்—புருடதத்துவம்.

‡ அவத்தை ஐந்தினும்புருடதத்துவமுண்மையால் அதனைக்கூட்டித்தொகைகூறாது சொப்பனமுதலியதானங்கட்கு ஒவ்வொன்று குறைத்துக்கூறினாரென்றுணர்க; சிவஞான சித்தியார் "சாக்கிரமுப்பத்தைந்து" என்னுமுதற்குறிப்புடைய திருப்பாட்டிற்காண்க.

§ "மயிர்ச்சேணம்" இது பிங்கலநிகண்டு; இறுதி அடியை வேறாகப் பிங்கலநிகண்டிலச்சிட்டிருக்கிறார். சூடாமணி நிகண்டிலும் பஞ்சசயனம் வேறுபடக்கூறியிருக்கின்றார். தூவி - அன்னத்தூவி.

அழித்து—ஆகி எ-று துரியத்தானத்தில் பிராணவாயு நிற்க அந்தவ்வத்தையையொழித்து மூலத்திலினிதான அதோமுக துரியாதீதத்திலே ஒருபடித்தாகிய (ஆணவமல மறைப்ப) எங்கும்வியாபியாகியிருப்பன்,

இருள்—தெரியுமாறே எ-து ஆன்மா அவத்தைப்படு நான்கிடத்தும் பெரியமலமாகிய இருளைக்கெடுக்குங்கருவிகளாகிய விளக்கின்றொழிற்றகைமையைச சகலமாகிய அவ்விடத்தில் அறிகைநின்னையறியும்வழி எ-று.

வாழிய, ஒடு—அசை. (௯)

இந்தியப் பந்தனை யிரியக் * கண்டிசிற்
கடவுட் டன்மை யிடைவரு துரியமென்
மடவோர் காட்சி வாயன், றுடலுந
ரோமபரண் கடந்து வீங்குசெலற் றூனை
நாப்ப ணன்றியும் பூநிள ரோதி
மடவோர் மருட்டு மாவீழ் பள்ளி
யிடனுடை வரைப்பு மிறையோ னிறைபோன்,
பொன்செய் புலவன் புகர்முகக் களிறும்
வெஞ்சின வேங்கையு மெண்கும் யாளியுங்
கண்கவர் † பெய்தி மன்பதை மருள
வையமின் றியற்றிய வாடகத் தசுமபினும்
வளைவா யடையா மணிமருள் குடத்து
மவிரொளி விளககொன் றல்க லல்லதை
திரிபு முண்டோ தெரிநதிசி னோர்க்கே,
துரியத் தல்க விரிபுல னவையும்
வறிய வென்று மருட்கை மருட்டி,
னென்னைகொ ‡ விடத்திவற் கிரண்டே மன்னெனத்,
தரியா ளுகிச் சாக்கிரத் தானுந
துரியத் தன்மைய, னென்னிற், றிரியா
வைப்புல மசேதன மறிவ னநாகுல
னொநதிவை நுகர்பவர் யாரே, யென்றுண
ரறிவறி சமாதி யென்ப பொறிவள
ரைம்புலத் தரசட் டார்த்தவ்
வும்ப ருயர்நிலை யுலகுய்த் தோரே.

---

* கண்டு என்பதனைக் காண்டலால் என எச்சமாக்கி யுரைத்தமை காண்க.

† எய்தி என்பதை எய்த எனத்திரித்துரைத்தமை காண்க.

‡ இடத்திவற் கிரண்டே என்னைகொல் என எனக்கூட்டுக.

**இது, மாயாவாதி துரியத்தில் ஆன்மாச் சுத்தனென்ன அவனை நிராகரணம் பண்ணுதல் கூறியது.**

(இ-ள்) இந்திய—வாயன்று எ-து இடையிடையே வருகிற துரியாவத்தையை இந்திரியங்களின் வியோகங்கழியக் காணுதலாலே ஆன்மாப் பதியினுடைய தன்மையனென்று மாயாவாதியாகிய அறிவில்லாதோன் ஆராய்ந்து சொல்லுமது பொருளன்று,

உடலுநர்—இறையோன் எ-து சத்துருக்களாலே காக்கப்படாநின்ற அரணையழித்து மிகுத்துச செல்லாநின்ற தந்திரத்தினடுவினும் அதுவன்றியும் அழகு விளங்காநின்ற கூந்தலையுடைய மகளிர் மயககும் அழகையுடைய பள்ளியிடமான விடத்தும் அரசனுக்குத் தன்றனை குன்றுமையால் அரசன்றுன் ஆதலானும்,

பொன்செய—தெரிந்திசினேர்க்கே எ-து பொற்றெழிற்செய்ய வறிந்தவன் முகத்திலே புகரையுடைத்தாகிய யானையாகவும் வெவ்விய சினத்தையுடைய புலியாகவும் காடியாகவும் யாளியாகவும் மக்கட்டொகுதி மயங்கக் கண்களைக் கவர்த்துகொள்ளும்படி குற்றமறச் செய்த பொற்குடத்திலும் இரத்தினங்களினொளியைமழுக்கும் வனைந்த வாயையில்லாத ஊமைக்குடததிலும் விட்டு விளங்கப்படாநின்ற ஒளியையுடைய ஒரு விளக்கையிட்டால் அவ்விளக்கொன்றன்றி ஆராய்ந்தோர்க்கு ஈரிடத்தும் வேறுபாடுண்டாயத் தோன்றுதாதலாலும்,

துரிய—மருட்டினன் எ-து சாக்கிராவத்தையினின்றபொழுது (பிரிக்கவொண்ணுத) விரிந்த கருவிகளெல்லாந் துரியாவத்தையிலடைந்தபொழுது (நீங்கினபடியினலே) அவைகள் அசேதனமென்று நிச்சயித்து இந்த அவத்தைகளிலுண்டான அஞ்ஞான நிலையைக் கெடுத்துப் பார்க்கில், மருள் - அஞ்ஞானம். கை - இடம்.

என்னை—மன்னென எ-து இவ்விடத்தி லான்மாவுக்கு இரண்டு தன்மையின்றே யாதுபற்றி நீ யான்மாவை இரண்டுபடியாகச சொல்லவேண்டிற்று என்று அவனை நிராகரித்தபோது,

தரியான்—தன்மையன் எ-து மாயாவாதி சகிக்காதவனுகி ஆன்மாச்சாக்கிராவத்தையிலுந் துரியாவத்தையைப்போலச சுத்தனென்றுன்,

என்னில் எ-து என்று கூறுவாயாகில்,

திரியா—யாரே எ-து கெடாத விந்திரியங்கள் அசேதனங்கள் ஆதலால் சருவஞானமுடைய பரமசிவன் ஒருக்காலும் கலக்கமில்லாதோன் ஆனபடியினலே வருந்தி யிந்தச் சுகதுக்கங்களை ஆன்மாவையொழியப் புசிப்பவர் யார்தான்,

என்றுணர்—உயத்தோரோ எ-து என்றறியப்பட்ட அறிவு ஆன்மாவையறியு "மான்மசமாதியென்றுசொல்லுவர் இந்திரியங்களிலே வருகிற விடயங்களுக்கு அரசனுன அஞ்ஞானவேந்தனை யழித்தார்த்துக்கொண்டு காலாக்கினிருத்திர புவனமுதல் அநாசிருதபுவன பரியந்தமான இருநூற்றிருபத்துநாலு புவனவர்க்கத்துக்கு மேலான உயர்ந்த அம்மோக்ஷதானத்திலே தம்மைச் செலுத்தினேர் எ-று.

ஆதலின் மாயாவாதிமலனோய் காரணமாக இதாகிதங்கள் புசித்தலையறியாது ஆன்மாவைத் துரியத்திற் சுத்தன் என்றமை பொருந்தாதெனக்கொள்க. இசின், மன், கொல்— அசை. (௪௦)

யானே யின்ன னாயின னெற்சே
ராணாப் பாச மறியல் விரும்பின
னறவ வென்ன, வருளோ னறியிற்
குறையா மும்மலக் கொத்தே, முறைதே
ராணவ மாயை கருமம், மாங்கவை
பேணிற் செம்பிற் பெருகிருந் துகளென
வறிவினை மறைத்த லணிமல, மாயை
நெறிதேர் பெய்தி னீணில மந்த
முற் *சொன் மாக்கலைக் குற்ற காரணங்,
கரும மிருவினை தருமா தருமம்,
பெரும மலமும் பிறழா மாயையு
மற்றவற் பிணிப்பே யாயி னெற்றிவை
யிரண்டென விசைத்த, லெனினே †தெருண்டிசின்,
யாண்டு மொருவா தொளிர்வது மீண்டுப்
பிரிந்துபுணர்ந் துறையும் பெற்றி யிருந்தது
மொன்றே போலு, நன்று நனியுணர்,
மறைத்தற் றொழில்பூண் பதுவு மதனைக்
குறைத்தற் செய்தி குலவுவ தோரிடை
யிரண்டல வென்பதெ, னிருளிரு ளிரிசுடர்
முரண்டர நின்ற முழுமல மாயை,
யன்ன தாக, வறிவனொ டாணவந்
துன்னிய தநாதித் தொடர்பிற் றென்னி
னென்னை புற்கலற் ‡றரும மிஃதெனப்
பன்னா மர, பெனிற் பகர்வ னன்னோ,
ஞானமு மதற்கெதி ராய வூனமும்
பார்நனி பலவோ வொன்றோ தா, $னப்

---

* சொன் மாக்கலை முன் னீணிலமந்தம் கு உற்றகாரணம் எனக்கூட்டுக.

† இசின் என்பது ஈண்டு முன்னிலைக்கண்வந்தது; ஏனையிடத்தும்வரும்; புறநானூற் றுரையிலுங் காண்க.

‡ தருமம் - குணம்.

$ அப்புற்கலற்றருமந்தரும மின்மைசொற்றரிற்சித்தால் என்பதற்கு - அந்த ஆன்மாவுக்கு நீ சொன்ன மலதருமமில்லை அதற்குத் தருமஞ்சொல்லிற் சித்தாயிருக்கும், ஆல் - அசை என வுரைகூறிய பிரதியுமுண்டு.

புற்கலற் றருமர் றரும மின்மை
சொற்றரிற் சித்தான், மற்றவற் றரும
மவணல தெனினவன் பரிணு மத்தொடு
சிவனுஞ், சேதனு சேதன மாத
லொன்றுக் கொன்று தாகலி னென்றும்
பரிணு மத்திரம் படிவது * வறிதுக்,
கருணே ரறிவுக் கல்கா, தொல்கா
தாங்கம் மூன்று மலமு நீங்கா
வீங்கிவற் கியைந்த, விகலா வீங்கிரு
ளிறுத்த காலே மறுப்பிரிந் தகன்ற
தீதறு நெடுங்க ணுத னுட்டத்
தயலொன் றின்மை போலவு, முயல்வுழி
நுண்ணூற் பேரி லிழைத்தகப் படுபு
தன்முதல் கெடூஉ மெண்ணுக் கீடத்
திறும்பூ, தியாரஃ தறிந்திசி னேரக
களியிடைக் கலித்த தென்ப
விளிவருங் குரையவ் விருவினைத் திறனே.

இது, பசுவினுண்மை கேட்டறிந்து மேற் சீடன் பாசவிகாரங்கேட்க மும்மலங்களுந் தொகுத்துக் கூறியது.

(இ-ள்) யானே—என்ன எ-து தருமவானே நானிப்படி இச்சா ஞானக்கிரியா சொரூபியாயினேன் என்னேக்கூடிய அமையாதபாசத்தை யறிதலே விரும்பினேன் என்று சீடன் விண்ணப்பஞ்செய்ய,

அருளோன்—கொத்தே எ-து அருளே திருமேனியான ஆசாரியனருளிச்செய்வன் நீ கேட்கிற பாசத்தை யறியவேண்டின் அநாதியாய் அழிவில்லாத மும்மலவர்க்கமாய்க்கா ணிருப்பது,

முறை—கருமம் எ-து அவையிற்றின் முறைமையை விசாரிக்கில் ஆணவமலமென் றும் மாயாமலமென்றும் கன்மமலமென்றும் பெயர்,

ஆங்கு—மலம் எ-து அவ்விடத்தவையிருக்கும்படி முறையே சொல்லில் பொருந்திய ஆணவமலத்துக் கிலக்கணம் செம்புடன்கூடிய மிக்க காளிதம்போல ஆன்மாவோடு † சகச மாய்ப் பசுபாசபதிகளினுண்மையை யறியவொட்டாதே ஞானத்தை மறைக்கை,

மாயை—காரணம் எ-து மாயாமலத்தின் முறைமையை விசாரிக்கிற் சொல்லப்பட்ட மகத்தாகிய கலாதத்துவ முதலாக நீண்ட பிருதிவிதத்துவ மந்தமாகவுள்ள தத்துவங்களு க்குப் பொருந்திய உபாதானமாய் இருப்பது,

* வறிது - ஈண்டு அசேதனம்.

† சகசம் - இயற்கை.

# ஞானமிர்தம்

*கருமம்—தருமம் எ-து கன்மமலமாவது இருவினை அவை தாம் புண்ணிய பாவமாயிருக்குமென்றருளிச்செய்ய,*

*பெரும—இசைத்தல் எ-து பெரியோனே ஆணவ மலமும் கெடாத மாயாமலமும் அந்த ஆன்மாவைப் பந்தித்தே கிடக்குமாகில் என்றுனிவையிற்றை யிரண்டென்று சொல்லவேண்டிற்று என்று விண்ணப்பஞ்செய்ய,*

*எனினே தெருண்டிசின் எ-து என்று வினவுகிறுயாகில் அறிவாயாக,*

*யாண்டும்—போலும் எ-து ஒரு நாளும் விட்டு நீங்காதேவிளங்கி நிற்பதான ஆணவ மலமும் இப்பொழுது கன்மத்துக்கீடாகத் தனுகரணபுவன போகங்களுக்கு உபாதானமாய விடுவது பற்றுவதான முறைமையையுடைய மாயாமலமும் ஒன்றுபோலேயிருந்தவோதான்,*

*நன்று நனியுணர் எ-து நன்ருக மிகவும் விசாரித்துப்பாராய,*

*மறைத்தல்—என்பதென் எ-து மறைத்தலே செயதியாக வுடைததான ஆணவமலமும் அந்தமறைப்பை ஒருகாலத்திலே நீங்குத்லைக கொணடாட்டமாகவுடையது கலாதத்துவமாதலால் இதனுககு உபாதானமான மாயாமலமும் இரணடலவெனறு சொல்லவேண்டுவானேன்,*

*இருள்—மாயை எ-து இருளும் இருளைககெடுககும விளககுமபோல மாறுபாடுகூடி நின்றனகாண் முதன்மையான ஆணவமலமும மாயாமலமும எனறருளிசசெயய,*

*அன்னதாக எ-து அப்படியாக,*

*அறிவன்—மரபு எ-து ஆணவமலமம ஆன்மாவோடேகூடியது அநாதியாகச செறிந்துளதென்னில் இந்த ஆணவமலம் ஆன்மாவுககு இது குணமென்று சொலலாத முறைமையேன்றுனென்று விண்ணப்பஞ்செயய,*

*எனில்—அன்றே எ-து என்கிறுயாகில் ஐயோ சொல்லுவன்,*

*ஞானம்—தான் எ-து அறிவும் அதற்கு மாறுபாடான அறியாமையைப் பண்ணுவதான ஒன்றையும் மிகவும் விசாரித்துப்பாராய பலவென்போமோ ஒன்றென்போமோதான்,*

*அப்புறக்கலன்—சித்தால் எ-து அந்த ஆன்மாவுக்குக் குணமுங்குணமின்மையும் ஆராய்ந்து கூறின் அது சித்தாயிருக்கும்,*

*மற்றவன்—சிவனும் எ-து அவ்வான்மாவுக்குக் குணம் அப்படியனறு என்று சொல்லுவாயாகில் அவனுக்கு வளர்தல் சுருங்குதல்கூடும்,*

*சேதனு—வறிதுக்கு எ-து தான் சைதன்னியமாயிருக்க அசேதனத்துக்குள்ள குணமுண்டாதல் ஒரு பொருளுக்குக் கூடாது ஆதலாலெப்பொழுதும் பரிணமவாக்கங்கூடுவது அசேதனத்துக்குக் காண்,*

* அருள்—அல்காது எ-து அருளைப்போல இச்சாஞானக்கிரியா சொரூபியாயிருக்கிற ஆன்மாவுக்கு இந்தப்பரிணமத்திறங்கூடாது,

ஒல்காது—இயைந்த எ-து அவ்விடத்தொதுக்கமற அந்த மும்மலமும் ஒழியாதே இச்சகலாவத்தையில் ஆன்மாவுக்குக் கூடின,

இகலா—போலவும் எ-து இவற்றினுள் ஆணவமலமிருக்குமுறைமை கூறின் மாறுபாடில்லாத மிக்க பூதவிருள் கூடினவிடத்துப் படலமின்றிவிரிந்த குற்றமின்றிக்காணு நெடிய கண் அந்தகன் கண்ணுக்கு வேறுபாடொன்றில்லாத வாறுபோலவுமாம்,

முயல்வுழி—இறும்பூது எ-து (இனி மாயாமலமிருக்கு முறைமை கூறின்) முயற்சித்துச் செய்யும்போது நுண்ணிய நூலாலே பெரிய கூட்டை யெடுத்து அதற்குள்ளே யகப்படுத் தான்கெடும் விசாரமில்லாத உலண்டுப் புழுப்போல இருப்பதோராச்சரியம் இந்தச் சரீரத்திலே நின்று வெறொரு சரீர மெடுப்பதாக முடிந்தது,

யார்—திறனே எ-து அந்த மலமாயை மயக்கத்திலே வந்ததென்று சொல்லப்படுவனவாகிய கெடுத்தற்கரிய அந்தக் கன்மமலமான புண்ணிய பாவத்தின்றன்மையாகிய அஃதை யார்தான் அறிந்தோர் எ-று.

மற்று - வினைமாற்று. ஆல், குரை—அசை. (௧௧)

ஆருயிர் † யாதொன் றகலின் மாசிரி
பதியது தன்மை படர்ப மதிதர
வன்ன பாச மறி, யஃ தின்றெனி
னென்னை பரதந் திரிய, மியல்பெனின்
முன்னோ ரோதிய முத்தி மன்றோ
தாகும், பந்த மகன்றோர் போகிய
வீசத் தன்மை யிசைந்தோ ராசபல்
பந்தத் தொன்றின ரைம்புல னேவலி
னின்றனர் வீடுங் கட்டு மீங்கிது,
‡ பரதந் திரியங் கரைகழி பந்தஞ்
சித்தென நித்த மாயின் மற்றது
முத்தி கூடுதன் முடியா தி,த்தகை
பசுநெறி நின்றோர் மதிநனி படரா,
ரேக மெவ்வுயிர்க் கண்ணுந் தீதி

---

* அருணோறிவுக்கு என்பதற்கு இவ்வாறன்றி அருளிசைந்த ஆன்மாவுக்கு என்றுரை கூறிய பிரதியுமுண்டு.

† யாதொன்றகலின் ஆருயிர் மாசிரிபதியது தன்மைபடர்ப அன்னபாசமறி எனக் கூட்டுக; அன்னது என்பதில் இறுதிவிகாரமாயிற்று.

‡ பரதந்திரியங் கரைகழிபந்தம் என்பது சிவசமவாத வுரை மறுப்பில் "அருளினுலாகமத்தே" என்னுஞ் செய்யுளின்கீழ்க் காணப்படுகின்றது.

லனாதி * நிபிட-மளவொடு படாஅ
துயிர்தொறு நின்றக் கண்ணும் விளிதரு
தன்னுடைக் காலந் துன்னிற் பின்னிடும்
† வலியின் றகுதித், தொளிதிக ழநாதி
யன்றெனி னதற்கு நின்றது வேறோ
ரேது வேண்டு,மற் றின்னு மாசிரி
முத்தரைத் தடுக்கு ‡ மாகப் பித்தா
மற்றது வேண்டு ரொப்பரி வருத்த,
மேக மெனவறி பலவா யோவாத்
தோற்ற முண்மை யின்மையின், மாற்றரும்
வலிபல வென்பதை யறியுயிர்க்
கொலிகெழு வீடொருங் குணரா மையினே.

**இது, மேல் மும்மலமுண்டென்கைக்குப் பிரமாண மென்னென்று கேட்கப்பிரதானமான ஆணவமலமுண்டென்று சாதித்து அதன்குணம் பிரித்துக்கூறியது.**

(இ-ள்) ஆருயிர்—அறி எ-து (ஆன்மாவைப்போலத் தானுமுதலாயிருந்து அநாதியே முப்பொருளுந் தோன்றாமல் ஆன்மாவினுடைய இச்சா ஞானக் கிரியையை மறைத்தது) யாது அது பரிபாககாலத்திலே நீங்கில் அதிலே முன்பொருந்தின ஆன்மாக் குற்றமற்ற சிவனுடைய சுயம்பிரகாச ஞானனந்த பரிபூரணத்தைப் பெறும் புத்திமானே அத்தன்மை யுடையது ஆணவமலமென் றறிக,

அஃது—பரதந்திரியம் எ-து அப்படி ஆணவமலமென்பதொன்றில்லை யென்று சொல்வாயாகிற் சைதந்நியமாயிருக்கிற அறிவன் இந்திரியங்கட்கேவல் செய்யவேண்டுவா னேன்,

இயல்பு—ஆகும் எ-து ஆன்மா இந்திரியங்கட்கேவல்செய்தல் முறைமை யென்பா யாகில் முன்பு முத்தியடைந்த ஞானிகளாலே சொல்லப்பட்ட முத்தி யெய்தமாட்டாது,

பந்தம்—ஈங்கிது எ-து இந்த ஆணவமலபந்த நீங்கினோர் மகத்தாகிய சிவானந்த பூரணுநுபவம் பெற்றோராவர் குற்றமுடைத்தாகிய மூலமலத்துடனே கூடினோர் இந்திரி யஙகட் கேவல் செய்வோராவர் முத்தியாவதும் பெத்தமாவதும் முறையே இப்படியென் றறிந்துகொள்,

பரதந்திரியம்—முடியாது எ-து இந்தச் சேதனனை இந்திரியங்கட்கு ஏவல் செய்விக் கும் அளவில்லாத மலபந்தம் சித்துப்போல நித்தமாய் ஒருபடித்தாயிருக்குமாகில் அவ்வா ன்மாவுக்கு முத்திகூடுதல் பொருந்தாது,

* நிபிடம் - செறிவு.

† வலியின்றொகுதித்து எனப்பாடமோதிக் கெடுஞ்சத்திகளை யுடையது என வுரை கூறிய பிரதியுமுண்டு.

‡ ஆக - ஆதலால்.

இத்தகை—படரார் எ-து இப்படி யொருபடித்தான பசுத்துவமுடைய சகலர்க்குப் போதித்தால் மிக்க ஞானமுண்டாகமாட்டார்,

ஏகம்—படாது எ-து சருவான்மாக்களிடத்தும் இந்த ஆணவமலபந்தம் தானொன்றாய்க் குற்றமற்ற அநாதியாக எவ்வுயிரிடத்துஞ் செறிந்திருக்கும் இதுதான் வியாபகமாயிருக்கும்,

உயிர்—தகுதித்து எ-து சருவான்மாக்களிடத்து நின்றதேயாயினும் அந்த ஆன்மாக்களில் ஓரான்மாவுக்குப் பாசச்சேதம் பண்ணும் பக்குவகாலம் வருமானால் ஆணவமலம் தன்னுடைய சத்தி கெடுமுறைமையுடைத்து,

ஒளி—வேண்டும் எ-து இதனைப் பிரகாசமாகிய அநாதியன்றெனில் அந்தமலம் இடையிலே வந்து நின்றதற்கு வேறே ஒரேதுச் சொல்லவேண்டும்,

மற்று—வருத்தம் எ-து அதுவுமன்றியே பாசச்சேதம்வந்த முத்தான்மாக்களைப் பின்னும் பந்திக்குமாதலாலே அந்த முத்திவேண்டினோர் செய்யுமுவமையில்லாத வருத்தமாகிய தவம் பித்தாய் முடியும்,

ஏகம்—இன்மையின் எ-து இதுதான் பலவாய்க் கெடாத தோற்றம் உண்மையாக இல்லாதபடியாலே அதனை யொன்றென்றறிந்துகொள்,

மாற்று—உணராமையினே எ-து ஆன்மாக்களுக்கெல்லாம் பிரகாசமாகிய முத்திக்கு வேண்டு ஞானம் ஒரு பக்குவகாலத்திலே கூடாமையின் இந்தமலத்திற்கு உவமையில்லாத சத்திகள் பலவென் றறிவாயாக எ-று.

மற்று இரண்டும் வினைமாற்று. (கஉ)

> கலைநவில் கரும நிலைமலி பெய்தக்
> கேட்டி, யின்பம் வேட்டிசி னோரே
> நிரய மெய்தினர் பலரோ பலரோ
> புரைதீர் போக பூமி மேவினர்,
> செய்வினை யொத்தக் கண்ணு மையுரு
> சாலி மேவினர் பலரோ பலரதன்
> வாலிய விந்துவு மருவா தோரோ,
> யாயிடைக் கருமங் காரண
> மாசுடைத் துயர்ந்த மதிப்பி னோயே.

**இது, கன்மமலத்தினியல்பு கூறியது.**

(இ-ள்) கலை—கேட்டி எ-து வேதாகமங்களிற் சொல்லப்பட்ட கன்மமலமிருக்கும் படி புத்திபூர்வமாகக் கேட்பாயாக,

இன்பம்—மேவினர் எ-து சர்வான்மாக்களுஞ் சுகத்தை வேண்டினோராயிருக்க இவர்களில் நரகத்திலே விதனம்புசித்தோரும்பலர் குற்றமற்ற சுவர்க்கலோகத்திலே போகம் புசித்தோரும்பலர் (அது திட்டாந்தத்திலுங் காண்பாயாக),

செய்வினை—மருவாதோரோ எ-து பலருமொக்க முயற்சியைச் செய்தவிடத்தும் இவர்களிற் குற்றமற்ற செந்நெல்லை மிகவும் பெற்றோர்பலர் ஒரு நென்மூக்கும் பெறாதோரும் பலர்,

ஆயிடை—மதியிேனேயே எ-து இப்படியானவிடத்து இதற்குக் கன்மம் ஏதுவாகவேண்டுங்காண் அஞ்ஞானத்தைக் கெடுத்து மேலான ஞானத்தை யுடையோனே எ-று.

முற்பட்ட ஏகாரம் ஐந்தும் தேற்றம்; பிற்பட்ட ஏகாரம் ஈற்றசை. (௧௫)

ஆதி யோதிய மேதகு மாயை
கோதின் றேக நாசம தணையா,
தளவில் வலியுற் றுலகமை புரக்கும்
யோனி, யெங்கணுந் தானினி தமலுங்,
கருமத் ததிகா ரரந்தத் தளவும்
விதிமுறை கொடுக்கும் வியப்பிற் றலைதறி,
சகக்கரு மத்தின் மிகத்திக ழிறையை
யாரரய் பென்ன வணிகிள ருலக
மேருபா தான மின்றெனி னின், றுடை
நூலின் றுயி னின்றென, வாலிய
சேதன மன்றிது தீதறு *செயல்கள்
கோதுக வசேதன மாகலி, னலதேற்
காரண நியம மென்னும் பேரிசை
யெல்லா முடைக்கும் பொல்லாத் தோடம்
வல்லே யெய்து, மதித்தமு நல்ல
காரிய மாவது மாயி னீரிற்
றோற்றுவ தியாதின், மாற்றரும் வியாபி
யன்றெனின் வினைமற் றெங்கணு மார்தல்
கூறுதி, யாது பலவாய்ச் சேதன
மன்றது தோற்றத் தொன்று மன்றிது
தோற்ற மாகலி னேக, மாப்பட
நூலின் றொருதிக் காண்டலி னேக
மனேகத் தெழுமென, வறியப் பலவு
மொருதனி வித்தின் வருவகை யறிதி,
சித்தி லசித்தின் குற்றமி றோற்ற
மென்பவர் புனலை வன்புகை யதனின்
மான வளவைத் தாமள வின்மை,

* செயல்கள் = காரியங்கள்.

பூத மாதி யாமுல கெவைக்குங்
காரணம் பார்க்கி லோர்பர மாணு
வென்ப ரறிவி னுண்மை யின்புற
நாடின நிற்க, வோருரு வதனி
லோருரு வுதித்த லல்லது யாவு
நாச மில்லை யென்னி னுசற
வொன்றுக் கோரிடத் தெய்திய தெங்கனு
நின்றிடி னதனை நீக்கும் வென்றியர்
யாரோ, கோடிக் கீறு மாற்றக்
கண்டா லெவர்க்கும் பொன்றுங் கால
முண்டே மன்ற, வோது மாயா
காரிய நிற்பது முடிவிற் சிரிய
சத்தி வடிவிற் பொற்பொடு புணர்ந்து
தொடங்கற் காலை வடம்பட விளங்கு
மாருயி ரேரிசைப் போகஞ்
சீரிதி னருந்தத் திகழ்தனு முதலே.

இது, மாயாமலத்தினியல்பு கூறியது.

ஆதி—அணையாது எ-து பரமசிவனாலே வேதாகமங்களில் அருளிச் செய்யப்பட்ட மேம்பாட்டைத் தகுதியாகவுடைய மாயை குற்றமின்றித் தானொரு வஸ்துவாயிருக்கும் ஒருக்காலும் அழிவுபடாது,

அளவில்—யோனி எ-து அளவிறந்த சத்திகளைப்பொருந்திப் பிரபஞ்சமடங்கலுந் தோற்றுகைக்கு உற்பத்தித் தானமாயிருக்கும்,

எங்கணும்—அமலும் எ-து இதுதான் எவ்விடத்தும் இனிதாக வியாபித்திருக்கும்,

கருமத்து—அறி எ-து பிராரத்துவ கன்மபலம் புசித்தறுமளவும் (பிராரத்துவமான தேகத்தைக்) கொடுக்கைக்கு இடமான முறைமையாகிய ஆச்சரியத்தையுடைத்து அதனை யறிவாயாக,

சகக்கருமத்தின்—இன்று எ-து பிரபஞ்ச காரியங்கொண்டு மிகவும் பிரகாசமாகிய பரமசிவனை நிச்சயித்தாற்போல அழகுண்டாகிய பிரபஞ்சம் காரியமாயிருத்தலால் நல்ல வுபாதானமில்லையாகில் அப்பிரபஞ்சம் இல்லையென்று கொள்க,

உடை—என எ-து (இது என்போலவென்னில்) நூலில்லையாகிற் புடவையில்லாத வாறுபோல,

வாலிய—ஆகலின் எ-து இதுதான் வாலிதாகிய சைதந்நியமன்று குற்றமற்ற இதனுடைய காரியங்கள் ஐயமற அசேதனமாயிருத்தலால்,

அலதேல்—எய்தும் எ-து அப்படியன்று அசேதனமாயிருப்பது சைதந்நியத்திலே தோன்றுமென்னில் இன்னகாரணத்தில் இன்னகாரிய நியமமாய்த்தோன்றும் என்னும்

பெரிய கீர்த்தியெல்லாங் கெடுக்கு நியமமில்லாமையென்னும் பொல்லாத்தோடங் கடிதாகக்கூடும்,

அநித்தம்—யாதின் எ-து நித்தியமாய் உபாதானமுமாயிருக்கிற மாயை அநித்தமென்றும் ஒன்றினுடைய காரியமென்றுஞ் சொல்லில் நீர்மையாகத் தோற்றப்படுதல் உடனே கூடுமாதலால் இது தோற்றுவது யாதின்பாலோ,

மாற்றரும்—கூறுதி எ-து உவமையில்லாத வியாபியன்றெனில் கன்மம் பக்குவப் பட்டபடிக்கு ஆன்மாக்கள் எவ்விடத்தும் போகம் புசிக்குமுபாயஞ் சொல்லாய்,

யாது—ஏகம் எ-து யாதொரு பொருள்தான் பலவாய்ச் சைதந்நியமல்லாதது அஃதொரு தோற்றரவைக்காட்டும் இது தோற்றிற்றல்லவாதலால் ஏகமாம் ஒன்றாயிருப்பது பல பொருளிற்றோன்றாதென்றருளிச் செய்ய,

மாப்படம்—என எ-து மகத்தாகிய புடவை நூற்கழிபலவாலேயானமை காண்டலால் அநேகம்பதார்த்தத்தாலே ஏகமாயிருப்பதொன்றாமென்று அறியக்கூடாதோ என்று விண்ணப்பஞ்செய்ய,

அறி—அறிதி எ-து நீயறிந்த அந்நூற்கழி பலவும் ஒரு தனிவித்தாலே வந்தனவென்னும்படியறியாயோ,

சித்தில்—அளவின்மை எ-து குற்றமற்ற சித்திலே அசித்துத் தோன்றுமென்று சொல்லுவோர் மிகுந்த புகையைக்கண்டு கீழே நீருண்டென்று அநுமானங்கொண்டபடியாகிய பிரமாணக்குற்றமாம்,

பூதம்—நிற்க எ-து மகா பூதமுதலாகவுள்ள உலகமெவையிற்றுக்கும் காரணம் விசாரித்துப் பார்க்கில் (புடவைக்குப் பல நூற்கழிகாரணமாதல்போல) பரமாணுவேயென்று சொல்லுவோராகிய நையாயிகர் நுண்ணிய வறிவு இனிதாக அறிந்தோம் அவர் நிற்க,

ஒருரு—யாரே எ-து ஒரு பொருளிலே ஒருபொருடோன்றுமல்லது சருவ பதார்த்தமும் ஒருநாளிலே யழிந்துதோன்று மகா சங்காரமில்லையென்னிற் குற்றமற ஓரிடத்தொரு பொருளுக்குவந்த சங்காரம் எல்லாப்பதார்த்தமும் ஒருநாளிலே யழியப் பக்குவிப் படுமாயில் அந்தப்பக்குவத்தை நீக்கும் வெற்றியுடையார் யாரோதான்,

கோடிக்கு—மன்ற எ-து கோடி சரீரங்கள் ஒரு முகூர்த்தத்திலே முடிவாக அழியக் கண்டால் நிச்சயமாக எல்லாச் சரீரங்கட்கும் ஒரு நாளிலே சங்காரமுண்டுகாண்,

ஓதும்—முதலே எ-து சொல்லப்பட்ட மாயாகாரியஞ் சங்காரகாலத்து நிற்கு முறைமை யாங்ஙனமெனில் சீரிதாகிய * தத்தஞ் சத்திவடிவிலே அழகிதாக உபாதானத்திலே யொடுங்கிச் சிருட்டிகாலத்து ஒழுங்குபடச் சிருட்டி முறைமையிலே தோன்றும் நிறைந்த ஆன்மாக்கள் அழகிய கீர்த்தியுடைத்தாகிய போகத்தை நன்றாகப்புசித்தற்கு ஏதுவான பிரகாசமுள்ள தனுகரணபுவனபோகங்களாம் எ-று.

ஏகாரம் முன்னையவைதேற்றம்; பின்னது அசை. (௧௪)

---

* தத்தஞ்சத்தி - மாயாகாரியங்களின் சத்தி.

*தந்து முதல †காரக மைந்துறக்
கோட லாடை யின்றெனி னாட
யுளதேற் காரக மென்னை யென்ன,
வளையாக் காரக மசத்துற் பத்திக்
குண்டே யாக வாயிடை யாவினுந்
தண்டா தியாருந் தாம்வேண் டியபடன்
கண்டோ ராயின் மன்ற கண்டில,
மன்ன தாயி னதினஃ துண்டென,
வென்னை நியம மிதினுள திவ்வலி
யென்னிற் ‡சித்த சாதன, மன்றே
வன்றெனிற் காரகக் குழுவும் வென்றி
தாரா தோடு போட வேரிசை
யெல்லா முடையு முடைய நல்லோய்
சொல்லே யாகு நிற்க, வல்லே
யுற்பா திக்கும் வலியுண் டில்லைச்
சத்தி ரூப மாகிக் ‖கரும
மென்றிடின் விசேட நின்ற தொன்றிடைக்
கண்டில மொன்றும் வென்றியோ டொன்றக்,
காரக §மதற்குப் பேரிசை நியம
மாகத் தோற்று விக்குஞ், சீரிசை
வலியந் நுவய வெதிரே கத்து
¶மொலிகெழு முருடி யானுங் கலிகொள
வறிய லாகு மவ்வெளிப் படுத
லொலிகெழு தோற்ற மதனாற், கலிகெழு
தந்துமுத லகாரகம் வந்தி லாமையிற்
புடமடி மறைத்த, தடமலிந் தகன்ற

* இத்திருவகவலைச் சிவஞானபோதச் சிற்றுரை முதற்சூத்திர வுரையில் இரண்டா மதிகரணத்தி லெடுத்துக்காட்டினமை காண்க.

† காரகம் - ஈண்டுச்செய்தற் கருவி.

‡ சித்தசாதனம் - தன்னாற் சித்தித்த பொருட்குப் பிறன்கூறியது சாதனமாதல்.

‖ கருமம் - காரியமாகிய புடவை.

§ அதற்கு - உருபுமயக்கம்.

¶ ஒலிகெழும் அந்நுவய வெதிரேகத்தும் உரூடியானும் சீரிசைவலி ஒலிகெழுதோற்ற மதனால் அவ்வெளிப்படுதல் கலிகொளவறியலாகும் எனக்கூட்டுக. கலி - ஈண்டுவெளி.

வேம முதல தர்மினி தகற்றத்
தாமடி விளங்கு, மியாங்கு, மாமரு
கடமிக மறைத்த படங்கட மகற்ற
விடமிக விளங்கி யாங்கு, வடிவுற
வெல்லாக் காரக முறினு முயற்கோ
டில்ல தில்ல தாகலின், வல்லே
கலைமுதன் மாயையி *னிவண
நிலைமலி புடைய நினையுங் காலே.

**இது, மேற்கூறிய தனுமுதலாய பிரபஞ்சம் அசற்காரியமென்றதை மறுத்துச் சற்காரிய மெனக்கூறியது.**

(இ-ள்) *தந்து—என்ன எ-து நூலை †யுபாதானமாகப் புடவையை உண்டாக்குங் கருவிகள் வலியுறக்கொள்ளவேண்டிற்று நூலினிடத்துப் புடவை யில்லாமையாலல்லவோ புடவை யுளதாயின் இக்கருவிகள்கொண்டு செய்யவேண்டுவதெற்றுக்கு என்று விண்ணப்பஞ்செய்ய இங்ஙனங் கூறுவா யென்னில்,*

*வளையா—கண்டிலம் எ-து ‡ அசற்காரியத்துக்குக் கெடாத கருவிகள் உண்டாயிடுகை ஆனவிடத்து எப்பதார்த்தமாகிய கருவிகளைக்கொண்டும் எங்ஙனம் விவேகிகளாயினோரெல்லாம் தாம் வேண்டின பொருள்களைத் தடையின்றியே இல்லாததினின்றும் உண்டாக்கினார் $ ஆகில் இப்படியிருத்தல் நிச்சயமாகக் கண்டிலோம் கண்டாயென் றருளிச்செய்ய,*

*அன்னது—உண்டென எ-து அப்படியாகில் (நூலினிடத்துப் புடவையுளதாய்த் தோன்றவில்லை) நூலிலே புடவை யுண்டாக்கலாம் என்று விண்ணப்பஞ்செய்ய,*

*என்னை—சித்தசாதனம் எ-து உனக்கு இதென்ன நியமம் மற்றொன்றிற் பிறவாது நூலிலேதான் புடவை யுண்டாகுஞ் சத்தி யுண்டென்று சொல்லுவாயேல் நாம் சாதிக்கிற பொருளாகியன்றோ முடிந்தது,*

*அன்றோ—நிற்க எ-து ஐயோ நூலிற்புடவை கிடந்ததில்லை யென்னிற் கருவித்திரட்சியெல்லாங்கூடிச் § சற்காரியத்தை யுண்டாக்கமாட்டா ஆகலாற் கருவியும் வெற்றியாய் முடியமாட்டாதொழியும் ஒழியவே நீ சொல்லுகிற அழகிய கீர்த்தியெல்லாம் போம் (அஃதாவது நீ சொல்லியது அபசயப்பட்டுப்போம் என்பது) போகவே நல்லோனே நின் வார்த்தை சத்தவேறுபாடல்லது பொருள் வேறுபாடின்றுகாண் இனி அசற்காரியமொழிக,*

---

* இவணம் வல்லே கலைமுதல் நிலை மாயையின் மலிபுடைய நினையுங்கால் எனக்கூட்டுக.

† உபாதானம் - முதற்காரணம்.

‡ அசற்காரியம் - சற்காரியமல்லாதது.

$ ஆகில் - அவ்வாறுண்டாக்கினாராகில்.

§ சற்காரியம் - உள்ளது தோற்றுவது.

வல்லே—ஒன்ற எ-து விளைய நூலிலே புடவை தோற்றுவிக்கலாஞ் சத்தியுண்டு சத்திவடிவாய்ப் புடவை கிடந்ததில்லையென்று நீ சொல்வாயேல் இவ்விடத்திலே (நிச்சயமாக) உனக்கு நின்றதாகிய ஒரு வெற்றியோடு பொருந்த விசேடமொன்றுங் காண்கிலோங் காண்,

காரகம்—தோற்றுவிக்கும் எ-து கருவிகள் நூலிலே கிடந்த அந்தப் புடவையைப் பெரிய கீர்த்தியையுடைய நியமமா முறைமையாலே யுண்டாக்கும்,

சீரிசை—அதனால் எ-து அந்நுவய வநுமானமாவது உள்ளது தோற்றுமென்கை அஃதாவது நூலைக்கண்டு புடவையுண்டென்று நிசசயிக்கை வெதிரேகவநுமானமாவது இல்லாதது தோற்றாதென்கை அஃதாவது நூலைக்கண்டு இதிற்கடமில்லை யென்று நிச்சயிக்கை உரூடியாவது புடவையைக்கண்டு இது நூலிலன்றித் தோன்றாதென்று நிச்சயிக்கை பிரகாசமாயிருக்கிற இம்மூன்றநுமானத்தாலும் நூலிற்கிடநத புடவையின் புகழுடைத்தாகிய சத்தியைப் பிரகாசமாயிருக்கிற புடவையிற்கண்டு இது தோற்றினது நூலிலே யென்னும்படி எல்லார்க்கும் வெளியாக அறியலாகும்,

கலிகெழு—மறைத்த எ-து சொல்லப்பட்ட நூலை உபாதானமாகவுடைய கருவிகள் வாராமையாலே இந்த நூல்கள் தம்மிற்கிடந்த சுத்தமான புடவை தோன்றாவண்ணம் மறைத்தன,

தடமலிந்து—விளங்கும் எ-து பெருமை மிக்கு விரிந்திருக்கின்ற * வேம முதலான கருவிகளை நெய்வார் நூலிலே யழகிதாகவிரிக்கத் தூயதாகிய புடவைதோன்றும்,

யாங்கு எ-து என்போல விளங்குமென்னில்,

மாமரு—ஆங்கு எ-து அழகு மருவியிருக்கின்ற பாண்டத்துள்ளே கிடந்த புடவையைப் பாண்டத்தினின்றும் வாங்கி விரிக்க மிகவும் பிரகாசித்தாற்போல (இது † அந்நியவியபதேசம்),

வடிவுற—ஆகலின் எ-து வடிவுண்டாக எல்லாக் கருவிகளையுங்கொண்டு புகினும் முயலுக்கு இல்லாத கொம்பையுண்டாக்க வொண்ணாதபடியால்,

வல்லே—காலே எ-து இவ்வண்ணமே பரமசிவன் கர்த்தாவாகவும் அவன் சத்தி கருவியாகவுங்கொண்டு விளையக்கலைமுதலாகவுள்ள தத்துவங்கள் நித்தியமாகிய மாயையிலே சற்காரியமாய் ஒடுங்குவதும் விரிவதுமாங்காண் விசாரிக்குமிடத்து எ-று.

மன் - அசை. (௧௫)

வெருவரும் பூட்சி யிருவினை வெறுப்ப
யாங்குப் பட்டதை யெனினே, வீங்கிய
விந்தியப் போகி விரும்பறைத் தொழுதி

* வேமம் - நெய்வார் கருவியென்று.

† அந்நியவியபதேசம் - (முற்கூறியதனைப்) பிறிதொன்றிலேற்றிக்காட்டிக் கூறுவது; இங்கே முற்கூறியதாவது, தடமலிந்து...விளங்கும் என்பது; அதனை விளக்கும்பொருட்டுப் பிறிதொன்றிலேற்றிக் கூறியதாவது, மாமரு ..ஆங்கு என்பது.

தன்மாத் திரைத்தாய்ப் பன்முறை கொழுத,
முப்பொறி யாண்டுச் செப்பட நிறீஇத்,
துன்பப் பண்ணைத் துடர்பிணி யொரீஇ
யின்பப் பண்ணைத் தாங்கி, யாங்கது
பொறியி னல்லதை புணர்திறம் படாதென,
வறிவின *ராக்கத் தறுதொழின் மரீஇ,
முயற்சி தழீஇ யியற்றுங் காலை,
யூழு முன்றித் தாழ்திற மில்லென்
ஞெப்பின் றுயர்ந்த மெய்ப்படு பேருணர்
வெய்யா ராகிக் கைதூ வாமை,
யென்னை செய்யி னென்னை யாமென
வாசைப் பெளவத் தளறுபட வழுந்தி,
யுள்ள முரைசெயற் கல்லோ லத்தி
னுந்திட வெழுந்து மூழ்கி
நொந்துழி யீண்டு நுவலுவஞ் சிறிதே.

இது, மேற் † களியிடைக்கலித்தெழுந்த இருவினையுண்டானபடி யெங்ஙனே யென்ன அவை வந்தவாறு கூறியது.

(இ-ள்) வெருவரும்—எனினே எ-து பயப்படத்தக்க தேகத்திற் புண்ணிய பாவம் மிகவுண்டாம்படி எவ்வண்ணமென்று வினவில்,

வீங்கிய—கொழுத எ-து பரந்த இந்திரியமென்னும் பறவையான பெரிய விறகை யுடைத்தாகிய கூட்டம் தன்மாத்திரைகளான விடயங்களிலே தாவிப் பலமுறையாலே சென்று கோத,

முப்பொறி—நிறீஇ எ-து அவ்வப் பொருள்களிலே மனவாக்குக்காயங்களைச் செவ்வி தாக நிறுத்தி,

துன்ப—தாங்கி எ-து துன்பத்திரட்சியிலுண்டாகிய விதனத்தி லாசையொழிந்து இன்பத்திரட்சியிலே ஆசையுண்டாகி,

ஆங்கது—படாதென எ-து அந்தவின்பங்கடாம் திரவியத்தாலல்லது கூடும் வழி யில்லையென்று நினைந்து,

அறிவினர்—மரீஇ எ-து இந்தத் திரவிய முண்டாகைக்கு முன்புள்ளோராலே சொல் லப்பட்ட உழவு தொழில் வரைவு வாணிபம் வித்தை சிற்பம் என்னப்படாநின்ற ஆறு கரு மங்களிலே கூடி,

முயற்சி—காலை எ-து முயற்சித்துச் செய்யுங்கால்,

* ஆக்கத் தறிவினரறுதொழின்மரீஇ எனக்கூட்டுக.

† களியிடைக்கலித்து என்பது, கக-வது திருவகவலிற்காண்க.

ஊழ்—கைதூவாமை எ-து இந்தச் சுகமுந் துக்கமும் ஊழ்முறைமையல்லது வருவதில்லையென்னும் உவமையின்றி யுயர்ந்த உண்மைபொருந்திய பெரிய ஞானத்தை யறியாராகிக் கையொழியாதே,

என்னை—அழுந்தி எ-து என்செய்தாலென்னுமோவென்று ஆசையாகிய சமுத்திரத்திலே சேறுபடமூழ்கி,

உள்ளம்—சிறிதே எ-து மனவாக்குக்காயமாகிய திரையாலே தள்ள முழுகுவதெழுவதாகி விதனப்படுமிடத்து (ப்புண்ணியபாவத்தைச் செய்துகொள்ளுகிறபடியை) இவ்விடத்திலே சிறிது சொல்லப்புகுகின்றேம் எ-று. (கசு)

பொய்ப்பொறி புணர்க்கு முப்பொறி யுள்ளு
முள்ளச் செய்தி தெள்ளிதிற் கிளப்பி,
னிருடீர் காட்சி, யருளொடு புணர்தல்,
பெரும்பொறை தாங்கல், பிறன்பொருள் விழையாமை,
செய்தநன் றறிதல், கைதவங் கடிதல்,
பால்கோ டாது *பகலிற் றென்றன்,
மான †மதாணி யாணிற் றங்க,
லழுக்கா றின்மை, யவாவிற் றீர்த,
லருந்துய ருயிர்கட் கிருந்த காலை
யழறோய் வன்ன ராகி யாருக்
கழலு நெஞ்சிற் கையற் றினைதல்,
பன்னருஞ் சிறப்பின் மன்னுயிர்த் தொகைகட்
கறிவும் பொறியுங் கழிபெருங் கவினும்
பெறற்கருந் துறக்கமு மிறப்ப வூங்குத்
தம்மினும் வேண்டுமென் றெண்ணரும் பெருங்குணம்,
வாக்கொடு சிவணிய நோக்கின், மீக்கொள
வறம்பெரி தறைதல், புறங்கூ றாமை,
வாய்மை, கல்வி, தீமையிற் றிறப்ப,
வின்மொழி யிசைத்தல், வன்மொழி மறத்த,
லறிவனூல் விரித்த, லருமறை கழற,

* பகல் - நுகத்திற் சிராணியென்றார் இவ்வுரையாசிரியர்; இதுபோலவே புறப்பொருள் வெண்பாமாலை யுரையில், நுகத்திற் பகலாணியென்றார். தஞ்சைவாணன் கோவை சஅ-வது கவியுரையில், நுகத்திற்பகல் என்பதற்கு உழும் ஏர்ப்பியலிற் பிணித்த நுகத்தினடு என்றார்; இவர் ஆணியென்பதை விடுத்தனர். சீர், பகல், நடு என்பன ஒரு பொருட்கிளவிகள்.

† மதாணி - பேரணிகலம்; பின் "ஆதிதைவிகம்" என்ற முதற்குறிப்புடைய திருவகவலில் மானமாக்கலம் எனக் கூறுமாறு காண்க.

லடங்கிய வறைதல், கடுஞ்சொல் விடுத்தல்,
பயனின்ற படித்தல், படிற்றுரை விடுத்தல்,
காயத் தியைந்த வீயா வினையு,
ளருந்தவந் தொடங்க, றிருந்திய தானங்,
கொடைமடம் படுதல், படையுடன் படாமை,
யமரர்ப் பேண, லாகுதி யருத்த,
லொழுக்க மோம்பும் விழுப்பெருங் கிழமை,
யுடம்பிடி யேந்தி யுடறடிந் திடுமா
ரடைந்த காலை யவளிய றுயரந்
தேரா ரல்லர் தெரிந்து மாருயிர்
*பெரும்பிறி தாக விரும்பிண மிசைஞரி
னோராங்குப் படாஅ மாசில் காட்சி,
யைம்பெரும் பாதகத் தாழி நீந்த,
லிந்தியப் பெரும்படை யிரிய நூறும்
வன்றறு கண்மை, வாளிட் டாங்கு
நோவன செய்யினு மேவன விழைத,
றவச்சிறி தாயினு மிகப்பல விருந்து
பாத்தூண் செல்வம், பூக்கம ழிரும்பொழி,
றன்மனைக் கிழத்தி யல்லதை பிறர்மனை
யன்னையிற் றீரா நன்ன ராண்மை,
கார்கோ ளன்ன கயம்பல கிளைத்தல்,
கூவ றொட்ட, லாதுலர் சாலை,
யறங்கரை நாவி னான்றோர் பள்ளி,
கடவுள் கண்ணிய † தடவுநிலைக் கோட்ட,
மினையவை முதல நினைவருந் திறத்த
புரத்தன் மாதோ வறத்துறை, மறத்துறை
யிவற்றின் வழிப்படா தெதிர்வன கெழீஇ
யுஞற்றன் மொழிப வுணர்ந்திசி னோரே.

**இது, மேற்கூறிய மனவாக்குக்காய கன்மங்களை விரித்துக் கூறியது.**

(இ-ள்) பொய்—கிளப்பின் எ-து அநித்தியமாகிய சரீரத்திலேகூடின மனவாக்குக் காய கன்மங்களில் வைத்து மனத்தாலார்ச்சிக்குங் கன்மத்தைத் தெளியச்சொல்லின்,

* பெரும்பிறிதாதல் - மரித்தல்; சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை ௫௪-வது அடியிற் காண்க.

†. தடவுநிலை - சுவர்க்கம்; பின்னர்ப் "பசுபதியாக" என்ற முதற்குறிப்புடைய திருவகவலிற் காண்க. உயர்நிலை யெனினுந் தடவுநிலையெனினு மொக்கும்.

இருடீர்காட்சி எ-து மெய்யுணர்வு,

அருளொடு புணர்தல் எ-து எக்காலமும் அருளோடிசைந்து துரியத்தானத்திற் சுத்தாவத்தையுளதாதல் (உயிர்களனைத்தினுக்குந் தன்னுயிர்போலக் கருணையுடையனாதல்),

பெரும்பொறை தாங்கல் எ-து பொறுத்தற்கரிய வெகுளியுந் துன்பமும் வந்தாற் சகித்தல்,

பிறன்பொருள் விழையாமை எ-து சரீரசுகத்தைவேண்டிப் பிறர்பொருளை விரும்பாமை,

செய்தநன்றறிதல் எ-து பிறரிலாபங்கருதாதேசெய்த நன்றியை யறிதல்,

கைதவங்கடிதல் எ-து மனத்திற் * கிருத்திமத்தை ஒழிதல்,

பால்கோடாதுபகலிற்றோன்றல் எ-து சத்துருக்களு மித்துருக்களு † முதாசீனரும் ஆகிய மூவருக்குமொக்க ஒருபக்கத்திற் சாயாதே நகத்திற் சீராணிபோன்றிருத்தல்,

மானமதாணியாணிற்றுங்கல் எ-து மானமாகிய பேரணிகலத்தை வீரியத்தினாலே தரித்தல்,

அழுக்காறின்மை எ-து பிறர்குலதனவித்தைகளைக்கண்டு பொறாமையில்லாமை,

அவாவிற்றீர்தல் எ-து பிறப்புக்குக் காரணமாகிய அவாவையறுத்தல்,

அருந்துயர்—இனைதல் எ-து பொறுத்தற்கரிய விதனம் பிராணிகட்குண்டான காலத்துத் தம்மை நெருப்பிலே தோய்த்தாற்போல விதனப்பட்டு அமையாதே உருகிவிழு நெஞ்சுபோலக் கையறவாகிய துக்கப்படுதல்,

பன்னரும்—பெருங்குணம் எ-து சொல்லுதற்கரிதான சிறப்பையுடைய நித்தியமான ஆன்மவர்க்கத்துக்கு ஞானமுஞ் செல்வமும் மிகவும் பெரிதாகிய ரூபவழகும் பெறுதற்கரிய சொர்க்கபலமும் இவையொழிய முத்தியும் தம்மினும் மிகப்பெருக உண்டாகவேண்டுமென்று நினைத்திருக்கும் எண்ணுதற்கரிய பெரிய குணமாம்,

வாக்கொடு சிவணிய நோக்கின் எ-து இனி வாக்கின்கன்மமாய்க் கூடின புண்ணியத்தைச் சொல்லின்,

மீக்கொள வறம்பெரி தறைதல் எ-து மிகுதியுடைத்தாகத் தருமங்களைச் செய்யக் கடவபடி சொல்லுதல்,

புறங்கூறாமை எ-து பிறர் புறம்பார்த்துப் பொல்லாங்கு சொல்லாமை,

வாய்மை எ-து ஒரு வசனமும் பிறர்க்ககிதம் வாராதபடி மெய் சொல்லுதல்,

கல்வி எ-து உயர்ந்த சாத்திரங்களை ஐயந்தீரக் கற்ற கல்விஞானமுடையராதல்,

தீமையிற்றிறம்பல் எ-து கேட்டார்க்கு நன்றாயிருந்து பிறர்க்கு விதனமாயிருக்கிற பொருள்பயக்குந் தீயவாகிய வசனங்களைச் சொல்லாமை,

---

* கிருத்திமம் - வஞ்சனை.

† உதாசீனர் - அயலவர்.

இன்மொழி யிசைத்தல் எ-து இனியவை கூறல்,

வன்மொழி மறத்தல் எ-து மறமாயிருக்கும் வார்த்தையைச் சொல்லாமை,

அறிவநூல் விரித்தல் எ-து பரமசிவனுடைய திவ்விய வேதாகமபுராணங்களைப் பிறர்க்கு விரித்துரைத்துக் கொண்டாடுதல்,

அருமறை கழறல் எ-து அரிய வேதாகம மோதுதல்,

அடங்கிய வறைதல் எ-து மந்திரங்களைச் செபித்தல்,

கடுஞ்சொல் விடுத்தல் எ-து ஒரு வசனமுங் கடிதாகச் சொல்லாமை,

பயனின்ற படித்தல் எ-து பிறர்க்குப் பிரயோசனப்படும் வசனங்களைச்சொல்லுதல்,

படிற்றுரை விடுத்தல் எ-து பொய்சொல்லாமையாம்,

காயத்து—வினையுள் எ-து இனிக் காயகன்மமாகிய கெடாதவினைகளைச் சொல்லில்,

அருந்தவந்தொடங்கல் எ-து அரிய தவங்களைத் தொடங்கிச் செய்தல்,

திருந்தியதானம் எ-து நல்லோர்க் குயர்ந்த மாகதிரணிமணி * காலேகஞ் செம்பொன் முதலாகவுள்ளவற்றைத் தானஞ்செய்தல்,

கொடைமடம்படுதல் எ-து அகாரணத்தாற்கொடை கொடுத்தல்,

படையுடன்படாமை எ-து ஆயுதமெடேனென்று வரைந்துகொள்ளுதல்,

அமரர்ப்பேணல் எ-து திருமான்முதல் ஐயனாரந்தமான தேவர்களை யர்ச்சித்தல்,

ஆகுதியருத்தல் எ-து யாகாதி கன்மங்களைத் தொடங்கி ஓமம் பண்ணுதல்,

ஒழுக்கம்—கிழமை எ-து தானின்றநிலைக்குப் பொருந்தின ஒழுக்கத்தைப் பாதுகாக்குஞ் சிறப்பாகிய பெரியதலைமை,

உடம்பிடி—காட்சி எ-து வேலையேந்திக்கொண்டு தம்முடலந் துணிப்பார் கூடிய பொழுது அவ்விடத்துத் தாம்படுந் துக்கம் அறியாரல்லர் அறிந்துவைத்தும் நிறைந்த வுயிர்களை உடலினின்று பிரிய (ச்செய்து) அவற்றின் பெரிய பிணத்தைத் தின்பாரோடு ஒரு பெற்றிப் படக்கூடாத குற்றமற்ற அறிவாலே கொல்லாமை,

ஐம்பெரும் பாதகத்தாழிநீந்தல் எ-து கொலை களவு கள் குருநிந்தை இவைசெய்பவருடன்பயிறல் என்று சொல்லப்பட்ட பஞ்சமாபாதகமாகிய சமுத்திரத்திலே அழுந்தாதே தப்புதல்,

இந்திய—தறுகண்மை எ-து இந்திரியமாகிய பெரும்படையைக் கெட ஓட்டவல்ல வலியதறுகண்மை,

வாள்—விழைதல் எ-து வாளையிட்டுத் தேகத்திலே நோவாயிருப்பன செய்தவர்களுக்குஞ் சுகமாயிருப்பனவற்றை அப்பொழுதே விரும்பிச் செய்தல்,

---

* காலேகம் - கலவைச்சேறு.

தவ—செல்வம் எ-து தன்னுடைய சம்பத்துச் சாலச் சிறியதாயினும் மிகவும் பல விருந்தினர்க்குப் பகுத்துண்டலாகிய செல்வம்,

பூக்கமழிரும் பொழில் எ-து பூக்கள் பரிமளிக்கின்ற பெரிய நந்தவனஞ் செய்தல்,

தன்மனை—ஆண்மை எ-து தன்னுடைய தாரமல்லாது பிறருடைய தாரத்தை மாதாவைப்போலப் பார்க்கும் நீங்காத நல்ல ஆண்டன்மை,

கார்கோள்—கிளைத்தல் எ-து சமுத்திரத்தையொத்த குளங்கள் பலவுங்கல்லுதல்,

கூவ்வெருட்டல் எ-து கிணறுகளகழுதல்,

ஆதுலர் சாலை எ-து வழிக்கரை மடங்கட்டுதல்,

அறம்—பள்ளி எ-து தருமத்தைச் சொல்லு நாவையுடைய தவத்தினர்க்கு மடமெடுத்துக் கொடுத்தல்,

கடவுள்—கோட்டம் எ-து தேவர்கள் பூசைகொண்டருளச் சுவர்க்கத்தைக்கிட்டுவது போன்ற தேவாலயங்களைச் செய்தலாம்,

இனையவை-அறத்துறை எ-து இத்தன்மையனவாகிய இவைமுதலாக இன்னபடியளவென்று நிச்சயித்தற்கரியவான வேறுபாடான புண்ணியங்களைச் செய்தல் அறவினையாவது,

மறத்துறை—உணர்ந்திசினோரே எ-து பாவகன்மமாவன இப்படிச் சொல்லப்பட்ட புண்ணிய கன்மங்களைச் செய்யாது இவற்றுக்கு மாறுபாடாயவற்றைக் கெழுமிச்செய்தலென்று சொல்லுவர் ஞானவான்கள் எ-று.

மாது, ஓ—அசை. (கஎ)

இசைத்த மூன்றின் வியப்பற விறந்த
வாருயிர்க் கின்பத் துன்ப நேரிய
* துடியிடைப் படாது கடிகொள வியற்றி,
யெற்பிறர் பிறர்க்கியான் றப்பறத் தந்தென
மனப்பசை யிம்மைய, வம்மை விளைத்திற
ஞண்டுப் பூட்சி யீண்டுப்பட வியற்றல்,
சார்ந்தவை வதிதல் யாங்கு, வீங்கா
தாடிப் படர்ந்த பேரிருள் புடமடி
கூடிய குற்றங் கோடேந் தல்குன்
பாதோர் பாகற் சேர்வோ ரின்பம்,
பாதவக் கண்ணிழல் பனுவல் கோளிப்
பெரும்பணை பொதிந்த சிறுநுண் வித்தி
னிருந்தவை விரியு, மிருவினைக் கியைந்த
நாற்கதி நாலை யார்த்தவிழ் புணரி
மூவகைத் துக்கத்து முடியு,
மாவகை வீழ்த்த மன்னுயிர்ப் பரப்பே.

* துடி - காலநுட்பம்; அது நிமிடம் எட்டுக்கொண்ட தென்பர்.

**இது, மேற்கூறிய கன்மங்களால் அறமும் மறமும் பந்தமானபடி எங்ஙனமென்னக் கன்ம பந்தமும் நிலையும் விரிவுங் கூறியது.**

(இ-ள்) இசைத்த—இயற்றி எ-து முற்பாட்டிற் சொல்லப்பட்ட மன வாக்குக் காய கன்மங்களால் அளவற மிக்க நிறைந்த ஆன்மாக்களுக்குச் சுகதுக்கங்களை நுண்ணிதாகிய துடியென்னும் அவ்வளவகாலமேனும் இடைவிடாதே கடுகச்செய்து,

எற்பிறர்—இம்மைய எ-து எனக்குப் பிறர் நன்மை தீமை செய்தாரென்றும் பிறர்க்கு நான் நன்மை தீமை செய்தேனென்றும் ஒருபொருளொழியாதே சித்தத்திலே மமதை பண்ணிக்கொள்ளுமது சுயங்கன்மமாவது,

அம்மை—இயற்றல் எ-து பூருவகன்மமாவது முன்னெடுத்த தேகங்களில் இப்படியால் அகங்கரித்துக்கொண்ட கன்மம்,

சார்ந்து—யாங்கு எ-து இக்கன்மம் ஒருவனிடத்திலே ஆர்சிதமானவாறுங் கிடந்து பக்குவப்படுகிறபடியும் எங்ஙனே யென்னில்,

வீங்காது—இன்பம் எ-து (ஒருவனிடத்துக் கூடினபடிக்குத் திட்டாந்தம்) ஒரு முறையிற் பெருக்காது கண்ணுடியிற் படிப்படியாக ஏறிய பெரியமாசு கூடினாற்போலவும் சுத்தமான கூறை மாசேறினாற்போலவும் * அகலிய அல்குலையுடைய தம்பிராட்டியை ஓர் பாகத்திலேயுடைய பரமசிவனை யோகம்பண்ணுவோர்க்கு மேன்மேற் பரமானந்த சுகங் கூடினாற்போலவுமாம்,

பாதவ—விரியும் எ-து (இவ்வணம் பந்தித்த கன்மம் அனுபவிக்கும்படி) விருக்கத்தில் உச்சிப்பொழுதிலடங்கின நிழல் விரியுமாறுபோலவும் தான்கற்றகல்விப்பரப்புத் தன்னிடத்திலே அடங்கிக்கிடந்து பரிணமித்தாற்போலவும் ஆலினுடைய பெரிய பணை முதலிய பரிணாமமெல்லாம் அடங்கிய சிறிய நுண்ணிய ஆலம்வித்திற்கிடந்து பரிணமித்தாற்போலவும் காரணமான கன்மத்திலே புண்ணியபாவங்கள் காரியரூபமாய்க்கிடந்து பக்குவப்பட்டபோது கன்மபலங்களாகிய சுகமுந் துக்கமுமாய் விளையும்,

இருவினை—முடியும் எ-து பக்குவப்பட்ட கன்மபலம் அநுபவிக்கைக்குப் பொருந்தின உற்பீசம் அண்டசம் சராயுசம் சுவேதசம் என்னு நான்கு வர்க்கத்துச் சரீரங்களை யெடுத்தும் விட்டும் திரிகிற பிறப்பாகிய சமுத்திரத்தில் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் ஆதியாத்தியான்மிகம் என்று சொல்லப்பட்ட மூவியல்பினவாய துக்கத்துள்ளே முடிவன,

மாவகை—பரப்பே எ-து மகத்தாயிருக்கின்ற தன்னுண்மையும் வினையினுண்மையும் தலைவனுண்மையும் உணராமல் மறந்துவிட்ட நித்தியமான ஆன்மவர்க்கங்கள் எ-று. (கஅ)

---

* கோடேந்தல்குன்மாதோர்பாகன் என்பதற்கு இவ்வாறன்றி, அகலிய பரவிந்துபீடாகிருதியான பராசத்தியை ஓர்பாகத்திலே யுடைய பரநாதலிங்கவடிவான பரமசிவனை எனவுரை கூறிய பிரதியுமுண்டு.

* ஆதி தைவிக மாதி பௌதிக
மாதி யாத்மிகமெனவோதிய
துக்க மூன்றினு, ளாத்தி யான்மிக
மெய்யின் மனத்தி னையமி லிரண்டே,
வளியிற் பித்தின் விளியா விளையி
னானுறு தொழிலையி னுதகக் கொட்டின்
வெப்பிற் சூலையின் மக்களின் விலங்கி
னலகையிற் கள்வரிற் பறவையி னிருதரின்
மைந்தர் மகளிர் மணந்திடை தணப்பிற்
பேரறம் வளர்ப்பிற் பெருந்திரு நுகர்விற்
சீரிய யாக்கை மாதுயர், மாசு
மனத்துறு துயர நினைப்பருஞ் சோக
மறிவுரு வாக்க மடையுநர்ப் பொறாமை
மான மாக்கலம் பூணுது மறுத்த
விச்சையி னிசைத விருஞ்சின மிகுத்த
வினையவை முதல நினைவருந் திறத்த,
வாதி பௌதிகஞ் சீத மாமழை
யுருப்பவிர் வேனி லுட்குவரு கடுங்கா
லிருள்கிழி மின்னுப் பெருவிற லசனி
மன்னுயிர்க் குறுகண் மன்னியா றருந்த
லாதி யாய வீவருந் திறத்த,
வாதி தைவிகம் பேதையர் வயினக்
கருக்குழி யழுங்கல் பிறப்பிறும் பூது
நிரைவருந் நிமை வரைவில் பேதைமை
மடங்க லாருயிர் தொடங்கினன் வௌவல்
யாவரும் விழையாக் கோள்வாய் நிரயத்து
வீழ்ந்தன ரெழாஅ வான்கழி துன்ப,
மினைய மாலைய, துயரிடை வினைநகர்க்,
கருங்கைக் கயமைக் களிறுகைத், திரும்புலப்
பெரும்படை விரிந்து சூழக், திருந்தா
நாற்கதிப் பவனி யுலாஅ
யார்த்தவிழ் திறம்பிற, போற்றுமதி புரிந்தே.

**இது, மூவகைத்துக்க மென்னென அவற்றினிலக்கணங் கூறியது.**

**(இ-ள்)** ஆதி—மூன்றினுள் எ-து முற்பாட்டிற்சொல்லப்பட்ட துக்கத்திரயங்களில்,

* ஆதி - முன்னையவிரண்டும் துக்கம்; பின்னையது அடைமொழி.

ஆத்தியான்மிகம்—இரண்டே எ-து ஆத்தியான்மிகமாவது சந்தேகமில்லாத தேகத்தைப்பற்றிவரும் விதனமும் மனத்தைப்பற்றிவரும் விதனமுமாக இருதிறப்படும் அவையிருக்கும்படி சொல்லில்,

வளியில்—மாதுயர் எ-து வாதத்தாற் பித்தத்தால் நீங்காத சிலேட்டுமத்தாற் சரீரத்திலே சதையை யழுகிவிழப்பண்ணுங் குட்டவியாதியால் நீரிழிவால் வெதுப்பால் சூலைவியாதியால் சத்துருக்களாகிய மானிடரால் விலங்குச்சாதியால் பேய்களால் களவுகாண்பாரால் கொசுகு ஈ முதலான பறவைகளால் இராக்கதர்களால் ஆண் பெண் கூடி இடையே பிரிதலால் குருலிங்கசங்கமமாதி தேவதாகாரிய பரிபாலனந் தவசு இவற்றால் சம்பத்துமிகுதியால் அடாதனசெய்து அநுபவித்தலால் உண்டான இவை பதினான்கும் சிரிதாகிய சரீரத்தைப்பற்றிவரு மிக்க விதனமாம்,

மாசு—திறத்த எ-து இனி மாசுடைத்தாகிய மனத்தைப்பற்றிவருந் துக்கமாவன பெண்டுகள் மைந்தர் பிரிதலாலும் திரவியமுதலாகக் கூடினவை தம்மைப்பிரிதலாலும் ஆற்றாமையால் வரு நினைத்தற்கரிய சோகமாகிய விதனம் அறிவுடையோரை வடிவுடையோரைச் சம்பத்துடையோரைக் கண்டுங்கேட்டும் அழுக்காறுற்ற மனத்தாலே வரும் விதனம் மானமாகிய பேரணிகலத்திற்கு ஆனிவந்த காலத்து உண்டான விதனம் பஞ்சேந்திரியங்களுக்குப் போகமான பதார்த்தங்களில் வைத்த இச்சையால்வரும் விதனம் பெரிய சினமிகுதியால்வரும் விதனம் இவை ஐந்துமுதலாக நினைத்தற்கரிய வேறுபாடுள்ள பலவுமாம்

ஆதி—திறத்த எ-து ஆதிபௌதிகஞ்சொல்லின் குளிரால்வருந் துக்கம் மிகுதியா[ல்] வருடத்தால்வரு நடுக்கம் உட்டினம்விளங்கிய கோடையால்வரும் விதனம் பயத்தை[ப்] பண்ணு மிக்க காற்றால்வரும் விதனம் இருளைக்கெடுக்கு மின்னால்வரும் விதனம் மிக்க வ[லி]மையுடைய இடியால்வரும் விதனம் ஓதக்கடல்சூழுலகிற் பிராணிகள் ஒவ்வொன்றை[க்] கட்டிவைத்தும் ஒவ்வொன்றைக்கொன்றும் ஒவ்வொன்றை வாதைப்படுத்தியும் வைத்[து] அவைகளினாலவ்வண்ணமே நுகர்கை இவை ஏழுமுதலாகவுள்ள கெடுதற்கரிய வேறுபாடடையுடைய விதனமாம்,

ஆதிதைவிகம்—துன்பம் எ-து ஆதிதைவிகம் இருக்கும்படி சொல்லில் மாதாவின் வ[யி]ற்றில் அந்தக்கருப்பாசயத்தில் இருக்குங்கருப்பவேதனை ஆச்சரியமாகிய பிரசவவேதனை உ[ட]ம்பு திரையுறூப்பால்வரும் விதனம் அளவில்லா அஞ்ஞானத்தால் வருஞ் சங்கற்பவேதனை இயமன் அரிய உயிர்கொண்டுபோகும்போது வரும் மரணவேதனை யாவராலும் விரும்ப[ப்]படாத கோட்பாட்டையுடைய நரகத்திலே யழுந்தி ஏறுதற்கரிதாகிய மிகப்பெரிய துக்[க]மாகிய ஆறும் பிறவுமாம்,

இனைய மாலைய எ-து இத்தன்மைய பல்வாகிய துக்கத்திரயங்களை (மாலையாக[ப்] பூண்டுகொண்டு),

துயரிடை வினைநகர் எ-து இவ்விதனங்களுக் கிலக்காய்ப் பூருவகன்மபலம் புசிக்கு[ம்] சரீரமாகிய நகரிலே,

கருங்கை—உகைத்து எ-து பெரிய கையையுடைய குணவீனமாகிய யானையிலே[ற்] [illegible]

இரும்புலம்—சூழ எ-து பரந்த இந்திரியமாகிய பெரிய தந்திரம் மிகுந்துசூழ,

திருந்தா—பிற எ-து ஓர்காலமும் திருத்திவாராத உற்பீசம் அண்டசஞ் சராயுசஞ் சுவேதசம் என்று சொல்லப்படாநின்ற நால்வகைப் பிறப்பிலே பவனியாகி ஒருடலைவிட்டு மற்றோருடலை யெடுத்துச்செல்லும் வேறுபாட்டைச் (* சொல்லுவன்),

போற்று—புரிந்தே எ-து அவற்றை விரும்பிக் கேட்பாயாக எ-று

பிற, மதி—அசை. (கக)

இருந்துயர் கெழீஇ வருந்தி யாப்புற்ற
முற்பய னீண்டித் துய்த்தனர் கழிப்பிற்,
கருங்கயல் கிழியப் பெரும்பகடு துரந்தாங்
குழவ ராக்கிய விளைவயற் சாலி
பிற்பயன் றந்தாங், கிச்செய லுதவ
வெய்திய குகையின் மையறப் படர்த,
லிருங்கழன் மள்ளர் பதம்படர் திருந்தடி,
சாப வான்பூழ்க், காழக மடியக்
கடிபடு புட்டகம் வடிவொடு புனைதல்,
கண்படை யொன்னார் கடிமதில பாய்ந்த
தும்பி வன்பிடர்த் தோன்றன், மேலதை
யுள்ளமு நுழையா வூங்குங், கிழதை
யோழுதல மிறந்த கீழும், புடையதை
நேமி மால்வரைப் புறனுந், தாடோய்
தடக்கை மாவீழ் மணியினு மடுக்கிய
சிறுநணித் தானும் பெருஞ்சேய்த் தானும்,
வினைமாண் டுப்பின் மனமாண் டேரிற்
றுடிபல பகுத்த விசையிற் சேறல்,
கார்முகங் கான்ற பூமுக விசிக
முள்ளியது கிழித்தல், பள்ளி நீங்கி
யொருபெருந் தமியன் விரிபுல னுப்த்த
பேரத் தாணிப் பெயரினுந் துணையின்
றறிவருந் துரியத் தல்கினுந் தெரிபொன்
றிசையா தேகி யாங்கு, வசைதபு
கடிகலை முதறா வந்த
படியென வறிநெடி தொடிவுட னுகவே.

* சொல்லுவன் என்பது இசையெச்சம்.

இது, தேகிதேகங்களை ஆர்த்தவிழ்திறம் எங்ஙனே யென்ன அவ்வியல்பு கூறியது.

(இ-ள்) இருநதுயர்—கழிப்பில் எ-து இஙஙன மிகவுஞ் சொல்லப்பட்ட துக்கத்திரய ங்களுடனே கெழுமி வருநதி யார்சசிக்கப்பட்ட பூருவகன்மபலத்தை இத்தேகத்திலேநின்று புசித்துக் கழித்தபின்பு,

கருங்கயல்—தகதாஙகு எ-து பெரிய கயல்களெல்லாம் கெட்டுப்போக மகத்தாகிய கடாவைப்பூட்டி அவ்விடத்து உழுது பயிர்சசெய்வோர் விளைக்கப்பட்ட விளைவயலி லுண்டாகிய நெற்பயிர் பின்பே புசிக்கைக்குரிய பயனை விளைத்தாற்போல,

இசசெயல்—படர்தல் எ-து இத்தேகத்திலே நின்று ஆர்சசித்த கன்மபலன் அனுப விக்கைக்குப் பக்குவப்பட்ட தேகத்தைக குற்றமறவெடுக்கும் இயல்பிருக்கும்படி சொல்லில்,

இருங்கழல்—திருநதடி எ-து பெரிய வீரக்கழலையுடைய வீரபுருடர் வழியிலே செல் லுகிற திருநதிய அடியிட்டடியெடுத்து வைத்தாற்போலவும்,

சாபவான்புழு எ-து வில்லூன்றிப் புழுப்போலவும்,

காழகம்—புனைதல் எ-து பீறிய கூறையைப் பெயர்த்துப் புதியதோர் கூறையை வடி விலுடுப்பதுபோலவும்,

கண்படை—தோன்றல் எ-து நித்திரையிலே சத்துருக்களாலே யாக்கப்பட்டுக் காவ லுடைத்தாகிய மதிலையிடித்த யானையின் வலிய கழுத்தில் இரு ,"தாகக் கனவுகண்டாற் போலவும்,

மேலதை—ஊஙகும் எ-து மேல் எல்லாவற்றுக்கு மேலாய மனத்தாலு நினைத்தற் கரிய இடத்திலும்,

கீழதை—கீழும் எ-து கீழேழு பாதலஙகளுக்கும் அப்புறமான கீழிடத்தும்,

புடையதை—புறனும் எ-து பக்கத்திற் சக்கரவாளகிரிக்கு அப்பாலும்,

தாடோய்—சேய்த்தானும் எ-து முழந்தாளிலே தோயும்படியான நெடியகையில் அழ கிய விருப்பமுள்ள மாணிக்கத்திலும் அணித்தாகச் செறிந்த அண்மையின் அண்மையிலும் முன்புசொன்ன இடஙகளாகிய மிக்க தூரத்திலும்,

வினைமாண்—சேறல் எ-து மாட்சிமையுடைய வினையாகிய வலியாலே மனமென்னும் அழகிய தேரிலே நினைவு ஏறி ஒருதுடி யென்னுங் காலத்தைப் பலகூறிட்ட கடுமையிலே பொருள்கடோறுஞ் சென்றாற்போலவும்,

கார்முகம்—கிழித்தல் எ-து வில்லினின்றும் விடப்பட்ட கூரிய முகத்தையுடைய அம்பு வில்லியானவன் நினைத்த பதார்த்தத்திலே பட்டுருவினாற்போலவும,

பள்ளி—ஆங்கு எ-து (கேவலத்துத் துரியாவத்தையிலே நின்ற) ஒப்பற்ற பெரிய ஆன்மா உறக்கத்திலே நின்று நீங்கிப் பரந்த இந்திரியஙகளாலே போகம்புசிக்கும் பெரிய வத்தாணியாகிய சாக்கிராவத்தைத் தானத்திற் சாக்கிராவத்தையிலே வந்தாலும் சாக்கிராவத் தையிலேநின்ற இவன் இந்திரியங்களை யொழித்து அறிவில்லாத துரியாவத்தையிலே

வந்து தங்கினாலும் இவை யிரண்டுபெற்றியும் * பிறர்க்கு ஒன்றுந்தெரிதல் கூடாமற்போந் தாற்போலவும், (இப்படிச்சொல்லிற்று ஆன்மா ஓர் தேகத்தைவிட்டு மற்றோர் தேகத்தை யெடுக்கும்விதம் ; இந்தப்போக்கு வரவு ஆன்மாவுக்கு உள்ளவல்ல.)

வசைதபு—உகவே எ-து குற்றமற்ற விளக்கமுடைய கலை முதலாகவுள்ள தத்துவங்கள் பக்குவப்பட்டவாறே கன்மம் புசித்தற்கு ஆன்மா ஓர் தேகத்தைவிட்டு மற்றோர் தேகத்தை யெடுத்தலாமென்று உன்னை நெடிதாக உடன்கூடிய தோடமெல்லாங்கெட அறிவாயாக எ-று. (உ0)

இலங்கு குங்கும மார்பரும் வலம்புரி
யொருமணி யன்ன திருநல மாதரு
முயக்கிடை யறியா மயக்கின், வயகுரு
துப்புருக் கன்ன பழனத் தாரு
முத்துருக் கன்ன வித்தார் காலே,
யாப்போ னின்றெனி னீக்குவ ருறையி,
னஃதான்று,
முயங்குந் தோறு முயங்குந் தோறும்
பிறங்கடை பெரிதே, யற்றே யாக
மாருயி ராயில் வீவோ வின்றே,
தன்னை யன்னை தம்மிடைப் பகுப்பிற்
பின்னர்க் கான்முளை மன்னுத லிலரே,
கனங்குழை மாதர் கணங்கொண் டீண்டி
யனங்க னென்று மனங்குழை பிரங்க
விற்றோர்க் †காண்டிகு, முற்றவுங் காண்டிகு,
மவணம னன்றெனி னதீதா நாகத
மையமின் றுணர்ந்தோர் மையறு பனுவல்
வருபிறப் புணர்ந்த மதியோர்த் தோன்று,
முதனடு விறுதி யிளமை மூப்பி
லொழிவற நிறைந்தோ னொடுங்கும வீடி
லாதி யின்மையான், பூத மாநக
ரீரிரண் டெய்தித் தீதற வொரீஇக்,
கோபுரங் கூட மாட மாளிகை
விளிம்புளிங் கார்த்த பசும்பொன் வேதிகை
யரமிய முதல விரவுப் பெயர்பெறீஇக்
கலங்கியுங் கலங்காக் காரணத் திலங்கியும்,

* பிறகு ஒன்றும் என வுரைகூறிய பிரதியுமுண்டு.

† இகும் - ஈண்டு முன்னிலையில்வந்தது.

பாடல் சான்ற பல்புகழ் நிறீஇ
வாடாத் துப்பிற் கோட லாதி
*யருளா பரண னறத்தின் வேலி
யருண்மொழி திருமொழி போலவு,
மென்று நிலீயர் நன்றுமன் பெரிதே.

**இது, அசேதனப் பிரவிருத்திசொல்லுகிற சமயங்களை நிராகரித்து ஓர் தேகத்தை விடுத்து மற்றோர் தேகத்தை யெடுத்தல் ஆன்மாவுக்கே உண்டென்று கூறியது.**

(இ-ள்) இலங்கு—மயக்கின் எ-து குங்குமம் விளங்கு மார்பையுடைய புருடரும் வலம்புரிச்சங்கிலே பிறக்கப்பட்ட தனிமுத்தையொத்த செல்வத்தையும் அழகையுமுடைய மாதரும் கூடுகிற பக்குவத்து இரண்டு சரீரமென்னுமிது தோற்றுத மயக்கத்திலே,

வயக்குறு—காலை எ-து ஒளிபொருந்திய பவழத்தை யுருக்கினாற்போன்ற சுரோணித முடைய நிலத்திலே அமையாத முத்தை யுருக்கினாற்போன்ற சுக்கிலமென்னும் வித்துப் பொருந்துங் காலத்து,

யாப்போன்—உறையின் எ-து அவ்விடத்துப் போகம் புசிக்கப் பக்குவப்பட்ட ஆன்மாப் பந்தியாதாகிற் சுத்திபண்ணின நீரோடே கழிப்பர்,

அஃதான்று எ-து அப்படியன்று சுக்கில சுரோணிதமே பிள்ளையாமென்னில்,

முயங்கும்—பெரிதே எ-து போகஞ் செய்யுந்தோறும் போகஞ் செய்யுந்தோறும் பிள்ளைகள் பலராகவேண்டும்,

அற்றே—இன்றே எ-து அங்ஙனமன்று சரீரமே உயிராமெனின் மரணமில்லையாக வேண்டும் (இது லோகாயிதமத நிராகரணம்),

தன்னை—இலோ எ-து பிதா மாதாக்கள் உயிரிலே பகுந்த உயிரென்று சொல்லில் ஒரு பிள்ளைக்குப் பின்பு மற்றோர் பிள்ளை யுண்டாதற்கு இவருயிரோடிருத்தல் கூடாது (இது மீமாஞ்சமத நிராகரணம்),

கனங்குழை—காண்டிகும் எ-து கனத்த மகரக்குழையையுடைய பெண்களெல்லாங் கூட்டமாகக்கூடி என்னுடைய காமதேவனே யென்று மனமழிந்து கூப்பிட்டலற மரித்தோரையும் காணாநின்றாய்,

முற்றவுங் காண்டிகும் எ-து பிறந்தபிள்ளை நாடோறும் வளரவுங் காணாநின்றாய்,

அவணம்—தோன்றும் எ-து இவ்வண்ணம் ஆன்மாவென்று தேகத்துக்குக்கர்த்தா ஒருவனில்லை என்பாயாகில் † பூதபவிஷியங்களை ஐயமற வறிந்து சொல்லுவோராலும் குற்றமற்ற சாத்திரங்களாலே இனி யெடுக்குஞ் சரீரம் அறிந்து சொல்லுவோராலும் ஒருவன் உளனென்று அறியவொண்ணாதோ,

---

* அருளாபரணனறத்தின்வேலி கோடலாதி யருண்மொழி திருமொழி போலவு மெனக்கூட்டுக.

† பூதபவிஷியம் - சென்றதும் வருவதும்.

முதனடு—இன்மையான் எ-து முதலு நடுவு முடிவும் இளமையும் மூப்பும் இல்லாத ஒழிவற நிறைந்த பரமசிவனுக்கு விரிவொடுக்கமில்லாமையாலே * ஆதியாக ஒரு சரீரமெடுக்கப்படான் (இது மாயாவாதி நிராகரணம்),

பூத—ஒரீஇ எ-து மகாபூதத்தாலாகிய சரீர நகரங்களான நால்வகைத் தோற்றத்திற் பிறப்பாகிய தேகங்களை யெடுத்தும் குற்றமற விட்டும் செல்லுமாறு யாங்ஙனமெனில்,

கோபுரம்—இலங்கியும் எ-து கோபுரங் கூடம் மாடமாளிகை என்றும் விளிம்பு பளிங்காலே சமைத்த செம்பொன் வேதிகை என்றும் நிலாமுற்றமென்றும் இவை முதலாக வுள்ளன இடிந்தனவென்று பெயர்பெற்று நிலைகுலைந்தாலும் அழியாத காரணமாகிய பிருதிவிபோல விளங்கியும்,

பாடல்—போலவும் எ-து பாடுவோர் பாடும் மிக்க பல புகழை நிலைபெறக்கொண்டு கெடாத வலியும்பெற்று அருளை யாபரணமாக வுடையனுமாய்த் தருமத்திற்கு வேலியுமான கோடலம்பர்கிழானாகிய முதன்மை யமைந்த † அருண்மொழித் தேவருடைய ஞானச்செல்வத்தைக் கொடுக்கும் உபதேச வசனம்போலவும்,

என்று—பெரிதே எ-து ஆன்மா நாற்கதியிலும் உடம்புவிட்டும் உடம்பெடுத்தும் பெரிது அழகிதாக என்று நித்தியமாயிருக்கும் எ-று.

அற்றே என்பதில் ஏகாரம் எதிர்மறை. இகும், மன்—அசை. (உக)

கருமம் போகந் தருமென வருளினை
நிருமல விருவினை யாக்க நிருமலி
யாகத் தல்லதை யாகா, ததுமுதல்
வேகத் தொடுவரல் வினவிற் றுயி,
‡ ஞணவ முதலன் றதுபோற் கருமமுங்
கா,ணல தெனினக் கரைகழி நானு
விதமினி துயிர்கட் குதவுவ தெதனு,
லற்றது மாயையு மற்றறி யவணே,
யோதுவ துளதினு மொருவகை, தீதுக
வாகம் போகா தாக வல்வினை
யேகா திருவினை யாகப் போகா
தாக, மாயிடை, முனுதி யாது
பாகி னின்றது பன்னுங் காலே.

* ஆதி - உற்பத்தி.

† அருண்மொழித்தேவர் - என்றது இந்நூலாசிரிய ராசிரியராகிய ஸ்ரீ பரமானந்த முனிவரை; கோடல்-அவர் எழுந்தருளிய கோடலம் பாகையென்னும்நகர்; அம்பர்கிழான் அவர்க்குக் குடியால் வருபெயர்.

‡ ‘ஆணவமுதலன்றதுபோற்கருமமும்’ இதனை மாதவச்சிவஞானயோகிகள் சிவஞான போதச் சிற்றுரையில் இரண்டாஞ்சூத்திர வுரையிலெடுத்தாளப்பட்டதறிக.

# ஞானமிர்தம்

**இது, விடுதலும் பற்றுதலுங் கேட்டறிந்த சீடன் முற்பிற்பாடு அருளவேண்டுமேன்று விண்ணப்பஞ் செய்யக் கன்மமு மாயையும் ஆணவம்போ லநாதியேனக் கூறியது.**

(இ-ள்) *கருமம்—ஆகாது எ-து நிருமலனே கன்மத்தாலே தேகமெடுத்தது என்றருளிச்செய்தாய் அந்தப்புண்ணியபாவ கன்மங்களை யுண்டாக்குதல் அழகுவிளங்கிய தேகத்திலல்லது உயிர் ஆர்ச்சிக்குமுபாயம் இல்லையாயிருந்தது என்று விண்ணப்பஞ்செய்ய,*

*அதுமுதல்—ஆயின் எ-து அக்கன்மம் முதலில் விரைவுடன் வருதலைக் கேட்கிறு யாகில்,*

*ஆணவம்—காண் எ-து ஆணவமலம் அநாதி அதுபோலக் கன்மமலமும் அநாதியே காண்,*

*அலது—எதனுல் எ-து அப்படியன்று இக்கன்மமலம் ஆதியென்னில் ஆன்மாக்களுக்கு அநத எல்லையில்லாத நானுவிதமான போகம் அநாதியிலினிதாகப் புசிக்கக் கொடுப்பது எதனுலேயென்று கொள்வோம்,*

*அற்றது—அவணே எ-து மற்றை மாயாமலமும் அங்ஙனம் அநாதியென்று கொள்வாயாக,*

*ஓதுவது—ஒருவகை எ-து இன்னமும் ஒருமுறையாலே சொல்லுவதுண்டு,*

*தீதுக—ஆகம் எ-து குற்றமற உடல் கெடாது அங்குரித்துண்டாக வலிதான கன்மம் ஒழியாது புண்ணியபாவ கன்மம் உண்டாக உடம்பொழியாது,*

*ஆயிடை எ-து ஆனவிடத்து,*

*முனுதி—பன்னுங்காலே எ-து பாகுபோல இனிதாக நின்றவதனைச சொல்லும்பொழுது முற்பிற்பாடாவது யாதென்று சொல்லுவது எ-று.*

*மற்று – அசை.* (௨௨)

ஐம்புல வரசன் வன்கண் வருதினி
பொறையருந் தானையி னிரிய நூறி
*வாடா வாகை சூடித் தாபதப்
பேராண் பக்கப் பெரியோய் வாழிய,
முடலை யாக்கையின் வினைப்பிணிப் பானு
வினைப்பொதி யெறுழ்த்†தோ றணிப்போ வின்றே,
மல்ல லாகம் புல்ல வெல்லைபி
றுன்பம் பகுவா யானுது பருகும்

* வாடாத் தாபத வாகை சூடி எனக்கூட்டுக. தாபதவாகை - தவவொழுக்கம் ; புறப்பொருள் வெண்பாமாலை வாகைப்படலத்தில் "நீர்பலகான்மூழ்கி" என்னும் வெண்பாவி லறிக.

† தோல் – ஆகுபெயரா யுடம்பினைக்குறித்துநின்றதென்க.

வண்டுறை மன்ற மாதோ, வினி*யே
மயலோ மற்றது செயலோ வாதே,
யென்னை செய்குவன் கொல்லோ வன்றே
வாதிநூலு மோதும் வீடே,
மாரிப் பானு ளார்கலி யழுந்து
†மாரிய வூமன் போல
வளியன் காமதி முனிவர் கோவே.

**இது, சீடன் முற்பிற்பாடின்மைகேட்டுத் துக்கமும் அச்சமுமிக்துப் பாசச்சேதத்தை விரும்பி ஆசாரியனைத் துதித்தல் கூறியது.**

(**இ-ள்**) ஐம்புல—வாழிய எ-து பஞ்சவிந்திரியங்கட்கு அரசனுன அஞ்ஞானவேந்தனுடைய தறுகண்மையுடைத்தான தூசிப்படையை (அந்தப் பஞ்சவிடயத்தின் வழியொழுகாதே) சகித்தலென்னும் கெடுத்தற்கரிய தந்திரத்தாலே கெட அழித்துக் கெடாத தவவொழுக்கமாகிய (மாலையைச்) சூடி மிக்க ஆண்டகைமைகொண்ட பெரியோனே வாழ்வாயாக,

முடலை—இன்றே எ-து புலானுற்றமுடைத்தாகிய தேகமுண்டாகக் கன்மபந்தம் ஒழியாது இக்கன்மபந்தம் உண்டாக வலிய உடம்பொழிக்கவொண்ணுது,

மல்லல்—மாதோ எ-து வளப்பமுடைத்தாகிய சரீரமெடுக்க அதனுலுண்டான அளவிறந்த துக்கத்தை அமையாது இந்திரியமென்னும் பெரியவாயாலே சந்ததமும் எடுத்துப் பருகும் மகத்தாகிய துறையாதலால்,

இனி—ஓவாதே எ-து இனி யந்த முத்தியென்பது ஒன்றுண்டென்று சொல்லுமது பித்தாமன்றே கன்மபந்தம் ஒழியாதாதலால்,

என்னை—வீடே எ-து ஐயோ பரமசிவனருளிச்செய்த திவ்வியாகமத்திலும் முத்தியுண்டென்று சொல்லாநின்றது யானென்செய்வேன்,

மாரி—கோவே எ-து மழைக்காலத்து அரையிராவிற் கடலில் விழுந்தழுந்தும் சற்றும் வார்த்தைசொல்லத்தெரியாத ஊமனைப்போல அநுக்கிரகமார்க்கமில்லாது விதனப்படாநின்றேன் அறிவுடைய தவசியர்க்குக் கர்த்தாவாயுள்ளோனே அநுக்கிரகித்தருளவேண்டும் **எ-று.**

மாது, ஓ—அசை. ஏகாரம் - தேற்றம். மற்று - வினைமாற்று. கொல், ஓ, மதி—அசை

* ஏம் மயலோ எனப் பிரித்துக் கொள்க. ஏம் - இன்பம்: ஈண்டுப் பேரின்பமாகிய முத்தி யென்க.

† ஆரியவூமன் - ஊமைத்தன்மையிற் குறையாதவன். ஆர்—நிறைவு.

நெஞ்சு புண்ணுற் றஞ்சு லோம்பென
வாரிய னருளு மறிவின் கொண்க,
சேதகம் பயந்த செழுநீர் சேதக
மாசுக மண்ணிய தென்ன, வாசுக
வயந்நீர் பெய்த வறிமதி
பயந்தோன் *வினைவிடல் வியந்தோ வன்றே.

இது, மேல் ஆசாரியன் சீடன்பரிபாக நோக்கிப் பிறவிக்கஞ்சாதே பாசச்சேத உபாய முண்டென்று அருளிச்செய்தல் கூறியது.

(இ-ள்) நெஞ்சு—கொண்க எ-து ஞானத்துக்குத் தலைவனாயுள்ளோனே இதயமானது புண்ணும்படி அஞ்சுதலையொழியென்று ஆசாரியன் அருளிச்செய்வான்,

சேதகம்—என்ன எ-து சேற்றையுண்டாக்கின அழகிய நீராலே அச்சேறாகிய மாசு போம்படி கழுவினாற்போல,

ஆசுக—அன்றே எ-து (சித்தத்தாலே) கன்மத்தைப் பந்தித்துக்கொண்டோன் அக் கன்மத்தைச் சித்தத்தானீக்குதல் ஆச்சரியமன்றென்று. ஐயநீங்குதல் பொருந்தப் பிறவித் துன்பங்கெட வறிவாயாக எ-று.

வினை - மத்திம தீபம். மதி, ஓ—அசை. (உச)

தேனுட னமிழ்து கலந்தன்ன சுவைய,
வமிழ்தா னண்டரும் பெறற்கருந் தகைய,
தண்டாப் பிறவிப் பேரிட ரெறிப,
வுரையுணர்வு கூடா வரகதி யுய்ப்ப,
மதியோ ரானது பருகுவ, பருகியு
மமையாது நவலு மமைநிய, பாச
வல்லி வேரற் நிமிர்ப, வெல்லையின்
மறக்குறும் பறுப்ப, வறத்தின் வேலிய,
தனக்குநிக ரில்லாத் தகைமைய, மனத்தின்
மாசறக் களைவ, தேசொடு நிவந்த,
வுரைத்தன னென்ப மாதோ
பொறைக்குவரம் பாகிய வறத்தின் கோவே.

இது, மேற் பரமாசாரியர் தமக்கு அநுக்கிரகம் பண்ணின கருமச் சேதவுபாயத்தினாலே விளைந்த பரமானந்த அநுபோகமிகுதியாற் சீடன் முன்னே இந்த ஞானமிர்தமென்னுந் தமிழாகம முரைத்தார் தம்முடைய சற்குருவின் பரமோபதேசத்தை வியந்து கூறியது.

* வினை பயந்தோன் வினைவிடல் வியந்து அன்று அயந்நீர்பெய்த ஆசுக் அறி எனக் கூட்டுக ; ஐயம் அயம் எனப் போலியாயிற்று.

(இ-ள்) தேன்—சுவைய எ-து தேனும் அமிழ்தமும் கலந்தாற் போன்ற இரதத்தை யுடையன,

அமிழ்து—தகைய எ-து அமுதுபுசித்தற்குப் புண்ணியவான்களாகிய தேவர்களுங் கிட்டுதற்கரியன,

தண்டா—எறிப எ-து எல்லையில்லாத செனனமாகிய பெரிய துக்கத்தைத் துறப்பன,

உரை—உய்ப்ப எ-து மனவாசகங்கடக்கப்பட்ட மேன்மையாகிய முத்தியிலே செலுத்துவன,

மதியோர்—பருகுவ எ-து ஞானவான்கள் அளவறப்புசிப்பன,

பருகியும்—அமைதிய எ-து இங்ஙனம் புசித்தும் ஆராது பின்பும் விரும்பப்படுந் தன்மையன,

பாச—நீமிர்ப எ-து பாசமாகிய விலங்கை வேரோடே போக்குவன,

எல்லை—அறுப்ப எ-து அளவில்லாத பாவமாகிய குறும்பை யறுப்பன,

அறத்தின் வேலிய எ-து புண்ணியத்துக்குக் காவலாயுள்ளன,

தனக்கு—தகைமைய எ-து தனக்கு உவமையில்லாத அழகையுடையன,

மனத்தின்—களைவ எ-து மனோதோடமாகிய ராகத்துவேஷத்தைச் சேடமற ஒழிப்பன,

தேசொடு திவந்த எ-து பிரகாச முடையவா யோங்குவன (ஆகிய இத்தனை நன்மை யுடைய கன்மச் சேத வுபாயத்தை,)

உரைத்தனன்—கோவே எ-து உபசாந்தத்துக் கெல்லையாகிய தருமத்துக்குக் கர்த்தாவாயுள்ள பரமாசாரியர் பிரசாதித்தனரென்று மகான்மாக்கள் சொல்லுவார்கள் எ-று.

மாது, ஓ—அசை. (உரு)

அழுக்கா றவாவெ ன்ிழுக்கிக விரிமிளை,
மைந்தன் மருமான் மனையோண் மாதுல
னென்பே ரகழி, யெழில்பெற நிவந்த
கற்பனை யெழுவினி யாளெனும் போகிய
பொற்புடைப் பருமூள் விலங்கிக், கைப்புடைச்
சீற்றம் வெகுளி மயக்கொடு சிவணிய
கூற்றத் தானை, யாற்றல் சான்ற
வைம்புலத் தறுகண் வெந்தொழில் வேழம்,
விடயப் பஃறேர் கடவித் தடையின்
மனப்பே ரத்திரி யுகைத்துப் பேதை
யமைச்சன் சூழும் வினைப்பெருஞ் செழுநகர்

வேந்தன் காத்த பூந்தண் டேயம்,
பிறவா யாக்கைப் பெரியோன் பாதக்
கடவுண் மாமணி சுடர்விடப் புனைந்த
ஞான மாமுடி சுமந்த கோபகன்,
வல்வினை மறவன் வலையிற் றீரா
நல்லோர் யாரென நலங்கிளர் சூட்சியன்,
கற்பனை யிஃதெனக் கடாங்கதழ் பதாகினிப்
பொறைமா ணிரதச் செயறீர் சூரகதத்
தவாவறு சுளிமுகத் துவாவின் முற்றி,
யடிமினை பொடிபட வெறிந்து * நெடுமதி
லகழியொ டிடிய நூறிக் கொடுநக
ரெரிவிருந் தூட்டி யரிதுபெறு சிறப்பிற்
றன்னுடை நாச மன்ன னெய்தப்,
பரமா னந்தப் பைதிரம்
வளையாச் செங்கோ லோச்சின னெடிதே.

இது, பாசபந்தமாகிய அஞ்ஞான வேந்தனைப் பாசச்சேதமாகிய ஞானவேந்தன் செயித்த ஞானவெற்றிவியப்புக் கூறியது.

(இ-ள்) அழுக்காறு—பிளை எ-து மனச்சழக்காகிய பொறாமையும் அவாவாகிய பொல்லாங்கையும் உவமையில்லாத நகரிசூழ் காவற்காடாகவும்,

மைந்தன்—அகழி எ-து இக்காட்டுக்குள்ளே புத்திரனென்றும் மருமகனென்றும் தாரமென்றும் மாமனென்றுஞ் சொல்லப்பட்ட பந்தத்தினரைப் பெரிய அகழாகவும்,

எழில்—விலங்கி எ-து நான் பரியன் நேரியன் இன்னவூரன் இன்னசாதியன் என்று சொல்லுஞ் சங்கற்பனையாகிய அழகுபெறவோங்கிய இனக்கதிர்க்காலிலே மாயாகாரியமான தேகம் † நானென்னுந்தன்மையை மிக்கவழுகிதாகப் பருத்த முள்ளாகக்கொண்டு இதனாலே தெற்றப்பட்ட வேலியாகவும்,

கைப்பு—தானை எ-து பிறரோடு மாறுபாட்டைப்பண்ணு மாற்சரியம் கோபம் அறியாமை என்பவற்றோடேகூடிய செயல்களை யமதூதுவ ரொத்த சேனையாகவும்,

ஆற்றல்—வேழம் எ-து வலியமைந்த அஞ்சாமையையும் கொடிதாகிய செயலையும் உடைய பஞ்சேந்திரியங்களை யானையாகவும்,

விடயம்—தேயம் எ-து சத்த பரிச ரூப ரச கந்தங்களைப் பல தேராகச் செலுத்தித் தகைத்தற்கரிய மனமென்னும் பெரிய குதிரையையுஞ் செலுத்தி அறியாமையாகிய மந்திரியாலே அலங்கரிக்கப்பட்ட புண்ணியபாவமான பெரிய சிறப்புடைய நகரிக்குக்கர்த்தாவாகிய

---

* அகழிநூறி நெடுமதிலிடிய எனக்கூட்டுக.

† நானென்னுமமத்துவத்தை என வுரைகூறிய பிரதியுமுண்டு.

அஞ்ஞான வேந்தனலே காக்கப்பட்ட பொலிவையுங் குளிர்ச்சியையுமுடைய நான்குவர்க்கத்தோற்றத்து எண்பத்துநான்குநூறாயிர யோனிபேதப் பிறப்பாகிய தேசத்தை,

பிறவா—கோமகன் எ-து சுவேச்சா விக்கிரகவானன பரமாசாரியன் சீர்பாதமாகிய தெய்வீகமான பெரிய மணியை ஒளியுண்டாக அழுத்தின ஞானமான பெரிய முடியைத் தரித்த ஞான வேந்தனவன்,

வல்வினை—சூட்சியன் எ-து பூர்வ சென்மங்களிற் பண்ணப்பட்ட வல்வினையாகிய மறவன் வைத்த வலையில் அகப்படாத நல்லோராகிய வீரர் யார்தானென்னு நன்மை விளங்கிய புத்தியை விசாரவுபசாந்தனகிய மந்திரியாக வுடையனுய்,

கற்பனை—முற்றி எ-து * ஈடணை மூன்றாகிய இது சங்கற்பனையென்று சருவசங்க நிவிர்த்திபண்ணும் விரத்தியென்னு மதமும் வேகமு முடையசேனை சூழ்ந்துவரப் பொறை என்னும் அழகிய தேரிலே ஒருவருக் கொருவர் சுகதுக்கஞ் செய்யலாவதில்லை யென்னும் உபதேசத்தைக்குதிரையாகப் பூட்டிப் (பரிக் கோலுக்குச) சுளிந்த முகத்தையுடைய அவாவறுதியாகிய யானையின் மேற்கொண்டு,

அடுமிளை—எய்த எ-து கேட்டுக்குக் காரணமாகிய மனச்சழக்கும் அவாவுமான முற்கூறிய அடத்தக்க காவற்காட்டை (முற்படச்சென்று) பொடியாக வெட்டிச் சமுசார பந்தத்தினராகிய அகழைத் தூர்த்துச் சங்கற்பனையும் அகங்காரமுமாகிய நெடியமதிலை யிடித்துக் கொடிய இருவினையாகியநகரியை அக்கினிக்கு விருந்தாக வூட்டி அநாதியாகக் கிட்டுதற்கு அரிதாகப் பெற்ற சிறப்பையுடைத்தாகிய தன்னரசத்தை ஆன்மாவிடத்துண்டாகிய அஞ்ஞானவேந்தன் பெறுவானுக,

பரம்—நெடிதே எ-து பரமானந்த நாடாகிய முத்தியிலே ஒருநாளும் அழிவில்லாத செங்கோலை ஞானவேந்தன் நெடிதாகச் செலுத்தினன் எ-று.

அகழியொடு என்பதில் ஒடு—அசை. இடிய என்னுஞ் செயவெனெச்சத்தை இடித்து எனச் செய்தெனெச்சமாக்கி யுரைக்க. (உசு)

ஒருவன் றெடுத்த விருவினை மூன்றிடத்
துறுதலா ரணநா லறையு,மற் றவையே
கருப்பா சயமெனு மிருட்சிறைப் †பள்ளி,
யச்சிறைக் குறும்புழை யரிது நீங்கி
யாக்கை சுமந்து நோக்குங் காலைப்,
புலம்பல கலங்க வலந்தலை யெய்தித்
தென்றிசைச் சேற, லென்றிவை மூன்றினுங்
காரணத் தின்றிப் பாரண மின்றே,
யந்தக் காரணஞ் சேதன சேதன,

* ஈடணை மூன்று - லோகவேடணை, தாரவேடணை, அர்த்தவேடணை; ஈடணை-ஆசை.

† பள்ளி - இடம்.

நன்றும் பேதை யாகலிற் சேதனத்
தொன்றிய வின்பத் துவகையு மன்ற
துன்பத் தரந்தையிற் கன்றுபு கனலு,
மசேதனத் திடைவிடா திடர்நனி படரினு
மடையா வின்பந் தடையின் றெய்தினுந்
தொல்லைக் கென்னைகொ லல்ல லென்னு
முள்ளத் துணர்ச்சி யிள்ளா ராகிச்,
சேதனத் தியைத லென்ப
மாதவத் திறைவர் மாமுறு நிதியே.

இது, மேற் பயந்தோன் வினைவிடல் வியந்தோ வன்றே என்றநளிச் செய்த தெங்ஙனே யென்று சீடன் விண்ணப்பஞ் செய்யக் கன்மச்சேத வுபாயங் கூறியது.

(இ-ள்) ஒருவன்—அறையும் எ-து ஒரு ஆன்மாப் பந்தித்த புண்ணியபாவம் மூன்று வர்க்கத்தாற் புசிக்கவேண்டு மென்று வேதநான்குஞ் சொல்லா நின்றன,

மற்றவை—பள்ளி எ-து அந்த மூன்று வர்க்கமாவன கருப்பாசயமென்னும் அந்தகார மாகிய காராக்கிரகத்தினிடத்தில் வரும் விதனமும்,

அச்சிறை—கால் எ-து அந்த இருட்டறையாகிய காராக்கிரகத்தின் சிறிய துவாரத்தை அரிதாக நீங்கி (ப் பிரசவவேதனையுற்று) ச் சரீரமெடுத்துப் பின்பதனை விடுமளவுமுண் டான விதனமும்,

புலம்பல—சேறல் எ-து இந்திரியங்கள் யாவும் நிலைகலங்க * அலந்தலைப்பட்டுத் தேகம் விடும்பொழுதுண்டான மரணவேதனையுமாம்,

என்றிவை—இன்றே எ-து என்று சொல்லப்பட்ட இம்மூவகையினும் (அனுபவிக்கும் பொழுது) ஒரு ஏது முன்னிலையாகவல்லது புசிக்குமுபாயமில்லை,

அந்த—சேதனம் எ-து அந்த ஏதுத்தான் சைதந்நியவேதுவாதல் அசேதனவேது வாதலாகியல்லது கூடாது,

நன்றும்—கனலும் எ-து மிகவும் அறிவிலியாதலாலே சைதந்நிய வேதுவாகவந்த சுகத்துக்குப் பிரியப்படவும் துக்கமாகிய விதனத்திற்குப் பிறரைக்கன்றிக் கனலவும் அது நிச்சயமாகச் † செலுத்தும்,

அசேதனத்து—யிள்ளாராகி எ-து அசேதனவேதுவாக இடைவிடாதே துக்கமிக வுண்டாயினும் கிட்டுதற்கரிதாகிய சுகந் தடுக்கவொண்ணாதபடியுண்டாயினும் பூர்வ வினைக் கீடாக வருவதற்கு நிகழ்ந்த பிரியாப்பிரியம் என்னவிருக்கிறதென்று உள்ளத்திலறிவை யொழியாராகி,

---

* அலந்தலை - துன்பம்.

† செலுத்தும் என்ப திசையெச்சமென்க.

சேதனம்—நிதியே எ-து அங்ஙனஞ் சைதந்ய வேதுவாகவந்தவையிற்றையும் இப்படிக்காண்டல் மகத்தான பரமானந்தபோகமாகிய மூலபண்டாரப் பொருள் என்பர் தலையான தவசுக்குக் கர்த்தராகிய ஞானவான்கள் எ-று.

மற்று, ஓ, கொல்—அசை. (உ௭)

பனுவ லாட்டி தனிமனைக் கிழவர்
நட்பும் பகையு மெய்ப்பட நாடின்
யாவது மில்லை தானே, யாயினு
மாய்விடை யுடைய துளதே, யாதே
யீன்றோர் பகைஞர் கீன்றோர் நட்பே,
யருஞ்சிறை யிடுநரி னருஞ்சிறை விடுநரின்
யார்கொ லுறுதி யோரே, சிறி
யுடற்பொறை தணித்த நலத்தகை யாளர்
கொடுத்தது நிலமிசை யிவர்க்கே, துயக்கெனு,
யுருவிலோ ருயிருக் குடலுரு நுழையரென்
றிருவே றுரைப்பதை யெவனோ, தெரிதரிற்
கோடை தூற்றக் கூடிய வூழிலை
வாடை வீற்றுவீற் றாகி யாங்குச்
செய்தியிற் றிரண்டு கையற வொரீஇ
யொக்க லல்லதை, மற்றுங் கேண்மதி,
தன்னணி யாகமு மஃதெனி
னென்னை யோபிற பன்னுங் காலே.

இது, மாதவத்திறைவர் மாழுதுநிதியாகிய கன்மச் சேதவுபாய முடையார்க்கு நட்பும் பகையுமில்லையென்று ஞானசித்தாந்த * வரிட்டங்கூறியது.

(இ-ள்) பனுவல்—தானே எ-து கலைமகளை நாவாகிய ஒப்பற்ற வீட்டிலே குடியேற்றிவைத்த ஞானவான்களுக்கு உண்மையாக விசாரிக்கில் சத்துரு மித்துருவென்று ஒரு சிறிதுமில்லை,

ஆயினும்—உளதே எ-து ஆயினும் விசாரித்துப்பார்த்தால் சிறிதுண்டாதலுமாம்,

யாதே—நட்பே எ-து அஃது யாதென்னில் இவரைப்பயந்த மாதாபிதாக்கள் சத்துருவும் இவருடலைப் பிளந்தோர் மித்துருவும் ஆகும்,

அருஞ்சிறை—உறுதியோரே எ-து அஃதெங்ஙனமெனில் விடுதற்கரிய சிறையிலே இட்டோரினும் அப்பெரிய சிறையினின்றும் மீட்டோரினும் யாரை மித்துருவாகக் கொள்வோம்,

* வரிட்டம் - சிரேஷ்டம்.

கீறி—இவர்க்கே எ-து இத்தேகத்தைப்பிளந்து தேகபாரமொழித்த நல்ல அழகை யுடையோராகிய ஆசாரியர் இந்த ஞானவான்களுக்குக் கொடுத்தது நிலங்கட்கு மேலாகிய முத்தியல்லவோ,

துயக்கெனை எ-து விதனப்படுவதென்னை,

உருவில்—எவனோ எ-து அருவமாய் நித்திய வியாபகசித்தாகிய ஓரான்மாவுக்குச் சத்துருவு மித்துருவும் என்றிரண்டு வேறுபாடாகச்சொல்ல * வேண்டுவானேன்றான்,

தெரிதரில்—அல்லதை எ-து விசாரிக்கில் மேல்காற்றடிக்கத்திரண்ட சருகிலே வாடைக்காற்றாற் சிதறினவாறுபோலப் பக்குவப்பட்ட கன்மபலம்புசித்தற்கு எதுவாகிவேண்டுவாராகக்கூடி அக்கன்மபலம் புசித்தற்றவாறே பிரிந்துபோனவர் சுற்றத்தாரன்றோ,

மற்றுங் கேண்மதி எ-து இன்னமுங் கேட்பாயாக,

தன்னணி—பன்னுங்காலே எ-து தன்னுடைய அழகிய தேகமும் கன்மபலம் புசித்தற்கேதுவாகக் கூடினதாகலாற் சொல்லும்பொழுது வேறு சிலரைச் சத்துருவு மித்துருவுமென்று சொல்ல வேண்டுவானேன்றான் எ-று.

தான், ஏ, மதி, ஓ—அசை. (உ௮)

தொல்லை ஞாலத் தெல்லை நீங்கிய
விருவகைத் தோற்றத் தொருவா வுயிர்கட்
கிருவினை † பொராஅ மருவின் றியிடை,
நொதுமலர் கவிகை நொதுமலர்க் கவிகை
விதிமுறை மதிமலர் பெய்திக், கதுமென
யாமுடை யவருடைத் தாம னென்றினி
தாமுறை யறியார், டாபதி பிறழ்ந்து
செயலறு பறியார் மயலுற் றோரே,
யளியரோ வளியர் தாமே, தெளியா
வினையோன் றுரந்த குணில்வாய்ச் செல்லா
திளையோற் சினவும் வளைவாய் ஞமலியி
‡ னளியரோ வளிய, ரென்னை
யொளிகொள் காரண முன்னு தோரே.

**இது, மேல் ஒருவன் றெடுத்த இருவினையால் தன்னணியாகமு மஃதெனல் குறித்துச் செயலறுதியானமையின் ஞானவுபாய மறியாதவர்களைத் தாழ்வுபடக் கூறியது.**

(இ-ள்) தொல்லை—ஆயிடை எ-து பழையதாய் வருகிற பிரபஞ்சத்திலே தாவரசங்கமமான தோற்றத்தைவிடாத அளவிறந்த ஆன்மாக்களுக்குப் புண்ணியபாவபலம் ஒழியப் புசிக்கவருவதில்லையானவிடத்து,

* வேண்டுவான் - வேண்டுதல்; வான் - தொழிற்பெயர் விகுதி.

† ஒருவ எனச் செயவெனெச்சமாக்கி யுரைத்தமை காண்க.

‡ அளியர் என்றது அறிவிலார் என்னும் பொருடாநின்ற குறிப்புமொழி.

நொதுமலர்—எய்தி எ-து பிறர் தமக்குச்செய்த நன்மை தீமையும் பிறர்க்குத் தாம் செய்த நன்மை தீமையும் ஊழ்முறைமையென்று அறிவை விரித்துப்பார்த்து,

கதுமென—அறியார் எ-து விரைந்து நம்முடையது அவர் தந்தாரென்றும் அவருடையது நாம் கொடுத்தோமென்றும் இனிதாக ஆகிற முறைமையை அறியாராகி,

மாமதி—உற்றோரோ எ-து மற்றும் பிரபஞ்சத்தில் ஒருவர்க்கொருவர் செய்யுஞ் சுக துக்கமில்லாமை அறியார் மகத்தாகிய அறிவுகெட்டு மயக்கத்திலே கூடினோர் ஆதலாலே

அளியரோ—தாமே எ-து முன்சொன்ன அவர் அறிவில்லார் அறிவில்லார்,

தெளியா—அளியர் எ-து அறிவில்லாதபாலன் எறிந்த குறுந்தடியிடத்துச் செல்லாது எறிந்த காரணத்தவனை அப்பாலனைக்கறுவுகொள்ளும் வளைந்தவாயையுடைய நாய்க்குள்ள அறிவும் இல்லாதவர் இல்லாதவர்,

என்னை—உண்டோரோ எ-து மறைதலைக்கொண்ட காரணமாகிய பூர்வகன்மத்தை நினையாராகி அக்கன்மபலத்திற்கு ஏதுவாயினாரைச் செற்ற குற்றங் கொள்ளுவதேன்றான் எ-று.

மன், ஓ—அசை. ஏகாரம் - தேற்றம். (உகூ)

அயிலரி யரலை * விழுப்புண் ணரிபழுந்
தனல்கால் கோலிற் பன்முறை யடினும்
பேரிடர் நீத்த பெருந்தகை யோனென்
றார்வ நெஞ்ச மல்லதை யாரோ
வேரங் கொண்டோர், வேறே, மாறெழுந்
துடம்பிடி யுடறுணி படுப்பினும் விரையொடு
மலையச் சந்தும் வழுத்துங் கொண்டு
தலையிற் பாதந் தாங்கினு, மூலையாப்
பிறவிப் பிணிதணி யறவன ரிவரென
விளையா வின்பம் விளையி னல்லதை
யுளைவதை யுடையரோ விளைவுணர்ந் தோரே.

**இது, அசேதன ஏதுவன்றிச் சேதன ஏதுவிலும் வந்த வாதைக்கு மேல்வரும் பயனை நோக்கிச் செற்றமுஞ் சினேகமுங் கொள்ளாதொழிவதும் உண்டென்று ஞானசித்தாந்த வரிட்டம் பிரமாணத்தாற் கூறியது.**

* விழுப்புண் - வருத்தத்தைச் செய்யும் புண்; இவ்வாறு பத்துப்பாட்டுப் பெரும்பாணாற்றுப்படை யுரையில் விழுத்தண்டு என்பதற்கு வருத்தஞ்செய்யுந் தடியென்றார்.

(இ-ள்) அயிலர்—கொண்டோர் எ-து பக்குவத்திலே சத்திரத்தாலே யறுக்கப்பட்ட வருத்தத்தைச் செய்யுங் கழலையான புண்ணை நெருப்புப் பழுத்தாற்போலக் காய்ந்து அக்கினியைக்கால்கின்ற கோலாலே பலகாற் சுடினும் இப்படிச்சுட்ட வைத்தியனை என்மிக்க துக்கத்தைக் கெடுத்த பெருந்தகைமையுடையோன் என்று உள்ளத்திற் சினேகங்கொள்ளுமதல்லது அவன்மீது செற்றங்கொண்டோரார்தாம்,

வேறே எ-து இவனில் வேறே தேகமாகிய கிரந்தியைச் சேதித்தவன்,

மாறு—தாங்கினும் எ-து எதிரியாய்வந்து வேலைக்கொண்டு தேகத்தை யிருதுணியாக்கிவிடினும் புட்பமுதலிய வாசனைத்திரவியங்களோடு பொதியின் மலையிலுண்டாகிய சந்தனத்தையும் * (சாத்தித்) தோத்திரமுஞ் செய்துகொண்டு தலையிற் பாதம்பொருந்த வணங்கினும்,

உலையா—உணர்ந்தோரே எ-து இரண்டுதிறத்தோரும் புசித்தறவேண்டும் பிராரத்த கன்மம் தொலைத்தற்கு ஏதுவானோர் ஆதலால் கெடுதற்கரிய பிறவித்துக்கத்தை ஒழித்த தருமவான்கள் இவரென்று இவர்களிடத்துப் பெறுதற்கரிதாகிய பிரியமுண்டாகுதலல்லது செற்றங்கொள்ளுவதையுடையாரோ மேல்வருவது முத்தியென்றுணர்ந்தோர் **எ-று.**

ஏ - அசை. ஓ—இரண்டு மெதிர்மறை. (௫௰)

பையு ணீங்கப் பயன்பல பெருகக்
கைதூ வாத செய்தி யோர்க்கும்
பருவரல் வந்தது † துருவ ‡ மல்லதை
வருவது நன்னய மற்றே, யறிவழிந்
தவல மாக்கட லழுங்கல், செயலிலென்
றுசற வுணர்ந்த நீதி லாளர்,
மான்மதம் பனிதம் வார்நறுஞ் சாந்தந்
தாண்முதற் பழிச்சுநர் தைவந் திடினுஞ்
செவிசுடூஉத் தகைய மொழிபல வியற்றி
மயிரிற் றகைத்து வறுத்தெரித் திடிப்பினு,
ஞான பாத்துலை சீர்புகுத் § தாநா
முனைப்பாற் செய்தி நகைப்பாற் பட்டென
மூரன் முறுவ லல்லதை தேரி
னுவகை கலுழ்ச்சியோ விலரோ, யானே
யுழையிடை மறந்தனன் மாதோ, வுவகை

* சாத்தி என்பது இசையெச்சம்.

† துருவம் - நியதி; ஈண்டு ஊழையுணர்த்தியது.

‡ அல்லதை என்பதில் ஐ - சாரியை.

§ ஆ நாம் எனப் பிரித்துரைத்துக்கொள்க; ஆ—ஈண்டு இரங்கற்பொருடந்தது.

யிவர்க்கிட ரிலமென மனக்களி யோரே,
கலுழ்ச்சி தீங்கு செய்தியோர் நீங்கா
நிரயத் தழுந்துதற் கேது வாயின
மெனவே யிழுந்த நெஞ்சமோ டினைபா
ஞரே, பெயர்த்துமொன் றயர்த்தனன் பெரிதே,
தொடுத்த வெவ்வினை யெவ்வள வுடைத்தெனக்
கையற் றின்ன லெய்தலு முரிய,
ரன்னே வீடித னூங்குமற்
றெவனே நாடருங் கேள்விநெடி யோர்க்கே.

இது, விழை வுணர்ந்தோர் செயலறுதியாலே யாவை யாவராய் நமக்குவரு நன்மை தீமைகள் ஊழால்வருவனவென்றறிந்து பிரியாப்பிரியங் கோள்ளாதோழியு ஞானசித்தர் வரிட்டங் கூறியது.

(இ-ள்) பையுள்—மற்ரே எ-து வறுமைத்துன்ப நீங்குதற்காகப் பலபிரயோசனங் களும் உண்டாகவேண்டுமென்று கையொழியாத முயற்சி செய்தோர்க்கும் மிடியாகிய துன் பமே வருவது ஊழ்முறைமையானல் நல்ல சுகம் வருவதும் அந்த ஊழாலல்லது வேறென் றலாமோ,

அறிவு—அழுங்கல் எ-து அறிவுகெட்டுப் பெரிய துக்கசாகரத் தழுந்தாதே கொள் ளாய்,

செயல்—தீதிலாளர் எ-து முன்செய்ததல்லது ஒருவர்க்கொருவர் செயலில்லையென்று குற்றமறவறிந்த நல்லோர்,

மான்மதம்—இடிப்பினும் எ-து கத்தூரியும் கற்பூரமும் கொழுவிதாய நறுநாற்றத் தையுடைய சந்தனக்குழம்பும் பாதாதிகேசம்வரை தோத்திரம் பண்ணினராகிச் சாத்தினு லும் செவியிலே நாராசத்தைக் காய்ச்சி வற்றினாற்போன்ற இகழ்ச்சிவசனங்கள் பலசொல்லி மயிர்போல நுண்ணிதாகச் சரீரத்தையரிந்து பொரித்துஞ் சுட்டும் அரிந்த புண்ணிலே வேல்கொண்டு குத்தினலும்,

ஞானம்—இலரோ எ-து இவ்விரண்டுமொக்க ஞானமென்னு மகத்தாகிய தராசிலே சீர்தூக்கி என்னே என்னே நாம் முற்பவத்திற்செய்த கன்மபலம் இப்பொழுது சிரிக்கும் பகுதியாயதென்று சிறு முறுவல் கொள்ளுமதல்லது ஆராயிற் பிரியாப் பிரியங் கொள்ளு மதிலர்,

யானே—மாதோ எ-து ஆயினுஞ் சொல்லுமிடத்தே நான் கூற மறந்தன சிலவுள,

உவகை—களியோரே எ-து அவையாவன இவர்க்குப் பிரியமாவது இவ்விரண்டுக்கும் விருப்பு வெறுப்பாகிய விதனமில்லோம் என்னு மனக்களிப்பையுடையோராதலும்,

கலுழ்ச்சி—இனைபானோ -எது இவர்க்குத் துக்கமாவது தமக்கு விதனம்பண்ணினோர் பின்னாளில் ஒழியாத நரகத்திலழுந்துதற்கு நாம் ஏதுவாயிருந்தோமென்னும் இத்தால் அழிந்த மனத்தோடே துயரமுடையராதலுமாம்,

பெயர்த்தும்—பெரிதே எ-து மற்றும் பெரிதொரு பொருளைக்கூற மறந்தேன்,

தொடுத்த—உரியர் எ-து அஃதாவது பந்திக்கப்பட்ட வெவ்விதாகிய பிராரத்த கன்மம் இன்னும் எவ்வளவு காலம் உடையதோவென்று மனசழிந்து துக்கப்படவு முரியர் என்பதாம்,

அன்றே—நெடியோர்க்கே எ-து ஆதலால் ஐயோ கிட்டுதற்கரிதாகிய முத்திக்குபாயம் விசாரிப்போர்க்கு இவ்வநுபோகத்தின் மேற்பட்ட முத்தி மற்றியாதோ எ-று.

ஓ - முன்னது எதிர்மறை. ஏ, மாது, ஓ—அசை. (நூக)

நஞ்சினி தருத்தினு நல்வினை மாட்சி
யஞ்ச மில்லோர்க் கமிழ்தா கற்றே,
நஞ்சம லயினி நாக முயர்த்தோன்
வெஞ்சின வீமன் விடிட வருத்தி
நாக நாக்க நாகரும் பெறாஅ
வாரமிழ் தன்றி யணங்கொடு நடந்த
பேரிசை யானே பாரத மிசைக்கு,
மன்றே னளவை யருமுனி பணியிற்
கன்னனைப் பயந்து நன்னதி யியக்க
வங்கர் கோனு யரசுதலை பணித்துப்
பொங்குதிரை யாடைப் புரவு*பூண் டிசினே.

இது, முனைப்பாற் செய்தியாய ஊழ்வலியால் நல்வினை நிகழுங்காலத்துவந்த தீமையு நன்மையாமென்று கூறியது.

(இ-ள்) நஞ்சு—அற்றே எ-து நல்வினைமாட்சியால் அழிவில்லாதோர்க்கு நஞ்சை யினிதாகப் புசிப்பிக்கினும் அமிழ்தாகுகின்ற அத்தன்மையாகவேமுடியும் அஃதெவ்வண்ணமென்னில்,

நஞ்சமல்—இசைக்கும் எ-து நாகக்கொடியையுடைய துரியோதனன் வெவ்விய சினத்தையுடைய வீமன் மரிக்கவேண்டுமென்று நஞ்சுகலந்த சோற்றைப் புசிப்பிக்கப்பண்ணி நாகலோகமாகிய பாதாளத்திலே செல்லத்தள்ள அங்கே நாகலோகத்திலுள்ள தேவர்கட்குங் கிட்டுதற்கரிதாகிய நிறைந்த அமுதத்தைப் புசித்ததன்றியே நாககன்னியையும் பாணிக்கிரகணம் பண்ணிக்கொண்டுவந்த பெரிய கீர்த்தியை யான் சொன்னேனல்லேன் மகா பாரதத்திலேயன்றோ சொல்லுகிறது,

---

* இசின் ஈண்டுப் படர்க்கையில் வந்தது.

அன்னோன்—பூண்டிசினே எ-து அத்தன்மையனான வீமன்மாதாவாகிய குந்திதேவி கிட்டுதற்கரிய துர்வாசமகாவிருடி பிரசாதித்த மந்திரத்தினாலே கன்னிகையாயிருந்தபோது சூரியனை வரவழைத்துக்கூடி உடனே கன்னனைப்பெற்றுக் கங்கையாற்றிலே மிதவற்பேழையிலே வைத்துச் செல்லவிட இத்தைத் திருதராட்டிரன் றேர்ப்பாகன் கண்டெடுத்து வளர்ப்ப வளர்ந்து துரியோதனனுக்குத் தோழனாய் அங்கதேசமென்னும் இராச்சியத்துக்குக் கர்த்தாவாய் அங்கராசனென்று அபிடேகம் பண்ணப்பட்டுப் பெரிய சமுத்திரஞ் சூழ்ந்த வையகத்துக்கு உபகாரியென்னும் பெயரைப் பூண்டனன் எ-று.

ஏ—முன்னது தேற்றம்; பின்னது பிரிநிலை. இசின் - அசை. (௧௨)

அறப்பயன் றீரி னமிழ்தே *யானுங்
கடுப்பா டெய்தல் விடுத்தோ† வின்றே,
‡ தக்க னெடுத்த முத்தீ முற்றத்
தொக்க வானோ ருற்றதை பெரிதே,
யெயிறுந் துண்டமு முகனுங் கையு
மந்தியும் வாணியு மிந்துவு மெரியு
மிழப்பத், தக்க னிருஞ்சிர மிழந்து
தகர்ச்சிர மெடுத்துப் பிழைத்ததை யரிதே,
வாசவன் கோகில மாகினன், கேசவன்
சாவா யகன்று தாவினன் கடிதே,
§ யிந்திர சித்தோ டியாளி வரருசி
தந்திரம் பயின்று தலைமையின் வழாஅர்
வினைப்பய னுணர்ந்து வெல்வகை நாடித்
தவத்திறம் படருங் காலை, முகைத்தாழ்
கொம்மை வெம்முலை யிளையோட் கூடுந
தன்மை யன்றி யருந்தினன் றணிய,
லயில்புரை நெடுங்க ணம்பணைத் திரடோண்
மயிலியற் சாயற் குயிலியற் கிளவிக்
கலங்கழி மகளி ரையிரு நூற்றுவர்
மணந்தோன் மன்ன னுணங்க, யாளி
கூவற் றாண்டு மாதப் புலைச்சி
காதற் காசனி யாகி மேதினி

* ஆயினும் என்பது ஆனும் எனக் குறைந்து நின்றது.

† ஓவுதல் - ஒழிதல்.

‡ தக்கன் யாகவிவரங் கந்தபுராணத்திற் காண்க.

$ இந்திரசித்து, யாளி, வரருசி இம்முனிவர் சரித்திரம் இன்ன நூலிலுள்ளதென்று விளங்கவில்லை.

யின்னிசை * யெழுவர்ப் பயந்தோ ளீண்டே,
சிந்து நாடன் செயத்திர தன்முடி
யிலங்கிலை வாளியி னிறுத்தோ னிற்ப
நிலம்புக வெறிந்த கவம்புரி தந்தை
தன்றலை தரைசே ரந்தரம் பெரிதே,
பாண்டவர் மரபி னுண்டாகைக் குரிசில்
சனமயன் † வேள்விக் ‡ குருமுனி யுற்ற
தன்மையு நன்மை யன்றே, விண்ணோர்
மகுடம் புனைந்த § நகுடன் பாந்தட்
படிவங் கொண்டு படிசேர்ந் தனனே,
திருமணி வள்ளத் தமிர் மருந் துதவி
யடப்படு தெண்ணீ ரானு
முடற்பகை யற்ற லுணருங் காலே.

இது, ஊழ்வலியாற் றீவினை நிகழுங்காலத்து வந்த நன்மையுந் தீமையாமென்றல் கூறியது.

(இ-ள்) அறப்பயன்—இன்றே எ-து பூருவ புண்ணிய கன்மம் புசித்தற்றகாலத்து அமுதத்தைப் புசிக்கினு நஞ்சின்றன்மையாதல்விட்டொழியுமதில்லை அஃதெவ்வண்ணமெனில்,

தக்கன்—பெரிதே எ-து தக்கனெனவன் எடுத்துக்கொண்ட யாகமுடித்தற்பொருட்டுக் கூடிய தேவர்கள் பட்ட அபசயம் பெரிதே,

எயிறும்—இழப்ப எ-து பன்னிரு ஆதித்தருள் ஒருவன் பல்லும் வாணிமூக்கும் சந்திரன் முகமும் அக்கினி கையும் இழப்ப,

தக்கன்—அரிதே எ-து தக்கன் பெரிய தலையை யறப்புண்டிழந்து பின்பு சிவபிரான் அநுக்கிரகத்தால் ஆட்டின்றலையைப் பெற்றுப் பிழைத்தது அரியதாயினதே,

* எழுவர்ப்பயந்தோள் என்றதற்குத் திருவள்ளுவர், அதிகமான், கபிலர், ஔவை, உப்பை, உருவை, வள்ளி யென்னும் எழுபிள்ளைகளையும் பெற்றனள் என வுரை கூறிய பிரதியுமுண்டு; இதனை "கபில ரதிகமான் கான்குறவர் பாவை, முகிலனைய கூந்தன் முறுவை—நிகரில்லா, வள்ளுவ ரௌவை வயலூற்றுக் காட்டிலுபபை, யெள்ளிலெழுவரிவர்" என்னும் பழைய பாடலானு மறியலாம். இதில் உருவை யென்பதற்கு முறுவையெனக் கூறப்பட்டிருக்கிறது.

† வேள்வி - தனக்கு வருகிற பிரமகத்தியைத் தடுக்கும்படி செய்த யாகம்.

‡ குருமுனி - ஒரேழைப் பிராமணனை ஆசாரியனாக வைத்து வேள்வி செய்தான் என்றிருக்கிறது.

§ நகுடன் - சந்திரகுலத் தரசர்களிலொருவன்; பாரதம் ஆதிபருவத்திற் காண்க.

வாசவன்—ஆகினன் எ-து இந்திரன் குயிலாய்ப்பறந்து திரிந்தனன்,

கேசவன்—கடிதே எ-து விட்டுணு பேயாய் நீங்கிக் கடிதாகத் தாவிப்போனான்,

இந்திரசித்து—காலை எ-து (மற்றும் அருளிச்செய்தபடி) இந்திரசித்தும் யாளிதத்தனும் வாருசியும் ஆகிய பெயரையுடைய இருடிகள் மூவரும் சாத்திரங்களெல்லாம் பயின்று முதன்மையில் வழுவாதவராய்த் தங்களுக்குப் பூர்வகன்மபலம் வருவதையறிந்து அதனை வெல்லுமுபாயம் பார்த்துத் தவங்களைப்பூண்டு தேசாந்தரத்திற் சஞ்சரிக்கிற காலத்திலே,

மூகை—தணியல் எ-து வாருசிமுனிவன் கோங்கரும்பைத் தாழ்த்திய திரட்சியும் விருப்பமுமுள்ள தனங்களையுடைய தனக்கிளையாளைக் கூடியதன்றியே சுராபானமும் பண்ணினான்,

அயில்—உணங்க எ-து இந்திரசித்துமுனிவன் பரகாயப் பிரவேசம்பண்ண வல்லவனாதலாலே ஓரரசன்றேகம் விட்டகாலத்திலே அவ்விராசனுடைய தேகத்திற் பாய்ந்து (அவனுடைய மனைவியராகிய) வேலையொத்த நெடிய கண்ணையும் அழகிய மூங்கிலைப்போன்ற திரட்சியையுடைய தோளையும் மயிலையொத்த சாயலையும் குயிலையொத்த வசனத்தையும் உடையார்களாகிய ஆபரணங்கழித்த விதவைகளாயினவரைக் கூடிக்கொண்டனன்,

யாளி—ஈண்டே எ-து யாளிதத்தமுனிவன் (தனக்கு விகிர்தமாய்த்) சன்றாலே வெட்டுண்டு கிணற்றிலே தள்ளப்பட்ட அறிவில்லாத சண்டாளப்பெண்ணை (ஓர் பிராமணனெடுத்துக்கொண்டுபோய் உத்தரபூமியிலே வளர்த்துப்பின்பு இவனுக்கே கொடுக்க) ச்சினேகத்துக்கிருப்பிடமானவளாய்ப் பிராமணியாய்ப் பூமியிலே நிற்கு மினிய கீர்த்தியையுடைய கபிலருள்ளிட்ட எழுபிள்ளைகளையும் பெற்றனனன்றோ இவ்விடத்திலே,

சிந்துநாடன்—பெரிதே எ-து சிந்துதேசத்திற்கு அரசனாகிய செயத்திரதனுடைய தலையை விளங்காநின்ற இலைபோலகன்ற அம்பாலே அறுத்த அர்ச்சுனன் இறவாது நிற்க இச்செயத்திரதன் பிதாவாகிய விருத்தக்ஷத்திரன் என்மகன்றலையைத் தரையில் விழவிட்டார் தலை சின்னப்பட்டுப்போகவேண்டுமென்று * சமந்தபஞ்சகமடுவின்கண்ணே நின்று தவசுபண்ண இவன் கையிலே அவ்வருச்சுனன் அப்புசுபத்தாலே அச்செயத்திரதன்றலையைத் தரையில் விழாதே கொடுசென்றிட அந்தத் தலையைக் கண்டருவருத்துப் பூமியிலே விழவெறிந்த அவ்விருத்தக்ஷத்திரன்றலை சின்னமாய்த் தரையில் விழுந்த அந்தரமாகிய தீமை பெரிதாய்ப் பிரகாசமானதன்றோ,

பாண்டவர்—அன்றே எ-து பாண்டவர் மரபிலே ஆண்டகைமைக்குத் தலைமையான ஜனமேஜயன் என்னும் பெயரையுடைய இராசன் செய்கின்ற யாகத்திலே ஆசாரியனாகிய முனிவனைச்செய்த † பிரமாதத்தாலே குருத்துரோகமான தன்மையும் நன்மையன்றே,

---

* சமந்தபஞ்சகம் - திரேதா துவாபரயுக சந்தியிலே பரசுராமர் கர்வங்கொண்ட க்ஷத்திரியரையெல்லாங் கொன்று அவர்களிரத்தத்தை ஐந்து தடாகங்களினிறைத்து அதனாற் பிதிர்தர்ப்பணஞ் செய்தாராதலின் அவ்விடஞ் சமந்தபஞ்சகமெனப் பெயராயிற்று; ~~பின்னர்த் துரியோதனனாகியர் பாண்டவர் நின்று யுத்தஞ்செய்தமையாற் குருக்ஷேத்திரமெனப் பெயராயிற்று.~~

† பிரமாதம் - அறியாமை; முனிவன் நித்திரையுடன் ஓமஞ்செய்கிறது கண்டு ஜனமேஜயன் கையிலிருந்த தருப்பையாற்றட்ட அம்முனிவன் புலிபாய்ந்ததுபோலக் கனவு கண்டு ஓமகுண்டத்தில் விழுந்திறந்தான் என்பது கதை.

விண்ணோர்—சேர்ந்தனனே எ-து தேவர்கள்வணங்க இந்திரனாய் முடிசூட்டப்பட்ட நகுடனென்னும் இராசன் சத்தருனிவர்களைச்செய்த அவமதிப்பாலே பெரும்பாம்பான வடிவுகொண்டு பூமியிலே விழுந்தனனன்றோ,

திருமணி—உணாருங்காலே எ-து அழகிய ரத்தினமிழைத்த வட்டிலிலே பிராணனுக்குக் காப்பாக அமிர்த மூலிகையான மருந்துகள் சேர்த்துக் காய்ச்சித் தெளிந்த குடிநீராயினும் * பூருவபுண்ணியமான கன்மபலம் புசித்தற்றால் † அதுதானே உடலுக்குப் பகையாம் அறிவுடையோர்கள் விசாரிக்குமிடத்து எ-று. (௩௩)

பழவினை பயந்த பழுதின் றயின்று
வருவினை தரூஉம் வாயி லறிவென்
கபாடச் செந்தாட் கடவ விடாஅ
துடைவ, தாயி, ஞெழியாப் பாசத்
தொல்லை வல்வினை துகடபு காட்சி
செல்லா ‡ துறவுற் கெல்லை யாதெனிற்,
படைப்புப் பூண்ட § வொருவர்க் கவையே
துடைப்புப் பூணு வெல்லைப்பல திறத்த,
மண்ணை நல்லான் வயிறுதர வந்த
வெண்ணெ யொண்பால் புண்ணியக் குழம்பு
மலையச் சந்தின் § கலைநவி லின்றுணி
நறுநெய் வெண்டயிர் நலங்கே ழொண்படி
மைந்தம னறுவிரைச் சந்தி னின்சே
றுநா வாறு போல வாங்குப்
போகா தம்ம புராதன, மாகந்
தொடநனி நிவந்த கொடிநுடங் காரெயில
வைவேன் முதல மண்ணிரும் பாதற்
கைய மில்லாச் செய்தி யேய்ப்ப
வுள்ளத் துள்ளிய வுருதற்
குள்ளத் துள்ள றள்ளுமதி விரைந்தே.

* அற்றால் என்பதற்குப் பூருவபுண்ணியமான கன்மபலம் புசித்தற்றால் என வருவித்துரைத்தார்.

† அது - அத்தெண்ணீர்.

‡ துறவல்-புசித்தல்; பிங்கல நிகண்டிற் காண்க. செல்லா துறுதற்கு என்றும் பாடமுண்டு.

§ ஒருவர்க்குப் படைப்புப் பூண்ட அவையே எனக் கூட்டுக.

§ கலைநவில் மலையச்சந்தினின்றுணி எனக் கூட்டுக.

**இது, பிராரத்தகன்மம் ஞானவுபாயத்தாற் கழியாது அதை யநுபவித்தே கழிக்கவேண்டுமெனக் கூறியது.**

(இ-ள்) பழவினை—உடைவது எ-து பூர்வகன்மபலத்திற் பக்குவப்பட்டவை குற்றமறப் புசித்தறவேண்டும் சுயங்கன்மம் வரும்வழிக்குப் பரிகாரம் சிவஞானமென்னுங் கதவை அழகிய தாழாலே அடைக்க அது ஐயமற ஒழியும் (என்று ஆசாரிய னருளிச்செய்ய),

ஆயின் எ-து அங்ஙனமாயின்,

ஒழியா—யாதெனின் எ-து விடாதபாசமாய்ப் பக்குவப்படாதேகிடந்த பழைதாகிய வல்வினைகளும் குற்றமற்ற ஞானத்தினாலே நீங்காத கன்மமாம் (எண்பத்துநான்குநூறாயிர யோனிபேதமான தாபரசங்கம யோனிகளிலே செனித்தற்கு நிச்சயமுண்டாதலாலே) இவை நான்புசித்தறுமெல்லையாது இதற்குப் பரிகாரமில்லையோ என்று நீ வினவில்,

படைப்பு—திறத்த எ-து (பூர்வகன்மபலம் புசித்தறவேண்டுமென்ற இதற்கு இளைக்கவேண்டுவதின்று) உலகத்திற்செய்தார் செய்த கன்மத்தை அவர் தம்மால் அழிக்கப்படுவதாயிருக்க ஒருவராலாக்கப்பட்ட பொருள்கள் அவரால் அழிக்க முடியாதனவா யெத்துணைவர்க்கமுள,

மண்ணை—புராதனம் எ-து (பிராரத்தகன்மம் புசித்தொழிவது எங்ஙனமென்னில் அதற்குத் திட்டாந்தம்) அழகையுங் குணத்தையுமுடைய பசுவினிடத்துண்டாகிவந்த நறுநெய் வெண்ணெயாகாதவாறுபோலவும் வெண்மையையுடைய தயிர் நல்ல பாலாகாதவாறுபோலவும் அழகிய ஒளியையுடைய நல்ல திருநீறு சாணிக்குழம்பாகாதவாறுபோலவும் அழகுநிறைந்த நறுநாற்றத்தையுடைய இனிய சந்தனக்குழம்பு சாத்திரத்திற் சொல்லப்பட்ட பொதியமலையிலுண்டான நறுங்குறடாகாதவாறுபோலவும் இச்சரீரத்திற் பிராரத்தமாகிவந்த பூர்வகன்மம் நிச்சயமாகப் புசித்தல்லாமற்றீராது,

மாகம்—விரைந்தே எ-து (பக்குவப்படாதேகிடந்து கன்மச்சேத வுபாயத்தாலே நீங்குங் கன்மத்திற்குத் திட்டாந்தம்) சுவர்க்கத்தைக்கிட்ட மிக உயர்ந்த கொடியமையுஞ் சிறந்த மதின்முதலாக வுள்ளன மண்ணுதற்கும் கூர்மையுடைய வேன்முதலாகவுள்ளன இரும்பாதற்கும் ஐயமில்லாத செய்தியையொப்ப (முற்பவங்களிலும் இப்பவத்திற் சற்குரு கடாட்சிப்பதற்கு முன்பும் யானெனதென அகங்கரித்துக்கொண்டு) சித்தத்திலே பந்தித்துக்கிடந்த கன்ம நீங்குதற்குத் (தன்னாற் பிறர்க்கும் பிறராற்றனக்கும் செயலில்லாத பூர்வ அஞ்ஞானத்தாலே செயலுண்டென்று) மனத்தால் அகங்கரித்தார்ச்சித்த இத்தனையே என்று உபதேசத்தாலே அறிந்து விரைந்து கன்மச்சேதம் பண்ணிக்கொள் எ-று.

ஆங்கு, அம்ம, மதி - அசை. (நச)

மறை முறை யுணர்ந்த வறிவின் கிழவரு
மம்ம ரெய்திட மடவ மாந்தருங்
கைதொடல் கண்படை வெய்துறு பெருட்பயங்
களிபடு காமத் தளிதலை மயங்கிய
தகுதி யல்லது பகுதி யின்றெனிற்,

கேளினி வாழி கெடுகநின் னவலங்,
கொய்தளி ரன்ன குலக்கோ மளத்தை
மெய்யுற முயங்கி விடனு யினனே,
கொம்மை வெம்முலைத் தன்மகட் டழீஇ
யம்முலை நல்கிய வாயென வுவந்தனன்,
மற்றுங் கேண்மதி, முட்டாட் டாமரை
நுண்டாது பொதிந்த செங்தேடன்ன
செங்கை கொங்கைக் கருங்கண் டைவர
மைந்த னென்ன மனநெகிழ் புருகிப்
பெருவரை கான்ற சிறுவெள் ளருவியிற்
சொரித லானு பாலே, யவையே
யாடவன் வருட வறிவுபிறழ் வெய்தி
மெய்புகு வென்னக் கைகவர் முயக்கமோ
டின்ப வெள்ளத் தன்பி னைந்தாங்,
கறங்கரை நாவி னன்றே நுள்ளஞ்
சிறந்தன்று மன்னோ தெரியுங் காலே.

**இது, ஞானசித்தர்க்குப்பாகியவேறுபாடில்லையாயினும் அந்தரங்கவேறுபாடுண்டென்று கூறியது.**

**(இ-ள்)** மறைமுறை—இன்றெனில் எ-து ஆகமத்திற்சொல்லுகிற முறைமையை யறிந்த ஞானவான்களும் மயக்கமுறுகிற அஞ்ஞானிகளும் ஆகாரம் நித்திரை துக்கம் பொருந்திய பெரியபயம் சந்தோடத்தைத்தரும் மைதுனம் இந்தநான்கினுக்கும் விருப்பத்தோடு தலைமயங்குமுறைமை யல்லது அவ்விருவருக்கும் வேறுபாடுகண்டதில்லையென்னில்,

கேளினி—அவலம் எ-து இனி நின் அஞ்ஞானங் கெடக் கடவதாகக் கேட்பாயாக,

கொய்தளிர்—விடனுயினனே எ-து கொய்யப்பட்ட மாந்தளிரையொத்த வங்கிசத்திலே பிறந்த * கோமளம்போன்ற மனைவியைச் சரீரத்திலே பொருந்தப்பரிசித்து விடயபரனுயின புருடன்,

கொம்மை—உவந்தனன் எ-து திரட்சியையுடைய விரும்பப்பட்ட முலையையுடைய தன்மகளைத்தழுவி யம்முலைப்பாலைத்தந்து வளர்த்ததாயே என்று பிரியமானவாறுபோலவும்,

மற்றுங்கேண்மதி எ-து இன்னமுங் கேட்பாயாக,

முட்டாள்—பாலே எ-து முள்ளுண்டான தாளையுடைய தாமரையில் நுண்ணிய தாதைப்பொதிந்த செவ்விதழையொத்த தன்மகனுடைய செங்கை முலையிற் கருங்கணைத் தடவத் தாய் என்பிள்ளை என்று மனநெக்குருகிப் பெரியமலையினின்றும் விழப்பட்ட நுண்ணிய வெள்ளருவிபோல அம்முலைகள் பால்சொரிதலை யமையாதனவாயிருந்தன,

* கோமளம் - மான்.

அவையே—இயைந்தாங்கு எ-து இத்தன்மையாய மூலையை இவள் நாயகனுன புருடன் வருட அறிவுகெட்டு இருவர் சரீரமும் ஒன்ருந்தன்மைபோலக் கையைக் கவர்ந்துகொள்ளு முயக்கத்தோடே போக சமுத்திரத்திலே அன்புகூடின தன்மைபோலவும்,

அறங்கரை—தெரியுங்காலே எ-து தருமத்தைச் சொல்லப்படாநின்ற நாவையுடைய ஞானவான்களுள்ளத்தை விசாரிக்குமிடத்து அந்தக்கரணசுத்தி பிறர்க்குத் தெரியாது (அந்த ஞானிகள் அறிவு வேறுபட்டுக்காணிருப்பது) எ-று.

வாழி, எ, மதி, மன், ஓ - அசை. (௩௫)

அரும்பவிழ் கழுநீ ராயித ழுன்ன
கடுங்கய னெடுங்கண் விடங்கிளர் வாளியர்,
முடங்குமதி யணிந்த முழுநீர் முத்தி
னுடங்குநுத லிளவே ரிடங்கெட வணிய,
வொடுங்குமிர் புருவக் கொடுஞ்சிலை துரப்பினுஞ்,
சுரும்புதுரந் தமைத்த திருந்துமல ரமளிப்,
பருந்துபசி தணிக்குந் திருந்திலை நெடுவேன்
மைந்துடை மைந்தன் சிந்தை கனற்றக்
கன்றிய தின்றெனிற் காம மின்றே
யகாம மன்றே, நாம வேலோன்
முட்புற முதிர்கனிப் பொற்சுளை மைக்கொள்
கதலித் தீங்கனி யிதலூன் பொரியல்
வாளைப் பீலி காளைக் கயற்றுணி
கறிச்சேறு கமழு மறிக்கொ ழூன்றுவை
பீலி முருந்தி னிவந்த சாலி
வெண்சோறு குவைஇய குன்றிற் றண்டா
நறுநெய் யருவி யீர்ப்ப வெள்ளயிர்க்
குறுமுறி * யடுக்கி நெடுமாக் கோட்டினு
மண்டம ரட்ட வலிகெழு திணிதோ
ளுண்டி விருப்பி † லொருவ னின்னுங்
கண்டன னேனுங் கொண்டதெ னுளத்தே,
‡ யுள்ளந் தெள்ளிய தெள்ளாக் காட்சியோ
டுள்ளவும் படுவ துளதோ, வள்ளிய
கங்கைப் பேரியாற்றுப் பொங்குதிரைத் $ தீநீ

* அடுக்கிய எனபதும பாடம.
† ஒருவனுகிய காமவேளோன் என்க.
‡ உள்ளந் தெள்ளாத் தெள்ளிய காட்சியோடு எனக்கூட்டுக; உள்ளம்—காரணவறிவு.
$ தீநீர்—ஈண்டுச் சுத்தசல சமுத்திரம்.

*ரொன்றொழி பின்றிச் சென்றளப் பரிய
மேருக் குன்றச் சிகர நீர
மண்கொடு மறலி வடிவாய்க் கணிச்சி
யுண்பய னுதவு காறும் பண்பட
மாசற மண்ண வாசற நிவந்த
வுள்ளமு முளதுகொ லுரவ, வொள்ளிய
ஞானப் பாணி வானத் துறை ஞரும்
விழையும் விழைவி றுகமர் மாமண்
† ணறிவற லவாஅச் செறிமல வுவர்நீர்
மன்றன் ‡ மாசற மண்ண
லென்றன ரம்மல மொன்றி லோரே.

இது, இன்னும் ஞானவான்களுக்கு அந்தரங்கவேறுபாடும் அந்தரங்கசுத்தியும் உண்டென்று கூறியது.

(இ-ள்) அரும்பவிழ்—வாளியர் எ-து அரும்பலர்ந்த செங்கழுநீர் மலரின் அழகிய இதழ்போன்ற நிறத்தையும் பெரிய கயல்போன்ற பிறழ்ச்சியையும் உடைய நெடிதாகிய கண்ணென்னும் விளங்காநின்ற நச்சம்பையுடைய மாதர்கள்,

முடங்கு—அணிய எ-து முடங்கியிருக்கப்படாநின்ற பிறையிலே முழுநீர்மையை யுடைய முத்தையணிந்தாற்போல நுடங்குகிற நெற்றியிலே இளவேர்வையிட மறப் பொடிப்ப,

ஒடுங்கு—தூரப்பினும் எ-து ஒடுங்குதல் நிமிர்ந்த புருவமாகிய வளைந்த சிலையிலே இந்தக் கண்ணென்னும் அம்பை யேறிட்டெய்தாலும்,

சுரும்பு—அமளி எ-து வண்டுகளைத்துரந்து அமைக்கப்பட்ட திருத்தமாகிய புட்ப சயனத்திலே,

பருந்து—அன்றே எ-து பருந்து முதலாகிய பறவைகளுடைய பசி கெடுக்குந் திருந்திய இலைவடிவாகிய நெடியவேலையுடைய அதிபலம் பொருந்திய இராசகுமாரன் (முன் போகங் கொண்டதினாலே காமவிகாரந் தீராத) மனதானது காமாக்கினியாலே கனலக் கன்றுதலில்லையாகில் அவனுக்குக் காமவிதனமில்லை ஆதலால் அகாமனல்லவோ,

* ஒன்று—சிறிது என்னும் பொருளில் வந்தது.

† அறிவறல் செறிமலம் அவாஉவர்நீர் எனக் கூட்டுக.

‡ மாசற மண்ணல் மன்றல் என்றனர் எனக் கூட்டுக.

நாமவேலோன்—உளத்தே எ-து அதுவன்றியும் அச்சத்தைச்செய்யும்வேலையுடைய புருடன் முட்புறமுதிர்ந்து பழுத்த பொன்னிறம் போன்ற பலாச்சுளையும் கருவாழையிலினிய பழமும் கவுதாரிமாங்கிசப்பொரியலும் வாளைமீனுட் * பீலியும் இளங்கயன்மீன்றுண்டமும் மிளகின் குழம்புமண நாறுஞ் செம்மறிப்†புருவையின் கொழுத்த மாங்கிசத்திணுமும் ஆகிய இவை கறியாகப்‡பீலியடியையொத்த உயர்ந்த செந்நெல்வெண்சோறு குவித்த குன்றிலே இடைவிடாதே நறுநெய்யை யருவிபோலச் சொரிய இந்த நெய் புறம்போகாது தடுத்தற்கு வெள்ளிய கண்ட சர்க்கரைச்சிறுமுறியை அடுக்கி உயர்ந்த பெரிய கரை செய்த விடத்தும் முன்பே திருத்திவர வுண்டு புசிப்பிலே விருப்பில்லாத மண்டுகிற பூசல்களையெல்லாங் கெடுத்து வலிபொருந்திய திணிந்த தோளையுடைய ஒருவனாகிய அந்தப்புருடன் இவையன்றியே இன்னும் இரச வர்க்கங்கள் சிலகண்டானாயினும் அவனுளத்தில் ஏதேனும் ஆசை செல்லுமோ,

உள்ளம்—உளதோ எ-து இவ்விரண்டு திறத்தினரும்போல ஞானவான்கள் கரணவறிவு காணாத சிவபோகத்தைப் புசித்திருக்கிற தெளிந்த சிவஞானக்காட்சியோடே விடயபோகங்களைச் சற்றுஞ் சிந்திப்பது முண்டோ (ஆதலால் அவர்களுக்கு அந்தரங்கத்திலே வேறுபாடுண்டுகாண்),

வள்ளிய—உரவ எ-து இனி வளப்பமுடைய பெரிய ஆகாயகங்கையாற்றைப்போல மிகுந்த திரையையுடைய இனிய சுத்தசல சமுத்திரநீரிற் சற்றுமொழியாதே கொண்டு மனத்தாலு நோக்கி யளவிடுதற்கரிய மகாமேருமலைச் சிகரவுயரத்தினீர்மையுடைய மண்ணையிட்டுக் காலன் வந்து வடித்தவாயையுடைய மழுவுக்கிரையாகத் (தன் பிராணனைக் கொண்டு) கொடுக்குமளவும் பதியவிருந்து புறம்பழுக்குப்போகச் சுத்திபண்ணினால் (அஞ்ஞானிகளுக்கு)க் குற்றமறவோங்கிய உள்ளமு முண்டாகவற்றே அறிவுடையோனே,

ஒள்ளிய—ஒன்றிலோரே எ-து அழகிய ஞானமாகிய நீரைக் கொண்டு தேவர்களும் விரும்புகின்ற அவாவறுதியென்னுங் குற்றமற்ற மகத்தாகிய மண்ணையிட்டு அஞ்ஞானமாகிய திணிந்த நிபிடமலமும் அவாவாகிய மூத்திரமும் என்னும் இரண்டு நாற்றத்தையும் மாசறக்கழுவுதல் பரிமளமாகிய ஆன்ம சுத்தியாவதெனறு அருளிச்செய்தனர் அந்த மலம் ஒன்றுதலிலாத பெரியோர்கள் எ-று.

சுத்தசலசமுத்திரத்துக்கு ஆகாயகஙகையைத் திட்டாந்தங் கூறுதலென்னெனின்? அறுபத்துநான்குநூறாயிரம் யோசனை அகலத்துடனே ஏழு தீவையுஞ் சுற்றியிருக்குஞ் சுத்தசலசமுத்திரம்; அதினும் ஆகாயகங்கை மிகுதியானபடியாலென்க. அம்மலம் என்றதில், அ-பண்டறிசுட்டு. (௩௬)

கறையணற் கட்செவிப் பகுவாய்ப் பாந்தட்
கடுவொடுங் கெயிற்றின் வடுவுறக் கிழித்துங்
கிழியாப் பண்பிற் றன்றே யுறையுடன்
மதியொடு புணர்ந்த மறையி னோர்க்கே,

* பீலி—ஓர்விதமான தசை.

† புருவை—ஆடு.

‡ பீலியடி—மயிலிறகடி.

செழும்பெரும் பொய்கைக் கொழுந்துவிடு * புயரிய
முட்டாட் டாமரைக் கொழுமட லகலிலை
யப்புன லொத்தாத் துப்பு, மெய்ப்படு
மந்திர மருந்தின் மைந்தின் வெந்திறற்
காரிகை தொடினுமல பேரிட ரின்றே,
கரைபாய்ந்து கலித்த பெருநீ ருவரித்
தோன்றிவாழ் தொழில வாயினு மயிலை
தீஞ்சுவை யுப்பிற் சிவணு தாங்கு,
ஞான மாக்கழல் † யாணுற வீக்குநர்
விழுப்ப வேலைத் தடையின்று படியினுஞ்
சீதொடு படியுந ரல்லர்
மாறுயர் கழியுநர் நீதி யானே.

**இது, ஞானவான்கள் எல்லாப்போகங்களுடனே கூடியிருந்தாராயினும் ஞானவிசேடத்தாலே அந்தரங்கவேறுபாடுடையரென்றும் அவையிற்றிற்பற்றிலரென்றுங் கூறியது.**

(இ-ள்) *கறை—மறையினோர்க்கே எ-து அறிவொடேகூடிய மந்திரத்தாலும் ஔடதத்தாலும் பரிகாரமுடையோர்க்குக் கண்ணாற் காணுந்தூரங் கேட்கவற்றான செவியையும் ‡அணரியிலே கறையையும் பெரிய வாயையுமுடைய பாம்பினஞ்சடங்கப்படாநின்ற பல்லாலே வடுவுறக்கடித்தாலும் தீண்டாதவியல்பான ஓத்தன்மைபோலவும்,*

*செழும்பெரும்—துப்பும் எ-து அழகையும் பெருமையும் உடைய பொய்கையில் உயரக்கொழுந்துவிட்டு முள்ளைத்தாளிலேயுண்டான தாமரையிற் செழுமையாயகன்ற மடலிலையில் அந்த நீர் தொங்காத பொலிவுபோலவும்,*

*மெய்ப்படு—இன்றே எ-து உண்மையாகிய மந்திரசத்தியாலும் ஔடதசத்தியாலும் வெவ்விய வலியையுடைய நஞ்சையுண்ணினும் பெரிய துக்கமில்லாதவாறு போலவும்,*

*கரை—அங்கு எ-து கரையைப் பொருது சத்திக்கப்படாநின்ற பெருநீராகிய லவண சமுத்திரத்திலே செனித்து அதிலே வளருந் தொழிலையுடையனவாயினும் மீன்கணம் இனியரசத்தையுடைய உப்போடுகூடாதவாறு போலவும்,*

*ஞானமாக்கழல்—நீதியானே எ-து ஞானமாகிய மகத்தாகிய வீரக்கழலை $ அழகுண்டாகக் கட்டினோர் தடுக்கவொண்ணுமற்போக சமுத்திரத்திலே முழுகினும் அது தமக்குக் குற்றமாகிய பந்தமாகத்துடக்குறுவாரல்லர் முறைமையாலே மகத்தாகிய §நித்தியநோயைப் புசித்துக்கழித்தலையுடையோராம் இத்துணையே* எ-று.

*பின்வந்த ஒடு-அசை.* (கஎ)

---

* உயரியகொழுந்துவிடுபுமுட்டாட்டாமரை எனக்கூட்டுக.

† யாணுக்கவினாகும் என்பது தொல்காப்பியம் உரிச்சொல்லியல்.

‡ அணரி—மேல்வாய்.

$ யாணுற என்பதற்கு வளப்பமுண்டாக எனவுரைகூறிய பிரதியுமுண்டு.

§ நித்திய நோய்—பிராரத்த கன்மம்.

பூக்கமழ் பாணி நோக்கா நாரங்
கதிர்வாய் மாந்தியுங் கறையொடு படாஅ
வருணன் போலவு, மிருணிறம் புரையு
மகருவு மாரமு நகருந ருலர்பவுந்
தீண்டத் தகாஅக் * காண்டகு திறனவும்
புகைக்கொடி யெடுத்து வளைத்துடன் பருகித்
துகள்படக் கடந்துந் துகளற் றோங்கு
மவிரொளி யுதாசனற் † பொருவியு, மிருவினை
விடயத் தழுந்தியுஞ் ‡ சுடரிற் சுடர்ப
வறிவனற் $ கழீஇய நெறியி னோரே.

**இது, ஆதித்தனும் அக்கினியும் நல்லவையிற்றையுந் தீயவையிற்றையும் புசித்துங் குற்றமில்லாதவாறுபோல ஞானவான்கள் செயலறுதியுணர்ந்தபடியாலே பந்தவேதுவாய பதார்த்தங்களுடனே கூடிநிற்பினும் அவர் அவற்றை ஞானவனலாலே தகித்துப் பிரகாசிப்பர் என்று கூறியது.**

(இ-ள்) பூக்கமழ்—போலவும் எ-து பூக்களால் வாசனையுடைத்தான நீரும் நோக்குதற்கரிதாகிய அசுத்தப்பள்ளத்தினீரும் கதிரென்னும் வாயாலே புசித்துந் தனக்கொரு தோடமில்லாத ஆதித்தனைப்போலவும்,

இருணிறம்—பொருவியும் எ-து இருளினிறத்தையொத்த அகிலுஞ் சந்தனமும் நஞ்சுவர்க்கமும் கண்ணாலே தரிசிக்கும் வர்க்கமாவதல்லது நீண்டுசேற்கரிதான காஞ்சொறி முதலான பதார்த்தமும் புகையென்னுங் கொடியையெடுத்துக் கூடவளைத்துப் பருகிக்கொண்டுதுகளாக ஆகருஷித்தும் தனக்கொரு குற்றமற்றோங்கும் விட்டுவிளங்காநின்ற ஒளியையுடைய அக்கினியைப்போலவும்,

இருவினை—நெறியினோரே எ-து பாவபுண்ணிய கன்மங்கட்கு ஏதுவாகிய விடயங்களிலே முழுகினும் அவையிற்றிற் பந்திக்கப்படாதே ஒளிக்கிடமாக விளங்குவர் ஞானவனலாலே கன்மச்சேதம்பண்ணின முறைமையையுடையோர் எ-று. (௩அ)

கரைகாண் கல்லாக் கற்பனை யளக்கர்
வரைபொரு திரையின் மடிந்தோர் தருதியு
மடியா துயர்ந்த நெடியோர் பகுதியு
நொடியக் கேண்மோ, வொடியா வாய்மைப்

* காண்டகுதீண்டத்தகாத்திறனவும் எனக்கூட்டுக.

† பொருவி என்பதற்குப் போல எனவுரை கூறலால் எச்சத்திரிபு.

‡ சுடரிற்சுடர்ப என்பதற்கு ஒளியையுடையோராகவிளங்குவர் எனவுரை கூறிய பிரதியு முண்டு.

$ கெழீஇயநெறியினோரே என்றும் பாடம்.

* பார்ப்பன வாகை சூடித் தீத்தொழி
லொருமூன்று வளர்த்த வருமறை நாவின்
வேள்வி யெடுத்த கேள்வி யாளன்
மனத்தின் மாண்டன்று மாதோ † பிறந்தை
யினத்தின் மாண்டோ ரீடே, வேள்வி
யாசான் முதலிய வத்தொழின் முடிமார்
தேசொடு நிவந்திசிற் பெரிதே யுள்ள
மாசறக் களைவோர் மாண்பே, வேறு
திவாகரற் றொழிலுமுண் டவனே தனைது
விரிகதிர் பரப்பி விசும்பு செலற் காலைப்
பெரிதுவந் திசினோர் பலரோ யுவவாத்
துனிகூர்ந் திசினோர் நனிமிகப் பலரோ,
யவரோ யின்ன ராயினுந் தம்முறை
யிதுவென வுன்னு தேரு மன்னோன்
போன்று, மரும்பா வியரோ மன்ற
கரும்பின் சிலைமொழி கணைபல வைத்து
நிலைதொலை வெய்தினுங் ‡ கலைவல் லோரோ

இது, அஞ்ஞானத்தாற்கூடின மமதை பந்தகாரணமென்றும் ஞானத்தால் மமதையொழிதல் மோக்ஷகாரணமென்றும் பாவநா விசேடங் கூறுகின்றது.

(இ-ள்) கரை—சேண்மோ எ-து எல்லைகாணுதற் கரிதாகிய சங்கற்பமான சமுத்திரத்தில் எழும் மலைபோன்ற திரையில் அழுந்துவோர் தகைமையும் அதிலழுந்தாதே நீங்கின பெரியோரியல்பும் வேறுபாடு சொல்லக் கேட்பாயாக,

ஒடியா—ஈடே எ-து பிறப்புக்குக் காரணமாகிய ஈஷணாத்திரயங்களிலே மாட்சிமைப் பட்டோர் வலிமையாகிய செய்தியானது யாகம்பண்ணுவதற்காகச் சங்கற்பித்துக்கொண்ட கெடாத மெய்மையாகிய பார்ப்பனவாகையை யணிந்து ஒன்றுக்கொன்று தொழில் வேறுபாடான அக்கினி $ மூன்றையும் வளர்த்த அரிய வேதங்களை யோதுநாவையும் உபதேசத்தையுமுடைய வைதிகவேதியன் மனத்தாலே இந்த வைதிகக் கிரியை யியற்றுதலால்வரும் பலம் புசிப்பானாக இருந்த அழகுபோன்றிருக்கும்,

---

* பார்ப்பனவாகையாவது—புறப்பொருள் வெண்பாமாலை வாகைப்படலத்தில் "ஓதங் கரைதவழ்" என்னும் வெண்பாவிலறிக.

† பிறந்தையினத்தின் மாண்டோ ரீடேவேள்வி யெடுத்த ஒடியா வாய்மைப் பார்ப்பன வாகைசூடி தொழில் தீஒரு மூன்று வளர்த்த அருமறை நாவின்கேள்வியாளன் மனத்தின் மாண்டன்று மாதோ எனக்கூட்டுக.

‡ கலைவல்லோரோ கரும்பின் சிலைமொழி கணைபலவைத்து நிலைதொலைவெய்தினும் மன்ற அரும்பாவியரோ எனக்கூட்டுக.

$ அக்கினி மூன்றுவன - நாற்சதுரமும் முச்சதுரமும் வில்வடிவுமாகிய ஆகவனீயம், தக்கிணாக்கினி, காருகபத்தியம் என்பன; திருமுருகாற்றுப்படை யுரையிற் காண்க.

வேள்வி—மாண்பே எ-து சித்தத்திலுண்டாகிய கன்மத்தை க்ஷயம் பண்ணின பெரியோரது மாண்பாகிய செய்தி யெங்ஙனமென்னில் வேள்வி வேட்குமாசாரியன் முதலாக அந்த யாகக்கிரியை முடிக்க ஏவல்செய்வோர் அனைவரும் (அகங்கரியாது செய்வதினாலே அந்நற்பலம் அவர்களுக்குச் சித்தியாது யாவருமறிய) ஒளியுடைத்தாக ஓங்கிப்பெருமையதாயிருப்பதை யொக்கும்,

வேறு—உண்டு எ-து இஃதொழிய ஆதித்தன் செயலினுமுளது காட்டலாம்,

அவனே—மிகப்பலரே எ-து அந்த ஆதித்தன் தன்னுடைய விரிந்த கதிரைப்பரப்பி ஆகாயத்திலே யியங்குமிடத்து (அவனைக்கண்டு) மிகவும் பிரியப்பட்டோர் பலர் அங்ஙனமின்றி விதனப்பட்டோர் அவரினுமிகப் பலர்,

அவரே—*போன்றும் எ-து இவர்களிருதிறவரும் இத்தன்மையரான விடத்தும் அவர்களூழ் முறைமையதுவே யென்று நினையாதே இயங்குமத்தன்மையனை ஆதித்தனைப்போலவும்,

அரும்பாவியரே—கலைவல்லோரே எ-து சாத்திரங்களையுணர்ந்த ஞானவான்கள் காமதேவனுடைய கருப்பு வில்லினிடத்து நின்றும் பொழியப்பட்ட புட்பபாணங்கள் பலவும் தைக்கப்பட்டு நிலைகலங்குதல்வரினும் நிச்சயமாக அரிய ஞான பாவகத்தையுடையராயிருப்பர் எ-று.

மோ, மாது, ஓ, எ-அசை. நிவந்திசின் என்பதில் இசின்-அசை. (௩க)

வாகை வன்னெற் றொலிப்பக் கூகை
குழறுகுரல் பல்லியந் துவைப்ப வோரி
தழங்குகுரன் முரசந் ததும்ப விளிந்தோர்
பிணத்தின் கைவிளக் கெடுப்பக் கூளிக்
கணங்கொள் பேரவை யணங்குநட நவிற்றுங்
காடுபதி கொண்ட வொருவற் றரூஉ
மாடவ னுள்ளங் கடுப்ப, நீடிய
மலப்பொதி யிரிய நூறி யுரைத்துடக்
†குணர்வொடு கழிந்த வினையி லின்பத்
தென்றுகொ லெய்துஞான் றென்று நன்று
நெடிது நினைகுவர் மாதோ
வடுநீங்கு சிறப்பின் வயங்கி யோரே.

இது, இப்படியரிய பாவகத்தையுடைய ஞானசித்தர்க்குத்தேகபாரந் தாங்குதற்கரியதாயிருக்குமென்று கூறியது.

(இ-ள்) வாகை—கடுப்ப எ-து வாகைமரத்தின் முற்றனெற்றுச் சத்திக்கக்கூகைகள் குழறுகின்ற குரல் பல்லியமாக முழங்க ஓரிகள்கூப்பிடுங் குரல் முரசாக வறைய இறந்

* போன்று என்பதற்குப் போல எனவுரை கூறலால் எச்சத்திரிபு.

† உணர்வு உரைத்துடக்கு கழிந்த எனக் கூட்டுக.

தோருடலாய வேகிற பிணத்தின் கையைச் சிலபேய்கள் கவ்வியாவெதினால் அது விளக்காக எடுத்துக்காட்டப் பேய்க்கூட்டங்கள் கூடின பெரிய ஒலக்கத்திலே ஒரு பெண்பேய் கூத்தாடுதலைச் செய்யு மயானத்தை யிடமாகவுடைய ஒருசவத்தைக் கூலிக்காகச் சுமந்து வரும் புருடன் இதயத்திலே விரைய அப்பிணச்சுமையைப் போகட விரும்பின தன்மை போல,

நீடிய—வயங்கியோரே எ-து அநாதியாகச் சுமக்கிற மும்மலங்களாலான தேகபாரத்தைக் கழியப் போகட்டு மனவாசகங்களின்றுடக்கைக் கடக்கப்பட்ட உவமையில்லாத பரமானந்தப் பெருவெள்ளமாகிய முத்தியைக்கிட்டுநாள் எந்நாளோவென்று நன்றாக மிகவு நினைத்துக் கொண்டிருப்பர் குற்றமற்ற ஞானக் காட்சியால் விளக்கமுற்றோர் எ-று.

ஒடு, மாது, ஓ-அசை. கொல்—ஐயம். (சo)

நஞ்சுவீற் றிருந்த வெஞ்சினப் பகுவாய்ப்
போர்வை நீத்த புயங்கத் தன்ன
வாசறு படிவத் தான்றோர் நிற்க,
நிலஞ்சேறு படுத்த கருங்கைக் கொண்மூப்
பொரியமை விளவின் புனிறுதீர் பெரும்பழ
மரிதுபெற் றயின்*றதற் கருமை †சாலத்
தெரியாத் தேர்ச்சித் தீரா வுள்ளத்துப்
பெரியோர் விட்டனர் பிறழா வினையே,
யளியவு முடையதோன் றுளதே, விளியா
துடனுறை பழமை, யூங்கே கடனறி
மண்வினை மாக்க டமவினை முடிமார்
திகிரி யுருட்டி யொருவி யாங்கும்
வருத லோவா மாறுங், குவிவாய்த்
தசுமபுறை யிங்காங் கசும்பறந் துடைத்து
மிருங்கடி யிகவாப் பெருங்கட னல்லதை
யுடையதை யுடையரோ மற்றே, யுடையதை
வரையளந் தறியாத் திரையருந் திருத்தப்
பேரா னந்தப் புணரி
யோராங்குப் படித லுடைய ரீண்டே.

இது, தேகபாரத்தைக் கழித்து முத்தியைக்கூடுநாள் எந்நாளோவென்னும் ஞானசித்தர்க்குப் பூர்வ வாசனையாலுள்ள அநுபவமல்லது வினையிற்பற்றிலரேன்று கூறியது.

(இ-ள்) நஞ்சு—நிற்க எ-து வெவ்விய சினத்தையும் நஞ்சுக்குச்சுதேசமாயிருக்கின்ற பெரிய வாயையுமுடைய தோலுரித்த பாம்பை யொப்பப் புறச்சுத்திபண்ணின தூய வடிவுடைய அறிவுடையோர் அழிவின்றியே நிற்க,

---

* அதற்கு—அதனிக்கு, உருபு மயக்கம்.

† சால—உவமையுருபு.

நிலம்—வினையே எ-து (மத்தாலே) பூமியைச் சேருக்கிய பெரிய கையையுடைய யானை பொரிந்தஅடியையுடைய விளாவில் உள்ளிளம் பருவம் அறப்பழுத்த பெரிய பழத்தை அரிதாக எடுத்துக் கொண்டு புசித்தலால் அதனில் உள்ளொருபற்றுமற்று உள தாந்தன்மைபோல பிறராலறிதற்கரிய கன்மச்சேதவுபாயத்தைக் கடைப்பிடித்து விடாத உள்ளத்தையுடைய ஞானவான்கள் புறச்சுத்தியன்றியே அந்தரங்கசுத்தியுடையராய்க் கெடுத்தற்கரிதாகிய கன்மங்களைச் சேதம் பண்ணியே யிருப்பர்,

அளியவும்—உளதே எ-து ஆயினும் அவரை விடாத தொன்றுண்டு,

விளியா—பழமை எ-து அது அநாதியாகப் பழகிப் போந்த சரீர வாசனை பிராரத்த கன்மம் புசித்தறுமளவும் ஒழியாது அது எங்ஙனமென்னில்,

ஊங்கே—ஓவாமாறும் எ-து மிகவுந் தங்கிரியைகளையறியுங் குலாலர் தங்காரிய *முடிப்பான் காரணமாகத் திகிரியை விசைகொளச் சுழற்றிச் சுழற்றுதலொழித்த விடத்துஞ் சிறிது பொழுது தானே சுழன்றோயுமாறு போலவும்,

குவிவாய்—மற்றே எ-து குவிந்த வாயையுடைத்தாகிய குடத்திட்ட பெருங்காயம் அக்குடத்திலே பற்றறத் துடைத்தாலும் மிக்க நாற்றம் அக்குடத்திலே ஒழியாததன்மை போலவுமாம் அல்லாமல் இவர்கள் புறப்பற்றாகிய உயிர்ச்சார்பு பொருட் சாபிற் பற்றுடையார் போலேயிருக்குமது பற்றாகவற்றே,

உடையதை—ஈண்டே எ-து இனி இவருக்குடையது யாதென்னில் எல்லையளத்தற்கரிதாகிய அசைவில்லாத பெரிய ஆனந்தமாக்கடலாகிய தீர்த்தத்திலே இடைவிடாதே மூழ்குதலையுடையார் இந்த எடுத்த சனனத்திலே எ-று. (சுக)

ஏகாரங்கள்—அசை. ஐ—சாரியை. ஓ—எதிர்மறை. மற்று—அசை.

நஞ்சே பாம்புண் டநீர் மாதோ,
அஞ்செஞ் சேதா வுண்ணற லமிழ்தே,
விஞ்சை வேந்தர் ஞானம் வீடே,
வஞ்சர் ஞானம் வடுவொடு படுமே.

**இது, மேற்கூறியபக்குவர்க்கும் அபக்குவர்க்குஞ்செய்யு முபதேசத்தால் வரும்பலன் கூறியது.**

(இ-ள்) நஞ்சே—மாதோ எ-று சுவையுடைத்தாகிய தண்ணீரைப் பாம்பு புசித்தால் நஞ்சாமாறு போலவும்,

அஞ்செம்— அமிழ்தே எ-து அந்த நீரை அழகிய குணத்தையுடைய செவ்வையாகிய பசுப் புசித்தால் அமிழ்தத்தையொத்த பாலாமாறு போலவும்,

விஞ்சை—வீடே எ-து பக்குவராகிய ஞானவேந்தர் பெற்றவுபதேசம் முத்திக்கேதுவாய் முடியும்,

வஞ்சர்—படுமே எ-து அபக்குவராகிய வஞ்சர் பெற்றவுபதேசம் பிறரையுந் தங்களையுங் கெடுத்தற்குக் குற்றமான ஏதுவாய் முடியும் எ-று.

---

* முடிப்பான்—முடித்தல்.

இதனாற் பக்குவாபக்குவம் பார்த்து அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்பது கண்டு கொள்க.

*ஏகார நான்குந் தேற்றம். மாது, ஓ, ஓடு—அசை. அறல்—நீர்.* (௪௨)

எற்புக் குப்பையைப், புட்குலத் துணவை,
நரப்புக் கருவியைத், திரைப் பெருஞ் சேக்கையைப்,
புன்புல வாரியைத், துன்புக் குறையுளை,
யிருட் போர்வையை, வேரின் விளைவைத்,
தசைப்பெருந் திரளை, நசைக்கின் செவிலியை,
மூளைச் சேற்றை, முழுமலக் குழுவை,
ஞாளிக் கிரையைப், பூளைப் பொதியை,
வெண்ணிணப் பெருமையைப், புண்ணின் பொற்பைக்,
கொடுமைக் கோதையை, யடுசினத் தமலையை,
மாசின் றேசை, வழும்பின் வைப்பைத்,
தோலின் வேலியைத், துகளின் றுப்பை,
யெரிப்பெருங் கொள்ளையை, நரிக்கா ரயினியைப்,
பெருநோ யறையைக், கருநரைக் கமத்தைக்,
குறும்பிக் கொண்டலை, யிறும்பற் குறைவைப்,
புழுப்பா சறையை, யழுக்கார் திருவைப்,
* பஞ்ச விந்தியப் பாகர்க் காகா
வஞ்சா மதகரி யடவியை, வஞ்ச
வரவா ரளையை, நுரைவா யருவியை,
வாத வழுவைத் தீதுக வணைத்த
வெளிலைப், பித்தின் விளிவருங் குறும்பைக்,
குரைவிரி யிருமற் றிரைவிரி புரையைக்,
காமச் சும்மையைக், கவலைக் கெல்லையை,
நாமத் தரணைத், தீமைத் திறலை,
யழுக்கா றணையும் விழுப்பெருந் தெருவை,
யேமாப் பிரலை விலங்கலைத், தீமை
யிருஞ் சுறவு கலித்த திருந்திரும் பௌவத்தை,
மறத்தின் மன்னை, வழுக்கின் புக்கிலை,
யிறப்பின் கேதன மிதனை, மறப்பிற்
கொண்டனை யானெனக், கொளலொழித், தொண்டிறன்
மாயா வினைய தாய தேயாத்
தனுகரண புவன போக
மெனும் வகை யறிநனி துனியினி துகவே.

---

* பாகர்க்காகாப் பஞ்சவிந்திய அஞ்சாமதகரி யடவியை எனக்கூட்டுக.

**இது, மாயாமலபந்த க்ஷயங் கூறியது.**

**(இ-ள்)** எற்புக்குப்பையை—இறப்பின்கேதனமிதனை எ-து

எலும்புக்கூட்டத்தை,

பறவை வர்க்கத்துப் போசனத்தை,

நரம்பென்னுங் கருவியாலே கட்டப்பட்டவதனை,

திரைதலுக்குப் பெரிய சயனத்தை,

புல்லிதாகிய புலாற்கடலை,

துக்கத்துக்குக் குடியிருப்பை,

ஈரலை உள்ளே பொதிந்த போர்வையை

வேர்வைக்கு விளைநிலத்தை,

மாங்கிசக்கூட்டத்தை,

ஆசையையினிதாக வளர்க்குஞ் செவிலித்தாயை,

மூளைக்குழம்பை,

சருவமலத்தின் குழாத்தை,

நாய்க்குணவை,

பூளைப் பஞ்சு போல நிலையில்லாதவற்றாலே கட்டிய பொதியை,

வெள்ளை நிணத்தின் மிகுதியை,

புண்ணின் மிகுதியை,

கொடுமைகளாலே தொடுத்த மாலையை,

கொல்லுகிற சினத்தின் செறிவை,

ராகத்துவேஷங்களை வெளிப்படுத்தும் ஒளியானவதனை,

வழும்புக்கூடை,

தோலை வேலியாகவுடையவதனை,

குற்றத்துக்கு வலியானதனை,

அக்கினியாலே மிகவுங் கொள்ளை கொள்ளப்படுவதனை,

நரிகள் திருத்திவரப் புசிக்குமுணவை,

பிறப்புக்குக் காரணமாயிருப்பதோரறைவீட்டை,

பெரிய நோயாகிய மேகத்தை,

[illegible] சோாயும வருட்தனை,
[illegible]டவபற்களுக்கிருப்பிடத்தை,
[illegible]ருமிகள் புகவிட்டிருக்கும் படைவீட்டை,

பொல்லாங்காலே யமைத்த செல்வத்தை,

அத்தக்காணமென்னும் பாகரால் வணக்குதற்கரிய பஞ்சேந்திரியமாகிய அசசமில்லாத மதயானை யுறையுமடவியை,

வஞ்சகமாகிய சர்ப்பமுறையும் பொநதை,

துணையென்பது ஒன்பது வாயிலாலே அருவிபோலச சொரிகின்றவதனை,

வாதமாகிய யானையைக் குற்றமறககட்டப்பட்ட கம்பததை,

பித்தமிருக்குங கெடுதற்கரிய அரணிருக்கையை,

ஓசைமிக்கிருககின்ற சிலேட்டுமக்கடலுக்கு மிகுநத இடமாகியவிதனை,

தூர்த்த குணத்தாலே பிறர்பலர் அலர் தூற்றப்படுவதனை,

துக்கத்துக்கு அளவாயவதனை,

அசசத்துக்கிருப்பிடத்தை,

தீமைக்கு வலிபெற்றவதனை,

பிறர் செல்வ முதலியவற்ரூற் பொருமை சேருநதுன்பத்தையுடைய பெரிய வீதியை,

இறுமாப்பாகிய மான் வாழுமலேயை,

மனத்தோடமாகிய பெரிய சுறவு சத்திக்கப்பட்ட திருநதிய பெரிய சமுத்திரத்தை,

மறத்துக்கு நிலையானவதனை,

அவஞாயம் புகுநதிருக்குஞ் சுதேசத்தை,

சாகைக்குக் கொடிககட்டியிருககின்றதாகிய இத்தனை குற்றமுடையவதனை,

மறப்பில்—யானென எ-து அஞ்ஞானத்தாலே நானென்று கொண்டாய,

கொளலொழித்து எ-து ஞானத்தாலே நானல்லவென்று கொண்டு,

ஒண்டிறல்—இனிதுகவே எ-து அழகிய வலியையுடைய மாயாகாரியமான ஒழியாத தனுகரணபுவனபோகமென்னும்வகைகளில் (ஒன்ருகிய தனுவின்வேறுபாட்டை) அறிவாய உன்னைமிகவுங்கூடிய தோடமானது இனிதாககெட்டற எ-று. (சஙு)

*ஈறறி வுக்கெவ னெவனே மற்றதன்
மாறறி வுக்கறி மற்றே கூறி

---

* அறிவுக்கு ஈறு எவன் மற்றதன் மாறு எவனே அறிவுக்கு இளைத்தன் மற்றெவன் நின்ற தளிர்த்தன் மற்றுயர் பின்மை எவனே மற்றே கூறின் களக்கொள அறி எனக் கூட்டுக.

னிளைத்தன் மற்றெவ னெவனோ நின்ற
தளிர்த்தன் மற்றுயர் பின்மை களக்கொள,
வறிவுரு வதனோ டுதித்த மன்னுமையின்
மறுவற வெறி,யிவ ணெறிபட நின்ற
*பந்தம் போகம் போக நிறுத்தலும்
வந்தது மாயை வினைமலத், தந்தமின்
மாயைப் பந்தம் வளங்கெழு போகந்
†தேயா வல்வினை திகழ்தரு மலத்துப்
போக நிறுத்த ‡லதாய்வினை முறுகிய
போகந் தந்து புறங்கொடுத் தினிதா
வேகற் கொல்லா தாகி வேகத்
தியாத்தலைத் துடைத்தலி னெறி,யிறை யுண்மை
பார்த்தலிற் பறிமல, மநாதி கூர்த்த
வாதனை யகலத் தேசொடு நிவந்த
வமலனைச் சமாதி §யமல
விமல செய்மதி விரும்பினை யினிதே.

**இது, ஆணவமல பந்தக்ஷயங் கூறியது.**

(இ-ள்) ஈறறிவுக்கு—களக்கொள எ-து ஆன்மாவுக்குச்சாதல் எவ்வண்ணமென்றும் அதற்கு மாறான பிறத்தல் எவ்வண்ணமென்றும் அவ்வான்மாவுக்கு இளைத்தல் எவ்வண்ணமென்றும் இளையாமற் பருத்தல் எவ்வண்ணமென்றும் மூப்பது வயதளவும் வளர்தலெவ்வண்ணமென்றும் பின் வளராமை எவ்வண்ணமென்றும் (விண்ணப்பஞ் செய்ய) இப்பொருளிருக்கும்படி சொல்லில் உள்ளங்கொள்ள அறிவாயாக,

அறிவுரு—எறி எ-து ஆன்மா தேகமாகியவத்துடன் அபித்தியப்படாமையால் நீ கேட்ட பொருள் தேகத்துக்கே யென்றுகொண்டு தேகிக்கென்று சொன்னவற்றைக் குற்றமற எறிந்து போகடு இது பசுவுண்மை யறிகை,

இவண்—மலத்து எ-து இங்ஙனமுறையாக நின்ற தேகமும் இத்தேகத்திலே நின்று அநுபவிக்குஞ் சுகதுக்கமும் இச்சுகதுக்கத்தைத் தற்சொரூப மறியாமல் மறைத்துப்புசிப்பித்தலுங்கூடிற்று முறையே மாயா மலத்தாலும் கன்மமலத்தாலும் ஆணவமலத்தாலுமாங் காண்,

---

* "பந்தம் போகம் போக நிறுத்தலும் வந்தது மாயவினை மலத்து" என்பது சிவஞானசித்தியாரில் "மும்மல நெல்லினுக்கு" என்னுந் திருச்செய்யுட் பொழிப்புரை விசேடத்தில் எடுத்தாளப்பட்டது.

† தேயா வல்வினை வளங்கெழு போகம் எனக்கூட்டுக.

‡ அதாய் முறுகிய வினைப் போகந் தந்து எனக்கூட்டுக.

§ அமல விமல விரும்பினை தேசொடு நிவந்த அமலனை இனிதே சமாதி செய்மதி எனக்கூட்டுக.

அந்தமில்—எறி எ-து இனி மேலேசொல்லப்பட்ட நித்தியமாயிருக்கிறமாயாமல காரியமான தேகத்திலே நின்று முற்பவத்திற் செய்த கெடாத வலிதாகிய கன்ம மலத்தால் வளப்பமுடைத்தான சுகதுக்கங்களை விளங்குகின்ற ஆணவமலம் மறைத்துப்புசிப்பிக்குந் தன்மையாகிய அதுவாய்ப் பக்குவப்பட்ட கன்ம பலங்களைப்புசிப்பித்து உன்னைவிட்டு இனிதாக நீங்குதற்கு இசையாதே அகங்காரத்தாலே பந்தித்தலைக் கன்மச் சேதவுபாயத்தினாலே தவிர்வாய் இது பாச மறைப்பு விடுகை,

இறை—மலம் எ-து பதியுண்மையை யறிந்து அதனால் ஆணவமலத்தை யொழிவாய்,

அநாதி—இனிதே எ-து அநாதியாகப் பிறந்திறந்துவருமிருந்ததன்மையுடைத்தானதேகத்திற்பிராரத்த கன்மபலம் புசித்தறுமளவும் நீ சுத்தமாக விருப்பத்துடனே யிருந்து பிரகாசமாயோங்கிய நின்மலனை யினிதாகச் சமாதி பண்ணி யிருப்பாயாக எ-று.

மற்றென்கிளவிகள் வினைமாற்று. அமலம், விமலம்—ஒரு பொருட் பன்மொழி.(சச)

பதிபசு பாச *மதியோர் வரத
வுலையா வென்பதைத் தலைநனி நிறீஇ
யுடையா தாயி னொருபெரும் பாச
மடையா வீடெனக் கடைநனி கழறிற்
றன்னுனை மலைவு முன்பின் மலைவு
மன்னவை யருளோ யா,மெனிற் †பன்னிய
வுடையா வூண்டர வடையா, பொடிபட
மாமலை யன்ன மரந்தெறு கடுங்கன
ருமனை யன்ன தளிர்க்கை தாங்கினு
மந்திர மாக்கட் கந்தரம் யாதே,
செம்பிது செறிந்த புன்புறக் களங்கமி
தென்றுனை கூடா வெழில்வளர் சீருணஞ்
சித்துநீர் செறிந்த தொத்து, மிக்க
விடங்கெழு பெருவலி யுளங்கொண் மந்திரத்
தடங்கிய தன்மையு மற்றே, குடங்கர்க்
கலங்குநீ ரில்ல நலங்கிளர் விழுக்கா
ழளைந்த மாறென விணங்கிறந் தகன்ற நீ
பாசப் பெருவலி தடித்தனர்
மாசின் ஞான முன்பெருந் தகையே.

---

* மதியோர் வரத அருளோய் பதி பசு பாசம் உலையா வென்பதைத் தலைநனிநிறீஇக்கடை ஒருபெரும் பாசம் உடையாதாயின் வீடு அடையா என கழறில் அன்னவை தன்னுனை மலைவு முன்பின்மலைவும் ஆம் எனக்கூட்டுக. இதில் அடையா என்பதிலே துவ்வீறு தொக்கது.

† பன்னிய—வினையாலணையும் பெயர்.

**இது, பாசம் நித்தியமும் வியாபகமுமாயி நுப்பினும் ஞானவான்களை வாதியாதென்று கூறியது.**

(இ-ள்) பதி பசு—அருளோ யாம் எ-து ஞானவான்களுக்குச் சிரேட்ட மாயுள்ள ஞாஞசிரியனே அருளையுடையோனே பதியும் பசுவும் பாசமு நித்தியமென்று முன்பே மிகவு மருளிச்செய்து வைத்துப் பின்பே உவமையில்லாத மகத்தாகிய பாசச்சேதமில்லாத விடத்து முத்தி சித்தியாதென்று மிகவுமருளிச்செய்தால் அவ்வசனங்கள் சுவவசன விருத்தமும் சாத்திரத்துக்குப் பூருவாபர விருத்தமும் வருவனவாயிருந்தன வென்று விண்ணப்பஞ் செய்ய,

எனில்—* அடையா எ-து என்றாயாகில் இங்ஙனஞ் சொல்லப்பட்ட பொருள் மூன்றும் நித்தியமாயிருப்பினும் ஞானவான்களை பாசம் வாதிக்கமாட்டாது என்போலவென்னில்,

பொடிபட—யாதே எ-து பெரிய பருவதம்போலத் திரண்டமரத்தைப் பொடியாகச் சுடுங்கடிய நெருப்பைத் தாமரைப் பூவினிதழ் போன்ற மெல்லியகையிலே தரித்தாலும் மாந்திரிகருக்குக் கேடாகிய விதனம் யாதாயினுமுண்டோ, (மந்திரவாதிகளை அக்கினிவாதியாமை யல்லது மற்றுள்ள விதன நீங்காமையாற் பாசம் வாதியாமை யல்லது சுத்தராவதில்லையோ வென்று வினவில்,)

செம்பிது—ஒத்தும் எ-து செம்பிது வென்றும் இதனுடன்கூடிய புறத்து விளங்கும் புல்லியகளிம்பு இதுவென்றும் பிரித்துச் சொல்லுதற்கரிய அழகு மிகுந்த செம்பிலே இரதஞ் செறிந்தாற் பொன்னானவாறுபோலச் சுத்தனுவனென்றருளிச்செய்யச் (செம்பிலே குளிகை யிட்டுருக்கிலல்லது சுத்தமாகாதபடியால் வியாபகமான ஆன்மாவுக்கு ஏகதேசமான தேகத்திற் பாசச்சேதஞ்செய்தவாறெவ்வண்ணமென்ன,)

மிக்க—அற்றே எ-து உள்ளத்திலே மந்திரத்தைத் தியானிக்கத் தேகமுற்றும் வியாபித்த மிக்கநஞ்சி னுண்டான பெரியசத்தி பாதாதிகேசமளவுங்கலவாமற்ற ஒப்புண்டவாறு போலவும் என்றருளிசசெய்ய(நித்திய நோய்கள் சரீரியானவனுக்குடையனவாதலால் இவை தோற்றின காலங்களில் ஞானத்தையே குறித்துக்கொண்டிருக்க ஒண்ணுமையால் மந்திரந்தியானியாத பொழுது நஞ்சுவாதிக்குமாறு போல ஞானமும் இவனுக்குச் சித்தியாக மாட்டாதோ வெனின்,)

குடங்கர்—பெருந்தகையே எ-து குடத்திலெடுத்த மண்ணீரானது தேற்றின்மரத்துண்டாகிய அழகுவிளங்கியசிறந்தவிதையிட்டுத்தேற்றினபின்பு மறித்துக்கலங்கினுற்றேற்றுமற் றெளியு மாறு போல ஞானிகளுங் குற்றமற்ற ஞானவனலாலே உவமையில்லாத மகத்தாகிய பாசத்தினுடைய பெரிய சத்தியைச் சேதம்பணணினபின் பிராரத்த கன்மம் புசித்தற்கேதுவாகிய நித்திய நோய்கள் நலியினும் தெளிவுக்காட்சியுடையராயிருப்பர் பெருந்தன்மையுடையோனே எ-று.

ஏகாரம்—தேற்றம். அற்று—குறிப்புமொழி. எ, மன்—அசை. காழ்—வித்து. (சுரு)

* அடையா இது துவ்வீறு தொக்கது.

திருவின் செல்வி பொருதனிக் கொழுந,
புலமை சான்ற கலைமகள் கணவ,
விரிய மடந்தை பேரிசைக் கிழவ,
தவத்தின் றலைவ, தருமத் துறைவ,
அருளோ ரருளோ ரென்ப நீயே
பருவோ ருவதை யெவனோ, தெரியக்
கண்ணிற் காணு ராயினுங் கனவி
னன்னுங் காலை நல்லுயிர் செருக்கும்
* பேயே யாயினும் பிரியி னின்பம்
வாயா தென்று மதியோ ரறைப,
† மரீஇ நாளுநின் னன்றி யாரு
மறிய வாரா பெரும வென்னை
யன்ன தாய தொன்முது பிறவி,
யறைபோக் கொழியக் குல முழுதும் வளைஇ,
ஞான வொள்வாள் பூழுக மழுங்கக்
கொன்று சினந் தணியாத் தண்டாச் சீற்றத்து
மறவனை யல்லையோ மற்றே, யிறைவ
வெவன்பல மொழிகுவம் யாமே, வனச
நீர்நிலை நின்றுநின் றுணைலம் பெற்ற
தாளோய் தாளி னீழலம் யாமென்
றிரந்து குறை யுறினும் பிறந்தை யெந்திற
மறந்து நோக்கா தெவன்புக லெமக்கென,
வொழிவற நிறைந்த மதிசேர் செஞ்சடை
யொருவன் பாத மல்லதை
பிறிது முண்டோ பெரும்புக ழமக்கே.

---

* சுந்தரமூர்த்தி நாயனாருந் திருவாரூர்ப்பதிகத்தில்;— "பேயோடேனும் பிறிவொன் றின்னாதென்பர் பிறரெல்லாம்" என்றருளிச்செய்தார்; திருக்கோவையார் ௱௨௪ ஆவது செய்யுளிலுங்காண்க.

† என்னை தொன்முது அன்னதாய நாளுமரீஇ நின்னன்றி யாருமரியவாராபிறவி பெரும எனக்கொண்டு கூட்டி யுரைத்தமைகாண்க; தொன்முது--ஒருபொருட்பன்மொழி

**இது, பாசச்சேதங் கேட்டுத் தனக்குப் பற்றுயுள்ள தேதென்று சீடன் விண்ணப்பஞ் செய்ய ஆசாரியன் நமக்குப் புகலிடமாயுள்ளது அகண்டபரிபூரணமாய் நிறைந்த சந்திர சேகரனாகிய கர்த்தாவினுடைய திருவடித் தாமரைகளல்லது வேறுண்டோ வென்றுஅருளிச் செய்ததைமை கூறியது.**

**(இ-ள்)** *திருவின்—எவனே எ-து சருவஞ்ஞத்துவமான செல்வத்தையுடையனுகையால் மோக்ஷலக்ஷ்மியாகிய செல்விக்கு ஒப்பற்ற நாயகனே யென்றும்,*

*கலைஞானமாகிய அபரஞானமுற்று முணர்தலால் அறிவுடைமையாகிய உயர்ந்தகலைமகளுக்கு நாயகனே யென்றும்,*

*பஞ்சவிந்திரிய நிக்கிரகம் பண்ணினபடியினுல் வீரமாகிய மாதுக்குப்பெரிய கீர்த்தியையுடைய நாயகனே யென்றும்,*

*சருவசங்க நிவிர்த்தியுடைமையாற் றவமாகிய செல்விக்கு நாயகனே யென்றும்,*

*செனன மரண சாகரத்திலழுந்துவோரை யெடுத்துக்கரைசேர்க்குமுறைமையாற் றருமத்துக் கிடமாயுள்ளவனே யென்றும்,*

*கிருபையையுடையை கிருபையையுடையை யென்றுஞ் சொல்லா நிற்பர்கள் நின்னை நீ கிருபையையுடையையான தெய்வண்ணம்,*

*தெரிய—அறைப எ-து கண்ணாலே தெரியக்காணவேண்டு மென்னினும் புலப்படாததாய்க்கேட்டபடியே கனவிலே காணுமிடத்தும் நல்லவுயிரைப்போக்கும் பேயேயானுலுங் கூடிப்பிரிந்தாற் றுன்பத்தைக் கொடுக்குமென்று அறிவுடையார் சொல்லியிருப்பவும்,*

*மரீஇ—பிறவி எ-து. என்னை அநாதிதொட்டு அவ்வொருபடித்தாய வேறுபாடற இந்நாள்வரையு மருவி நின்னையொழிய யாவர்க்குமறிதற்கரிதாகிய பிறவியை மகான்மாவே,*

*அறைபோக்கு—வளைஇ எ-து. உற்பீசம் அண்டசஞ் சராயுசஞ் சுவேதசம் என்னு நான்குவர்க்கத்தின் ஏழ்றத்தையும் ஒதுக்கமற வளைத்துக்கொண்டு,*

*ஞான—மற்றே எ-து. ஞானமாகிய அழகிய வாள் பொலிவு பொருந்தியமுகங்குளிக்கச்சங்கரித்து மற்றும் பாசச்சேதம் பண்ணப்பக்குவராணுரைத் தேடிக்கோபந் தணியாதேயிருக்கும் அளவில்லாத மாற்சரியத்தையுடைய மறவனல்லையோ,*

*இறைவ—யாமே எ-து. கர்த்தாவே நாங்களுன்னைப் பலவாகச் சொல்லுவம் அஃதெவ்வண்ணம்,*

*வனச—எமக்கென எ-து தாமரையானது நீரில் (ஒற்றைக்காலினுலே) நிலையாக நின்று தவசுபண்ணி நின்னுடைய சீர்பாதத்தினழகைப்பெற்ற அச்சீர்பாதத்தையுடையோனே நாங்கள் நின்சீர்பாத ஆசிரயராயிருந்தோம் (எங்களுக்குச் செனனம் வேண்டும்) என்று நின்னை வேண்டிக்கொள்ளினும் அசசெனனம் மறந்தும் எங்களிடத்து நோக்காததாய்முடிந்தது இனி எமக்குப்புகலிடம் யாதென்று விண்ணப்பஞ் செய்ய,*

* ஒழிவற—நமக்கே எ-து சந்திரசூடன திருச்சடா பாரத்தையுடையராகிய சடசித்துக்களெல்லாம் பரிபூரணமாய் நிறைந்த ஏகனாகிய கர்த்தாவினுடைய சீர்பாதமல்லது மற்றுனக்கும் எமக்கும் பெரியபுகலிடமுண்டோ என்று ஆசாரியர் அருளினார் எ-று.

ஓ, மற்று, ஏ—அசை. (சசு)

வாழிய பெரும வாழி வாழிய
வன்மீ னுணைத் தொன்முது கடவுள்
வலம்படு கொற்றந் தொலைச்சி மீளா
தடங்கருஞ் சீற்றத் திடங்கெடக் கடக்கு
மடம்படு ஞான வாழி, யுடம்பெறி
வளிவரை நில்லா தென்னு மாத்திரந்
தெளிவரத் தெருட்டினை செல்வ, வளியேன்
றற்பொரு விறந்த மெய்ப்பரந் தெரியா
தெய்த்தன னுயி ரிருவினை யின்னு
மொய்த்தன வல்லவோ முனிவ, † மொய்த்திடை
யெய்துவ வெனைப்பல வன்றே, யித்திறன்
யானிற் கிளத்தல் சாலு, மானின்
குளம்புறு குழிவாழ் கலங்கற் சின்னீர்
மகரா லயத்தின் மயக்கறத் தெளித்தலிற்
கவரா, தென்று கண்பனி தூங்க
மெய்ம்மயிர் புடைத்துத் தன்முதல் கலங்கி
யிழந்த நெஞ்சமோ டிறைவன் பாத
மோதினன் வீழ, வவனை நோக்கித்
தானும் யாது மாகா திவ்வென
வொண்ணு நீதிய னீதியாத் தனது
தெய்வ நாட்டந் னைதவரு மளவைக்,
‡ குவிவா யமையாக் குடநிறை தீநீர்,

* ஒழிவற நிறைந்த வொருவன் பாதம்—என்பதற்கு நீங்காமல் நிறைந்த ஏகராகிய நிறைந்த நாயனார் சீர்பாதம் என வுரைகூறிய பிரதியுமுண்டு.

† மொயத்த என்னும் பெயரெச்ச வீறு தொக்கது.

‡ திருமுருகாற்றுப்படையில் "ஒருகைமார்பொடு விளங்க" என்பதற்குரைத்தவிசேடவுரையில், இறைவன் மோனமுத்திரையைத்தனாய்த்தானேயிருந்துகாட்ட ஊமைத்தசும்புள் நீர்நிறைந்தாற்போல ஆனந்தமயமான வொளி மாணாக்கர்க்குநிறைதலின், அதற்குரிய மேலான முத்திரை கூறிற்று என்றார்; ஆதலால் ஈண்டுக்குவிவாயமையாக்குடமென்றது ஊமைக்குடத்தை யென்க; முன் "இந்தியப்பந்தனை,, என்னுமுதற்குறிப்புடைய திருவகவலில் வளைவாயமையாக்குடமென்றதற்குஊமைக்குடமெனவுரைகூறியதுங்காண்க.

பசுவாய் வாளைப் பார்ப்பினோ, டஃதோ,
தினகர னொளிசேர் சிலைகா றீயிற்,
றுரியமு மிறந்த தூயோன் றாய்மை
யருளின, னருள்பெற் றெழுந்தோற்
கிளிசேர் தீஞ்சொ லியம்பின னினிதே.

இது, மதிசேர் செஞ்சடை யோநுவன் பாத மடைய ஆசைவைத்த சீடனுக்கு ஆசாரியன் கடாக்ஷித்ததை கூறியது.

(இ-ள்.) வாழிய—வாழி எ-து வாழ்வாயாக மகான்மாவே வாழ்வாயாக வாழ்வாயாக வலிய மகரக்கொடியையும் வெற்றியையும் பழமையையு முடைய காமதேவன் இச்சைபண்ணுவிக்கும் வலியு வெற்றியைக் கெடுத்து ஒழியாதே அடங்குதற் கரிதாகிய மாற் சரியத்தைநின்னிடத்துச்சிறிது நில்லாதபடி செயிக்கும் அறியாமை நீங்கிய ஞானத்தையுடையோனே வாழ்வாயாக,

உடம்பெறி—செல்வ எ-து சரீரமானது அடிக்கிற காற்றினளவும் நிலையாதென்னும் அந்த வேறுபாட்டை எனக்குத் தெளியும்படி அறிவித்தருளிஞய் ஞானச் செல்வனே,

அளியேன்—முனிவ எ-து நின்ஞலே அநுக்கிரகம் பெற்ற அடியேன் தனக்குவமையில்லாத சத்திய ஞானனந்த சொரூபமானபதியுண்மையையறியாதே தேகம் விட்டேஞகில் இன்னமும் பாவபுண்ணியங்கள் என்னைப்பந்திப்பனவல்லவோ அவாவறுத்தோனே,

மொய்த்திடை—அன்றே எ-து கன்மங்கள் பந்தித்தவிடத்தே எனக்குக் கூடுவன * "வெள்ளெருக்கரவும் விரவுஞ்சடைப் புள்ளிருக்கு வேளூரான் பொற்கழலுள்ளிருக்கு முணர்ச்சியிலா தவர் நள்ளிருப்பர்நரகக்குழியிலே" என்னுமகாவாக்கியப்படி எண்ணிறந்த பலவாகிய செனன மல்லவோ,

இத்திறன்—சாலும் எ-து நின்னுடைய திரு முன்பே அடியேன் இந்த வேறுபாடுகளை விண்ணப்பஞ் செய்தது எத்தை யொக்கு மென்னில்,

மானின்—கவராது எ-து மானின் குளம்படி யழுத்தின குழியிலே நின்ற அற்பமான கலங்கனீரைக்கொண்டு சமுத்திரத்திலடங்கிய உவர்ப்பு நுரை முதலாகிய தோடமறவேண்டுமென்று தெளித்தலை யொக்கும்,

என்று—விழ எ-து என்று கூறிக்கண்ணீர் வாரச் சரீரத் துண்டாகிய உரோமம் புளகமாகித்தாமென்னு முதல் கலங்கிக் கரைந்த நெஞ்சத்தோடே ஆசாரியன் சீர்பாதங்களிலே தோத்திரம் பண்ணிவீழ,

அவனை—அளவை எ-து இப்படிப்பரிபாகத்துடனே விழுந்த சீடனை நோக்கி ஆசாரியனுங் கிருபையாலே தன்வசமழிந்து இன்னபடியிருப்பனென்று சொல்லுதற்கரிய நீதியையுடைய பரமசிவனுடைய சிவத்துவத்தைப் பாவித்துத் தனது தெய்வீகத்திரு நயனத்தாலே அநுக்கிரகித்தருளு மளவில்,

* வெள்—குழியிலே இது திருநாவுக்கரசு நாயனர் அருளிய புள்ளிருக்கு வேளூர்ப் பதிகத்திலுள்ளது.

குவிவாய்—தீநீர் எ-து குவிந்தவாயில்லாத குடத்தில் நிறைந்த இனிய நீர் போலவும்,

பகுவாய்— பார்ப்பினோடு எ-து பெரிய வாயினையுடைய வாளைமீனாகிய தாய் பார்க்கக் குஞ்சுவளர்ந்தாற் போலவும்,

அஃதோ எ-து இந்தவதிசயமாத்திரமோ,

தினகரன்—தீயில் எ-து ஆதித்தன் சந்நிதியிலே சார்ந்த சூரிய காந்தக்கல் தீக்கான்றாற் போலவும்,

துரியமும்—அருளினன் எ-து நின்மல துரியாவத்தைக்கும் அப்பாலாகிய நின்மலனுடைய பதித்துவத்தைப் பிரகாசிப்பித்தான்,

அருள்பெற்று—இனிதே எ-து இங்ஙனம் அநுக்கிரகத்தைப் பெற்றெழுந்த சீடனுக்கு இளியென்னு மிசையையொத்த இனிய வசனங்களாலே (அப்பதியுண்மையைத்) திருவாய்மலர்ந்தருளிச் செய்தனன் எ-று.

இவ்வளவும் பசு பாச விலக்கணம். (௪௭)

படியடி யடங்காக் கடிகமழ் தாமரைக்
கட்காண் கடவுளொ டத்துறை யமலனு
மெண்ணு மியல்பின னிறையென விரங்கும்
விண்ணோ ரண்ணலை வினவின், மண்முதன்
முப்பது முதலா மூவிரண் * டோவா
வொப்பி றத்துவ மொருவிய திப்பிய,
னொழிவற நிறைந்த வொருவன், புணாதீர்
வண்ண மில்லி, யமலன், கண் முதற்
புலனொடு புணரா, னிணையிலி, யானென்
மதத்தின் வாராப் பிறப்பிலி, தனக்கென
நாம மில்லோ, னாத, னநாமயன்,
கால காலன், கணக்கிலி, கடையு
மூலமு நடுவு முணர்ந்தோன், மேலோ,
னாகுல மில்லி, யகோப, னமோக,
னபய, னபங்க, னகம்ப, னசஞ்சல,
னித்தன், † முத்தன், சுத்தன், சுதந்தரன்,
பந்தமும் வீடு மகன்றோன், சிந்தையோ
டின்பமுந் துன்பமு மிகந்தோன், யாவும்

---

* ஓவா ஒப்பில் மண்முதல் முப்பது முதலா மூவிரண்டு ஒருவியதிப்பியன் எனக்கொண்டு கூட்டுக.

† முத்தன் நீங்கினவன்.

புலமின் றுணர்ந்த புனிதன், கலனெனத்
தணித்தலு மளித்தலுந் தடிந்தோன், றற்பரன்,
றுரிய மூங் கடந்த தூயோன், பெருமைக்
கண்ட மணுத்தர வணுவண் டத்துட
னின்று நுணங்கிய தண்டாச் சீர்த்தி,
யுரைதரு புணரிக் கரைக் * கறை யம்பிக்
காட்சி முதலிய வளவையு மளவறச்
சேட்பட வகன்றனன் சிவனெனச்
† சூட்சியி னிறைந்தோர் துணிந்தனர் நெடிதே.

**இது, இளிசேர்த்ஞ்சொல்லாக வருளிச்செய்தபதியிலக் கணங்கூறியது.**

(இ-ள்.) படியடி—வினவின் எ-து பூமியிலடங்காத பாதத்தினையும்நறுநாற்றமுடைய தாமரைப்பூவை யொத்த காணுங்கண்ணையும் உடைய திருமாலோடு அத்தாமரைப்பூவிடத் திலிருக்கும் பிரமாவும் அறிதற்கரிய இயல்புடையான் பதி யென்று (வேதாகமசாத்திரங் களிற்) சொல்லப்பட்ட தேவர்களுக்குக் கர்த்தாவாகிய பரமசிவனை யாராயில்,

மண் முதல்—சீர்த்தி எ-து நித்தியமாய உவமையில்லாத பிருதுவி தத்துவ முதலாக வுள்ள முப்பத்தாறுக்கும் அப்பாலாயிருக்கும் அதிசயமுடையோன்,

சருவவியாபகமாய் நிறைந்த ஏகன்,

குற்றமற்ற பொன்மை நீலாதி வன்னங்களில் ஒருநிறமுமில்லாதோன்,

நிர்மலனாயிருப்போன்,

கண்முதலாகிய விந்திரியங்களோடு கூடாதவன்,

தனக்குவமையில்லாதோன்,

யானென்னு மகங்காரத்தாலே வருவது செனனமாதலால் அவ்வகங்காரமில்லாமை யாற் செனனமில்லாதோன்,

தனக்கெனவொரு பெயரில்லாதோன்,

சர்வகர்த்தாவாயிருப்போன்,

நோயில்லாதோன்,

திரிகாலங்களுக்குங் காலமாயிருப்போன்,

* அறைகாட்சி முதலிய வளவை அம்பியும் எனக்கூட்டுக.

† சூட்சியினிறந் தோர் எனப்பாடம் வரைந்துசற் போதத்தைக்கெடுத்த பெரியோர் எனவுரை வரைந்த பிரதியு முண்டு.

அளவுபடாதோன்,

முதனடுவிறுதியில்லாதோன்,

மகானாயிருப்போன்,

கலக்கமில்லாதோன்,

கோபமில்லாதோன்,

மோகமில்லாதோன்,

பயமில்லாதோன்,

கண்டிக்கப்படாதோன்,

நடுக்கமில்லாதோன்,

சலனமில்லாதோன்,

ஒருபடித்தாயிருப்போன்,

அநாதியே மலத்தினீங்கினோன்,

தோடமில்லாதோன்,

ஒருவரேவலுந்தான் பிறர்க்கேவல் செய்தலுமில்லாதோன்,

பெத்தமு முத்தியு மில்லாதோன்,

சிந்தனையில்லாமையாற் சுகதுக்க மில்லாதோன்,

புத்தீந்திரியங்களின்றியே சர்வபதார்த்தங்களையுமறியுஞ்சுத்தமுடையோன்,

வினைநுகர் கால நோக்காது தீயோரென்று நிக்கிரகித்தலு நல்லோரென்று அநுக்கிர கித்தலு மில்லாதோன்,

தானே பரவத்துவாயுள்ளோன்,

நிர்மலதுரியாவத்தைக்கு மப்பாலாயிருக்குந் தூயோன்,

அனந்தங்கோடி யண்டங்களெல்லாந் தன் பெருமைக்கு அணுவாகவும் தன் நுண்மைக்குப் பரமாணுக்களண்டமாகவும் அவற்றுடனின்று செலுத்திய அளவிறந்த கீர்த்தியையுடையோன்,

உரைதரு—நெடிதே எ-து புகழப்பட்ட (வேதாகமசாத்திரமாகிய) கடலின் கரையையணைதற்குச் சொல்லுகிற பிரத்தியக்ஷ முதலாகவுள்ள * சட்பிரமாணமாகிய மரக்கலங்களுக்கும் அளவுபடாமற் றூரமாக வகன்றிருப்போன் பரமசிவனென்று வேதாகம விசாரமிக்கோர் மிகவும் அறுதி யிட்டனர் எ-று. (சஅ)

* சட்பிரமாணமாவன— காட்சி, அநுமானம், ஆகமம், அபாவம், அருத்தாபத்தி, உவமை என்பனவாம்: சிவஞான சித்தியார் அளவையிலக்கணத்திற் காண்க.

இன்ன தன்மைய னெனைய னென் றினி
தன்னோற் றேரி, னம்ம, மின்னவிர்
பதும ராகப் புதுவெயி, னிழல்செய்
மதியிற் றண்மை, ஞெலிகோல் வன்றழன்,
மடநடை நல்லான் வனமுலை வந்த
பாலிற் றீநெய், பழத்தி னின்சுவை,
பூட்சி யாருயிர், பொருளுரை, யெண்ணெய்,
கடிமலர் கஞலிய வொடியா வாசம்,
விம்மித மென்னென் றிசைக்குவ மற்றோ,
நிலநீர் தீகால் வெளியுயிர் யாவு
மவையே தானவை தானே யாகி
விரவியும் விரவா வீரம், விரவிய
தன்வா ளல்லதை தன்வா ளிழுந்த
மதிமா சூர வொளிகால் பளிங்கின்
பூட்சித் தென்னப், புலனொடு புணரா
தருளுமி னடிக னொன்றனன்
மருள்கெட விலகிய மறைவல் லோனே.

இது, காட்சிமுதலிய அளவையு மளவறச் சேட்படவகன்ற பரமசிவன் வியாபகங் கூ யது.

(இ-ள்) இன்ன—தேரின் எ-து இத்தன்மையனுய முன்னையாசிரியத்திற் சொல்லப்பட்ட பரமசிவன் எவ்வியல்பாய் நின்றான் என்றினிதாக அத்தன்மையோனை யாராயில்,

அம்ம எ-து கேட்பாயாக,

மின்னவிர்—வெயில் எ-து விட்டுவிளங்காநின்ற ஒளியையுடைய மாணிக்கமும் புதிய சோதியும் போலவும்,

நிழல்—தண்மை எ-து விளக்கத்தைச் செய்யும் சந்திரனும் தட்பமும் போலவும்,

ஞெலிகோல்—தழல் எ-து தீக்கடை கோலும் வலிய தீயும்போலவும்,

மடநடை—நெய் எ-து மெத்தென்ற நடையையுடைய நல்ல பசுவி னழகமைந்தமுலையிலுண்டாகிய பாலும் இனிய நெய்யும்போலவும்,

பழத்தினின்சுவை எ-து பழமும் இனிய விரதமும் போலவும்,

பூட்சியாருயிர் எ-து உடலும் நிறைந்த உயிரும் போலவும்,

பொருளுரை எ-து சொல்லும் பொருளும் போலவும்,

எண்ணெய் எ-து எள்ளும் எண்ணெயும் போலவும்,

கடியலர்—வாசம் எ-து அழகிய புட்பமும் அதின் விரவிய கெடாதகந்தமும் போலவும்,

விம்மிதம்—அற்றே எ-து இவன் வியாபித்திருக்கிறபடிக்கு வியப்பாகிய திட்டாந்தம் இவை ஒன்பதுமேயோ எத்தையென்று சொல்லுவோம்,

நிலநீர்—வீரம் எ-து பிருதிவி அப்பு தேயு வாயு ஆகாயமாகிய பூதங்களிலும் சர்வான்மாக்களிடத்தும் அவையிற்றைத்தானெனலுமாய்த் தன்னையவையெனலுமாய் வியாபித்தும் அவற்றில் விரவாதிருக்கிற வீரியமும் என்போலவென்னில்,

விரவிய—என்ன எ-து அடுத்த பொருளின் பொன்மை நீலாதிவன்னங்காட்டுமதல்லது தன்னொளி தோன்றாதிருக்கின்ற சந்திரன் களங்கமுடைத்தாக ஒளியை வீசுகின்ற பளிங்கின்வடிவத்தியல்புபோல்வதாம் என்றருளிச்செய்ய (இதனுண்மை குருமுகமாக அறிந்துகொள்க),

புலனொடு—வல்லோனே எ-து மயக்கங்கெடவிளங்கிய திவ்வியாகமத்துக்கு அதிகாரியாகிய என் சுவாமீ நீரருளிச்செய்த பதியின்றன்மையிப்படியானால் எனக்குப் புலப்படாதிருந்தது அப்பதியை யறியுமுபாயம் அருளிச்செய்யவேண்டு மென்று சீடன் விண்ணப்பஞ் செய்தான் எ-று.

ஒடு - அசை. (௪௧)

பூபூத ராதி யோவற வுஞற்று
மொருவனை யுடைத்துப், பொருவிரி காரிய
மாதலிற், கடம்போ, லென்னிற் கோதின்,
றிருங்கட மதனை டியற்றிய வொருவனை
யொருங்குடன் கண்டோ ரொழிந்திக ளிரிகடங்
கண்டா லிவையு மவனெனக் கொண்டாங்
குண்டோ *வுலக முஞற்றுட னொருவற்
கண்டு மற்றது முண்டிவ னென,வெனிற்
கண்டதின் மான முனக்குக், கொண்டல்கொள்
கிரிவளர் தூம மதனி லெரிவள
†ரட்டி லொண்புகை யயலென வுணர்ந்து
மொட்டினை பிறங்க லொள்ளழ லொட்டிய
தென்னை, விசேட சமனியத் தியாதிற்
பன்னெனில், விசேட மென்னி னன்றே
காட்சிய தலதிலைச், சமனிய மாட்சிய
தென்றேற், செயலொடு செய்வோற் கண்டோன்

---

* உலகமுஞற்றுடனொருவற்கண்டு மற்றதும் இவண் உண்டு என உண்டோ எனக் கூட்டுக.

† அட்டில் எரிவளர் ஒண்புகை எனக் கூட்டுக.

மன்ற மாண்*வினை காணி †னொன்றுங்
கோதுவ னொருவன் றீதுகு செயலென்,
றற்றேன், மாக மாதிய வினையா
லெற்‡றேற், பாக மிமைதலிற் கடவற்,
றின்னு மொண்குண மன்னலிற் புவிபோ,
லாதிய வழியு மழிபவை செயலென்
றோ§ துரு வஃதுந் தீதறு செயலே.

**இது, பதியையறியு முபாயம் அருளிச்செய்ய வேண்டுமென்று விண்ணப்பஞ்செய்த சீடனுக்குக் கேவலாந்நுவயவநுமானப் பிரமாணத்தாற் பதியுண்மை கூறியது.**

(இ-ள்) பூபூதராதி—உடைத்து எ-து பிருதிவி முதலிய தத்துவ சமூகங்களும் மலை முதலிய பொருள்களுமாகிய பிரபஞ்சம் ஒழியாதே செய்வானொருவனை யுடைத்து இது பிரதிஞ்ஞை,

பொருவிரி—ஆதலில் எ-து அதற்கு எது வென்னெனில் உவமையில்லாத காரிய மாயிருத்தலால் இது எது,

கடம்போல் எ-து என்போலவென்னிற் கடத்தைப்போல இது திட்டாந்தம் இவை மூன்றும் கேவலாந்நுவய வநுமானம்,

என்னிற் கோதின்று எ-து இங்ஙனங் கூறியதற்கிசைந்தாற் குற்றமின்று,

இருங்கடம்—இவணென எ-து பெரிய கடமான வதனையுஞ் செய்வானொருவனையும் ஓரிடத்திலே கூடக்கண்டானொருவன் இவ்விடமொழிந்து வேறோரிடத்திலே அளவிறந்த கடங்களைக்கண்டால் இவையும் அங்ஙனம் இயற்றப்பட்டனவென்று நிச்சயித்தாற்போல வேறோருலகத்தைச் செய்வானொருவனை யுடன்கண்டு இவ்வுலகமும் அங்ஙனம் போல ஒருவனாலேசெய்யப்பட்டுளதென்று நிச்சயித்தற்கு உண்டோ (என்று விண்ணப்பஞ்செய்ய),

எனில்—உனக்கு எ-து அங்ஙனங் கூறுவாயேற் பிரத்தியக்ஷத்தில் உனக்குக் காட்டற்குப்பிரமாணமுண்டு,

கொண்டல்—என்னை எ-து மேகத்தைக்கிட்டிய மலையிலுண்டான (மூங்கிலிழைந்து தானேபட்ட) மிக்க தூமத்துக்கு (நெருப்பும் புகையுங் கூடக்காணப்பட்ட) அடுக்களையில் எரியில் வருகின்ற அழகியபுகை (அற்பமாதலாலே இதனை யுவமையாகக் கூறுதல்) ஒவ்வாதென்றறிந்தும் பருவதத்திலே ஒளியுடைத்தான நெருப்புண்டென்றிசைந்தாய் இசைய வேண்டுவானேன்,

* வினை - காரியம்.
† ஒன்று மாண்வினை காணின் ஆங்குமன்ற எனக் கூட்டுக.
‡ ஏல் - அசை.
§ உருவஃதுந் தீதறு செயல் என்றோது எனக்கூட்டுக.

விசேட—பன்னெனில் எ-து (விசேட சாமானியத்தினுவிசைந்ததென்று சீடன்கூற) அங்ஙனமேயாகில் விசேடத்திலும் சாமானியத்திலும் நீ கொள்ளுமது யாது சொல்வாய் என்று வினவில்,

விசேடம்—இலை எ-து கடத்தைச்செய்த செயலுக்கு உலகத்தைப்பண்ணுஞ்செயல் பெரிதாதலால் விசேடந்தான் நீ கொள்வதென்று விடை கூறுவாயாகில் ஐயோ நீ ப்ரத்தியக்ஷப்பிரமாணங் கொள்ளுவாயன்றி அநுமானங்கொண்டதில்லையே,

சமனியம்—என்றேல் எ-து புகையென்னுஞ் சாதிசாமானியத்தால் நெருப்புண்டென்று அழுகிதாகக் கொள்வேன் என்பாயாகில்,

செயலொடு—செயலென்று எ-து கடத்தைப்பண்ணுகிற செயலோடே செய்பவனையுங் கண்டானொருவன் ஒரு பதார்த்தம் மாட்சிமையுடைய காரியமாகிய உருவமாயிருப்பது கண்டால் அவ்விடத்து (அநுமானத்தானே சிறிதாயிருப்பினும் பெரிதாயிருப்பினும்) நிச்சயமாக ஒருவனாலே குற்றமறச் செய்யப்பட்டதென்று சொல்லுவன்காண் (என்றருளிச் செய்ய),

அற்றேல் எ-து அங்ஙனமேயாகில்,

மாகம்—எற்றேல் எ-து ஆகாய முதலாக மேலுள்ள தத்துவங்கள் அருவமாதலால் அவை தொழிற்பட்டமை எவ்வண்ணமென்று விண்ணப்பஞ்செய்ய,

பாகம்—கடவற்று எ-து ஆகாயம் பங்கிக்கப்படுதலானும் அது பாகமாகிய நான்கு தத்துவமும் உருவமாதற்கியைதலானும் கடம்போலக் காரியமாயேயிருக்கும்,

இன்னும்—புவிபோல் எ-து இன்னமும் அது அழகிய சத்தமாகிய குணமுடைத்தாகலானும் பிருதிவி தத்துவம்போல உருவமுடைத்தாங்காண்,

ஆதிய—செயலே எ-து இத்தத்துவங்கள் ஆதியானபடியாலே யழியும் அழியும் பதார்த்தம் ஒருவனாலே யாக்கப்பட்டிருத்தல்வேண்டும் உருவமாயிருக்குமாதலால் அந்தப்பிரபஞ்சமும் (பரமசிவனாலே) குற்றமறச்செய்யப்பட்டது என்றுகொண்டு சொல்வாயாக எ-று.

சமனியம் - குறுக்கல். (௰)

பதியள வளவை * மதியோர் வரத
வுணர்தல் வேட்கைய னளவையி னுணர்த்த
வுணர்வோர்க் குணர்வ தனைவகை யாதலி,
னறிதவ, வசத்துல கறிவனை விநாஅக்
குறிவரல் போதல் கூடா, துறுதே
ராதி போல, வவையினி துய்க்கு
நீதிய னெவன்பதி, யேற்கோ தமல

---

* மதியோர் வரத உணர்வோர்க்கு உணர்வது அளவையினுணர்த்த அனைவகை யாதலின் பதியளவளவை உணர்தல் வேட்கையன் எனக்கூட்டுக.

நேகாந் திகமென் னினைவொடு நின்றது,
கன்றுவளர் பாலினுஞ் சென்றின் றீங்கோச்
சேதன மாதலி, ஞேதிய வுயிர்போஞ்
சுரபி தீம்பால் சொரியிற் புரையி
றீம்பால் வளர்த்த தன்றென வோம்பா
துரையா டுநரெவர், வரையா வறிவன்
செயலென விரும்பை யயலற வுய்க்குங்
காந்தமென் * றெடுத்துக் கோளும் வாய்ந்தன்
றிரண்டையு மியைக்கு முரண்டகு சேதன
னின்றெனி னவைசென் றொன்று வாகலிற்,
சேதனன் செய்திக் கோதிடி னுயிர்கட்
கேதள வவையே கோதுக வமைக்க
நாத னென்னை, யெனினுயி ரறியா
வீசத் தன்மையு மில்லை யாசி
றம்முடைச் † செயற்கும் வெம்முறட் கடம்போ
லென்று மிறைமை யிவர்க்கெனை, யிறையே
மன்றூர் மாநட மாடி, யொன்றே
வீட்டை பவரோ கூடுக செயலெனி,
ஞதிய ரோமற் றஞதிய ரோவே
றேதமின் முத்திய ரென்னி, ஞதி
யன்றெனிற் ‡ சித்த சாதன மாதி
யென்றிடின் முத்திய றிவோன் முன்னர்
சின்றன ஞக நிகழு மின்றி
யென்றும் பந்த மன்றி முத்தி
யொன்று, துணர்வோ ருணர்விற் குன்று
திருந்திரும் பாசஞ் செற்ற
பெருந்தகை யருளிற் பொருந்துமற் றம்மே.

---

* எடுத்துக்கோள் - திட்டாந்தம்.

† செயற்கும் அறியா எனக்கூட்டுக.

‡ சித்தசாதனம் - "தந்துமுதலகாரகம்" என்னு முதற்குறிப்புடைய திருவகவலிற் காண்க.

**இது, அந்நுவயவெதிரேகி யநுமானத்தாற் பதியுண்மை கூறியது.**

(இ-ள்) பதியளவு—ஆதலின் எ-து ஞானவான்களுக்கு மேலான கர்த்தாவாயுள்ளோனே அறியக்கடவோர்க்கு அறியும்பொருள்கள் * சட்பிரமாணங்களாலே அறிவிக்க அவ்வகையால் அறியலாமாதலாற் பதியினுடைய அளவாகிய எல்லையை யறிதலை விரும்பினேன் என்று விண்ணப்பஞ்செய்ய,

அறிதவ எ-து பிரபஞ்சம் ஒரு கர்த்தாவை யுடைத்தென்று மிகவும் அறிவாயாக இது பிரதிஞ்ஞை இதற்கேதுவென்னெனில்,

அசத்து—கூடாது எ-து பிரபஞ்சம் †அசேதனமாயிருத்தலாற் சைதந்நியனான ஒரு கர்த்தாவையன்றி அவயவத்தோடு காணத்தக்க சிருட்டியுஞ் சங்காரமும் எய்தல் கூடாதென்று நிச்சயிக்கப்படுமாதலால் இது எது,

உறுதேர்—போல எ-து என்போலவென்னில் மிருதியையுடைய தேராதிவாகனம் போல இது திட்டாந்தம் (தேராதி தாமே பிரவர்த்திக்கமாட்டா பிரவர்த்திப்பாரை வேண்டும் அதுபோலப் பிரபஞ்சத்தையும் பிரவர்த்திப்பானொரு கர்த்தாவேண்டும் இது உபநயம் இதுதான் எஞ்சியது),

அவை—பதி எ-து இவ்வுலகங்களை இனிதாகச் செலுத்துகிற முறைமையுடையான் யாவனொருவன் அவன்பதி (என்றருளிச்செய்ய) இது நிகமநம் இவையைந்தும் அந்நுவய வெதிரேகியநுமானம்,

எற்கோது—நின்றது எ-து அங்ஙனமேயாகிற் குற்றஞ் செறிந்திருக்கின்ற அநேக விதத்தாலே அசேதனம் பிரவர்த்தி நிவிர்த்திசெய்து நிற்றல் கூடுமென்பது என்னினைவிலுண்டாகா நின்றது (என்று விண்ணப்பஞ்செய்ய),

கன்று—ஆதலின் எ-து கன்றை வளர்த்தல் பாலென நினைக்குஞ் செயலினுஞ் செல்லாதுகாண் கன்றீனும் அந்தப்பசுத்தான் சைதந்நியமாதலால்,

ஓதிய—எவர் எ-து சொல்லப்பட்ட பிராணன்போகிய பசு இனியபாலைச்சுரந்ததாகிற் குற்றமற்ற வினியபால் கன்றைவளர்த்ததன்று என்று பரிகரியாதே சொல்லுவாரார்,

வரையா—ஆகலில் எ-து மட்டிடப்படாத அறிவையுடைய பரமசிவன் செய்தியைப் போல அசேதனமாகிய காந்தக்கல் இரும்பை அந்நியமறவலிக்குமென்று நீ யெடுத்துச்சொல்லுந் திட்டாந்தமும் பொருளாகமாட்டாதுகாண் காந்தக்கல்லையும் இரும்பையும் முகமொன்றச் சேரவைக்கும் வலிய சைதந்நியனில்லையாகில் அவை தம்மிற்கூடமாட்டா வாதலால் (என்றருளிச்செய்ய),

சேதனன்—என்னை எ-து சைதந்நியனாயிருப்பானொருவனாலே செய்யவேண்டுமென்னில் ஆன்மாக்கள் அளவில்லாதபடியினாலே குற்றமற அவ்வான்மாக்கள் செய்தால் அமையாதோ ஒரு கர்த்தா என்றான் (என்று விண்ணப்பஞ்செய்ய),

---

* சட்பிரமாணம் - "படியடியடங்கா" என்னு முதற்குறிப்புடைய திருவகவலிற்காண்க; பிரமாணத்திரயங்களாலே என்றுரைகூறிய பிரதியுமுண்டு.

† அசேதனம் - சடப்பொருள்கள்.

எனிலுயிர்—வினை எ-து என்பாயாகில் ஆன்மாக்கள் அஞ்ஞானிகளாதலாலே பதித்துவமில்லை குற்றமறத் தம்முடைய கன்மபலம் புசித்தற்கும் பக்குவப்படுதற்குந் தாமறியார் (அசேதனமாகிய) மிகவலிய கடம்போலச் செய்விப்பானொருவனைவேண்டி நிற்றலால் இவர்க்குக் கர்த்திருத்துவம் எவ்வண்ணமுண்டாவது,

இறையே—ஆடி எ-து இனிக்கர்த்தாவைக் கேட்பாயாகில் "* கண்ணிறைந்த கடிபொழிலம்பலத்-துண்ணிறைந்துநின் றாடுமொருவனே" என்றருளிச்செய்ய,

ஒன்றே—செயலெனின் எ-து முத்தராயிருப்பாராலே பஞ்சகிருத்தியஞ் செய்யப்படுமென்பாயேல் அந்த முத்தான்மாக்களுக் களவில்லையே,

ஆதியரோ—என்னின் எ-து அங்ஙனமாயின் வேறாகிய குற்றமற்ற முத்தான்மாக்கள் ஆதியாக முத்தரோ அன்றியே அநாதியாக முத்தரோ என்று வினவில்,

ஆதியன்று—ஒன்றாது எ-து அநாதிமுத்தன் செயலென்னில் அவ்வார்த்தை என்பக்கமென்றறி ஒரு நாளிலே முத்திபெற்றோராலே செய்யப்படு மென்னில் அவர்தமக்கு முன்பே முத்தியைப்பிரசாதித்தான் ஒருவனுளனாகவேண்டும் இப்படியொரு கர்த்தாவையின்றி என்றும் பந்தமாய்க்கிடக்கும் அஃதன்றி முத்தியடைவதுமில்லை ஆனபடியாலே,

உணர்வோர்—அஃதே எ-து இனிப் பதியுண்மையுணர்ந்து தியானிப்போருணர்வில் ஒழியாமலே அமர்ந்து பெரிய பாசச்சேதம் பண்ணுதற்குரிய பெருந்தகையாகிய பரமசிவன் பிரசாதத்தாலே அந்த முத்திகூடும் எ-று.

மற்று - வினைமாற்று. (௩க)

எல்லாத் தொழிலு மிறைவற் குறித்த,
நின்றுழி நில்லாத் தகைத்தா, னின்றுழி
நிற்கப் படுவ தியாதே யஃதே
முற்பட வமைந்தது முயற்சியு மின்றே.

**இது, கேவலவெதிரேகியநுமானத்தாற் பதியுண்மை கூறியது**

(இ-ள்) எல்லாத்தொழிலும்—குறித்த எ-து சர்வ காரியங்களும் ஒருகர்த்தாவைக் காட்டாநின்றன இது பிரதிஞ்ஞை,

நின்றுழி—தகைத்தால் எ-து அதற்கேது வென்னெனில் ஒருபடித்தா யில்லாத முறைமையால் இது ஏது இவையிரண்டும் கேவலவெதிரேகியநுமானம்,

நின்றுழி—இன்றே எ-து ஒருபடித்தாய் நிற்கப்படுவது யாதொன்று அது அநாதியாயுள்ளது ஒருவராற் செய்யப்பட்டதுமன்றுகாண் எ-று. (௩௨)

* திருநாவுக்கரசு நாயனாருளிய கோயிற்றிருப்பதிகத்திற் காண்க.

விந்து வகுத்தை விசேடத் தெந்தை
* கவவுசிவ பேதந் தவளித் தனை,யது
சேதன மன்மையிற் கோதறச் செயலின்,
றச்செயற் கமல னென்னின் மற்றவற்
கெய்திடும விகார, மெய்த மையுகும்
விகாஅ ரத்தைத் தவிரத் † தவிரா
தென்னை யென்னிற், பன்னுவ மன்னோ,
பொங்கிய வினையிரு வகைத்துச் சங்கற்
பத்தொடு கரணத், தலர்கடங் குலால
னெற்படு சங்கற் பத்தின் முற்பட
வியற்றல னிறைவன் சங்கற் பத்தின்
மயக்கற விந்துவைத் துயக்கறக் கலக்கல்
செய்வ னேவான், செய்தற் ‡ கைய
காரண மாக மெவைபுஞ் சேர்தல்
செல்லா னாக லானு மெல்லிய
லமல னாக லானும் $ விமலம
தாக வம்ம, வாக மேவுநர்
போகலர் யாவும் வீவுக வியற்ற,
வில்லோ ராக மியற்ற வல்லோ
ரல்லோ § ரென்ன, லாக மெல்லாச்
செய்தியைத் தடுத்தற் கைய மின்றஃ
தின்றே லெவையு மியற்றற் கொன்றுங்
குன்று, தெவணெனின், மன்ற தன்றன
தாக மியற்றிய வறிவன் போகிய
தேக ¶ னல்ல கொல், சிவனகி லத்தைச்
செய்வ, னின்னு மைய கேண்மோ,

* "கவவகத்திடுதல்" எனத் தொல்காப்பியத்திற் கூறினர் அதனையே யீண்டுக் கூடுதலென்றுரென்க.

† தவிராதது எனற்பாலது தவிராது என விகாரமாய் நின்றது.

‡ அம்ம ஐய எனக்கூட்டுக; அம்ம - கேள் என்னும் பொருளில் வந்தது.

$ விமலமதாக எல்லியல் அமலனாகலானும் எனக்கூட்டுக.

§ என்னல் - அல்விகுதி வியங்கோள் எதிர்மறையில் வந்தது.

¶ அல்ல என்பதற்கு அல்லன் என வுரைகூறினர்; அல்ல, அன்று என்னுஞ்சொற்கள் இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவினையாக நேமிநாதஞ் சொல்லதிகாரத்துட் கூறுதல் காண்க.

மெய்யுட னியைவோர்க் கல்லதை வினைமற்
றுய்யா தென்னி னுடல்கா ரியமக்
காரியஞ் செய்வோ னின்றி வாரா
தவனுடன் முதலிற் சிவனு, மற்றவ
னாக || வநவத் தைத்திற னல்லதை
போகா தாகலிற், புகன்முதற் றடக்கிற்
கெல்லா வாகமு மிரித்திக விறந்த
செல்லா நல்வழி சிறந்த நல்லோ
னீச னாக வினையயு
மாசின் றுயுந ரறியுங் காலே.

**இது, அநுமானப்பிரமாணத்தாற் பூபூதராதியென்னும்பாட்டுமுதற் பிரபஞ்சசிருட்டி கொண்டு பதியுண்மைகூற இவன் சிருட்டிக்கிறபடி யெங்ஙனேயென்றுவினவ அவன் நிட்களனுயிருந்தே சங்கற்பத்தாலே சிருட்டிப்பான் என்று கூறியது.**

(இ-ள்) விந்து—அளித்தனை எ-து என் சுவாமியே பரமசிவனுடனே கூடியிருக்கின்ற சத்தி சங்கற்பத்தாற் சுத்தமாயையினுடைய கலக்கத்திலே உண்டானது பிரபஞ்சமென்று மிகவும் அருளிச்செய்தாய் (இவ்வுண்மை குருமுகமாகவறிக),

அது—செயலின்று எ-து அந்தச்சுத்தமாயைதான் அசேதனமாதலாலே குற்றமற யாதுஞ் செய்யமாட்டாது,

அச்செயற்கு—விகாரம் எ-து அந்தச்செயல் நின்மலனான பரமசிவனாலே செய்யப்படுமென்னில் அவனுக்கு விகாரங்கூடும்,

எய்த—என்னில் எ-து அவனுக்கு விகாரமுடைத்தாகவே குற்றத்தைச் சொரிகின்ற அவ்விகாரத்தை ஒழியவிடாத நாடணத்துக்கு முடிவென்னென்பாயாகில்,

பன்னுவ மன்னே எ-து ஐயோ சொல்லுவோம்,

பொங்கிய—கரணத்து எ-து மிககிருக்கின்ற செயலிரண்டு வகைப்படும் சங்கற்பசிருட்டியென்றுங் கரணசிருட்டியென்றுமாம்,

அலர்கடம்—ஒவான் எ-து விரிந்தகடங்களைக் குலாலன் பிரகாசமுடைத்தாகிய சங்கற்பத்தினுன் முதன்மையுறச்செய்யமாட்டான் பரமசிவன் சங்கற்பத்தாலே மயக்கமற அந்த விந்துவை அழகிதாகக் கலக்காநிற்பன் ஒருகாலுமொழியான்,

செய்தற்கு—அம்ம எ-து பரமசிவன் சங்கற்பத்தாலே செய்தற்குக் காரணங்களாய் பிள்ளாய் கரணத்தினுற் செய்தற்கியன்ற மந்திரரூப முதலாகவுள்ள தேகம் யாது மெடுத்துக்கொள்ளானுகலானும் சுத்தமாக ஒளியையுடைத்தாகிய நிர்மலனுகலானுங்காண்,

---

* அநவத்தாதோடம் - முடிவின்மை யென்னுங்குற்றம்.

ஆகம்—இயற்றல் எ-து சரீரத்தையுடையோர்க்குச (சரீரமேகதேசப்பட்டமையாலே அவர் கரணங்களாலே ஒவ்வொன்றைச செய்வதன்றி) அனைத்தையுங குற்றமறச்செய்யமாட்டார்,

இல்லோர்—என்னல் எ-து தேகமில்லாதோர் அனைத்தையுஞ் செயதற்கு வல்லரல்லர் என்று சொல்லற்க,

ஆகம்—குன்றுது எ-து ஆதலாலே தேகமானது பிரபஞ்சமடஙகலுஞ் செய்தற்கு விக்கினமாயிருப்பதென்பதற்கு ஐயமில்லை அத்தேகமில்லையாகில் எல்லாவற்றையுஞ் செய்தற்குச சிறிதுந தாழ்வுபடாது,

எவனெனில் எ-து அஃதெவ்வண்ணமென்னில்,

மன்ற—கொல் எ-து நிசசயமாகத்தன்னுடைய தேகததைக்கொண்டு ஒவ்வொன்றைச செயய முயற்சிபண்ணுகிற அறிவன் அரூபியான வான்மாவல்லனோதான்,

சிவன்—செயவன் எ-து இப்படியால் அரூபியாயிருநதே பிரபஞ்சமனைத்தையுஞ் செயயாநிற்பன் பரமசிவன்,

இன்னும்—கேண்மோ எ-து இன்னமும் பிள்ளாய கேட்பாயாக,

மெயயுடன்—சிவனும் எ-து உடம்போடுகூடியிருப்போர்ககல்லது செயல் கூடாதென்னில் அவவுடல் காரியமாயிருத்தலால் அககாரியநதான் செயவானொருவனையின்றி வருவதில்லையாதலால் அதற்கு முன்னர் ஒருவனுளனெனக்காட்டும,

மற்றவண்—ஆகலின் எ-து அப்படியாகவே அவவுததைததிறமன்றி (ஒருவரையொருவா சிருட்டிக்குமதுவாமதல்லது) மூலமான ஒரான்மாவைச சொல்லவொண்ணுததாய் முடியுமாதலால்,

புகல்—அறியுஙகாலே எ-து இனிசசொல்லப்பட்ட முசசற்பஞ்சகிருத்தியத்துக்கு விநது நாதமுதலான தேகமெல்லாம் விடுத்து உவமையில்லாத அழிவில்லாத நல்ல சததியுடன் கூடிய பரமசிவன் கர்ததாவாகப் பொருநதுவன் இதனைககுற்றமற ஆயநத நல்லோா அறியுமிடத்து எ-று.

மற்றிரண்டும் அசை. (௫௩)

வணி போகிய கீழ்நிலைப் படலமு
முமபர் போகிய வுயர்நிலை யுலகமு
மெண்டிரை மூன்று தண்டாக் காலமு
முளப்படப் பொதிநது நிலைக்குரி மரபி
* னவததை நீங்கிய † தவத்தின் சார்வைக்

* அவத்தை நீஙகிய என்பதற்குக் கேவல சகலாவத்தை நீஙகிய என வுரைகூறிய பிரதியுமுண்டு.

† தவம் என்பது ஆகுபெயராயத் தவத்தினரை யுணர்த்திநின்றது.

காண்டல் வலியோ ரின்மை, மாண்ட
ஞான நாட்ட * மாணுற விலகா
யாணர்த், திகலிரி நோக்கங் காணு
ணிருளற விரிய விரிகதிர் பரப்பிய
வொருதேர் நேமிப் பரிதி வானோற்
காணு வாறு போலச், சேணென
விடைகடை முதறுரந் துடைதர வளவை
யொழிவற நிறைந்தோ னின்னுங், குழிகட்
கூளி யூர்ந்த வாடவற் றிரிந்த
வான்வினை காட்சித் தலைகைகண் டிலதெனக்
காட்சியிற் கருலிய வெவற்று மாட்சியி
னின்றனன் பரம காரணன்
மன்ற நன்றறி † யொன்றினை யுணர்ந்தே.

**இது, நிட்களனுயிருந்தே அனைத்தையுஞ்செய்கிற கர்த்தாச் சர்வான்மாக்களுக்கும் பிரத்தியக்ஷமாகாமனின்ற காரண மென்னைென்று வினவ ஞானநாட்டமுடையோர்க்கன்றிக் காணவொண்ணுதென்று காரியங்கொண்டு காரணமுணர்ந்து பதியுண்மை கூறியது.**

(இ-ள்) எணி—இன்மை எ-து எண்ணிறந்த ஆடகேசுவர புவனமுதலாகக் கீழுற்ற தலங்களையும் மேலே யெண்ணிறந்த அநாசிருதபுவன முதலாகிய லோகங்களையும் திக்குகளெட்டையும் பூதபவிஷியவர்த்தமானமாகிய நீங்காத காலங்கண் மூன்றினையும் தன்னிடத்திலே பொதிந்துகொண்டு நித்தியத்தையுரிய முறைமையிருலே அவத்தைப்படாத தவசியர்க்குப் புகலிடமாயுள்ள பரமசிவனைக் காண வல்லோரில்லை இது பிரதிஞ்ஞை,

மாண்ட—யாணர்த்து எ-து அதற்கேதுவென்னெனில் அழகிய ஞானக்கண் மாட்சிமையுண்டாக விழியாதமுறைமையதாலே இது ஏது,

இகலிரி—போல எ-து என்போலவென்னில் உவமையிறந்த கண்டெரியாத புருடன் உலகத்திலந்தகாரமறப்போகத் தன் விரிந்தகதிரைப் பரப்பிய ஓராழித்தேரையுடைய தேவனைக்காணுதவாறுபோலக்காண் இது திட்டாந்தம் இவை மூன்றுங் கேவலவெதிரேகி யநுமானம்,

சேணென—நிறைந்தோனின்னும் எ-து பரமாகாயம்போல முதனடுவிறுதியின்றியே பிரமாணரகிதனுய்ச் சர்வவியாபியாய் நின்றனன் அதற்கு இன்னும் ஒரு திட்டாந்தம் வருமாறு,

* யாணுறவிலகா என்றும் பாடமுண்டு.

† ஒன்றுதல் - ஈண்டு ஏகாக்கிரசித்தமாதல்; ஒன்றினை - முற்றெச்சம்.

குழி—உணர்ந்தே எ-து குழிந்த கண்ணேயுடைத்தாகிய பிசாசு பிடிக்கப்பட்ட புருடனிடத்து வேறுபட்ட செய்திகண்டதல்லது பிசாசு கண்ணுக்குப் புலனாகாதவாறுபோலக் காணுதற்குப்பொருந்திய பொருள்களெல்லாவற்றினும் இன்றியமையாதழகிதாகநின்றனன் பரம காரணனான பரமசிவனென்று நிச்சயமாக ஏகாக்கிர சித்தமாய் அழகிதாக வறிவாயாக எ-று. (௫௪)

இறைசிவ னெனவரு ளுறைபதி யறைதன்
முறையல வன்மையின் மூர்த்தங் கறைகழி
கரண மின்மையின் முரண்மிகு கடா,விடை
யுறிமதி, கால மமூர்த்த முறுபலந
தருமது போலத் தலைவன் மூர்த்தத்
திரிபின னாம பொருவிரி யின்றெழி
லிச்சையி லியற்று, மெனினய் விசசை
நற்றொழிற் செய்தி நயவா தாங்கெனிற்,
* கண்டிசின், யோகக் கலைத்துறை நீந்திய
வொண்டிறல் யோகர் போலத் தண்டா
விச்சை, யிறைக்கில ணெற்றெனிற், சொற்றரு
சல்லியந் தளர வாங்கிற் றெல்லேய்
புலமின் றாயினு நலமலி கட்டக
மன்ன தானு மதன்பா லின்றெழின்
மன்னு தானு மற்றது வந்த
செய்தி, கட்காண் பெய்யா வுவமையில்
பெருத்தெனைப் பலவா † முருத்திகழ் தொழில்க
ளிருத்தல் ‡ கூடா திருத்திய கடமபோ
லாதலிற் காரண மொன்றுண் டா,மென
வோதிடிற் கரும மதுமற் றாதற்
கேதிட, ரெனிலது கோதி லசேதன,
மருமறை யறையு மருவுரு $ வுருவிலி
வுருவவ ரீச னொளிதிகழ் சதாசிவன்
சாந்த னென்றினி தம்ம
வேந்திய கொள்கை யிசையி னானே.

* இசின் - ஈண்டு முன்னிலையில் வந்தது.

† உரு - உருவமாகிய பிரபஞ்சம்.

‡ கூடா - இதில் துவ்வீறு குறைந்து நின்றது.

$ உருவிலி சாந்தன் அருவுரு ஒளிதிகழ் சதாசிவன் உரு ஈசன் அவர் ஏந்தியகொள்கை யிசையினானே என்று அம்ம இனிது அருமறையறையும் எனக்கூட்டுக.

**இது, காரணரகிதனுமாய் அழர்த்தனுமாயிருக்கிற பரமசிவனைக் கர்த்தாவென்று சொல்லுதல் முறைமையல்லவென்று வினவ அழர்த்தனுயிருந்தே பிரபஞ்சத்தைச் சத்திகளாலே செய்வனென்று கூறியது.**

(இ-ள்) இறைசிவன்—கடா எ-து கிருபைக்குப்புகலிடமாயுள்ள குருநாதனே பஞ்சகிருத்தியஞ் செய்தற்குப் பரமசிவன் கர்த்தாவென்று சொல்லுமது பொருந்தியிருந்ததில்லை அவன் வடிவுடையனல்லாமையிற் பிரபஞ்சமுண்டுபண்ணுதற்குக் குற்றமற்ற கரணங்களுண்டாகமாட்டா ஆதலாலே பொருந்தாமை மிக்க கடாவாயிருந்தது என்று விண்ணப்பஞ்செய்ய,

விடை யறிமதி எ-து இதற்குப் பரிகாரங் கேட்பாயாக,

காலம்—இயற்றும் எ-து காலமானது வடிவின்றியிருந்தும் அவ்வக்காலத்திற்குரிய பிரயோசனங்களைக் கொடுத்துநிற்கும் அவ்வாறுபோலக் கர்த்தாவாகிய பரமசிவனும் மூர்த்தத்துக்கு வேறுபட்டிருந்தானுயினும் உவமையில்லாத நல்ல பஞ்சகிருத்தியத்தை இச்சாசத்தியாலே செய்யாநிற்பன்,

எனின்—ஆங்கெனில் எ-து என்றருளிச்செய்யில் அந்த இச்சாசத்தி அவ்விடத்து நல்ல கிருத்தியமாய் முடியாதென்கின்றுயாகில்,

கண்டிசின் எ-து காண்பாயாக,

யோக—இச்சை எ-து யோகசாத்திரத்தை முடியவறிந்த அழகிய வலியையுடைய யோகிகள் அட்டமாசித்திகள் செய்யுமாறுபோல நிருமித்தல் கர்த்தாவுக்குக் கெடாத இச்சாசத்தி யிலக்கணமென்றருளிச்செய்ய,

இறைக்கு—எனில் எ-து யோகிகளைப்போலப் பரமசிவனுக்கு இராகமுண்டாகவற்றே இவ்வியல்பு பொருந்தும்படி யென்னென்கின்றுயாகில்,

சொற்றரு—செய்தி எ-து ஒளியையுடைத்தான கரணமில்லாதிருந்தும் சொல்லப்பட்ட இருப்புத்தாளைச் சுழல இழுத்தது அழகிய காந்தக்கல்லே அத்தன்மைத்தாயினும் அதனிடத்தில் இனியதொரு கிரியை தோன்றுதிருக்கவும் அந்த இருப்புத்தாள் காந்தக்கல்லினிடத்திலே செறிந்ததன்மைபோல,

கட்காண்—உண்டாம் எ-து கண்ணுற்காண அளவுபடாத உவமையில்லாத பெருமையுடைத்தாகி நாநாவிதமா முருவமாகிய பிரபஞ்சத்தை விளங்கியபஞ்சகிருத்தியமானது தானேயுண்டாக்குதல் கூடாது ஒருவன்றிருத்திசெய்யுங் கடம்போல ஆதலாற் பிரபஞ்சத்தை நிமித்தகாரணமாகிய ஒரு கர்த்தா வுண்டாக்கவேண்டும்,

என—ஏதிடர் எ-து என்றருச்செய்யிற் கன்மமே கர்த்தாவாகவமையாதோ அதற்கு விக்கினமென்னென்று விண்ணப்பஞ்செய்ய,

எனில்—அசேதனம் எ-து என்பாயாகில் அது குற்றமற்ற அசேதனமல்லவோ,

அருமறை—இசையினுனே எ-து நிட்களமாயிருக்கும் சாந்தனுகிய சிவன் நிட்கள சகளமாயிருப்பர் பிரகாசம்விளங்கிய சதாசிவதேவர் சகளமாயிருப்பர் மகேசுவரதேவர் அவ மூவரையும் (சுதந்திரத்திருமேனிகளாகக்) கொண்ட கோட்பாட்டையுடைய கீர்த்தியுடையோனுகிய பரமசிவனே (கர்த்தா) என்று நிச்சயமாக இனிதாக அரிய ஆகமங்கள் சொல்லநின்றன எ-று.

மதி, சின், மற்று—அசை. (௫௫

அடையா விகார மல்கினுஞ் சுடரவன்
சுடர்வீழ் தாமரைத் தோடினி தலர்த்தவு
மற்றவை குவிப்பவு மலர்த்தவுங் கொற்றக்
கிரணத் ததுவென, வரணமில் கூற்றின்
முரண்டொலை யொருவனு முரியாச் சத்தியி
னண்ட ரண்டமற் றெண்டர விடைவ
செய்தக் கண்ணுஞ் செயலிலன், வெய்யோ
னிலங்குகதி *ரீரமட் டிரண மெழுகை
நலங்கொளக் கரைத்து நவையற வலித்தற்
கொன்றே போலச் சென்றகல் பறியாச
சத்தியிற் பிணித்தற் கப்பிணி யவிழ்த்தற்,
கன்ன சத்தி யறியிற் பன்னுவம்
பொருவொடு போகா வொளியொடு பொருந்தி
யளவற வகன்று விளைவதோர் சலன
மின்றி யென்று நின்றுங் கொன்று
மறைப்பதை யின்றி யுறப்பெருந் தகன்ற
வுருவொடு செறியாது வெருவரு பராக
மாதிய வணையா, தலைரம் பூத
மூர்தரு விநதுவி னோர்தர வியைந்த
செய்தியிற் சிறநதும் பிறிதிற் சிறிது
மூய்யா தாசை யொளிமுக மெங்கணு
மாகி முதலிடை கடையிற் போகா
தியாவதோர் பந்தமு மிரீஇப் போவதும்
வருவது மிறந்து மேலாய் முடிந்த
திருவிரி யெல்லை யாகி யொருவா
துணங்கின, தரனை யிணங்கி, வணங்கா
விந்து வைகரி யாதி விருத்தியில்

* ஈரமண் நவையறவலித்தற்குத் திரணமெழுகை நலங்கொளக்கரைத்து எனக்கூட்டுக; இது எதிர்நிரனிரை.

வந்தா ணவமான் மாவை மறைப்பது
போல விகாரித் ததுமற் றெதுபோற்
சாலு மெனிற்கட றண்கதிர் வெஞ்சுட
ரொட்டிய காலை யுருத்தெழு திரையின்
விட்டிய ரோதை விரவி முட்ட
வந்தர மறைப்பது போலப் பொங்கிய
வாறென, வமோக னீறில் சத்தி
யொன்றுபல போல நின்றியல் பெவணெனின்,
வென்றி விரிச்சிகன் விரிகதிர் கொடையிற்
கோடலி னொன்றே யாகி யிச்சை
யாடா தாகி யாடுநன் போலப்
பலபோற் றோன்ற லலர்வா ளமல
னிச்சைசெய் சத்தி யிவண, மற்றவன்
காரியத் திசைந்த பேரிசைப் பெருவலி,
யறிவின் றறிவதை யொத்துப் பிறிவின்
றிருந்தொழி லிலதந் தருந்தொழிற் சிவணலு
மருமறை யகத்து முலகத் தெங்கணும்
வருமறி, சிந்தா மணிகற் பகமிவை
வேண்டுநர் வேண்டிய வாண்டாங் குதவ,
லன்ன தாய வளவி லரனுடைப்
பன்னு ஞானப் * படரடு பெருவலி
யிலங்கிருங் கிரியையின் விதியி
னலந்தரு காம நல்குமன் னயந்தே.

இது, பஞ்சகிருத்தியச்செயலால் விகாரங்கூடுமென்று வினவப் பரமசிவன் அவிகாரி யாயிருந்தே ஏகசத்தியாலே பிரபஞ்சகாரியஞ் செய்வனென்று கூறியது

(இ-ள்) அடையா—,அதுவென எ-து ஆதித்தன் அவிகாரமுடையனுயினும் ஒளியுடைத்தாகிய தாமரைமொட்டை யினிதாக வலர்த்தவும் ஆம்பன் முதலான புட்பங்களைமொட்டிப்பிக்கவும் பறித்தபூவை யுலர்த்தவும் வலிய கிரணத்தாலேசெய்யாநிற்கும் அதுபோல,

அரணமில்—செயலிலன் எ-து பரிகாரமில்லாத கூற்றுவனுடைய வலியைக்கெடுத்த பரமசிவனும் கெடாத சத்தியினுலே தேவலோகமும் மற்றெண்ணிறந்த அண்டங்களும் செய்தானேயாயினும் அவிகாரியாயிருப்பான்,

வெய்யோன்—அவிழ்த்தற்கு எ-து இந்த ஆதித்தனுடைய விளங்காநின்ற ஒளியானது ஈரமண்ணைக்குற்றமற வலிக்கப்பண்ணவும் வலியுண்டானமெழுகை அழகிதாக உருக்கவும் ஒன்றேயாயிருந்தமைபோல ஒருநாளிலே கூடுதலும் பிரிதலுமறியாத ஏகசத்தியாலே சிருட்டிதிதியையும் சங்காரத்தையுஞ் செய்யாநிற்பர்,

* படரடு பன்னு ஞானப் பெருவலி எனக்கூட்டுக.

அன்னசத்தி—அணையாது எ-து அத்தன்மையாகிய சத்தியிருக்கும்படி யறியவேண்டில் அதனைச்சொல்வோம் உவமையில்லாத மகாப்பிரகாசமாய் அளவில்லாமற் சர்வவியாபியாய்த் தனக்குண்டாவதோர் விகாரமின்றி நித்தியமாய் அவ்விடத்தொரு பதார்த்தத்தான் மறைக்கப்படாததாய் மிகப்பெருத்து விரிந்திருக்காநின்ற உருவமுடையதன்றாய் நல்லோரிலே வெருவப்பட்ட ராகத்துவேஷமுதலானவற்றோ டிசையாததாய்,

அல்லைம்பூத—நுணங்கினது எ-து விரிந்திருக்கின்ற பஞ்சபூதங்களுக்கு (முபாதானமான அசுத்தமாயையைப்) பிரேரிப்பதான சிவதத்துவத்தில் அழகிதாகப் பொருந்திய பஞ்சகிருத்தியங்களிலே பிரகாசித்தும் இக்கிருத்தியமன்றி (வேறு பதார்த்தமில்லாமையாலே) மற்றொரு தொழிலில் யாதுமாசையின்றியே சர்வதோமுகமாய் விளங்கி முதனடுவிறுதியின்றியே சருவபந்தங்களையுமொழிந்து போக்குவரவின்றியே எல்லாப்பதார்த்தங்களுக்கு மேலாய் முடிவான (பூதாதிநாதபரியந்தத்திற் றேடக்கிடையாத) செல்வமிருந்தவெல்லையாகி நீங்காத சூக்குமமானதாய்,

அரனையிணங்கி எ-து பரமசிவனுடனேகூடி,

வணங்கா—விகாரித்தது எ-து கெடாத சுத்தமாயையினுடைய பிரவிருத்தியிற்றோற்றிய வைகரி மத்திமை பைசந்தி சூக்குமையென்னு * நால்வகைவாக்கையும் விருத்தியுறத்தோற்றுவிக்குங் காரணத்தினால்வந்து சூக்குமமான ஆன்மாவை ஆணவமறைப்பதுபோலச் சிருட்டிகாலத்திலே † விந்துவைக்கலக்காநிற்கும்,

மற்றெது—பொங்கியவாறென எ-து அசசத்தி என்போலக் கலக்குமென்னிற் சந்திராதித்தர் கூடியஞான்று சமுத்திரமானது கர்ச்சித்தெழுகிற திரையின் மிகவுமுயர்ந்திருக்கின்ற ஆரவாரம்மேற்கலந்து ஆகாசத்தை முடியமறைப்பதுபோலக் கோஷித்தவாறுபோல,

அமோகன்—எவணெனின் எ-து மோகமில்லாத பரமசிவனுடைய முடிவில்லாத ஏகசத்தியே கிரியாபேதத்தாலே திரிவிதமாகநின்று இயற்றுகை இயல்பென்னுமிடத்து அஃதெவ்வண்ணமென்னில்,

வென்றி—இவணம் எ-து வெற்றியையுடையனாகிய ஆதித்தன் விரிந்த கிரணம் மெழுகை நெகிழ்க்கவும் மண்ணினீரை வாங்கவும் ஏகசத்தியாகி ராகத்துவேடமற்றிருக்கவே இவையுடையனாகத் தோன்றினாற்போல ஏகசத்தியே பலபோலத்தோன்றாநிற்கும் விரிந்த பிரகாசமுடைய பரமசிவனுடைய இச்சாசத்தி யிவ்வண்ணமாயிருக்கும்,

மற்றவன்—பெருவலி எ-து அந்தப்பரமசிவன் கிரியாசத்தியாய்ப்பொருந்திய பெரிய கீர்த்தியையுடைய மகாசத்தி யிருக்கும்படிசொல்லில்,

அறிவின்று—வருமறி எ-து அறிவின்றியிருந்தும் அறிவுடைய பதார்த்தத்தைப் போன்று பரமசிவனைப் பிரிதலையின்றியே மிக்கதொழிலில்லாததாகி அது தான் அரிய தொழில்களைச்செய்யுமியல்பும் வேதாகமங்களும் உலக நூல்களும் அவ்வவ்விடங்களிலே சொல்லுமென்று அறிதி (என்போலவென்னில்),

---

* நால்வகைவாக்குகளுந் தொழிற்படு முறைமையைச் சிவஞானசித்தியார் "விந்துவின் மாயையாகி" என்னு முதற்குறிப்புடைய திருச்செய்யுண் முதலாயசெய்யுட்களாலறிக.

† விந்து - சுத்தமாயை.

சிந்தாமணி—உதவல் எ-து சிந்தாமணியுங் கற்பகமும் என்று சொல்லப்பட்டவை அசேதனமாயிருந்தும் வேண்டினோர் வேண்டினபொருள்களை அவ்விடத்தவ்விடத்துதவி னாற்போலாம்,

அன்னதாய—நயந்தே எ-து அத்தன்மைத்தாகிய அளவில்லாத பரமசிவனுடைய ஆன்மாக்கள் துக்கத்தைக்கெடுக்குஞ் சொல்லுதற்கரிய பெரிய ஞானசத்தியானது விளங்கி யிருக்கின்ற பெரிய கிரியாசத்தியினாலே ஆன்மாக்கள் பக்குவானுகுணமாக நன்மையாகத் தருகின்ற போகமோக்கமென்னும் வேண்டியபொருள்களை மிகவும் பரமகாருணியத்தோ டுங் கொடுத்துக்கொண்டு நிற்கும் எ-று.

மற்று மூன்றும் வினைமாற்று. (ருசு)

நார மேய நல்லுயி ரனைத்து
நார மன்றே நாரமின் றின்றே
நாரச் * செய்தியு மன்றே நார
மாருயிர்க் கல்ல துயிரதற் குதவும்
பேருப காரமு மின்றே யாயினு
மாருயிர்க் கபய மறன்மற் றுள்ளா
தாருயிர்க் கபய, மற்றும் பேரிசை
வான்மண் டைநீர் வளியக நிறைதந்
தானு தப்புறம் படர்ந்துந் தானவை
யுறைவிட னாங்கினி தளித்து மிடையிற்
றானே யாகி யேனைய விளக்கி
யிருவே றிசையா தொருவழிச் சிவணி
யின்றி யமையாச் சிறப்பிற் றாகி
யென்றுந் தானவை யொன்றா மாறும், ம
பதங்கன் பல்கதிர் பரப்பி விசும்பினி
தியங்குங் காலை யெழுந்தினி தியற்றும்
மன்னுயிர்த் தொடக்க மாத்தாண் டற்கன்
றன்றோ தயனு மருவிலை யமளிப்
பாய னீங்கிப் பஃறொழில் புரிகென்
றேவுதிறம் படரா னோனு மேவிய
வாதப னிடத்தன் றருந்தொழில் புரியு
நீதி யில்லை நீணிலத் தோர்க்கே,
யின்னுங் கேண்மதி, யினமலர் துதைந்த
† தாதுபடு கொழுநிழல் பாதவ மன்றே

* செய்தி - காரியம்.

† தாது இனமலர் படு கொழு பாதவ நிழல் (பாதவம்) அன்றே எனக்கூட்டுக.

மாதர் வண்டொடு சுரும்பிமிர் நறுநிழல்
பாதவம் படைத்தது மன்றே பாதவ
மின்றே னீழல் கண்டது மிலமே,
யொன்றோ மற்று முண்டுமன் பெரிதே,
கருந்தாது கொட்கு மிருஞ்சிலை யிரும்பை
வருந்தினை மறுகுமன் னென்னா தையமின்
றிருந்ததை கறங்கற் கிதனிடத் தல்லதை
பொருந்தா, தென்ன, விரிநதொளி கான்று
மாதிர மனைத்து மீரேழ் புடவியு
மளவிழைத் தளவா வண்டமும் பலவெனக்
கொட்புறு காலமு மெப்பே ருயிரு
* முறுவரை யெய்தி யொன்றொடும் புணரா
தினைய காக்கும் களைகண் ணாகிக்
களைகண் யானெனும் விளைவற 'வொரீஇப்
பன்னிய வெவற்றுந் தன்னதோர் குறையின்
றன்றோ னின்ற வகாரணாற் காரண
மென்னதென் றிசைக்குவம யாமே யன்றோ
வுரையுணர் வொடுங்கின † ருணர்வின்
விரையுறு கடியின் விரவி யோனே.

**இது, பரமசிவன் செயல்களனைத்திற்குங் காரணமாகித் தான் அவிகாரியாயிருப்பானென்று கூறியது.**

(இ-ள்) நாரமேய—உயிர்க்கபயம் எ-து சலத்தில் வர்த்திக்கும் பலவர்க்கத்து நல்ல பிராணிகளுஞ் சலந்தானல்ல சலத்தையின்றியமையா சலத்தின்காரியமுமல்ல சலந்தான் நிறைந்த பிராணிகளுக்கு இரக்ஷையாமல்லது பிராணிகடாம் சலத்துக்குச் செய்யும்பெரிய உபகாரமுமில்லையாயினும் நிறைந்த பிராணிகளை யிரக்ஷியாநின்றேன் நானென்று இச்சலந் தானினையாதிருந்தும் இந்த நிறைந்தபிராணிகளுக்கு இரக்ஷையாயிருக்கும் (இது "பதியுள போதே வேறும் பசுபாசமிரண்டுக்கிந்தப் பதியறிவசைவுண்டாகப் பண்ணிடும்" என்பதற்குத் திட்டாந்தமெனக்கொள்க),

மற்றும்—ஒன்றுவாறும் எ-து பெரிய கீர்த்தியையுடைய ஆகாயமானது பிருதுவி யப்புத் தேயு வாயுவாகிய நாலிலும் வியாபித்தும் அமையாது அப்பாலுமுடைத்தாய்த் தான் அந்தப்பூதங்களுக்கு மிகவுமினிதாக இருக்கத்தக்கவிடங்கொடுத்தும் நடுவுந்தானாய் அப்பூதங்களை யுருத்தெரித்துத் தான்வேறுபாடற ஒருபடித்தாகக்கூடித் தன்னையின்றியமையாத

---

* உருவரை - உரியபொருள்; திருக்கோவையாருரையில் முற்றூட்டு என்றார்; உருவரையெனினும் முற்றூட்டு எனினுமொக்கும்.

† உணர்வு - ஈண்டு ஐம்புலன்.

அழுல்கயுடைத்தாய் ஒருநாளும் தானவையிற்றேடு கூடியிரா து (இது இன்றியமையாமைக் குத் திட்டாந்தமெனக்கொள்க),

பதங்கன்—நீணிலத்தோர்க்கே எ-து ஆதித்தன்றன்னுடைய கிரணங்கள் பலவற்றையும் விரித்துக்கொண்டு ஆகாயத்திலே யினிதாக இயங்கும்பொழுது எழுந்திருந்து நன்காகத் தொழில்புரியு நிலைபெற்ற வான்மாக்களின்றேடக்கு ஆதித்தனுக்கின்று அந்த ஆதித்தனுந்தான் பெறுதற்கரிய விலையையுடைத்தாகிய சயனத்தினின்று மெழுந்திருந்து பல தொழில்களைச்செய்யுங்களென்று ஏவு முறைமையைச் செய்யானாயினும் இச்செயலுக்குக் காரணமாகப்பொருந்திய ஆதித்தனிடத்தல்லது செயற்கரியதொழில்களைச் செய்யுமுறைமை மிக்கவிப்பூமியிலுள்ளார்க்கில்லை (இது பெத்தமுத்தியிரண்டினும் பேரறிவு சிற்றறிவிருக்குமிலக்கணத்திற்குத் திட்டாந்தமெனக்கொள்க),

இன்னுங்கேண்மதி எ-து இன்னமுங் கேட்பாயாக,

இனமலர்—இலமே எ-து செறிந்ததாதோடே கொத்துக்கொத்தான பூக்களையுடைய அழகிய விருக்கத்தினிழல் விருக்கந்தானன்று காதலிக்கப்பட்ட பெடையும் வண்டும் சத்திக்கும் அழகியநிழல் விருக்கத்தாற்படைக்கப்பட்டதுமன்றேயாயினும் விருக்கமில்லையாயின் நீழல்காண்பதுமில்லை (இது அநாதியே பரமசிவனைப்போல ஆன்மா நித்தியமாயிருந்ததாயினும் அவனையின்றி ஆன்மாவென்றொருபொருள் தோன்றுதற்கிடமில்லை என்றதற்குத் திட்டாந்தமெனக்கொள்க இவைநான்கும் அகாரணாற்காரணமாகப் பஞ்சகிருத்தியஞ் செய்தற்கு அருளியதெனக்கொள்க),

ஒன்றோ—பெரிதே எ-து இன்னமுந்திட்டாந்தம் ஒன்றேயோ மற்றும் பலவுள,

கருந்தாது—பொருந்தாது எ-து இருப்புத்தாளைச் சுழற்றும் பெரிய காந்தக்கல் இரும்பை வருந்திச் சுழற்றவேண்டுமென்னுங் கருத்தில்லையாயினும் ஐயமறப் பெரிய விரும்பு சுழலுதற்கு இதனிடத்தல்லது பொருந்தாது (இது பரமசிவன் அவிகாரியாயிருக்கச் சத்தி சந்நிதானத்திற் பிரபஞ்சங் காரியப்படுதற்குத் திட்டாந்தமெனக்கொள்க),

என்ன எ-து இவ்வைந்து திட்டாந்தமும் போல,

விரிந்தொளி—விரவியோனே எ-து சர்வவியாபியாய்ச் சுயம்பிரகாசமுடையனாகித் திக்குகள் பத்திலும் உலகம் பதினாலிலும் அளவுசெய்தளத்தற்கரிய வண்டங்களிலும் வருகாலஞ் செல்கால நிகழ்காலமென்று சுழன்றுவருங் காலங்களிலுஞ் சருவான்மாக்களும் போகம்புசித்தற்குத் தானின்றியமையாத * உரிய பொருளாய் நின்று இவைகளிலொன்றினுந் தான் பற்றற்று இத்தன்மையாகிய வுயிர்களை இரக்ஷித்தற்குத்தான் இரக்ஷகனுமாய் இரக்ஷகன் யானென்னும் அகங்காரமறவொழிந்து இப்படிச்சொல்லப்பட்டபொருளெவற்றினிடத்தும் தானொரு குறைவின்றியே நான்மறையை முழுதுணர்ந்து ஐம்புலன்களைச் செற்று மோனிகளாயினோர் உணர்விலே பூவிற்கந்தம்போலக்கூடி நின்றோனாகிய அத்தன்மையனை பரமசிவன் அகாரணாற்காரணனாய்நின்ற வியல்பை ஐயோ நாமென்னென்று சொல்வோம் எ-று.

மற்று - வினைமாற்று. ஏகாரம் - தேற்றம். மன் - அசை. தாது - குறுக்கல் விகாரம். ஐ - சாரியை. விரை - மலர். (௫௭)

* மற்றாட்டாகிய வுரிய பொருளாய் நின்று என வுரைகூறிய பிரதியுமுண்டு.

கலைநில வலனெனிற் புலனல னலனெனி
னலமலி புற்கல னிலைமலி கலையுட
னொன்ற லொன்று தாக லென்று
மொன்றிற் கொன்று தென்றனி நாயக,
பன்னு நிட்கள மறிதற் குன்னிற்
பசுவுக் கமலன் சத்தி யொசியா
துற்ற வுண்மை யானு மற்றவன்
மந்திர வலியி னானு மந்தமி
னிட்கள மறித றொக்கதன் வலியி
* னொசிவிட விகார மான, வசிபடு
சகல னானுந் துகடொகு புற்கல
னல்லன் மாயை யவயவ மாட்டி
யெல்லிய னிமல மாய நல்ல
மந்திர கலையின் மரீஇ மைந்துமலி
திருந்திருந் தியானத் திருந்தது பெருந்தகை
யரும்பெறல் யோக†ரிற் பொருந்துதல் விடலென,
நின்றது விந்து நிட்கள மலமன்,
மன்ற நன்றினி தாயிற், சென்றுய
ராகத் தன்மைய னாயிற் போகிய
திருங்கலை யிவணம் பெருந்தகை, திருந்திய
லரும்பெறல் யோகப் பெருந்துறை படியுநர்க்
கிருந்ததோ ரிலக்க மின்றெனிற் பொருந்தா
தாகலி னாத விந்து வாகிய
யோக வாணர்க் குறுபயன் புரப்ப
நின்றனன், யாவு மொன்றிய வறிவ
னாகலி னமல, னற்றோ, போகிய
வாருயிர்க் கருட்கடன் பூண்டு சீர்மிக
வுயர்ந்தனன் பணிந்த வியந்தா கத்தை
நயந்தன னல்லகொ னன்றே வியந்தென,
‡ விச்சை யருளோ டிறைமை நச்சி
யிலய போக வதிகா ரத்து

* ஓசிவிட விகாரமான தன்வலியின் தொக்க அந்தமினிட்கள மறிதல் எனக்கூட்டுக

† இல் - ஈண்டு இடமாகிய வுடலினைக்குறித்து நின்றது.

‡ இச்சை போகம் இறைமை அதிகாரம் அருள் இலயம நச்சி நிலையினனீசன் எனக் கூட்டுக; ஓடு என்பதை இச்சைமுதலிய மூன்றனோடுங் கூட்டுக; ஓடு-மூன்றாமுருபு.

நிலையின னீச, னிலைஇத், தொலையா
மாயை முதலிய விச்சைக் * கிறைபி
னேய செய்திபி னே,யத் தூய
வத்துவா வதனுக் கதிபன் சுத்த
னெத்தகை யனந்த னிறையசுத் தத்தின்,
மிக்க பூபதி தலைமை வைததோன்
வைத்த நிருபனே டொத்தா மாறெனச்
செய்வ னெவையுஞ் சிவன்வலி யவமற
வையமின் றுணர்த்த வறிந்தினி தெவையுந்
தூய வாக ஞகி யாயா
ஞான மெவையு நலங்கொள
வூனம தகல † வுறவிரிந் துயர்ந்தே.

**இது, உரையுணர்வோருங்கின நுணர்வின் விரையுறு கடியின் விரவிய பரமசிவனுக்கு நிட்களமுஞ் சகளமுஞ் சகளநிட்களமும் பொருந்தாமை வினவ இவையிற்றுக்கு இவன் இன்றி யமையாறுயிருப்பனெனக் கூறி அசுத்தாத்துவாவுக்குக் கர்த்தா அநந்த தேவரே யெனக் கூறியது.**

(இ-ள்) கலை—நாயக எ-து தேகத்தோடுகூடி யிருந்திலனுயிற் றெரிசனத்துக்குக் கிட்டாதவனும் அன்றியே தேகத்தோடே கூடியிருப்பானுயில் நல்ல பந்தனுவன் கழித்தற் கரிய தேகத்துடனே கூடுதலுங் கூடாமையுமாகிய வீரியல்பு என்று மொருபொருளுக்குப் பொருந்தாது எனக்கு உவமையில்லாத கர்த்தாவேயென்று விண்ணப்பஞ்செய்ய,

பன்னும்—விகாரமான எ-து நீ புலப்படுவானல்லனென்று சொல்லிய நிட்களத்தை யறியுமுபாயம் விசாரிக்கில் பாசபந்தனுன வான்மாவுக்கு இந்த நிட்கள சிவசத்தி குற்றம றப்பதிதலாலே முத்தனுனமையாலும் மற்றும் பிரத்தியக்ஷத்திலே இவனுடைய ஆக்கினை யான் மந்திரசத்திகள் பலிக்குநதன்மையாலும் முறுகிய விடவிகாரங்கண்டு விடந்தீண்டின மையை யையமற நிச்சயித்தாற்போல இப்பொருள்கள் இவன்சத்தி சந்நிதியிலே முடிந்தன என்று நித்தியமாய நிட்களத்தை நிச்சயித்தறிதலைக்கூடும்,

வசிபடு—விடலென எ-து இனி வசீகரமுடைத்தாய ஏகதேசமாகிய சரீரங்கொண் டோனுயினும் குற்றங்கூடிய புற்கலனல்லன் (அஃதெங்ஙனமென்னில்) மாயாகாரியமான தேகத்தை யொழித்து ஒளியுடைத்தாய நின்மலமாகிய நல்ல மந்திர சொரூபமாகப் பொரு ந்தி வலிமிடைந்து திருந்தியிருக்கின்ற மகத்தாகிய தியானத்திலே பக்குவப்பட்டோர்க்குச் சொரூபமாகியதொருகுறிவேண்டித் திருமேனிகொண்டான் பரமசிவன் (என்போலவென் னிற்) பெறுதற்கரிய யோகிகள் சுவேச்சா விக்கிரகங்கொண்டு விட்டாற்போல,

நின்றது—அலமன் எ-து இங்ஙனங்கூற இனி நின்றதாகிய திருமேனி சகளநிட்களம் அதுதான் நிட்களமல்ல,

---

* இறையின் - இதில்வந்த இன் சாரியை.

† உறவிரிந்துயர்ந்து ஊனமதகல எவையுஞ் செய்வன் எனக்கூட்டுக.

மன்ற—ஆயில் எ-து. இனித்ாக நிச்சயமாக இதனை யாராயில்,

சென்றுயர்—பெருந்தகை எ-து விரிந்துயர்ந்திருக்கின்ற திருமேனிகொண்டானுன படியைச் சொல்லில் இவ்வண்ணம் பெரிய கலைமுதலாகிய தத்துவாங்கிசங்களாலே சரீரமெடுத்தானல்லன் பெருந்தகைமையையுடையோனுன பரமசிவன்,

திருந்தியல்—நின்றனன் எ-து திருந்தியிருக்கின்ற வியல்பையுடைய பெறுதற்கரிய யோகமாகிய பெரிய சமுத்திரத்திலே ஆடுவோர்க்குண்டாயதோர் இலக்காய சகளநிட்கள வடிவில்லையாயின் நிருவகிக்கவொண்ணுதாகலால் விந்துநாததரிசனமுடைய சிவயோகிகளுக்கு மிகவும் பலன்கொடுப்பான் காரணமாகச சகளீகரித்தான் (இவன் நிட்களமானபடி சொல்லில்),

யாவும்—அமலன் எ-து சர்வபதார்த்தங்களிலு மொருபடித்தான அறிவையுடையோனுதலாலே நிட்களன்,

அற்றே எ-து அதுவொன்றே,

போகிய—வியந்தென எ-து அளவிறந்த நிறைந்த ஆன்மாக்களுக்கு அருளென்னு முறைமையைப்பூண்டு எல்லையில்லாத சீரையுடைய பெரியோன் (தன் பெருமைக்கு) ஆச்சரியமாகத் தாழ்ந்த தேகத்தை நல்லவதிசயமாக விரும்பினனல்லவோ,

இசசை—ஈசன் எ-து இங்ஙனமாதலால் இச்சையாலே ஆன்மாக்களைப் போகம் புசிப்பிப்பான் காரணமாகச் சகளநிட்களமான சதாசிவ தேவரிடத்தும் இறைமையாலே அதிகாரமாகச் சகளீகரித்த மகேசுவர தேவரிடத்தும் அருளாலே லயமாக நிட்களனுகிய லய சிவனிடத்தும் விரும்பி நின்றுன் பரமசிவன்,

நிலைஇ எ-து இங்ஙனநின்று,

தொலையா—செய்தியினே எ-து கெடாத அசுத்தமாயை முதலாகிய அசுத்தாத்துவாவுக்குக் கர்த்தாக்களாகச் சுத்தாவத்தை முதலாகிய தத்துவங்களடங்கிய சுத்தாத்துவாவைப் பரமசிவன் பிரேரித்தமையின்,

அத்துய—அசுத்தத்தின் எ-து அந்தச் சுத்தாத்துவாவுக்கு அதிபனுகிய பரமசிவன் எவ்வண்ணங்கர்த்தா அவ்வண்ணமென அசுத்தாத்துவாவுக்கு அநந்த தேவர் கர்த்தாவாயிருப்பர்,

மிக்கபூபதி—விரிந்துயர்ந்தே எ-து மகத்தாகிய இராசாவாலே யநுக்கிரகிக்கப்பட்டு இராச வரிசைகொடுக்கப் பெற்றேன் இப்படிக்கொடுத்த இராசாவோடொக்கக் கர்த்திருத்துவஞ்செலுத்தினுற்போலப் பரமசிவன்சத்தி அழிவுபடாதே எக்காலமுங் குற்றமறவறிவிக்க இனிதாக அனைத்தையுமறிநது அவ்வனநததேவர் சுத்தாத்துவாவாலாகிய திருமேனியோடே நின்று ஆராய்தற்கரிய சர்வஞானத்தையு நலமாக வுடையாராய் மிகவும் விரிந்துயர்ந்து தோடமற அசுத்தாத்துவாவினுள்ளன யாவையுஞ் செய்யாநிற்பர் எ-று.

மன் - அசை. (௫௮)

மேவி ஞக * மனந்தற் கியாவு
மறிவொடு படாஅ பொறிபிற புலன்கொள
லுய்த்தல் செல்லா வாகலி னப்புலன
பொறிகொ ளளவை செறிதலின் வெறிகொ
ளாக மாயை யாதலி, னன்றிப்
போகிய நாம விசேட மெய்த
லுளதெனிற் சிறிது சேய்த்தாய் வளமலி
யுரைமுதல் விடய முணர்க விரைவிஞே
டென்னின், மற்றவ ஞகம் பன்னிய
தூய யோனி வினையுட னேயா
தாட காலே யவனே பாச
முடைத்தன ஞகலி னவனது ஞானம்
தடுக்குநர் யாரோ, யுரக முடைத்தய
† லடுவது தன்மை யடலின், றதுபோல்
விடுமொளி யனந்தனை விரவிய பாசஞ்,
சின்ன டானுஞ் சின்ன வுற்பவ
மென்ன நான்வி யோகத் தன்ன
மந்தி ரேசனு மந்தமி ‡ ருனங்
கூடலி, னடம்போ லாடிய லாக,
மந்திர வலியின் மருமமந் தமில்
கால நீடல் போலவு மோடிய
வேண்டிய வினையுங் காண்டகு காலங்
கூடின ஞனு § மேனி பீடிய
லாண்டகை வலியி, னிலைமை மாண்ட
வாக மவன தமலந் தாதம
னளினப் பாசடை யேய்ப்ப, வொளிய
தந்திர விறலி னெவண மைந்தம
லிரதத் தாக மெவணம் புரைதீர்

* அனந்தற்கு ஆகம் மேவின் யாவு மறிவொடுபடா வெறிகொள் மாயை ஆகம் ஆத லின் பொறி பிறபுலன்கொளலுய்த்தல் செல்லா அப்புலன்பொறிகொளளவை செறிதலின் ஆகலின் எனக்கூட்டுக.

† அடுவது - வினையாலணையும் பெயராய் நஞ்சினைக்குறித்தது.

‡ தானம் வலியாதலின் ஈண்டுச் சத்தியென்றுரெனக.

§ மேனிபீடிய லாண்டகைவலியின் காண்டகுகாலங் கூடினஞனும் மருமம் மந்திர வலியின் அந்தமில்கால நீடல்போலவுமோடிய வேண்டியவினையும் எனக்கூட்டுக.

போத மேதமின் மேதகு பெருவலி
நீதின் றறி,திக பூறைபி னோயுடன்
முன்செயன் முரஞ்சிய தெவணவ § ணெண்செய
லிறைமிட லதனிற் குறையிலன், கறையின்
மந்தி ரேசனு மந்தமி லமலன்
மைந்தின் மாயை கலக்கி
வெந்திறற் செய்தி விரவுவன் விரைந்தே.

**இது, தூயவாகனுகினும் அனந்ததேவர்க்குப் படைப்புக்கூடாதென்று வினவ இவர் சக ளீகரித்தே அசுத்தாத்துவாக்களைப் பரமசிவன்சத்தியாலே செய்வரென்று கூறியது.**

(இ-ள்) *மேவின்—மாயையாதலின் எ-து அனந்ததேவர்க்குத் திருமேனியுண்டா யிற் சருவபதார்த்தங்களையுமறிதல்கூடாது அஃதெங்ஙனமெனிற் பயத்தையுண்டாக்குகிற மாயாகாரியந் தேகமாதலின் அத்தேகசம்பந்தமாகிய இந்திரியங்கள் அந்நியவிடயங்களை யறியமாட்டா அந்த விடயங்கள் தம்மைத்தம் பொறிகளாலேயல்லது உணருமுபாயமில்லை யாதலால்,*

*அன்றி—என்னின் எ-து அங்ஙனமன்றியே மகத்தாகிய அனந்ததேவரென்னுஞ் சிவநாமவிசேடத்தான் மிகவறிவுண்டென்னிற் சிறிது தூரதரிசனமாய் அழுகுமிருந்த சத்த முதலாகவுள்ள விடயங்களை விரைவினிலறியக்கூடுமென்பாயாயின்,*

*மற்றவனுகம்—யாரோ எ-து நீ கேட்கிற அனந்ததேவர் திருமேனி சொல்லப்பட்ட சுத்தமாயையாதலாலே கன்மத்துடன் கூடியிருக்கமாட்டாது ஆனபொழுது அவர் பாசச் சேதம் பண்ணினராதலால் அவருடைய சர்வஞ்ஞத்துவத்தை யார்தான் ஒழிக்கவல்லார்,*

*உரகம்—அடலின்று எ-து பாம்பினிடத்திலே பிறரைக்கொல்லுவதாகிய நஞ்சு கிட ந்ததாயினும் அது தன்னை வாதிக்குமதில்லை,*

*அதுபோல்—பாசம் எ-து அதுபோலப் பிரகாசமாகிய அனந்ததேவர்க் குண்டாகிய பாசமும் அவரை வாதியாதிருக்கும்,*

*சின்னமானும்—கூடலின் எ-து சிந்திலுற்பத்தி யற்பமாயினும் ஒன்றோடே மிகப் பற்றினபடியான் மிகவும் பரிணமித்தாற்போல அத்தன்மையுடைய மந்திரநாயகரும் முடி வில்லாத பரமசிவன்சத்தியோடே கூடினபடியாலே அசுத்தாத்துவாவுக்குக் கர்த்தாவா யிருப்பர்,*

*அடம்—ஆகம் எ-து கொட்டைப்பாசி நீரிலேகிடந்தும் அதிற்றோயாதவாறுபோல இவர் வெற்றியின்ற திருமேனிகொண்டாராயினும் அதிற்றோய்விலர்,*

*மந்திரவலியின்—ஆண்டகைவலியின் எ-து இவர் திருமேனி வலியயன்ற பரமசிவன் சத்தியாலே காணத்தக்க காலத்துடனே கூடியதாயினும் யோகிகடேகம் மந்திரசத்தியாலே*

*§ எண்செயல் - எண்செய்தல் அல்லாத; எனவே அளவிறந்த என்பது கருத்தாயிற்று; செய்-முதனிலைத்தொழிற்பெயர்.*

அளவில்லாத காலஞ்சென்றிருத்தல்போல அதிதூரமாகிய வேண்டியகாலம் அழியாதிருக்கும்,

வலியினிலைமை—எய்ப்ப எ-து (வலியின் என்பது மத்திமதீபம்) சிவசத்தியோடே கூடுநிலைமையால் இவரதழகிய திருமேனி மலபந்தமுடைத்தன்று என்போலவென்னில் நீரிற்றொடக்குறாத தாதையுடைய தாமரையின் பசியவிலைபோலாம்,

ஒளிய—அறி எ-து பிரகாசமான வேதாகமங்களைக்கற்றோர்க்கு உண்மைஞானமுண்டானாற்போலவும் தலைமையமைந்த இரதம்புசித்தோர்க்குச் சரீரசித்திவந்தாற்போலவும் அனந்ததேவர் குற்றநீங்கியஞானமும் குற்றமற்ற மேம்பாடான பெரிய சத்தியுந்தீதில்லையென்றறிவாயாக (இது நிரனிறை),

திகழுறை—குறையிலன் எ-து பிரகாசமுடைத்தாகிய ஔடதசத்தியாலே நோயானவுடம்பு முன்புபோலே வலிபெற்றதெவ்வண்ணம் அவ்வண்ணமே பரமசிவனுடைய அளவிறந்த சத்தியாலே இவர் சத்திக்கு முடிவில்லை,

கறையின்—விரைந்தே எ-து குற்றமற்ற அவ்வனந்ததேவரும் முடிவில்லாத பரமசிவன் சத்தியாலே அசுத்தமாயையைக்கலக்கி மிகவலிய பஞ்சகிருத்தியங்களை விரைந்து செய்யாநிற்பர் எ-று.

மற்று-வினைமாற்று. தான் - அசை. (ருக)

யாணர்க் கோங்கின் குவிமுகை யெள்ளிப்
பூணகத் தொடுங்கிய முலையு மாணிறக்
கயன்மலைப் பன்ன கண்ணும் புயலெனப்
பின்னுவிட நெறித்த கூந்தலும் பொன்னென
வாகத் தரும்பிய சுணங்கும் பாகொத்
தின்றீங் கிளவியு நிதம்பமு மொன்றிக்
கண்ணு மனமுங் கவற்றப் பண்வர
விரங்குமணி மேகலை யிரியச் சுரும்பொடு
வண்டினம் வாய்விட் டார்ப்பத் தண்டா
நாணு நிறையு நடப்பப் பூணொடு
கோதை பரியத் தாதுகு பொங்கணைக்
கலவி விளைந்த காமத் தேற
லுண்டோ ருணரி னல்லதை யவருங்
கொண்டுரை கூடா மாறுந், தெண்டிரை
யமிழ்துபடு தீஞ்சொ லுமிழ்பெரும் புலனும்
பனுவற் செவ்வி படிந்துண்டு நிமிர்ந்த
வொருபெரும் புலனு மொருங்கினி திழந்து
மெய்யுரை பெறாஉஞ் செவ்வி யாளன்

கனாத்திற னல்லதை வினாத்திறம் பிறிதோ,
பொறைப்பெருங் கவசம் புக்குச் செறுப்பருஞ்
செயறீர் கனைகழல் கட்டி மயலொடு
காம நீத்த கயந்தலை கடிதூர்ந்
தச்ச மின்மையிற் றுணையின் றாங்கு
மெய்ப்படு பேருணர் விசைய மள்ளர்
பூமுக ஞானப் புகர்வா ளேந்தி
யைம்புல னடக்கி யறுபகை யோட்டி
யிருவினை வீட்டி யொருவழிக் கொளீஇய
வுள்ளமோ டுணர்வுசூ ழொடுக்கி
யுள்ளுந ருணர்வ துணர்வின் பாலே.

**இது, பசுவுக்கமலன்சத்தி யோசியா துற்றவுண்மையானு மற்றவன் மந்திர வலியினானும் அந்தமினிட்களமறிந்தவனுக்குச் சிவபோகம் இன்னபடியிருக்கு மென்று சொல்ல வொண்ணாமைக்குக் காரணமென்னென்று வினவ அவ்வநுபவம் அனுபவித் தறியுமதல்லது வாசாரகிதமெனக்கூறியது.**

(இ-ள்) *யாணர்—கூடாமாறும் எ-து வளப்பமுடைத்தாகிய கோங்கின் குவிந்த மொட்டையிகழ்ந்து ஆபரணங்களை யகத்திடப்பட்ட தனங்களும் மானோக்கத்தைக் கெடுத்துப் பிறழ்ச்சிக்குக் கயலையொத்த கண்களும் நீலமேகத்தினிறத்தையொத்துப் பின்னுதல் விட நெறித்த அளகமும் பொன்னிறத்தையொத்து மார்பிலே பரந்த சுணங்கும் பாகு போல இனிதாய அழகிய வசனமும் அல்குலுமாம் இவை யித்தனையும் பொருந்திக் கண்ணு மனமு மயக்கத்தைச் செய்யப் பண்ணுக்குப்பொருந்தச் சத்திக்கப்படாநின்ற ஒளியுடைத்தாகிய மேகலாபரணமுநீங்கப் பெடையும் வண்டும் வாய்விட்டாரவாரம்பண்ண அளவில்லாத * நாணமடமச்சம்பயிர்ப்பும் அறிவுநிறையோர்ப்புக்கடைப்பிடியு நீங்க ஆபரணங்களு மாலையுந் தம்மிற் பின்னிக்கலங்கப் புட்பங்களின்றாதுக ளுதிரப்பட்ட மகத்தாகிய சயனத்திற் போகத்திலுண்டாகிய காமவிரதம் புசித்தோரறியுமதல்லது அவர்தம்மாலும் இன்னபடியிருந்ததென்று சொல்லவொண்ணாதவாறுபோலவும்,*

*தெண்டிரை—பிறிதோ எ-து பாற்கடலிலுண்டாகிய அமுதுபோன்றஇனியவசனத்தைச் சொல்லும் வாக்காகிய பெரிய புலனும் அழகிய சாத்திரங்களிலே மூழ்கி அவையிற்றைப் புசித்துத் தலைமைபெறுஞ் சோத்திரமாகிய ஒப்பற்ற பெரியபுலனும் இவையிரண்டு மொக்கவே அழகிதாகவிழுந்து பரிசத்தாலே யறிவிக்க அறியு மூமன்கண்ட கனாப்போலவு மல்லது (வசனிக்கவொண்ணாத சிவானந்தபோகம்) இன்னபடியிருந்ததென்று சொல்லும் வேறுபாட்டையுடையதோ,*

*பொறை—உணர்வின்பாலே எ-து பெரிய உண்மைஞானத்தையுடைய வலிய வீரரான விசாரவான்கள் பொறுத்தற்கரிய வெகுளியுந் துன்பமும் வந்தாற் சகிக்கும் பொறு*

---

* *நாண்முதலாய நான்கையும் அறிவு முதலாய நான்கையு மினம்பற்றியெடுத்துரைத்தாரென்க.*

மையாகிய பெரிய கவசத்தையிட்டு எதிரியாற் செயித்தற்கரிதாகிய தன்னாற்பிறர்க்கும் பிற ராற் றனக்கும் ஒரு செயலில்லையென்னுஞ் சத்திக்கப்படாநின்ற வீரக்கழலை வீக்கிக் காம † வெகுளி மயக்கங்களை யொழித்தலென்னும் யானையைக் கடிதாக மேல்கொண்டு சர்வ சங்கநிவிர்த்திவந்து நிர்ப்பயமானமையாற் றுணைவேண்டாமையென்னும் படைத்துணையை யும் உடையரான அவ்விட்த்துக் கூர்மையையும் புகரையுமுடைத்தாகிய ஞானமென்னும் வாளை யெடுத்துக்கொண்டு பஞ்சேந்திரியங்களைத் தம்வசமாக்கிக் காமாதிபகையாறையு மோட்டிப் புண்ணியபாவங்களைச் செயித்துப் பரமசிவனே பரதத்துவமென்னு மொரு நெறிப்பட்ட அறிவொன்றேயல்லாமல் அல்லாத வுணர்வுகளைக்கெடுத்து அறிவோர் அறி வின்பாலாய் அறிந்தநுபவிக்கத்தக்கதாம் எ-று. (௬௦)

சகளங் கட்காண் டகுதித் தாகத்
துகளி றியானந் துறவா தறவ
நிட்களங் கட்காண் டகுதி நீளிடை
யுட்க வோடிய தோட மிக்க
பாவனை படியா தாவகை யரி,தெனின்
மேவினை யுணர்நனி, விமல, ஞேவா
நிலைமையன், குணமுக நிவநதோ, னிலனுரு,
வறிவறி யாமை யகன்றோன், பொறிபுனை
யோக வியோக முடைத்தோன், றாமனச்
சங்கற் பத்தொடு சகலங் கலைதீர்
பெங்கணு மிரிய விருந்தோன், பொங்கிய
மதியாங் கார மடித்தோன், விதியா
* லபாவ னவனைப் பாவா பாவத்
துயர்வறு பாவ மொழித்த பாவத்
துற்றோ, னேதுக் காலஞ் செற்றோன்,
றீண்ட றீண்டா தாதன் மாண்ட
வாக மணைத லகலல் போகோன்,
விகற்ப மேவோன், றரிப்பது தணித்தோ,
னிச்சை மற்று சிரயங் குற்றோ,

† இனம்பற்றி வெகுளியையுமுடன் கூறினர்.

* அபாவனவனை—பாவத்துற்றோன் என்பதற்குக் கரணவறிவாற் பாவிக்கப் படாத வனைக் கருவிகளோடு கூடிநின்றியற்றும் பாவனை சகலமாய்ப் போதலினாலுங் கருவிகணீ ங்கி நின்று பாவிப்பது கேவலமாய்ப் போதலினாலும் பாவனைக்கெய்தாதவனைப் பாவனைக் குள்ளாயினானாகப் பாவிப்பது பயனின்றிப் போதலினாலும் இத்திறத்துத் தாழ்ந்தபாவனை களையொழித்து அநந்நியமாய்த்திருவருளினாற் பாவிப்போர் பாவனை நிலையினின்றோன் என வுரை கூறிய பிரதியுமுண்டு.

னெற்றிவ னபாவ ஞூத, லெற்றே,
கூடான் குறிப்புட னதனு
லாடா வுலக மபாவனென் றறைவே.

**இது, உள்ளுநநுணர்வதுணர்வின்பாலாய் வசனிக்க வோண்ணுத வநுபவமாயிநுக்கிற நிட்களம் பாவிக்கப்படாததாயிநுந்த தேன்னேன்று வினவ அநுபியாதலிற் சட்சுவாதி கரணங் களுக்குத் தேரிசனமில்லாமையாற் கரண வறிவோழிய அநுபியாயிநுக்கிற வான்ம வறிவாலே தரிசிப்பார்க்குத் திநுவநுளாலநநியமாகப் பாவிக்கப் படுவதேன்று கூறியது.**

(இ-ள்) *சகளம்—அரிது எ-து தருமவானே பதி ரூபியாயிருக்குமாகிற் கண்ணுற் காணப்பட்ட முறைமையாலே குற்றமற்ற தியான நீங்காது நிட்கள மென்றருளிச செய்த படியாலே கணுற் றெரிசிக்கு முறைமை அதி தூரத்ததாகப் பயத்தை உண்டாக்கிக் கிட்டாததாயிருந்தது கிட்டா தொழியவே அது மிகவும் பாவிக்கப்படாத தாகலிற் றியா னித்தலரிது (என்று விண்ணப்பஞ் செய்ய),*

*ஞனின்—ஞனி எ-து என்பாயாகிற் பொருந்தமிகவுமறிவாயாக,*

*விமலன்—குற்றேன் எ-து நின்மலன்,*

*ஒருபடித்தான நிலைமையையுடையோன்,*

*முக்குணங்களை யொழிந்தோங்கினேன்,*

*அரூபியாயிருப்போன்,*

*தனக்கு அபூர்வமாக வறிவதோ ரறிவில்லாமையாலே அறிதலில் விருப்பமும் சர்வ ஞ்ஞனபடியினுலே அறியாமையும் ஆகிய விரண்டுமில்லாதோன்,*

*இந்திரியங்களுடையாரைப் போலத் தனக்கபூர்வமாயிருப்பதொரு பொருளில்லாமை யால் ஒரு பதார்த்தங்களிற் கூடியிருக்க வேண்டுதலுந் தன்னை யொழிய ஒரு பொருட்கு நிலையில்லாமையால் ஒரு பொருளை யொழிந்திருத்தலுமில்லாதோன்,*

*தூயதாகிய மனத்திலுண்டாகிய ஈடணுத்திரயங்களுஞ் சகல கேவலங்களும் யாண்டு நீங்க விளங்கியிருந்தோன்,*

*மிக்க கரண வறிவாலாகிய அகங்காரங் கெடுத்திருப்போன்,*

*அரூபியான முறைமையாலே கரணவறிவாற் பாவிக்கப்படா னொருவ னவனைப் பாவிக்கப்படுவேனே பாவிக்கப் படானேவென்று பார்த்து அவைகளிலே தாழ்ந்ததாகிய பாவிக்கப்படான் என்னுமதொழிந்து அளவைகளாலே நிச்சயித்துக்கொண்டு காணரகித மாயிருத்தலினுல் அருபவறிவாலே பாவிக்கப்படுவன் என்றுணர்ந்து அவனையவ்வளவும் அபேக்ஷித்துக்கொண் டநுட்டிப்போர் பாவனையிலே நின்றேன்,*

*தனக்கு மற்றோர் நிமித்தகாரணமுந் திரிகாலங்களுமில்லாதோன்,*

*ஒரு பொருளினும் பற்றிலாமையாலே யதிற்றோய்வுடையவனுமல்லன் சருவவியாபி யாதலாலே அதனையொழிந்திருப்பானுமல்லன் அழகிய தேகங்களாலுண்டாகிய சுகதுக்*

கந் தனக்கில்லாமையாலே அவையிற்றிற்பந்தமில்லாதோன் அத்தேகங்களுக்குப் பிரவர்த்தி நிவிர்த்தி தன்னையின்றியமையாமையால் அவையிற்றை விட்டிருககாதோன்,

அவிகாரியாயிருப்போன்,

தன்னை யொன்று தாங்கி நிற்றலொழிந்திருப்போன்,

ஒரு பொருளிலாசையும் ஒருவரையாசிரயித்தலுமாமிரண்டும் கெடுத்தோன்,

எற்று—ஆதல் எ-து ஆகிய வித்தனை பிரகாரத்தாலே யறியப்படுவானொருவனைப் பாவிக்கப்படானென்ப தெற்றிற்கு,

எற்றே எ-து பாவிக்கப்படானென்னும் வசனம் எத்தாலென்னில்,

கூடான்—அறைவே எ-து அருவுருவங்கடந்து நிற்றலாலே கரணவறிவாற் குறிக்கப் படுவானல்லன் ஆதலால் உலகத்தார் பாவிக்கப்படானென்று சொல்லுதலை யொழியார் எ-று.

மற்று - அசை. உலகம் - ஆகுபெயர். (கூக)

அந்தமி லமலன் சத்தி யெங்கணு
நந்து நன்றெனி னல்லறி வெவர்க்கு
முந்தா தொழிதலென் னுரவோர்க் கல்லதை
புரவா தெனினதற் கொருவா தாரக,
மனைத்தெனிற், பதங்க னலர்கதிர் பங்கய
மனைத்து மலர்த்தா வியல்பிவற் கவற்றி
னுண்டுகொ லுறுசின முரைமோ, கண்டிசிற்,
கண்டன மாவலி யற்*ருக் கோடி,
சத்தி பதிப்பிற் †சம்பிர தாயந்
தொத்துவ தென்பது துகளச்சத்தி
யெங்கணு நிறைதலி னெனின்,மற் றங்கதற்
கறிவிடை, யுரையுப சாரத் தல்கல்,
புற்கல ‡னித்த னிறைந்தோ னவனை
மிக்க போக்கின னிற்றோ னென்று

* ஆக என்பது ஈறுகெட்டு ஆ என நின்றது; ஆதல் என்பதற்கு ஒத்தற்பொருள் கொண்டு ஆக என்பதற்குப் போல எனவுரை கூறினர். இவ்வாறு சிவஞான போதச் சிற்றுரையில் "அருவுருவந்தானறிதல்" என்னு முதற்குறிப்புடைய திருவெண்பாவுரையில், "ஆள்வாரிலிமாடாவேனோ" எனக்கூறிய திருவாசகச் செய்யுளை யெடுத்துக் காட்டினமை காண்க.

† சம்பிரதாயம் என்றது ஈண்டுக் குருபரனருளாற் செய்யுந் தீக்கையெனக் கொள்க.

‡ நித்தன் நிறைந்தோன் போக்கினன் இற்றோன் இவை எதிர் நிரனிறை என்க.

*பிறைபா சத்தை யிறுத்தோ னென்று*
*மறையுரை யற்,றச் சத்தி நிபாத*
*மென்றது கேட்டி, யாவ னொருவ*
*னிடைக்கடி தொருபொரு ளடுத்துற வீழின்*
*வெரீஇ யந்நிலை யொரீஇ வேறிட*
*மருவு மற்றென நிருமலன் பெருவலி*
*பதிப்ப வறிவன் பவபயங் கவல*
*மதித்தனன் றேசிகன் மலரடி யடையு,*
*மோக வனந்தர் முயல்வோர்க் கமோகன்*
*சத்தியி னவனை யுணர்த்தன் மற்றது*
*கருமத் தொப்பி னல்லது*
*வருமா றுங்கின் மதிக்குங் காலே.*

**இது, மேற் பசுவுக்கமலன் சத்தியோசியா துற்றவுண்மையால் அறிவுண்டாகில் அச் சத்தி வியாபியாயிருக்க எல்லார்க்கு நல்லறிவில்லை யாதற்குக் காரணமேன்னென்று வின வக் கன்மசமத்துவ சத்திநிபாதத்தாலல்லது ஞானமுண்டாகாதென்று கூறியது.**

(இ-ள்) *அந்தமில்—தாரகம் எ-து நித்தியனுன பரமசிவன்சத்தியெவ்விடத்தும் அழகிதாக வியாபகமாகில் உண்மை ஞானம் யாவருக்கு முண்டாகா தொழிதலென் இது அறிவுடைய நல்லோர்க்கல்லது உண்டாகாதெனில் அசசத்திக்கு * அநுக்கிரக நிக்கிரக மொழியாதனவாயிருந்தவ (என்று விண்ணப்பஞ் செய்ய),*

*அனைத்தெனில் எ-து அத்தன்மைத்தாகிய கடாவுண்டென்னில்,*

*பதங்கன்—உரைமோ எ-து ஆதித்தனுடைய விரிந்த கதிர் பக்குவமான தாமரை மொட்டையலர்த்துமதொழிய அபக்குவமான தாமரை மொட்டை யலர்த்தாமை அந்தத் தாமரை யரும்புகளின்மேல் அந்த ஆதித்தனுக்கு யாதாயினுங் கோபமுண்டாகிற் சொல் லாய்,*

*கண்டிசின் எ-து அந்தச் சத்தியிருக்கும்படி யறிவாயாகில்,*

*கண்டன—கோடி எ-து பரமசிவனிடத்திற் கண்டனவாகிய மகத்தாகிய சத்திகளும் ஆதித்தனுடைய அத்தன்மைத்தாகிய சத்திபோலக் கொள்,*

*சத்தி—எனின் எ-து இனிச் சத்திநிபாதத்தாற் குருபரனருளாலே தீக்கை கூடுவது என்னுமிது குற்றப்படுவதாயிருந்தது அச்சத்தி சருவவியாபியானபடியாலென்னில்,*

*மற்று—விடை எ-து இதற்குப் பரிகாரங் கூறவறிவாயாக,*

*உரை—அல்கல் எ-து இவ்வசனம் உபசாரவுரையாய்க் கூடுதலாம் என்போலவென் னில்,*

**தாரகம்—தாங்குதல் ஒழித்தல் எனப்பொருள் பயத்தலாலே தாற்பரியமாக அநுக் கிரகம் நிக்கிரகம் என வுரைகூறினுரொன்க.*

**புற்கலன்**—அற்று எ-து ஆன்மா நித்தியனுனவனை மறித்தானென்றும் வியாபியான வனைச் சொர்க்காதிகளுக்குப் போனுனென்றுஞ் (சொல்லுமாறு போலவும்) அவிகாரியா யிருந்த பரமசிவன் பாசச்சேதம் பண்ணினுனென்றுஞ் சொல்லுகின்ற வுரைபோலவுங் கொள்,

அச்சத்தி—கேட்டி எ-து இனி அந்தச்சத்திநிபாதமென்று சொல்லுமது கேளாய்,

யாவன்—அடையும் எ-து யாவ னொருவன் இருந்தவிடத்திலே ஒருபொருள் கடி தாக மிகவுஞ் சோரவீழில் என்னே என்னே வென்று பயப்பட்டு அவ்விடமொழிந்து வேறேரிடத்திலே பெயரும் அதுபோல இவன் பக்குவத்திற்குப் பொருந்தின பரமசிவ னுடைய பெரிய சத்திநிபாதத்தாலே ஆன்மாப் பிறவிப் பயம் பொருந்தப் பிறவியினு டைய பொல்லாமையையறிந்து பயமுடையனுய் அப்பிறவித்துக்கந் தீர்த்தற்குச் சிந் தித்து ஆசாரியன் சீர்பாதகமலங்களிலே சென்று சேரும்,

மோகவனந்தர்—மதிக்குங்காலே எ-து சமுசாரவுறக்கத்திலே கிடந்தோரை மோகமில் லாத பரமசிவன் சத்தி நிபாதத்தாலே தன்னை அறிவித்தலாகிய ஞானம் அதுதான் கன்ம சமத்துவத்தினல்லது வரும் வழியில்லை விசாரிக்குமிடத்து எ-று.

மோ, சின், மற்று, ஆங்கு—அசை. (சுஉ)

மந்தை ஞான மின்மை பந்த
காரண மென்ன வாரணா வாரி
மருளினை மருளை யறிவது ஞானமென்
றிருவர் பெய்த விசைத்தோய் தெருளிற்
றேற்ற மசத்துக் கில்லை யாற்றவுஞ்
சத்துக் கேயல வென்னிற் பொற்புடை
விருத்தம தனையுந் திருத்தக வென்று
முரண்டர லியைவ விரண்டொரு வழியி
னடையா வாதபஞ் சாயை போலக்
கடா,விடை, பொடியாப் புடைபட வுயர்ந்த
விந்தனக் குழுவைக் கொந்தழ லடூஉங்
கூட நின்றும் பீடுத ருபாயஞ்
செல்லாக் காலை மெல்லென விளங்க
லொல்லா வல்லழல் போல நல்லோய்
ஞானமு மின்மையு நலமிக்
* காணு வுயிர்கட் குணர்வினை வகையே.

இது, அமோகன் சத்தியின் அவனையுணர்த்தலாயஞானத்தான்முத்தியும் அஞ்ஞானத்தாற் பெத்தமுமாமென்றருளினும் முரணுயிருப்பனவிரண்டு ஓரிடத்துநிற்றற்குதாரணமென்னேன்று

* ஆணுவுயிர்கட்கு இன்மையும் ஞானமும் நலமிக்கு அனைவகை உணர்வு எனக்கூட்டுக; மிக்கு என்னும் வினையெச்சத்தை மிக எனத்திரித்துரைத்தார்.

**வினவக் காட்டமுமக்கினியும்போல இரண்டுங் கூடநிற்கினுந் தீக்கையாகியவுபாயத்தாலல் லது ஞானப்பிரகாசமில்லையென்று கூறியது.**

(இ-ள்) எந்தை—கடா எ-து என்சுவாமியாயுள்ள வேதாகமசமுத்திரமே அஞ்ஞானம் பந்தகாரணமென்று முன்பேயருளிச்செய்தாய் இப்பொழுது அந்த அஞ்ஞானத்தைக் கெடுப்பது ஞானமென்று மயக்கந்தீர வருளிச்செய்யாநின்றுய் விசாரிக்கில் அந்த அஞ்ஞானந்தான் இவன் பக்கலில்லையாகிற் றேற்றுது மிகவு முன்பேயிவன் பக்கலுண்டென்று சொல்லில் அழகைக்கெடுக்கின்ற பொருந்தாமைகூடும் நன்மையுண்டாக மாறுபாடாயுள்ளனவிரண்டும் எக்காலமும் ஓரிடத்துக்கூடா வெயிலுநிழலும்போல ஆதலாற் கடாவாயிருந்ததென்று விண்ணப்பஞ்செய்ய,

விடை எ-து இதற்குப் பரிகாரங் கேட்பாயாக,

பொடியா—அனைவகையே எ-து பரந்துயர்ந்த காட்டத்தின்றிரட்சியைத் தூளியாகக் கோபமுள்ள அக்கினி தகிக்குந்தன்மையுடைத்து ஆயினும் காட்டத்தில் அக்கினி வியாபித்திருந்தும் வலிய கடைகையான வுபாயமில்லாதபொழுது இலேசாகத் தன்னைத் தோற்றமாட்டாத வலிய அக்கினிபோல நல்லோனே அளவிறந்த ஆன்மாக்களிடத்து அஞ்ஞானமு ஞானமும் நலமிகக (கூடவுண்டாயினும்) அத்தன்மையாகிய தீக்கையுபாயம் கூடிலல்லது ஞானம் பிரகாசியாது எ-று.

அல என்பது சாரியை. (சுஙு)

இருமபிர தானத் தெழுமன தததுவம
பொருநதா தப்பிர தானம் விரிநதுயர்
தத்துவ நெறியிற் பொற்பொடு புணர்தல
செல்லா தொழியத் திகழ்தரு தியான
நிலலா தென்ன, நிழலவிர் மணிகா
லெரியத னூங்கு விரிதரன் மாறெனத்
தன்னினு முயர்நத பன்னருந தததுவத்
தன்ன தாத லறிமன், * மன்னிய
யோக மாக்கலை யுணர்வோர் போகிய
விந்தனத் தெரிபோற் பொங்கிய தத்துவங்
காண்டகு தகுதிய ரமம
மாண்டகு தியான மாட்சி யோரே.

**இது, இந்தனமும் எரியும்போல ஞானமுமின்மையும் ஓரிடத்திலே நிற்தமென வுணர்த்திறுய் அவ்வுணர்வு பிரதானத்திற் சேனிதமான மனதாலே மேலுள்ள தத்துவங்களிலுஞ் செல்லுமோவென்று வினவக் காட்டத்திலக்கினி பிரகாசித்தாற்போலப் பரமாயுள்ள தத்துவங்களிலுஞ் செல்லுமென்று கூறியது.**

* மன்னிய யோகமாக்கலையுணர்வோர் மாட்சியோர் மாண்டகு தியானம்போகிய விந்தனத் தெரிபோற் பொங்கியதத்துவங் காண்டகு தகுதியர் என்க்கூட்டுக.

(இ-ள்) இரும்பிரதானம்—நில்லாதென்ன எ-து மகத்தாகிய பிரகிருதி தத்துவத்திலுண்டாகிய மனதத்துவத்தால் அரூபயோகம் பொருந்தாது அந்தப்பிரகிருதி தத்துவந்தான் மிகவு முயர்ந்திருக்கின்ற மேலாகிய தத்துவநெறிகளில் அழகிதாகச்செல்லமாட்டாது அப்படியாகலிற் பிரகாசமான தியானம் கூடாதே என்று விண்ணப்பஞ்செய்ய,

நிழலவிர்—அறிமன் எ-து சோதியையுடைய சூரியகாந்தக்கல்லிலுண்டாகிய அக்கினி அக்கல்லின்மேலே (ஆதித்தனைக்காணத்) தோன்றினாற்போல மனதத்துவமும் தனக்கு மேலாகிய சொல்லுதற்கரிய தத்துவங்களிலும் பிரகாசமுடையன ஆதலால் அவையிற்றைத் தியானித் தலத்தன்மைத் தென்றறிவாயாக,

மன்னிய—மாட்சியோரே எ-து மற்று நிலையுடைத்தான யோகத்தைச் சொல்லுகிற இவ்வியாகமங்களை யுணர்ந்தோராகிய மாட்சிமையுடையார் அழகிதாகத் தியானிக்குமிடத்து மிக்க காட்டத்தி லக்கினிபோல மகத்தாகிய விந்துநாதங்களை மனதத்துவத்தாலே தியானிக்கு முறைமையை யுடையர் எ-று.

மன், அம்ம—அசை. (௬௪)

கழிபெருந் துன்பங் கருதல வழிவழி
யோவா முயற்சித் தாவா நோன்பி
னவர்க்கே மிக்க தகைப்பரும் பலமெனிற்,
கற்றுங் குநர்க்கே கழிகவின் றுறைதந்த
வெற்படு மணிதாங் குநரிற் பொற்பொடு
வருபலம் வருஉம், பொருவிரி வன்சிலை
தாங்குநர் மிகவுந் தளர்த லோம்பிய
வுயிருட னுடைத லடைப கடிபடு
பலமோ பகரி னலமோ வின்றே,
மோதிர மணைந்த தீதக திருமணி
தாங்குங் காலு மோங்கிய லவரியா
யுளமலி யுவகை யகமீக் கூர்ந்தன்
றரும்பொருள் பயக்குங் காலைத் திருந்திய
கோடி யெல்லை கூடா, தாடிய
லந்த ரங்கம் புறவங் கத்தின்
மைந்தமல் பெய்தும், வெந்திற னிருப
ரகத்துறை பவரோ * புறத்துறை பவரிற்
போக மேவுத ருவார் † காண்டிகு,

* புறத்துறைபவர் என்பதற்குப் புறத்துள்ளதானைத் தலைவர் முதலாயினோர் எனவுரைகூறிய பிரதியுமுண்டு.

† இதும் ஈண்டு முன்னிலையில் வந்தது.

*மற்றே, வாடவ ரரிவையர் தம்மின்*
*மிக்க வந்தரங் கத்தவர் பெற்ற*
*வின்பமு முணரயில தத*
*லந்த ரங்கமன் மைந்தமல் பறியே.*

**இது, புறக்கருமஞ் செய்வோரிலந்தரங்கர் சிறந்தாற்போலச் சதுர்ப்பாதங்களில் ஞான பாதஞ் சிறந்ததென்று கூறியது.**

(இ-ள்) *கழிபெரும்—பலமெனில் எ-து அளவிறந்த பெரிதாகிய துக்கஞ் செறிய மேன்மேலுமொழியாத உபாயச்சரியை கிரியா யோகங்கள் வாயிலாகக் கெடாத தவசையுடையோர்க்கே மிகவுந்தடுத்தற்கரிய பலஞகிய முத்தி சித்திப்பதென்னில்,*

*கற்றுங்குநர்க்கு—வருஉம் எ-து * அம்மிக்கல்லைச் சுமந்தோர்க்கு மிகவும் அழகுபெற்ற ஒளியுடைய மாணிக்கத்தைக் கைக்கொண்டோரிடத்து அழகிதாகவரும் பிரயோசனம் உண்டாகவேண்டும்,*

*பொருவிரி—இன்றே எ-து உவமையில்லாத வலிய அம்மிக்கல்லைச் சுமந்தோர் மிகவும் இளைப்படைதலோடமையாது காக்கப்பட்ட உயிர் உடலைவிட்டு நீங்குதலுங்கூடுவர் அழகிய பிரயோசனஞ் சொல்லில் நன்மையில்லையாம்,*

*மோதிரம்—கூடாது எ-து மோதிரத்திலழுத்தின குற்றமற்ற அழகிய மாணிக்கந் தரிக்கும்பொழுதும் ஓங்கியவியல்பாகிய அழகையுடைத்தாய் உள்ளத்திலுண்டாகிய பிரியம் புறம்பும் விளங்காநிற்கும் அதுதான் பெறுதற்கரியபலந்தருமிடத்துத் திருத்தியுடைத்தாகயவிலை யித்தனைகோடியுண்டென்று நிச்சயிக்கமுடியாது (அதுபோல),*

*ஆடியல்—எய்தும் எ-து புறக்கரணத்தாலே உண்மைச் சரியையாதி நெறியிலே நின்றவர்களினும் வெற்றியுடைத்தாயிருக்கின்ற உட்கரணத்தாலே பசுபாசபதிகளினுண்மையுணர்ந்து சிவத்தைக் கரணங்களிறந்து நின்றவறிவினுல் வழிபடு ஞானவான்கள் பெறுவதான வலியதாகிய சித்தி யளவுபடுவதல்லக்காண்,*

*வெந்திறல்—காண்டிகும் எ-து மற்றும் வெவ்விய வலியுடையராயிருக்கின்ற அரசரிருக்குமிடத்து உறையு மந்திரிகள் புறப்பாட்டோடுசாவுமந்திரியினும் அநுபோக மேவுதற்கு அளவில்லையென்று காண்பாயாக இதுபோலவும்,*

*அற்றே எ-து அத்தன்மைத்தேயோ,*

*ஆடவர்—அறியே எ-து மிகவும் அந்தரங்கராயிருக்கின்ற நாயகனு நாயகியுந் தம்மிற் புணர்ச்சியில் விளைந்த வின்பமுஞ்சொல்லிறந்தது ஆதலால் அதுபோல ஞானிகள் அந்தரங்கத்தின் கண்ணே விளைந்த அநுபோகமும் மேலான வலியுடைத்தாகிய மோக்ஷசித்தியென்று அறிவாயாக* எ-று.

*எகாரம் முன்னது தேற்றமும் பிரிநிலையுமாம்; ஏனை எகாரம் அசை. ஒகாரம் முன்னிரண்டும் அசை; பின்னது வினு. இகும் - அசை.* (சரு)

* *விலைக்காவது கூலிக்காவது அம்மிக்கல்லைச் சுமந்தோர்க்கு என வருவித்துரைத்துக் கொள்க.*

உள்ள முதலிய வறுபகை யுடற்றித்
தெள்ளுநர்க் கல்லதை தெளிவருஞ் சிவனைத்
தெளிந்தோர் செய்தி சினஞ்செலச் சிதைத்து
வல்வினை யிடிக்கு நல்வினை யாள
வருளல் வேண்டுவ லத்த, மருள்கெட
நாவொடு நவிலாக் கேள்வித்துறை போகிய
தேவ தேவனைச் சேர்ந்தவ ரவனை
யாவதை யல்ல துளதோ, மோது
முதுதிரை முந்நீர் விரிதரு காயல்
வித்தாது விளைத்த *வெண்டிரட் பழனத்
துற்றவை யெவனோ வுரவ, துப்புவள
ருவரி யுற்ற தீநீ ரல்லதை
கவர்பு முண்டோ கற்றோய், †கவர்புக
மண்புனை மதிற்பெய் தொண்சிறை பரப்பி
யூதுவண் டுணர்ந்த பேதை ‡ வான்புழு
மாதர்வண் டாவதை யறிதி, § கோதற்
றமலனை யாசற வுணர்ந்த
வமலர் செய்தியு மற்றுன் மற்றே.

**இது, பதியுண்மை கேட்டறிந்து அப்பதியுண்மை யுணர்ந்த ஞானியரியல்பு கேட்க உப்பு விளைபழனத்துற்றவை போலவும் உவர்க்கடலுற்ற நன்னீர் போலவும் புழு வேட்டுவனாதல் போலவும் அத்துவிதமான பதித்துவம்பெறுவரெனக் கூறியது.**

(இ-ள்) உள்ளம்—அத்த எ-து கோபத்தையறத்துறந்து வலியகன்மத்தைச் சேதஞ் செய்யு நல்வினையாகிய தீக்கையுடையாய் என் கர்த்தாவே சித்தமுதலாகியகரணங்களையுங் காம முதலாகிய ஆறுபகைகையையுங் கெடுத்துத் தெளிதலையுடையோர்க்கல்லது அறிதற்கரிய பரமசிவனுண்மையை யுணர்ந்தோர் செய்தி அருளிச்செய்ய வேண்டுவெனென்று விண்ணப் பஞ்செய்ய,

மருள்கெட—உளதோ எ-து வாசாரகிதமாகிய கேள்வித்துறைகளி லகப்படாத தேவோத்தமனாகிய பரமசிவனை அஞ்ஞானங்கெடச் சேர்ந்தவர் அவன்றன்மையாகிய சிவத்துவம் பெறுதலல்லது வேறுண்டோ என்போல வென்னில்,

மோது—உரவ எ-து கரையிலே யெறியும் பெரிய திரையையுடைய சமுத்திரத்தைச் சேர்ந்து பரந்தகழிக்கானலின் வித்திடாதே விளைத்த வெளுத்துத் திரண்ட உப்புப் படுமளத்துட் பொருந்தினவை யுப்பாமல்லது வேறுபாடுண்டோ அறிவுடையோனே,

*வெண்டிரள்—ஆகுபெயராய் உப்பையுணர்த்தியது.
†கவர்புகமாதர் வண்டாவதையறிதி எனக்கூட்டுக.
‡வான்-வெண்மை; திருமுருகாற்றுப் படையுரையிற்காண்க.
§கோதற்ற என்பதிற் பெயரொச்சவீறு தொக்கது.

துப்பு—கற்றோய் எ-து. மற்றும் பவழம்படுஞ் சமுத்திரத்திற்கூடிய வினிய தண்ணீர் உப்பு நீராமல்லது வேறுபா டுண்டோ கல்விஞான முடையோனே,

கவர்புக—அறிதி எ-து மண்ணாலே செய்யப்பட்ட கூட்டிலே அடைத்து அழகிய சிறைபரப்பி ஊதும் * வேட்டுவனைக்குறித்துக் கொண்டுகிடந்த அறிவில்லாத †வாலியபுழு வேறுபாடறக்காதலிக்கப்பட்ட அவ்வேட்டுவனாவது மறிதி,

கோதற்ற—மற்றே எ-து குற்றமற்ற விமலனாகிய பரமசிவனை ஐயமறவுணர்ந்த நின்மலராகிய ஞானிகளியல்பும் அச்சிவத்தன்மையாவதாமல்லது வேறுபாடில்லை கண்டாய் எ-று.

ஆல், மற்று—அசை. (௬௬)

பசுபதி யாகப் பன்னிய பனுவன்
மதியோர் பெரும வாயன் றதுவெனை
யொன்றென் றாயி னல்லதை யிரண்டொன்
றென்று மாகா, தெவணொனி ‡னாவது
கெட்டது வாத லதுவாய்க் கெடலல
தொட்டுவ திவனோ வின்றே, கெட்ட
தாத றானே யமரர்க் கானு
மேவா தாகு மதுவாய்க் கெடுமெனி
லாகிய பின்னர்க் கெடுவதி யாவதென்
றேவிய கடாவுக் கிடையீ டாவ,
§தழிந்தாய்த் தன்றா யழிந்தது மன்று
மொழிந்தவை யிரண்டு மோரமை யத்தே,
யெழுந்ததி யாவகை யென்னிற் செழுந்திரட்
காரிரு ளிரிய நூறிக் கனல்வா
¶ளேரொளி விளக்க மெய்திற் றன்றாங்
கெய்திய பின்ன ரிருளற விரித்த
செய்தி செப்பி னில்லை, மையறத்
தெளிமதி யிவனுஞ் சிவணிய, தளிவளர்
தடவுநிலைப் புன்னை மடலவிழ் வாசங்

*வேட்டுவனாகிய குளவியை எனவுரை கூறிய பிரதியுமுண்டு.

†வால்—வெண்மை.

‡ஆவது என்பதற்குப் பசுத்துவமென்றுரைத்தார்.

§அழிந்தாய்த்தன்று ஆயழிந்தது மன்று எனப் பிரித்துக் கொள்க.

¶ஏரொளிவாள் கனல் விளக்க மெய்திற்றன்று எனக் கூட்டுக.

கடற்புல வகற்றுங் *கான லலவன்
வன்பெடை தழீஇ யின்புறு காய
லுப்புவிளை பழனத் துற்ற பொற்றேட்
டுலவையி னறிக மாதோ
கலைவ ளாளர் நிலைபுணர் பண்பே.

**இது, தேவதேவனைச் சேர்ந்தவரவனையாவகையல்லதுளதோ என்றநுளிறய் ஆனமை எவ்வண்ணமேன்று வினவப் பசுத்துவம் போகையும் பதித்துவ மாகையும் ஒரு காலத்திலேயா மெனக்கூறியது.**

(இ-ள்) பசுபதி—ஆகாது எ-து ஞானிகளுக்குத் தலைமையாயுள்ளோனே பசுத்துவமானவான்மாப் பதியாமென்று சாதித்த சாத்திரம் பொருந்தியிருந்ததில்லை அது வென்னெனில் முன்பே பதித்துவமுண்டாயிற் பதியாமல்லது அசுத்தமானவான்மாச் சுத்தனுமதெக்காலத்தும் பொருந்தாது,

எவண்—இன்றே எ-து எவ்வண்ண மென்னிற் பசுத்துவங்கெட்டுப் பதியாகுதல் பதியாகிப்பின்பு பசுத்துவங் கெடுதலன்றி யிவ்விடத்துப் பொருந்துமதில்லை,

கெட்ட—இடையீடாவது எ-து யாதொரு பொருளுங் கெட்டாற் பின்னையாதல் தேவர்கட்கேயாயினுமுடியாது அன்றியே பதியாகிப்பின்பு பசுத்துவங கெட்டதென்னிற் பதியானபின்பு கெடுமதேதென்று கடாவின கடாவுக்குப் பரிகாரமாவது கேட்பாயாக,

அழிந்து—அமையத்தே எ-து பசுத்துவங்கெட்டுப் பின்பு பதித்துவமானது மின்று பதித்துவமாகிப்பின்பு பசுத்துவங் கெட்டது மின்று நீ சொல்லப்பட்ட விரண்டும் ஒரு காலத்திலே காண்,

எழுந்தது—இல்லை எ-து அங்ஙனமாயினது எவ்வகை போல வென்னில் அழகிய செறிந்த காியவிருளைப் போகத்துறந்து பின்பு அழகிய மிக்க ஒளியுடைய அக்கினிவிளக்குப் பிரகாசித்ததன்று அவ்விடத்து விளக்குப் புகுந்த பின்பு இருளறப்போக்கின செய்தி விசாரிக்கினில்லை கண்டாய்,

மையற—சிவணியது எ-து குற்றமற இவ்வண்ணம் பதித்துவம் பெறுதலும் பசுத்துவம் போதலுமென்று தெளிவாயாக,

அளிவளர்—பண்பே எ-து சுவர்க்கத்தைக்கிட்ட வோங்கிய வண்டுகிளரப்படாநின்ற புன்னைப் பூவி னிதழ் விரிகிற நறுநாற்றம் சமுத்திரத்திலுண்டாகிய புலாலுற்றத்தைக் கெடுக்குஞ் சோலையில் நண்டு கற்பையுடைய பெடையோடேகூடி மருவிப் போகம் புசிக்குங் கழியில் உப்பை விளைக்கும் அளத்திற்பட்ட அழகிய விலையையுடைத்தாகிய மரக்கொம்பு வடிவுவேறுபடாதே உப்பானாற்போல ஞானிகள் பதித்துவம் பெறுமுறைமை நின்ற நிலையிலே சுத்தராமித்தனையென்று அறிவாயாக எ-று.

ஒ, எ, மதி, மாது, ஓ—அசை. ஒளிவாள்—மீமிசை. (சுஎ)

---

*கானற் பொற்றேட் டுலவை என வியைத்துக் கொள்க.

ஆறுக் கூறிய வத்து வாமற்
றீரே டியையா விறைவற் கியையா
சேதனற் செறியா வியாபகத் துறழ்தலி
னென்னிற், புற்கலற் கெய்தும் பன்னிய
பாசம் பசுவுக் காசில் வான்பிணி
யந்தப் பந்தஞ் சம்பிர தாயத்
துந்தி யேறு முறைமையின், முந்திய
காசினி யாதி யாசி றத்துவம
போக பூமி யாக மமர்ந்தோர்க்
கற்று கலின்*மற் றதுமுத லாகப்
பற்றும் பற்றறுத் ததனுங் குற்ற
வும்ப ரும்பரி னுய்த்து வம்பிறு
சிவனிடத் திலயஞ் செய்க செய்த
லவமில் போக்,காங் கதுமற் றெவனெனிற்
†சுற்பம் ‡பூரி சந்திரம் பொருவ
லெற்றற் றிறையுற லிவனு, §மற்றுந்
தருமா தருமந் தாமும விரிமடி
வருண முதலிய பொருணனி புரக்கு,
முயர்ந்தோ னென்றல் §வியந்தினி தெங்கணு
நின்ற விறைக்கு நினைமோ விறகி
னெங்கணு மாயினு மிதன்மே லல்லதை
யங்கெரி காணு வாறும் பொங்கிய
குணத்தின் மிக்கோன் குழவி னுயர்ந்தோ
னெனத்தகு முறையினு மியையு, மனைத்தா
லாய காலை யத்து வாவா
மேய மாநெறி யியைகைமற் றிஃதே.

*மற்றது முதலாக அதனுங்குற்ற பற்றும் பற்றறுத்து எனக் கூட்டுக; மற்று - வினைமாற்று.

†ஸூ-ங வு௦ சுற்பம் என்றாயிற்று.

‡பூரி சந்திரம்—ஒருபொருட்பன்மொழி.

§மற்றும் விரிமடி முதலிய பொருள் வருணம் நனி தருமாதருமம் புரக்கும் தாமும் எனக்கூட்டுக; தருமம்-தன்மை; ஈண்டு நிறத்தைக் குறித்து நின்றது.

§வியந்து எங்கணுநின்ற விறைக்கு உயர்ந்தோனென்றல் இனிது நினைமோ எனக் கூட்டுக.

**இது, அழிந்தாய்த் தன்று ஆயழிந்ததுமன்று மொழிந்தவை யிரண்டும் ஓரமையத்தே யென்றருளினும் அஃதெவ்வண்ண மெனத் தருமாதருமம் போலப் பசுத்துவம் போகையும் பதித்துவமாகையும் உடைத்தாதலால் அத்துவாவாற் பிரயோசனம் ஆன்மாவுக்கே யெனக் கூறியது.**

(இ-ள்) ஆருக்கூறிய—என்னில் எ-து ஒருபடித்தாக விருத்தலாற் பரமசிவனுக்குச் *சடத்துவாவாகச் சொல்லப்பட்டனவற்று லுபகாரமில்லை ஆன்மாக்களும் வியாபகமுடைமையால் அவர்களுக்கு முபகாரமில்லையென்று சொல்லில்,

புற்கலற்கு—முறைமையின் எ-து சொல்லப்பட்ட பாசம் ஆன்மாக்களுக்குக் குற்றமற்ற பெரிய பந்தமாதலால் அப்பந்தத்தைத் தீக்கையாற் சேதித்து முத்தியைப் பெறு முறைமையான் மலபரிபாகத்தாலே †திரோபவநீங்கிச் சிவஞானமுண்டாகைக்குப் பக்குவரான ஆன்மாக்களுக்குக் கூடும் (கூடுமுறைமையெவ்வண்ணமெனின்),

முந்திய—போக்கு எ-து முன்னெண்ணப்பட்ட பிருதிவிதத்துவ முதலாகவுள்ள குற்றமற்ற தத்துவங்கள் தேகமெடுத்தோர்க்குப் போகம் புசித்தற்கு இடமாம் அங்ஙனமாதலால் அந்தப் பிருதிவிதத்துவ முதலாக அதன் மேற்பட்ட தததுவங்களோடும் தேகமெடுத்ததாகக் கிரியாசத்தியாலே பாவித்து ஒவ்வொரு தத்துவங்களிலுண்டாகிய புவனங்களிற் போகம் புசித்தற்கமைந்த கன்மங்களையநுபவித்ததாகவும் பாவித்துச்சேதிப்பித்து அங்ஙன மேன்மேற்றத்துவங்களினு மான்மாவைச் செலுத்தி ‡உவமையில்லாத பரமசிவனையொக்க நின்மலனுக்குக இப்படி யாக்குதல் குற்றமற்ற பாசச்சேதம்,

ஆங்கது—இவனும் எ-து அந்தத்தீக்கை யெவ்வண்ணமென்னிற் செம்பு (குளிகையாலே வேதிக்கப்) பொன்னோடே கூடின வியல்பு எத்தன்மைத்து அத்தன்மைத்தாக இவனுஞ்சிவத்துவமாதலாம்,

மற்றும்—புரக்கும் எ-து வேறுந்திட்டாந்தஞ் சொல்லில் அகன்ற புடவை முதலான பதார்த்தங்கள் வேற்றுவன்னம் பற்றினால் மிகவுநதகாிறங்கெட்டு வேற்றுவன்னாதருந்தன்மைத்துமாம்,

*சடத்துவாவாவன—மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை என்பனவாம்; இவற்றின் வகையினைச் சிவஞான சித்தியாரிற் காண்க.

†திரோபவம்—மறைப்பு. திரோதானசத்தி நீங்கி எனவுரைகூறியபிரதியு முண்டு.

‡அம்முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து நின்றஉவமையில்லாத சிவனை எனவுரை கூறிய பிரதியுமுண்டு.

உயர்ந்தோன்—இயையும் எ-து (இந்தப் பதித்துவம் பெற்ற முத்தனும் பரமசிவனும் சர்வவியாபகமாயிருக்கினும்) அதிசயமாக எவ்விடத்தும் வியாபித்திருக்கின்ற பரமசிவனுக்கு மாத்திரம் மேலான சிவதத்துவத்தை அதிட்டித்துக் கொண்டிருப்பனென்று சொல்லுதலே இனிதாக வறிவாயாக காட்டத்தி லக்கினி வியாபித்துநிற்கினும் அக்காட்டத்திற்குமேலல்லது அவ்விடத்து அவ்வக்கினி பிரகாசியாதவாறு போலவும் மிகுந்தகுணத்தான் மிக்கோனை யிக்கூட்டத்திலுயர்ந்தோனென்று சொல்லப்படுமாறு போலவும் பொருந்துமென்று கொள்க,

அனைத்தால்—இஃதே எ-து அத்தன்மைத்தானவிடத்து அத்துவாவாகிய பொருந்தியமகத்தாயுள்ள நெறியிலே கூடித் நீக்கிக்கு முறைமையிது எ-று.

மற்று மூன்றும் ஆலும் அசை. ஐ வை மூன்றும் அணைந்தோர்தன்மை. (௬அ)

## ஞானமிர்த மூலமும் உரையும்

முற்றுப் பெற்றன.

---

பாயிரமுள்ளாகத் திருவகவல்-௭௫.

வாகீச முனிவர் திருவடி வாழ்க.

# திருவகவல் முதற்குறிப்பகராதி.


| அகவல். | பக்கம். |
|---|---|
| அடையா | ௧௧௦ |
| அந்தமி | ௧௨௫ |
| அயிலரி | ௬௫ |
| அரும்பவி | ௭௫ |
| அருளுமறிவு | ௪ |
| அழுக்காறவா | ௫௯ |
| அறப்பயன் | ௬௯ |
| ஆதிதைவிக | ௪௯ |
| ஆதியோதிய | ௩௬ |
| ஆருயிர் | ௩௩ |
| ஆருக்கூறிய | ௧௩௪ |
| இசைத்த | ௪௭ |
| இந்தியப் | ௨௮ |
| இருந்துயர் | ௫௧ |
| இரும்பிர | ௧௨௮ |
| இலங்கு | ௫௩ |
| இறைசிவ | ௧௦௮ |
| இன்னதன் | ௯௭ |
| ஈறறிவுக் | ௮௬ |
| உரைசால் | ௬ |
| உழிதரலி | ௧௬ |
| உள்ளமு | ௧௩௧ |
| எந்தைஞா | ௧௨௭ |
| எல்லாத் | ௧௦௩ |
| எற்புச்குப் | ௮௪ |
| ஏணிபோகிய | ௧௦௬ |
| ஐம்புல | ௫௬ |
| ஒருவன் | ௬௧ |
| கண்ணுத | ௯ |
| கருமம் | ௫௫ |
| கனைகாண் | ௭௯ |
| கலைகவில் | ௩௫ |
| கலைநிலவ | ௧௧௬ |
| கலைமுதலா | ௧௫ |
| கழிபெரு | ௧௨௯ |
| கறையண | ௭௭ |
| காரணங் | ௧௪ |
| காரியங்கா | ௧௭ |
| கால்கொடு | ௨௩ |
| சகளங்க | ௧௨௩ |
| தந்துமுத | ௩௯ |
| தமனியங் | ௨௦ |
| திங்கட்கொ | ௩ |
| திருவின் | ௯௦ |
| தேனுடன | ௫௮ |
| தொல்லைஞால | ௬௪ |
| நஞ்சினித | ௬௨ |
| நஞ்சுவீற் | ௮௨ |
| நஞ்சேபாம் | ௮௩ |
| நாரமேய | ௧௧௩ |
| நெஞ்சு | ௫௮ |
| பசுபதியா | ௧௩௨ |
| படியடி | ௯௪ |
| பதிபசுபாச | ௮௮ |
| பதியளவள | ௧௦௦ |
| பழவினை | ௭௨ |
| பனுவலாட்டி | ௬௩ |
| பிறழாநிலை | ௧௧ |
| பூக்கமழ் | ௭௯ |
| பூபூதராதி | ௯௮ |
| பையுணீங்க | ௬௬ |
| பொய்ப்பொறி | ௪௩ |
| பொன்னினு | ௧௮ |
| மந்தரமத் | ௮ |
| மறைமுறை | ௭௩ |
| மாதவநு | ௨௧ |
| மேவினுகை | ௧௧௯ |
| யாணர்க் | ௧௨௧ |
| யானையின் | ௩௦ |
| வாகைவன் | ௮௧ |
| வாழியபெ | ௯௨ |
| விந்துவவத் | ௧௦௪ |
| விரிகதிர்மதி | ௪ |
| வெண்டிரை | ௧ |
| வெருவரும் | ௪௧ |

# அரும்பதவகராதி.

[எண்கள் செய்யுளைக் குறிக்கின்றன; * இவ்வடையாளமிட்டவை பாயிரச்செய்யுள்.]

அகப்படுபு - அகப்பட்டு—கக.
அகம்பன் - நடுக்கமில்லாதோன்—சஅ.
அகரு - அகில்—ஙஅ.
அங்கதம் - வாகுவலயம்—சா.
அங்குலி - விரல்—கூ.
அசஞ்சலன் - சலனமில்லாதோன்—சஅ.
அசத்து - பிரபஞ்சம்—ருக.
அசனி - இடி—ககூ.
அசும்பற - பற்றற—சக.
அசேதனம் - அறிவில்லாதது—ச.
அச்சானம் - அஞ்ஞானம்—*சா.
அடம் - கொட்டைப்பாசி—ருகூ.
அடவி - காடு—சங.
அட்டில் - அடுக்களை—ரு0.
அணரி - மேல்வாய்—ஙஎ.
அணி - அழகு—உஅ.
அத்திரி - குதிரை—உசா.
அநாகுலன் - கலக்கமில்லாதோன்—க0.
அநாமயன் - நோயில்லாதவன்—சஅ.
அநேகாந்திகம் - அநேக விதங்கள் ஏன்பது தாற்பரியம்—ருக.
அந்தம் - அளவு—க; முடிவு—ருகூ.
அந்தரம் - தீமை—ஙங, சரு.
அந்நுவயம் - உடம்பாடு—கரு.
அபங்கன் - கண்டிக்கப்படாதோன்—சஅ.
அபவர்க்கம் - முத்தி—ங.
அபாவன் - பாவிக்கப்படான்—சாக.
அமலை - செறிவு—சங.
அமல் - நிறைவு—ஙச.
அமைச்சர் - மந்திரிகள்—கூ.
அமையாது - அளவின்றி—*ங.
அம்பி - மரக்கலம்—சஅ.
அம்ம - நிச்சயமாக—ருரு.
அயிர் - கண்டசர்க்கரை—ஙசா.
அயில் - சத்திரம்—ங0, ஙங.
அயினி - சோறு—ஙஉ; உணவு—சங.
அரணம் - பிரிகாரம்—ருசா.
அரந்தை - விதனம்—உஎ.
அரமியம் - நிலாமுற்றம்—உக.
அரலை - கழலை—ங0.
அராகம் - இராகதத்துவம்—க.
அருணன் - சூரியன்—ஙஅ.
அலகை - பேய்—ககூ, ருச.
அலந்தலை - துன்பம்—உஎ.
அலமந்து - சுழன்று—*சா.
அல்கல் - கூடுதல்—சாஉ.
அவண் - அங்ஙனம்—உஉ.
அவலம் - துக்கம்—ஙக.
அழுக்காறு - மனச்சழக்கு—*ச, கஎ, உசா, சங.
அழுக்கு - பொல்லாங்கு—சங.
அளக்கர் - கடல்—ஙகூ.
அளறு - சேறு—கசா.
அளி - வண்டு—*ங.
அளை - பொந்து—சங.
அறப்பேர் - ஞானவான்கள்—*ரு.
அறம் - ஞானம்—*ரு.
அறல் - நீர்—ருஎ.
அறிவு - ஆன்மா—ச, சா, சச.
அறைதல் - சொல்லுதல்—சஅ.
அறைபோக்கு - ஒதுக்கம்—சசா.
அனங்கன் - காமதேவன்—உக.
அனந்தர் - உறக்கம்—சாஉ.
அன்னோ - ஐயோ—ரு, கரு, உங, ஙக, ருங, ருஎ.

---

ஆ - இரங்கற்பொருட்டந்தது—ஙக.
ஆகம் - தேகம்—ருங, ருகூ; மார்பு—சா0.
ஆகுலம் - கலககம்—சஅ.
ஆசிரயம் - ஆசிரயித்தல்—சாக.
ஆசு - குற்றம்—கஉ, கச, ஙக, ஙசா, ருக, ருங, சாஅ; துன்பம்—உச; ஐயம்—சாசா.
ஆடகம் - பொன்—க0.

ஆடல் - சொல்லல்—சாக.
ஆடி - கண்ணுடி—கஅ.
ஆடு - வெற்றி—ருகூ, சாரு.
ஆணவம் - ஆணவமலம்—உஉ.
ஆணை - வெற்றி—சஎ.
ஆண் - வீரியம்—கஎ.
ஆதபம் - வெயில்—சாங.
ஆதபன் - சூரியன்—ருஎ.
ஆதம் - அறிவில்லாமை—ஙங.
ஆதி - அடி—கூ.
ஆத்தியான்மிகம் - ஆன்மாவினுல் வருந் துக்கம்—ககூ.
ஆயிடை - ஆனவிடத்து—கங, கரு, உஉ, உகூ.
ஆய் - தாய்—ஙரு; அழகு—ஙசா.
ஆரம் - சந்தனம்—ஙஅ.
ஆர் - கூர்மை—*எ; அச்சமரம்—எ; நிறைவு—கச, கஎ, ஙஉ, சகூ.
ஆர்கலி - கடல்—உங.
ஆர்தல் - புசித்தல்—கச.
ஆற்றல் - வலி—உசா.
ஆனு - அளவிறந்த—*உ, க, கக, சாங; அமையாதன—ஙரு.
ஆனுது - அமையாது—*சா, ரு, உரு, ருஎ.

---

இகலா - மாறுபாடில்லாத—கக.
இகல் - உவமை—உசா, ருங, ருச; அளவு—ரு0.
இங்கு - பெருங்காயம்—சக.
இடையீடு - பரிகாரம்—கூஎ.
இட்டிடை - நுண்ணியஇடை—சா
இணங்கு - உவமை—ங, சரு.
இணை - உவமை—ச0.
இதல் - கௌதாரி—ஙசா.
இந்தனம் - விறகு—சாங, சாச.
இந்து - சந்திரன்—ஙங.
இயக்க - செல்லவிட—ஙஉ.
இரலை - மான்—சங.
இருள் - குற்றம்—*க, *ச.
இல்லம் - தேற்றின் மரம்—சரு.

இவண் - இவ்விடம்—அஎ.
இவுளி - குதிரை—கூ.
இழுக்கு - பொல்லாங்கு—உசா.
இழை - ஆபரணம்—*ங.
இளி - இளியென்னுமிசை—*க, சஎ.
இறப்ப - மிக—கஎ.
இறும்பூது - ஆச்சரியம்—கக, ககூ.
இனைதல் - துக்கப்படுதல்—கஎ.
இன்னல் - துக்கம்—ஙக.

---

ஈடு - வலி—ஙகூ.
ஈமம் - சுடலை—சா.
ஈளை - சிலேட்டுமம்—ககூ.
ஈறு - அழிவு—கச.

---

உஞற்றல் - செய்தல்—கஎ.
உடம்பிடி - வேல்—கஎ, ங0.
உடலுநர் - சத்துருக்கள்—க0, உஅ.
உடை - புடைவை—கச.
உட்கு - அச்சம்—ககூ.
உதாசனன் - அக்கினி—ஙஅ.
உந்திட - தள்ள—கஅ.
உபாதானம் - முதற்காரணம்—கச.
உம்பர் - மேல்—கூ.
உம்பன் - மேலானவன்—*எ.
உரகம் - பாம்பு—ருகூ.
உருடி - புடைவையைக்கண்டு இது நூலி லன்றித் தோன்றுதென்று நிச்சயிக்கை—கரு.
உலவை - மரக்கொம்பு—சாஎ.
உவரி - லவணசமுத்திரம்—ஙஎ, அசா.
உழிதரல் - சுழலுதல்; ஈண்டுப்போக்கு வரவு—ச.
உளம் - ஆன்மா; ஈண்டு ஆன்ம சிற்சத்தியை புணர்த்தலால் ஆகுபெயர்—*ச.
உறுவரை - உரியபொருள்—ருஎ.
உறை - நீர்—உக; ஔடதம்—ஙஎ, ருகூ.

---

ஊழிலை - சருகிலை—உஅ.
ஊழ் - முறைமை—கசா.

எடுத்துக்கோள் - திட்டாந்தம்—௫௧.
எண்கு - கரடி—௧௦.
எயில் - மதில்—௩௪.
எயிறு - பல்—௩௩.
எய்யாது - ஒழியாது—௪.
எய்யார் - அறியார்—௧௬.
எருக்க - மோத—௬.
எல் - ஒளி—*௬, ௫௩, ௫௫, ௫௮, ௬௫.
எவண் - எவ்வண்ணம்—௫௬, ௬௭.
எவன் - எவ்வண்ணம்—௪௪, ௪௬.
எழில் - அழகு—*௬, ௪௫.
எறுழ் - வலி—*௬, ௨௩.

ஏணி - எண்—௫௪.
ஏதம் - குற்றம்—௫௧.
ஏமாப்பு - இறுமாப்பு—௪௩.
ஏமுற்றோர் - பித்தேறினோர்—௭.
ஏம் - ஆசை—*௧.

ஐயம் - குற்றம்—௧௦, ௫௮; சந்தேகம்—௧௯.

ஒக்கல் - சுற்றத்தார்—௨௮.
ஒசிதல் - முறுகல்—௫௮.
ஒண்மை - அழகு—*௨; நன்மை—௩௪; மிகுதி—௪௩.
ஒய்யென - விரைய—*௬.
ஒருவல் - சவம்—௪௦.
ஒலி - ஒளி—௧௨, ௧௫.
ஒல்லென - விரைய—௧.
ஒளி - விளக்கு—௮; மறைதல்—௨௯.
ஒள்ளிய - அழகிய—௩௬.
ஒற்கம் - ஒடுக்கம்—௧, ௪.
ஒன்னார் - சத்துருக்கள்—௨௦.

ஓம்பல் - பரிகரித்தல்—௫௧.
ஓம்பு - ஒழி—௨௫.
ஓம்புதல் - காத்தல்—௧௦.
ஓராங்கு - ஒருபெற்றி—௧௭; இடைவிடாது—௪௧.
ஓலமிட்டு - கூப்பிட்டு—*௬.

ஓவுதல் - ஒழிதல்—௨௩, ௩௩, ௫௦.

ஔவை - தாய்—௩௨.

கஞலல் - செறிதல்—௪௯, ௬௫.
கடா - வினா—௫௫, ௬௩, ௬௭.
கடி - புதுமை—௨௦; காவல்—௨௦; விளக்கம்—௨௦; நாற்றம்—௪௧, ௪௮; அழகு—௪௯, ௬௫.
கடிப்பிணை - காதணி—௬.
கடு - விடம்—௩௩, ௩௭.
கடுப்ப - போல—௪௦.
கட்செவி - கண்ணாற்காணுந்தூரங்கேட்கவற்றான செவி—௩௭.
கட்டகம் - காந்தக்கல்—௫௫.
கட்டு - பந்திப்பு—௩, ௧௨.
கணம் - கூட்டம்—௨௧.
கணிச்சி - மழு—௩௬.
கணை - பாணம்—௩௯.
கண்டிசின் - காண்பாயாக—௫௫; அறிவாயாயில்—௬௨.
கண்படை - நித்திரை—௨௦, ௩௫.
கதழ் - வேகம்—௨௬.
கதுமென - விரைய—*௬; விரைந்து—௨௯.
கந்தரம் - கழுத்து—௯.
கபாடம் - கதவு—௩௪.
கமம் - மேகம்—௪௩.
கயந்தலை - யானை—௬௦.
கயமை - குணவீனம்—௧௯.
கயம் - குளம்—௧௭.
கருந்தாது - இரும்பு—௫௭.
கருமம் - காரியம்—௧௪.
கரை - எல்லை—௨௨, ௩௯.
கலர் - கீழோர்—௪௮.
கலி - வெளி—௧௫.
கலித்தல் - உண்டாதல்—௧௧; சத்தித்தல்—௩௭, ௪௩.
கலுழ்ச்சி - துக்கம்—*௬, ௩௧.
கலை - அமிசம்—௧; கலாதத்துவம்—௧, ௩, ௨௦, ௫௮; சரீரம்—௫௮.

கல்லோலம் - திரை—௧௬.
கவர்பு - வேறுபாடு—௬௬.
கவலை - துக்கம்—௪௩.
கவவ - பொருந்த—௬௨.
கவவு - கூடியிருக்கின்ற—௫௩.
கவிகை - கொடை—௨௯.
கவின் - அழகு—௬௫.
கவுள் - கதுப்பு—*௨.
கழல் - சிலம்பு—௨.
களம் - கழுத்து—*௭; உள்ளம்—௪௪.
களைகண் - இரக்ஷகன்—௫௭.
கறி - மிளகு—௩௬.
கறை - குற்றம்—*௭, ௧, ௩, ௩௮, ௫௫, ௫௯; நஞ்சு—*௭.
கற்பனை - சங்கற்பனை—௨௬.

---

காடு - சுடுகாடு—௪௦.
காட்சி - ஞானம்—௩௪.
காண்டிகும் - காணுகின்றாய்—௨௧; காண்பாயாக—௬௫.
காந்தம் - காந்தக்கல்—௫௧.
காமம் - வேண்டியபொருள்—௫௬.
காயல் - கழிக்கானல்—௬௬, ௬௭.
காரகம் - கருவி—௧௫.
காரி - நஞ்சு—௩௭.
கார்கோள் - சமுத்திரம்—௧௭.
கார்முகம் - வில்—௨௦.
காழகம் - கூறை (வஸ்திரம்)—௨௦.
காழ் - வித்து—௪௫.
காளம் - நஞ்சு—*௭.
கானல் - சோலை—௬௭.
கான்முளை - பிள்ளை—௨௧.

---

கிடுகு - தேரின்மரச்சுற்று—௭.
கிரி - மலை—௫௦.

---

குஞ்சரம் - யானை—௭.
குடங்கர் - குடம்—௪௫.
குணம் - குணதத்துவம்—௧.
குணில் - குறுந்தடி—௨௯.
குலாலன் - குயவன்—௫௩.
குவை - திரட்சி—௬.
குவைஇய - குமித்த—௩௬.
குழூ - திரட்சி—௬௩.
குழை - தளிர்—*௧.
குழைபு - அழிந்து—௨௧.
குறி - அவயவம்—௫௧.
குறும்பு - அரணிருக்கை—௪௩.
குற்றோன் - கெடுத்தோன்—௬௧.

---

கூர்த்த - மிகுந்த—௪௪.
கூர்முள் - கூரியதோட்டி—*௪.
கூவல் - கிணறு—௧௭, ௩௩.
கூவிரம் - தலையலங்காரம்—௭.
கூளி - பேய்—௪௦, ௫௪.
கூற்று - வசனம்—*௧.

---

கெழீஇ - கூடி—*௨, ௨௦.

---

கேதனம் - கொடி—௪௩.
கேழ் - ஒளி—*௨, ௩௪.

---

கை - இடம்—௧௦.
கைதவம் - வஞ்சனை—௧௭.
கைதூவாமை - கையொழியாமை—௧௬, ௩௧.
கைதொடல் - ஆகாரம்—௩௫; உண்ணுதல்—௩௭.
கையற்று - மாசழிந்து—௩௧.

---

கொடிஞ்சி - தேர்—௭.
கொண்டல் - வருடம்—௪௩; மேகம்—௫௦.
கொத்து - வர்க்கம்—௧௧.
கொந்து - கோபம்—௬௩.
கொம்மை - திரட்சி—௩௩, ௩௫.
கொய்புளை - குதிரை—௭.
கொழுத - கோத—௧௬.
கொழுநன் - நாயகன்—௬௬.
கொற்றம் - வெற்றி—௪௭; வலி—௫௬.
கொன் - பயனிலாமை—௫.
கொன்னே - விகற்பமற—௬.

---

கோ - பசு—௫௧.
கோகிலம் - குயில்—௩௩.

கோடாது - சாயாது—கஎ.
கோடை - மேல்காற்று—உஅ.
கோது - குற்றம்—ருO, ருக, ருரு.
கோதை - மாலை—சரு, சுO.
கோமளம் - இளமை—*சு.
கோளி - ஆலமரம்—கஅ.

சட்டென - விரைய—சு.
சத்திநிபாதம் - அருள்பதிதல் (சத்தி - அருள், நி - உபசருக்கம், பாதம் - பதிதல்)—க, சுஉ.
சத்திபதிப்பு - சத்திநிபாதம்—சுஉ.
சந்திரம் - பொன்—சுஅ.
சந்து - சந்தனம்—ருO.
சரோருகம - தாமரை—*ரு.
சல்லியம் - இருப்புத்தாள்—ருரு.

சாரணர் - ஒற்றர்—சு.
சாலி - நெல்—கரு, ருசு.
சாவு - பேய்—ருரு.

சித்தசாதனம் - தன்னாற் சித்தித்த பொருட்குப் பிறன்கூறியது சாதனமாதல்—கரு.
சித்துநீர் - இரதம்—சரு.
சிமயம் - மலை—*க.
சிரை - நரம்பு—சு.
சிலை - வில்—ருசு, ருசு.
சிவணிய - கூடிய—உசு.
சிறை - காராக்கிரகம்—உஎ.
சின்னம் - அற்பம்—ருசு; சிந்திற்கொடி—ருசு.

சிருணம் - செம்பு—உ, சசு.
சீற்றம் - மாற்சரியம்—சசு, சஎ.

சுடர் - ஒளி—ருஅ.
சுரபி - பசு—ருக.
சுற்பம் - செம்பு—சுஅ.

சூட்சியன் - மந்திரி—உசு.
சூதமாகதர் - ஏத்தாளர்—சு.

செச்சை - ஆடு—*ரு.
செப்பட - செவ்விதாக—கசு.
செயல் - காரியம்—கச.
செய்தி - காரியம்—ருஎ.
செய்தியோர் - செய்தோர்—ருக.
செவ்வி - அழகு—*ரு; பக்குவம்—க.
செழுமை - அழகு—ருஎ.

சேக்கை - சயனம்—சரு.
சேண் - தூரம்—சஅ.
சேதகம் - சேறு—உச.
சேதனம் - சைதந்நியம்—க, ச, உஎ, ருக.
சேதனன் - ஆன்மா—சுஅ.
சேறு - குழம்பு—சரு.

ஞமலி - நாய்—உசு.

ஞாளி - நாய்—சரு.

ஞிமிறு - வண்டு—*க.

ஞெலிகோல் - தீக்கடைகோல்—சசு.

தகர் - ஆடு—ருரு.
தடவுநிலை - சுவர்க்கம்—கஎ, சுஎ.
தடிந்திடுமார் - துணிப்பார்—கஎ.
தணியல் - கள்—ருரு.
தண்டா - எல்லையில்லாத—உரு, சசு, சுO; நீங்காத—ருச, ருரு.
தண்டாது - தடையின்றி—கரு.
தமனியம் - பொன்—எ.
தரளம் - முத்து—எ.
தருபம் - குணம்—கக.
தவிசு - பீடம்—*ரு.
தறுகண் - அஞ்சாமை—உசு.
தற்பரன் - தானே பரவத்துவாயுள்ளோன்—சஅ.
தனை - அளவு—ருக.
தன்மாத்திரை - விடயங்கள்—கசு.

தாங்கி - தடுத்து—*ரு.
தாது - மகரந்தம்—*ரு, ருஎ.

தாபதவாகை - தவவொழுக்கம்—௨௩.

தாவாது - ஒழியாது—௭.

தானம் - வலி—௫௯.

தானை - படை—௭.

---

திகிரி - சக்கரம்; ஆக்கினையைச் சக்கர மென்றுரென்க—௯; தேர்—௭, ௯.

திப்பியன் - அதிசயமுடையோன்—௪௮.

திரணம் - வலி—௫௬.

திரள் - கூட்டம்—௪௩.

திரு - அழகு—௨௨, ௬௫.

திவாகரன் - சூரியன்—௩௯.

திறப்பட - நன்மையுண்டாக—*௫.

திறல் - வலி—௪௩.

தினகரன் - சூரியன்—௪௭.

---

தீது - குற்றம்—*௩, ௩௭, ௪௩, ௫௦, ௬௫.

---

துகள் - குற்றம்—௩௪, ௩௬, ௩௮, ௪௩, ௫௮, ௬௧, ௬௨; தூள்—௩௮.

துடி - ஓர்காலவளவு—௧௮, ௨௦.

துண்டம் - மூக்கு—௩௩.

துப்பு - வலி—௨௦, ௪௩; பவளம்—௨௧, ௬௬; பொலிவு—௩௭.

தும்பி - யானை—௨௦.

துயக்கு - விதனம்—௨௮; மயக்கம்—௫௩.

துருவம் - நியதி; ஈண்டுஊழ்—௩௧.

துலை - தராசு—௩௧.

துவை - ஆணம்—௩௬.

துவைப்ப - முழங்க—௪௦.

துறுவல் - புசித்தல்—௩௪.

துறை - இடம்—௪௮.

துனி - விதனம்—௩௯; தோடம்—௪௩.

---

தூமம் - புகை—௫௦.

---

தெண்டிரை - கடல்—௬௦.

---

தேசு - அழகு—௩௯; பிரகாசம் ௪௩, ௪௪.

---

தைவரல் - தடவல்—௩௧, ௩௫.

தைவிகம் - தெய்வசம்பந்தம்—௧௯.

---

தொக்க - கூடிய—௩௩.

தொத்து - வர்க்கம்—௧.

தொத்துதல் தொங்குதல்—*௫, ௩௭.

தொத்துவது - கூடுவது—௬௨.

தொல்லை - பழமை—௨௯.

தொழில் - காரியம்—௫௨.

தொழுதி - கூட்டம்—௧௬.

தொழுனை - குட்டவியாதி—௧௯.

---

தோடு - இதழ்—௩௫.

---

நசை - ஆசை—௪௩.

நலம் - அழகு—*௧. ௨௧, ௩௪, ௪௫, ௬௬.

நவை - குற்றம்—௫௬.

நனி - மிக—௬௧.

நனை - அரும்பு—*௧.

---

நாகர் - தேவர்—௩௨.

நாட்டம் - நயனம்—௪௭.

நாப்பண் - மத்தி—௯.

நாமம் - அச்சம்—௩௬, ௪௩.

நாரம் - நீர்—௩௮, ௫௭,

---

நிதம்பம் - அல்குல்—௬௦.

நிபிடம் - செறிவு—௧௨.

நியதி - நியதிதத்துவம்—௧.

நிரயம் - நரகம்—௧௯, ௩௧.

நிருபர் - அரசர்—௬௫.

நிவந்த - ஓங்கிய—௨௬.

---

நுடங்குதல் - வளைதல்—௩௬.

நுதல் - நெற்றி—*௬, ௩௬.

நுந்த - செலுத்த—*௫.

நுவலல் - விரும்பல்—௨௫.

நுணித்த - சூட்சிகின்ற—௮.

---

நூக்க - தள்ள—௩௨.

நூறி - அழித்து—௨௩; துரந்து—௬௭.

---

நொடிய - சொல்ல—௩௯.

நொதுமலர் - பிறர்—௨௯.

---

நோன்ஞாண் -- வலியநாண்—*௬

---

பகடு - கடா—௨௦.
பகல் - நுகத்திற்சீராணி—௧௭.
பகுதி - வேறுபாடு--௩௫ ; இயல்பு--௩௯.
பங்கயம் - தாமரை—௬௨.
பஞ்சவிஞ்சதி - இருபத்தைந்து—௮.
படம் - புடவை—௧௪, ௧௫.
படி - பிருதிவிதத்துவம்—௩; பூமி--௪௮.
படிவம் - தேகம்—௮.
படிறு - பொய்—௧௭.
பணை - மூங்கில்—௩௩.
பண்ணை - திரட்சி—௧௬.
பதங்கன் - சூரியன்—௫௭, ௬௨.
பதம் - வழி—௨௦.
பதாகினி - சேனை—௨௬.
பதாகை - கொடி—௯.
பதுமராகம் - மாணிக்கம்—௪௯.
பரதந்திரியம் - சுதந்திரமில்லாமை—௧௨.
பரிணமம் - வேறுபாடு; ஈண்டு வளர்தல் சுருங்குதல்—௧௧.
பருவரல் - துன்பம்—௩௧.
பழிச்சல் - தோத்திரம்பண்ணுதல்—*௨.
பழு - பழுவெலும்பு (விலாவெலும்பு)—௯.
பளிதம் - கற்பூரம்—௩௧.
பள்ளி - உறக்கம்—௨௦ ; இடம்—௨௭.
பறை - இறகு—௧௬.

---

பா - செய்யுள்—*௧.
பாசறை - படைவீடு—௪௩.
பாணி - கை—௭ ; நீர்—௩௬, ௩௮.
பாதவம் - விருக்கம்—௧௮, ௫௭.
பாத்தூண் - பகுத்துண்டல்—௧௭.
பாந்தள் - பெரும்பாம்பு—௩௩ ; பாம்பு--௩௭.
பாயு - குதம், கன்மேந்திரியம் ஐந்தனு ளொன்று—௯.
பாரம் - சுமை—௬.
பாரிசேடம் - ஒழிபளவை—௫.

பார்ப்பு - குஞ்சு—௪௭.
பால் - பக்கம்—௧௭.
பாவகன் - அக்கினி—௬.
பாவம் - பாவனை—௬௧.
பாவியர் - பாவகத்தையுடையார்—௩௯.

---

பிணி - பந்தம்—௬௮.
பிணையல் - மாலை—*௪.
பித்தை - மயிர்—*௬.
பிரதானம் - பிரகிருதிதத்துவம்—௬௪.
பிருகுடி - புருவம்—௯.
பிறங்கடை - பிள்ளை—௨௧.
பிறங்கல் - மலை—௫௦.
பிறந்தை - பிறப்பு—௩௯.

---

பீடு - வலி—௫௯, ௬௩.
பீலிமுருந்து - மயிலிறகடி—௩௬.

---

புடம் - சுத்தம்—௧௫, ௧௮.
புடவி - உலகம்—௫௭.
புட்டகம் - கூறை (வஸ்திரம்)—௨௦.
புணரி - சமுத்திரம்—௧௮.
புண்ணியக்குழம்பு - சாணி—௩௪.
புயங்கம் - பாம்பு—௪௧.
புயல் - மேகம்—௬௦.
புரை - குற்றம்—௧௩, ௪௮, ௫௧, ௫௯ ; இடம்—௪௩.
புரையோர் - பெரியோர்—*௫.
புலம் - சத்தாதிபுலன்—*௫; இந்திரியம்—௨௭.
புலன் - இந்திரியம்—௪௮ ; விடயங்கள் —௫௯.
புழற்கால் - நாளமுள்ளதாள்—*௩.
புழை - துவாரம்—௨௭.
புறம் - முதுகு—*௬.
புற்கலன் - ஆன்மா--௨, ௪, ௧௧, ௬௨, ௬௮.
புனிறு - இளம்பருவம்—௪௧.

---

பூ - அழகு--௧௦ ; கூர்மை—௨௦, ௬௦ ; பொலிவு--௨௬, ௪௬.
பூட்சி - உடம்பு--௬, ௧௬, ௧௮, ௪௯

பூண்டிசின் - பூண்டனன்—௩௨.
பூதரம் - மலை—௫௦.
பூரி - பொன்—௬௮.

---

பெரும்பிறிதாதல் - மரித்தல்—௧௭.

---

பேதை - அறிவிலி—௨௭.

---

பைதிரம் - நாடு—௨௬.
பையுள் - துன்பம்—௩௧.

---

பொகுட்டு - தாமரைக்கொட்டை—*௩.
பொடி - துகள்—௪௫.
பொரியரை - பொரிந்தஅடி—௪௧.
பொருவு - உவமை—௪௭, ௫௫, ௫௬, ௬௫.
பொழில் - புவனம்—*௮.
பொறி - இந்திரியம்—*௪, *௫, ௫௯, ௬௧; ஞானம—௨; கயிற்றுப்பொறி--௬; செல்வம—௧௯, ௧௪.
பொறை - சுமை—௬, ௨௮; பொறுமை—௭௦.
பொற்பு - மிகுதி—௪௩; அழகு—௬௪, ௬௫.

---

போகில் - பறவை—௧௬.
போர்வை - தோல்—௪௧.

---

பௌதிகம் - பூதமயந்தம்—௩௯.
பௌவம் - சமுத்திரம்—௧௯, ௪௩.

---

மகராலயம் - கடல்—௪௭.
மடங்கல் - இயமன—௩௯.
மடி - புடவை—௩௫, ௧௮, ௬௮.
மணி - ஒளி—௬௦.
மண்ணல் - கழுவல்—௨௪, ௩௬.
மண்ணை - அழகு—௩௪.
மண்ணினைமாக்கள் - குயவர்—௪௨.
மதம - அகங்காரம்—௪.
மதாணி - பேரணிகலம்—௧௭.
மந்தி - சூரியன்—௩௩.
மம்மர் - மயக்கம்—௮, ௩௫.
மயிலை - மீன்—௩௭.
மருமம் - மார்பு—௭; தேகம்—௫௯.
மருமான் - மருமகன்—௨௬.
மருள் - அஞ்ஞானம—௧௦, ௬௧; மயக்கம்—௪௯.
மலையம் - பொதியின்மலை—௩௦, ௩௪.
மல்லல் - வளப்பம்—௨௩.
மறம - பாவம்—௨௫.
மறலி - இயமன்—௩௬.
மறி - ஆடு—௩௬.
மறுகு - கலங்கி—*௬.
மறு - குற்றம—௪௪.
மறை - ஆகமம்—*௭, ௮, ௩௫; உபதேசம—*௭; மந்திரம—௩௭.
மற்று - வேறொன்று—௩௧.
மன் - நிலை—௩௩.
மன்று - கிராமமாக--௧௪, ௨௭, ௩௯, ௫௦, ௫௮.
மன்றல் - பரிமளம—௩௬.

---

மா - அழகு—௧௦, ௧௫, ௨௦.
மாகம் - சுவர்க்கம்—௩௪; ஆகாயம்--௫௦.
மாசு - குற்றம—௧; களங்கம்—௪௯.
மாட்டு - அழித்து—௫௮.
மாண்ட - அழகிய—௫௪.
மாண்டோர் - மாட்சிமைப்பட்டோர்—௩௯.
மாதர் - காதல்—*௧, ௫௭.
மாத்திரம் - திடநே—௫௭.
மாதுலன் - மாமன்—௨௬.
மார்த்தாண்டன் - சூரியன்—௫௭.
மாருதல் - புசித்தல்—௩௮.
மாற்று - உவமை—௬, ௧௨, ௧௪.
மானம - பிரமாணம—௫௦.
மான்மதம - கத்தூரி—௩௧.

---

மிசைஞர் - தின்பார்—௧௭.
மிசைதல் - உண்ணுதல்—௬.
மிளை - காவற்காடு—௨௬.

---

முகை - அரும்பு—௩௩.
முடலை - புலாறுநாற்றம்—௨௩.

முந்நீர் - சமுத்திரம்—௬௯.
முரஞ்சியது - வலிபெற்றது—௫௯.
முரண் - வலி—௧, ௩௧, ௫௬ ; மாறுபாடு —௬௩.
முருடு - முருட்டுவிறகு—௮.
முனிவன் - அவாவறுத்தோன்—௪௭.

---

மூரல் - சோறு—௬.
மூர்த்தம் - வடிவு—௫௩.

---

மேகலை - மேகலாபரணம்—௬௰.

---

மை - குற்றம்—௭, ௧௩, ௨௰, ௨௩, ௫௩, ௬௭.
மைந்து - வலி—௧௫, ௩௬, ௫௮, ௫௪, ௮௫ ; அழகு—௩௪.

---

மோகினி - மாயை—௧.

---

யாங்கு - எவ்வண்ணம்—௧௬, ௧௮.
யாணர் - முறைமை—௫௪ ; வளப்பம்—௬௰.
யாண் - அழகு—௩௭.
யாத்தல் - பந்தித்தல்—௪௪.

---

யோனி - உற்பத்தித்தானம்—௧௩.

---

வஞ்சம் - அழிவு—௩௨.
வசி - வசீகரம்—௫௮.
வடம் - ஒழுங்கு—௧௪.
வடு - குற்றம்—௪௰, ௪௨.
வதனம் - முகம்—௭.
வம்பு - உவமை—௬௮.
வயின் - இடம்—௩.
வரை - மலை—௩௯ ; எல்லை—௪௧.
வலம்புரி - வலம்புரிச்சங்கு—௨௧.
வலித்துழி - திகைத்தவிடத்து—*௫.
வல் - விரைவு—௧௫.
வல்லி - விலங்கு—௨௫.
வழுக்கு - அவஞாயம்—௪௩.
வழும்பு - நிணம்—௪௩.
வழுவை - யானை—௪௩.
வளம் - அழகு—*௪. ௫௯.
வளி - வாயு—௯, ௧௯, ௪௭, ௫௭.
வனசம் - தாமரை—௪௮.
வனம் - அழகு—௪௯.
வன்கண் - தறுகண்—௨௩.

---

வாசவன் - இந்திரன்—௩௩.
வாயில் - பரிகாரம்—௩௪.
வாய்மை - மெய்ம்மை—௩௯.
வாரி - சமுத்திரம்—௪௩, ௬௩.
வாள் - ஒளி—*௭, ௪௯, ௫௬.

---

விசிகம் - அம்பு—௨௰.
விசும்பு - ஆகாயம்—௩௯.
விசையம் - வலி—௬௰.
விச்சை - வித்தியாதத்துவம்—௧.
விடங்கம் - முகடு—௯.
விடம் - நஞ்சு—௩௬.
விடயம - சத்த பரிச ரூப ரச கந்தங்கள் —௨௬.
விண் - சுவர்க்கம்—*௧.
விண்டு - மலை—௭.
விதி - ஊழ்—௨௯.
விநா - அன்றி—௫௧.
விந்து - சுத்தமாயை—௫௬ ; சிவதத்துவம்—௫௬.
விம்மிதம் - வியப்பு—௪௯.
வியந்து - ஆச்சரியம்—௨௪, ௫௮, ௬௮.
வியப்பு - அளவு—௧௮.
விரிச்சிகன் - சூரியன்—௫௬.
விருத்தம் - பொருந்தாமை—௬௩.
விரை - மலர்—௫௭.
விலங்கல் - மலை—௪௩.
விலங்கி - வேலி—௨௬.
விழுப்பம் - சீர்மை—*௪.
விழுமலம் - வருத்தஞ் செய்யு மலம்—௨.
விழையாமை - விரும்பாமை—௧௭.
விளிந்தோர் - இறந்தோர்—௪௰.
விறந்த - மிக்க—௧௮.
விறல் - வலி—௧௯.
வினை - காரியம்—௫௰ ; செயல்—௫௩.

---

விடிட - மரிக்க—நஉ.
விஞுதண்டு - முதுகந் தண்டெலும்பு—
எ, கூ.
வீவு - கேடு—கசு ; குற்றம்—ருங.

வெதிரேகம் - மறை—கடு.
வெந் - முதுகு—கூ.
வெய்து - துக்கம்—நடு.
வெளில் - கம்பம்—சங.
வெறி - பயம்—ருகூ.
வெறுப்ப - மிக—கசு.

வேங்கை - புலி—கo.
வேமம் - நெய்வார் கருவியினென்று—கடு.
வேரம் - கோபம்—நo.
வேர் - வேர்வை—நசு, சங.
வேழம் - யானை—உசு.

வைப்பு - ஊர்—சங.

# இலக்கணக் குறிப்பு.


## பாயிரம்.

அம்மலரோன் என்றதில் அகரம் பண்டறி சுட்டு க
அன்று - அசை ௫
ஏ - அசை ,,
மற்று - அசை ,,
மறுகுபு - செய்பு என்னும் வினையெச்சம் ௬
அரோ - அசை ௭
தில் - அசை ,,

## நூல்.

மற்று - வினைமாற்று க
அம்ம - கேளாய் எனப் பொருடந்தது உ
ம் - சாரியை ,,
மதி - அசை ௮
தெய்ய - அசை ,,
ஒடு - அசை ,,
சாக்கிர முதலாகக் கூறியன நிரனிறையணி ௯
வாழிய - அசை ,,
இசின் - அசை க0
மன் - அசை ,,
கொல் - அசை ,,
இசின் - அசை (முன்னிலையில் வருதல்) கக
ஆல் - அசை ,,
குரை - அசை ,,
ஒ - தேற்றம் க௪
ஓ - அசை க௮
பிற - அசை க௯
இகும் - அசை (முன்னிலைக்கண் வந்தது) உக
ஓ - எதிர்மறை ,,
மாது - அசை உ௩
வினை - மத்திமதீபம் உ௪
இடிய என்னுஞ் செயவெனெச்சத்தை இடித்து என்னுஞ் செய்தெனெச்சமாகப் புரைத்தல் உ௬
தான - அசை உ௮
ஓ - எதிர்மறை ௩0
இசின்-அசை(படர்க்கையில் வருதல்) ௩உ
ஏ - பிரிநிலை ,,
ஆங்கு - அசை ௩௪
அம்ம - அசை ,,
வாழி - அசை ௩௫
நிவந்திசின் - இதில் இசின் அசை ௩௯
மோ - அசை ,,
கொல் - ஐயம் ௪0
ஐ - சாரியை ௪க
அமலம விமலம் - ஒருபொருட் பன்மொழி ௪௪
அற்று - குறிப்பு மொழி ௪௫
சமனியம் குறுக்கல் விகாரம். ௫0
உலகம் - ஆகுபெயர் ௬க
அல் - சாரியை ௬௩
ஓ - வினா ௬௫
ஒளிவாள் - பீடிகை ௬௭.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| அ | உச | வறுவகை | வறுபகை |
| கங | ஙரு | மென்யர் | மென்பர் |
| கரு | உரு | உழிதால | உழிதரல |
| சஎ | உ | விருந்தினற்கு | விருந்தினர்க்கு |
| எங | உரு | இப்வவ | இப்பவ |
| எச | எ | தேடன்ன | தோடன்ன |
| ,, | கசு | (இ-ள்) | (இ-ள்) |
| எசா | கச | அருபமவிழ் | அருமபவிழ் |
| ,, | உஅ | ஓன்று | ஒன்று |
| எஅ | க0 | விடைய | விடய |
| ,, | உச | லவன் | லவண |
| ,, | உகூ | நோயை | நோயைப் |
| எகூ | உ0 | முதலர்ன | முதலான |
| ,, | ஙக | என்பதற்நேப் | என்பதற்குப் |
| அ0 | கூ | திவாகாற் | திவாகரற் |
| ,, | உ0 | கறை | கரை |
| ,, | உக | எருநம் | எழும |
| ,, | உஉ | கேட்பாயக. | கேட்பாயாக, |
| ,, | ஙச | சிலைமெழி | சிலைமொழி |
| அக | ச | ஓங்கி | ஒங்கி |
| அஉ | அ | ஏந்நாளோ | எந்நாளோ |
| அங | கூ | ஓழியாது | ஒழியாது |
| அரு | கச | மலத்தின | மலத்தின் |
| அசா | க | குறும்பிகயாக | குறும்பியாக |
| அஎ | உஎ | சொருப | சொரூப |
| ,, | ங0 | மாயவினை | மாயைவினை |
| அஅ | கக | ஓரு | ஒரு |
| ,, | உஅ | விணகிறந் | விணங்கிறந் |
| ,, | ஙஉ | எனகழறில் | எனநனிகழறில் |
| கூ0 | அ | செருக்கும் | செகுக்கும் |
| கூக | க | பற்றுயுன்ள | பற்றுயுள்ள |
| | கஉ | நிவர்த்தி | நிவிர்த்தி |

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ,, | கஅ | யிருப்பவும். | யிருப்பவும், |
| ,, | உஉ | றெற்ற | றேற்ற |
| கூ | உ | சேர் | சேர |
| கூ | ௰ | திஞ்சொல் | தீஞ்சொல் |
| ,, | உஎ | கருக்கு | களுக்கு |
| கூச | கக | ஓரு | ஒரு |
| ,, | உஉ | கனைண்மை | தன்னுண்மை |
| ,, | உகூ | அருககாபத்தி | அருத்தாபத்தி, |
| கூஎ | உக | கின்றான் | நின்றான் |
| க௦க | உஉ | யென்றெடின் | யென்றிடின் |
| கக௦ | கூ | சின் | இசின் |
| ககங | உரு | வாறும் | மாறும் |
| ககச | உகூ | பெரிய | இன்னமும் பெரிய |
| ககரு | க | கூடிபிராது | கூடிபிராதவாறுபோலவுமாம் |
| கஉஎ | கரு | சின | இசின் |

விஷயசூசிகை பக்கம்-எ. வரி-4.—குந்திதேதி என்பதை குந்திதேவி எனத் திருத்துக.

---

☞ இந்நூலாசிரியர் வரலாறு வரைந்த வெள்ளியம்பல தம்பிரானவர்கள் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மாணாக்கரெனக் கூறுவர்; அவ்வாறாயின் இவர் காலம் சற்றேறக்குறைய முந்நூறு வருட மாயிற்றெனக் கொள்ளப்படும். இந் நூலாசிரியர் வரலாறு எனது நண்பர் திருநெல்வேலிப் பால்வண்ண முதலியாரவர் களாற் றெரியவந்தது.

---